"அறிவு மிளிர்க"

# யா/ கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்

# வரம்




## நூற்றாண்டு விழா மலர்

## 1917 - 2017

உ

சிவமயம்

# யா/ வேதாரணியேஸ்வர வித்தியாலயம்

# வரம்

## நூற்றாண்டு விழா

## மலர்

## 1917 - 2017

நூல் : நூற்றாண்டு விழா மலர்

பதிப்புரிமை : யா/ வேதாரணியேஸ்வர வித்தியாலயம்

பதிப்பு : ஐப்பசி 2017

பக்கங்கள் :

அச்சுப்பதிப்பு : ஸ்ரீமாருதி பதிப்பகம்



உ
சிவமயம்



# சமர்ப்பணம்

'வரம்' என்ற நூற்றாண்டுவிழா மலர்
இப்பாடசாலையை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே
பல இன்னல்களுக்கும் கஸ்டங்களுக்கும் மத்தியில்
உருவாக்கி செயற்படுத்திய வேதாரணியேஸ்வர
ஆதீன பரம்பரைக்கும், இப்பாடசாலையில் கல்வி
கற்பித்து நிர்வகித்து இந்நிலைக்கு உயர்த்திவிட்ட
அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் கல்வி
கற்று வெளியேறிய அனைத்து மாணவர்களுக்கும்
இதயபூர்வமாக சமர்ப்பணம் செய்கின்றோம்.





# வரத்தினுள்ளே..........


1. பாடசாலை வரலாறு 1-5

2. தோம்புப்பதிவுகள் 6-23

3. தீவகத்தில் நிலவும் பல்லினக்கலாச்சாரம் 24-35

4. தொழில்நுட்பமாணி பட்டப்படிப்பும் எதிர்காலத் தொழில் வாய்ப்பும் 36-39

5. அறிவாளிகளின் சமூகமும் முயற்சிகளும் 40-45

6. பதின்ம வயதினரே 46-49

7. பிள்ளைவளப்படுத்தலில் பெற்றோர் ஆசிரியரின் பங்கு 50-53

8. எனது பார்வையில் வேதாரணியேஸ்வரா..... 54-55

9. நிலையான அபிவிருத்திக் குறிக்கோள் ஓர் அறிமுகம் 56-59

10. தொழில் தகைமைத்திறன் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒப்புக்கொள் 60-64

11. ஒடுக்கப்பட்டவர்களுக்கான ஓயாத படைப்புக் குரல் 65-72

12. தேச வழமைச்சட்டம் ஓர் அறிமுகம் 73-77

13. ஆசிரியர் தலைமைத்துவம் 78-81

14. பள்ளிநாட்களின் நினைவில் 1986 - 1990 82-84

15. ஆரோக்கியமும் வாழ்வும் 85-88

16. அலைபேசியினால் ஏற்படும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும் 89-93

17. ஆரம்பக்கல்வி ஆசிரியரும் மாணவரும் 94-99

18. ஆரம்பப்பிள்ளைப் பருவத்தினரிடையே வளர்க்க வேண்டிய சமயப்பழக்கவழக்கங்களும் ஒழுக்க விழுமியங்களும் 100-102

19. போதைப்பொருள் பாவனை 103-105

20. சமூக மேம்பாட்டில் பாடசாலைகளின் பங்கு 106-107

21. **INTRODUCING ENGLISH IN PRIMARY** **108-111**

22.. கரணவாய் சைவக்குருமார் பரம்பரையில் நூற்றாண்டு விழா காணும் வேதாரணியேஸ்வரா 112-117

23. நாளைய மாற்றத்திற்காக இன்றே செயற்படுவோம் 118-120

24.தமிழ்மொழி 120
25..மகாத்மா காந்தி 121
26. கால ஓட்டத்தில் பின் நோக்கிய ஒரு பயணம் 122
27. ஒரு சொல் கவிதை அம்மா அதே ஒரு சொல் சரித்திரம் அப்பா 123-124
28.மலைநாட்டின் மகிமை 125
29. பிஞ்சுகளின் உள்ளக்கிடக்கையில் இருந்து..... 126
30. A - Z QUIZ 127
31. The Golden Apples 128-129
32. Nature 129
33. நூற்றாண்டு வாழ்த்துப்பா 130

## Vission

Directing the innate nature of aptitude and skills to again the competencies defined by the modern educational theories.

## நோக்கக் கூற்று

ஆரம்பப் பருவ மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கரளை நவீன கல்விக் கெகாள்கைகளின் தேஆரம்பப் பருவ மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கரளை நவீன கல்விக் கெகாள்கைகளின் தேர்ச்சிகளை அடையும் வண்ணம் நெறிப்படுத்தல்.

## Mission

1. To develop ability to think in their mother tongue
2. To develop the ability of differentiating what is good and bad
3. To develop the ability of creativity with their self -thought strategies.
4. Inculcate very good social behavior and hobbits.
5. To develop the ability of preserving national unity
6. The develop the discipline and values
7. To develop every individual with personality adjustment goals
8. Make the students to understand and to develop their personality

## செயற்பாட்டுக் கூற்று

1. சுய மொழியில் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தல்
2. நன்மை தீமைகளை பிரித்தறியும் திறனை வளர்த்தல்
3. சுயமாக ஆக்கங்களில் ஈடுபடச் செய்யும் ஆற்றலை வளர்த்தல்
4. சிறந்த சமூகப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்தல்
5. தேசிய ஒற்றுமையைப் பேணுவதற்கான ஆற்றலை வளர்த்தல்
6. ஒழுக்க விழுமியங்களை கற்றுக் கொள்ளல்
7. சமூக இயைவாக்கம் உடையவராக வளர்த்தல்
8. ஆளுமையுடையவர்களாக வளர்த்தல்

## Motto

மகுடவாசகம்: - "அறிவு மிளிர்க"
Let Knowledge Radiates.

# பாடசாலைக் கீதம்

வித்தை சேர் வேதாரணியேஸ்வர - வித்தியசாலை
நித்தம் உயர்ந் தோங்குகவே.

பக்தி செறிந்தொளிரும் பண்பு கலந்தருளும்
வித்தகர் நாற்குரவர் வேதங்கள் ஓதுகின்ற (வித்தை சேர்)

எண்ணும் எழுத்தும் எங்கள் கண்ணென இணைய
தண் தமிழ் சமூகக்கல்வி ஆங்கில அறிவும்
விளங்கும் இசை நடனம் சித்திரம் உடற்கல்வி
விரும்பியே வாரி வழங்குமெம்முயர்ந்த கலா (வித்தை சேர்)

கற்பனை வளம் பெருக அற்புதக் காரணிகள்
பற்பல எடுத்தோங்க பாடவகையாவும்
பொற்புடன் புகுந்திடவே புதுமையாய் எதனையும்
நற்பதம் கலந்தொளிரும் நாட்டமதனை ஊட்டும் (வித்தை சேர்)

ஆளுமை செறிந்த உயர் அருங்குண அதிபரும்
சூழும் எம் ஞானம் போக்கும் சுகுண ஆசிரியரும்
வாழும் எம் எதிர்கால சிற்பியர் வாழ்வோங்க
நாடும் நற் சேவை செய்ய நாடு நலம் பெறவே. (வித்தை சேர்)

# தமிழ்த்தாய் வாழ்த்து


வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மறிந்ததனைத்தும் அறிந்திடும்
வண் மொழி வாழியவே

ஏழ் கடல் வைப்பினும் தண் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ்கலி நீங்க தமிழ் மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானமளந்ததனைத்தும் அளந்திடும்
வளர் மொழி வாழியவே.

வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் துணை



## ஆசியுரை

**ஸதாசிவ ஸமாரம்பம் ஷங்கரார்ச்சார்ய – மத்தியமாம்**

**அஸ்மத் ஆசார்ய – பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்.**

"வித்யா ததாதி விநயம்" என்பது நீதி சாஸ்திரம். அதாவது ஒருவனுக்கு கல்வியானது அடக்கத்தை கொடுக்கிறது. அவ்வடக்கம். மேன்மையைக் கொடுக்கிறது. மேன்மைமூலம் தகைமையடைகிறான். தகைமை ஆனது பொருளைக் கொடுக்கிறது. பொருளினால் தர்மத்தைச் செய்து சுனத்தைப் பெறுகின்றான்" என்கிறது.

இந்த வகையிலே கல்வியுடன் ஒழுக்கத்தையும், தர்ம நெறிகளையும் சேர்த்து போதிப்பதிலே நிகராக நிற்பது எனது ஆரம்ப பாடசாலையான வேதாரணியேஸ்வர வித்தியாலயமே ஆகும். இன்று இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா நடைபெற இருப்பரதயிட்டு அகமகிழ்கின்றேன்.

"ஆசார்த் பாதம் ஆதத்தே
பாதம் சிஷ்ய த்வ - மேதயா
பாதம் ச - ப்ரம்ம சார்த்தியததா
பாதம் காலக்கிரமேணச"

மாணவன் முதலில் குருவின் மூலமும் பின் தன் முயர்ச்சியினாலும் (சந்தேகத்தை தீர்த்தல்) நிறைவாக அனுபவத்தினாலும் முழுமை அடைகிறேன் என்கிறது வேத வாக்கியம். இதற்கெல்லாம் ஆதார சுருதியாக இருப்பது பாடசாலையே ஆகும்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

விருட்சமாக வளர்ந்து விட்ட இப்பாடசாலை இன்னும் விழுதுகள் விட்டு சிறக்க வேண்டும் நூற்றாண்டு விழா சிறக்க வேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், விழா ஏற்பாட்டாளர்கள் எல்லோரும் சகல செல்வங்களும் பெற்று வாழ உனது வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

விழா நூலாக "வரம்" வெளிவர வாழ்த்துக்கள்.

வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் அருள் கிடைக்கட்டும்.

சுபம்

**ஆசியுடன்**

**ச.இராமநாதக்குருக்கள்**

**(மூத்த சிவாச்சார்யார்)**

## இந்துமத குருவின் ஆசிச்செய்தி




இலங்கைத் தீவின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் வடமராட்சியில் கரணவாய் சைவக்குருமார் பரம்பரையினர் தமது சிவவழி பாட்டிற்கு இந்தியாவில் உள்ள சிவதலமான வீனாவாதவிபூசணி சமேத வேதாரணியேஸ்வரப் பெருமானை நினைத்து வழிபாடு செய்து வரும் பொழுது சைவ சமயமும், தமிழும், சமஸ்கிருதமும் கற்பதற்காக வேதாரணியேஸ்வரா என்ற நாம (பெயர்) பாடசாலையை 1917ம் ஆண்டளவில் ஆரம்பித்து கல்வியே தமது சேவையென மட்டுமன்றி சமய ஒழுக்கமும், ஆலயவழிபாட்டிற்கும் எடுத்துக்காட்டாக புகழ்பூத்து விளங்கி வரும் காலத்தில் காலநியதி காரணத்தால் *செயல்படுத்த முடியாமையினால் அரசாங்கத்திடம் 1962ம்* ஆண்டளவில் கையளிக்கப்பட்டது.

அதற்குப் பின்பும் சமயம், தமிழ் வளர்ச்சிக்காக பாடசாலை சமூகமும் அக்கிராம மக்களும் உறுதுணையாக நிற்பது பாடசாலைக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைகிறது. இவ்வருடம் நூற்றாண்டு கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் இன்னும் பலநூற்றாண்டு வரை வேதாரணியேஸ்வர பெருமானின் அருளாசி வேண்டி நிற்கின்றேன்.

'மங்களம் ஆகட்டும்'

**சிவஸ்ரீ. செ. கைலாசநாதக்குருக்கள்**
கரணவாய் மூத்தவிநாயகர் தேவஸ்தான,
பிரதம குருக்கள்.

## இந்து வேதாகம குருவின் ஆசியுரை



‘கற்ககசடறக் கற்பவைகற்றபின் நிற்கஅதற்குத் தக‘

தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளப்பரிய சேவையை நல்கிய யா/வேதாரணியேஸ்வர வித்தியாலயம் இவ்வருடம் தன்னிகரில்லா ஒளிச்சுடருடன் நூற்றாண்டு விழாக்கோலம் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அகவை நூற்றாண்டைக் கண்டு, உயர்வுகளைத் தனதாக்கி, உறவுகளைப் பாலமாக்கி வெற்றியுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் எமதுபள்ளியின் உன்னதநிலை கண்டு மகிழ்கின்றேன். நூறாண்டுகளாக சைவமும் தமிழும் வளர கால்கோளாக விளங்கிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவானது, பாடசாலை வளர்ச்சிப்பாதையில் எமது அடிச்சுவடுகளை மீண்டும் ஞாபகப்படுத்தவும், பழைய புதிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் ஒன்றிணைப்பதற்கும், சேவைகளை நினைவு கூர்வதற்கும் மாணவர்கட்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்கும் உரிய ஒரு சிறப்பானவாய்ப்பாக இவ்விழா அமைகின்றது. கரணவாய் மண்ணில் யா/வேதாரணியேஸ்வர வித்தியாலயம் சிறார்கட்கு கல்வி, கலை, பண்பாடு மட்டுமன்றி சைவசமயக்கலாச்சாரம் என்னும் கருப்பொருளைக் கற்றுத் தருவதை கருத்தாகக் கொண்டிருக்கின்றது. உயர்கல்விகற்கும் மாணவர்கட்கு சிறந்த அடிப்படைக் கல்வியை வழங்கும் பாடசாலையாக விளங்குகின்றது என்பதற்குச் சான்றாக, இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பழைய மாணவர்கள் அதிஉயர்பதவிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், பல்துறைகளிலும் பாடசாலைக்கு பெருமையும் கீர்த்தியும் சேர்த்திடும் வகையில் பணியாற்றுகின்றனர். அதனால் “சான்றோர் எனக் கேட்கும் தாயாக” மட்டுமன்றி படித்துப் பயன்பெற்றோர் போற்றும் பெருமமைக்குரிய பாடசாலையாகவும் எமது கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் விளங்குகின்றதென்றால் அது மிகையாகாது. இப்பெருமைமிகு வித்தியாலயத்தின் மாணவனாக 1970 தொடக்கம் 1976 ஆண்டுவரை கல்வி கற்றதில் பெருமையடைகின்றேன். நாம் பயிலும் காலத்தில் தினமும் “நமச்சிவாயவாழ்க” என்ற சிவபுராண பிரார்த்தனையுடன் வகுப்புகள் ஆரம்பமாகும். திருநீறும் சந்தனமும் அணிந்து மேல்அங்கி இல்லாமல் வேஷ்டியுடன் வலம் வரும் அன்றைய மதிப்பிற்குரிய அதிபர் திரு. சொ. நடராஜா அவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எம்முடன் முன் பின்னாகப் படித்த மாணவர்கள் எல்லோரதும் நினைவுகளும் மறக்க

முடியாதவையாகும். கல்வியுடன் கலாச்சாரத்தையும் கற்பித்த அனைவரையும் இத்தருணத்தில் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

இன்றைய பாடசாலையின் வளர்ச்சியானது பலமடங்கு பெருகியுள்ளது. பலமாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைகளில் தேர்வுபெற்று உயர்கல்வியைப் பெறுகின்றமை, விழாக்காலங்கள் மற்றும் குருபூசைகள் கொண்டாடப்படுதல், விளையாட்டுப்போட்டிகள் நடாத்துதல் மற்றும் பாடசாலையின் நவீனவளர்ச்சி போன்ற பல்துறைவளர்ச்சிகளுக்கு முக்கிய காரணமான தற்போதைய அதிபர் திரு. N.T.பாலகுமார் அவர்களதும் இன்றைய ஆசிரியர்களதும் அயராத முயற்சிகள் ஈடுபாடுகள் போன்றன மேன்மையானவை மற்றும் பாராட்டப்பட வேண்டியவை. அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரது அயராத முயற்சியினால் இந்நூற்றாண்டுவிழா சிறப்பாக நடாத்தப் பெறுவதை அறிந்து விழாச்சிறப்புற பலவகையிலும் சேவையாற்றும் அன்பர்களையும் அயலவர்களையும் மனமாரவாழ்த்தி, அனைவருக்கும் நீண்ட ஆயுளும், குறையாத செல்வமும் குன்றாத நலமும் பெற்று வளமுடன் வாழ, கருணையம்பதி வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

வாழ்க வளமுடன்

'சிவாகமக்கிரிய இரத்ன, வேதாகமசீலர்'
**சிவஸ்ரீ. இராமநாத. சிவசண்முகநாதக் குருக்கள்**
(சர்வதேச இந்துமத குரு)
Goldschlagistasse 8
8952 Schlieren

## பரம்பரை தர்மகர்த்தாவின் ஆசியுரை

சித்தமும் இடையூறென்னும் நெடுங்கொடுஞ் கானம்சாடி
அத்திமா முகத்தோனாதி அசுரர் வாரிதி உழக்கிச்
சக்தியும் சிவமும் மேவச் சதுர்மறை வனத்துள் வீர
கத்தியை உதைத்து நிற்கும் களிற்றினைக் கருத்தில் வைப்போம்

இலங்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் கரணவாய் கிழக்கு கரவெட்டிக் குருக்கள் பகுதியில் 1917ம் ஆண்டு ஸ்ரீவேதாரணியேஸ்வரர் ஆதீன பரம்பரையினரின் பெரு முயற்சியால் ஆதீனக் காணியில் அவர்கள் பொருளுதவியால் பத்து மாணவர்களைக் கொண்டு குருகுலக் கல்வியாக தலைகாட்டி பெற்றது கரணவாய் வேதாணியேஸ்வர வித்தியாலயம். இது கடந்த 1962ல் அரசுடைமை ஆக்கப்பெற்று பல பரிணாமங்களைக் கடந்து இன்னும் சைவப் பாரம்பரியங்களோடு பின்னிப்பிணைந்து வைரத்திருப்பதில் மிகக் மகிழ்ச்சி.

உலகில் சூரியன் புற இருளை அகற்றுவது போல் கரணவாய்ப் பகுதி மக்களின் அக இருளைப் போக்கி ஞானத்தையும் கல்வியையும் தரும் வகையில் இக்கல்வி நிறுவனம் இன்று நூற்றாண்டு விழா காணும் நிலையில் உயர்ந்து சிறந்துள்ளது. மேலும் இந்நூற்றாண்டு விழாவின் சிறப்பாக வரம் என்ற பெயரினைத் தாங்கி மலர் வெளிவருவது இறைவனின் திருவருட்படி நடப்பதாகவே உணர்கிறேன்.

எனது தந்தையார் சிவஸ்ரீ வே.க.சோமசுந்தர பண்டாரசந்நிதி அவர்கள் வேதாரணி ஆதீனத்தின் பரம்பரை தர்மகர்த்தாவாகவும் ஸ்ரீஆதிவார மடத்தின் பரம்பரை தர்மகர்த்தாவாகவும் திகழ்ந்தவர். அந்த கால கட்டத்தில் வேதாரணியத்திலேயே எனது பிறப்பு நிகழ்ந்தபடியால் அங்கேயே கல்வி கற்று மேல்நிலைக்கல்வியை தருமபுரம் ஆதீனக் கல்லூரியில் பட்டப்படிப்பையும், முனைவர் பட்டத்தினையும் பெற்றேன். அதன்பின் திருப்பனந்தாள் ஆதீனக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி பின் தமிழக அரசின் அர்ச்சகர் பயிற்சி நிறுவனத்தின் முதல்வராகப் பணியாற்றி தற்போது தமிழக அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் திருவாரூர் திரு.வி.க.அரசுகலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றேன். மேலும் எனது தந்தையாருக்குப் பின் 1986ல் இருந்து ஸ்ரீஆதிவாரமடத்தின் பரம்பரை தர்மகர்த்தாவாகவும் செயலாற்றி வருவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

எமது முன்னோர்களால் தொடங்கப் பெற்ற இக்கல்வி நிலையத்தின் நூறாவது ஆண்டு விழாவில் என்னைச் சிறப்பு அழைப்பாளராக அழைத்து சிறப்பித்தமையால் பெருமையடைகின்றேன்.

இக்கல்விக் கழகம் மென்மேலும் சிறந்து ஒரு பல்கலைக்கழகமாக வளர்ந்து அப்பகுதி இளைஞர்களுக்கு கல்விக்கண் திறந்து, அனைத்து ஆற்றல்களும் கொண்ட மாணவர்களை உருவாக்கி, நாட்டின்

வளத்திற்கும், மக்களின் உயர்வுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக மிளிர வேண்டி "வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ற திருநாவுக்கரசர் வாக்கிற்கிணங்க எல்லாம் வல்ல ஸ்ரீவேதநாயகி சமேத வேதாரணியேஸ்வரப் பெருமானின் திருமலர்ப் பாதம் பணிந்து சகல நலன்களுடன் நூற்றாண்டுவிழாச் சிறப்புற விழைகிறேன்.

ஸ்ரீலஸ்ரீவே.க.சோ.குமரேசமூர்த்தி பண்டார சன்னதி
பரம்பரை தர்மகர்த்தா
ஸ்ரீஆதிவாரமடம்

## பரம்பரை அறங்காவலரின் ஆசியுரை

ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாண மாவட்டத்தில் கரணவாய் கிழக்கு கரவெட்டி குருக்கள் பகுதியில் வேதாரணியேஸ்வரர் திருக்கோவில் ஆதீனசபையாரின் பெருமுயற்சியில் 1917ம் ஆண்டு யா.கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் என்ற பெயரில் கல்வி நிறுவனம் நிறுவப் பெற்று பண்பாட்டின் உறைவிடமாய் கலைகளின் பிறப்பிடமாய் சைவசமய பாரம்பரியத்துடன் சிறப்புற்று விளங்குகின்றது.

இப்பாடசாலை உருவாகக் காரண கர்த்தாவாக இருந்த கல்வளவு கைலாசக்குருக்கள் குடும்பத்தினரால் துவக்கப்பெற்று முதலில் குருக்கள் பள்ளிக்கூடம் என்று இருந்ததை அரசுடைமையாக்கப் பெற்று யாழ்ப்பாணம் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் என்று பெயர் மாற்றம் செய்யப்பெற்று இப்பாடசாலையில் காலஞ்சென்ற ச.கதிர்காமக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள் கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையில் உயர்பதவி வகித்தவர். காலஞ்சென்ற வவுனியா மாவட்ட கச்சேரியில் உத்தியோகத்தராகப் பணியாற்றிய கைலாசக்குருக்கள் மகன் சுப்பிரமணியம் யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றிய செவ்வந்திநாதக்குருக்கள் மகன் சுவாமிநாதன் அவர்கள் தமிழ்ப் பண்டிதர் கை. நமசிவாயக்குருக்கள், சம்பந்தக்குருக்கள் மகன் சட்டநாதக்குருக்கள் ஆகியோர் இப்பாடசாலையில் பயின்றும் இதன் வளர்ச்சிக்கும் பெரும்பாடுபட்டவர்கள்.

யாழ் மாவட்ட பிரதேச செயலர் அலுவலகத்தில் காசாளராக பணிபுரிந்த ஐயாப்பிள்ளை பரமேஸ்வரன் அவர்கள், செவ்வந்திநாதக்குருக்கள் சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம் மாநகராட்சி பொறியிலாளர் பணி ஓய்வு) அவர்கள் வைத்தியநாதர் சிற்றம்பலம் (UNHCR துணைநிலையப் பொறுப்பு வகித்து ஓய்வுக்குப்பின் மன்னார் தொழில்கல்வி நிலையத்தில் சிறப்புநிலையப் பேராசிரியராக பணிசெய்து வருபவர்) காலஞ்சென்ற தியாகராஜக்குருக்கள் வைத்தியநாதன், காலஞ்சென்ற இப்பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்த விஸ்வநாதன் அவருடைய மகன் குமாரசாமி இவர்களுடன் தற்சமயம் வேதாரணியம் வரணி ஆதீனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அருள்மிகு வேதாரணியேஸ்வரர் தேவஸ்தானத்தில் பரம்பரை அறங்காவலர்களாக செற்பட்டுவரும் கதிர்காமக்குருக்கள் செவ்வந்திநாதர் ஆகிய நாம் அனைவரும் இப்பாடசாலையில் பழைய கட்டிடத்தில் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


பாடசாலையின் தலைமை ஆசிரியராக சொக்கநாதர் நடராசா கடமையாற்றிய போது அரசின் நிதியில் பழைய கட்டிடம் பழுதடைந்நதைத் தொடர்ந்து தற்சமயம் உள்ள பிரதான கட்டிடம் உருவான காலத்தில் மேற்கூறப்பட்ட அனைவரும் சேர்ந்து சரியைத் தொண்டு செய்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பாடசாலை தற்சமயம் வரணி ஆதீனத்தின் தலைவராகவும் இந்தியத் துணைத்தூதுவர் அவர்களால் சிறப்பிக்கப் பெற்று கலைமாமணி விருது

பெற்ற கதிர்காமக்குருக்கள் மாணிக்கக் குருக்கள் உள்ளிட்ட அனைவரும் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்றுக் கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை இன்று நூற்றாண்டு விழா கொண்டாடும் பேறு பெற்று விளங்கும் கல்வி நிலையத்தில் நூற்றாண்டு மலராக வரம் என்ற பெயர் தாங்கி வெளியிடுவது சிறப்புக்குரியது. நிறைமறைக் காடுகளில் நீண்டெரி தீபத்தைப் போல் பிரகாசிப்பது போல் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் அப்பகுதி மக்களுக்கு பயன்பெறும் வகையில் செயல்படவும் சிறப்புப் பெறவும் வேண்டும்.

**ஸ்ரீலஸ்ரீவே.க.செவ்வந்திநாத பண்டார சன்னதி**
பரம்பரை அறங்காவலர்
ஸ்ரீவேதாரணியேஸ்வரர்சுவாமி தேவஸ்தானம்
மேல வீதி
வேதாரணியம்

## பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



"நம் தந்தையாம் கடவுளுக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக!
ஆமென் பிலி. (4:20).

கரவையூரில் கல்விப்பணியாற்றி வரும் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் சைவசமயப் பாரம்பரியங்களோடும் ஒழுக்க விழுமியங்களோடும் பின்னிப்பிணைந்து பல சாதனைகளை நிகழ்த்திவருவது நாம் அனைவரும் அறிந்ததே.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நூற்றாண்டு விழாவில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் இருந்து இன்று வரை தமது தன்னலமற்ற சேவையை வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்களையும் தமது அயராத உழைப்பினாலும் உயர்வினாலும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் நன்றியோடு நினைத்து அன்புடன் பாராட்டுகின்றேன்.

வயல்களும், நெடிதுயர்ந்த பனைகளும் சூழ்ந்த அமைதியான கிராமச் சூழலில் இருக்கும் இவ்வித்தியாலயம் சீரும் சிறப்பும் பெற்று செழித்தோங்க அன்புடன் வாழ்த்தி ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்பணி. அ. அ. அமலராஜ்**
பங்குத்தந்தை,
கரவெட்டி.

## கௌரவ கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

### பாடசாலையின் பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்

வடமராட்சியின் சைவப்பாரம்பரியக் கட்டமைப்பின் ஒரு பரம்பரையாகத் திகழ்ந்த வேதாரணியேஸ்வர ஆதீன பரம்பரையினர் ஆதனத்தில் 1917ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் 2017ம் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆரம்பத்தில் ஒரு தனியார் பாடசாலையாகத் தோற்றுவிக்கப்பட்டு சைவப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அன்று தொடக்கம் பல அர்ப்பணிப்பு மிக்க அதிபர்களினால் வளர்த்தெடுக்கப்பட்ட வேதாரணியேஸ்வர வித்தியாலயம், அரசாங்கத்தின் சுவீகரிப்புத் திட்டத்தின் கீழ் 1962ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டது. ஆயினும் பல்வேறு நெருக்கடிகள் இடப்பெயர்வுகளினால் இந்தப் பிரதேச மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்திருந்த போதிலும், கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்து வருகின்றது.

கரணவாய் பிரதேசத்தைச் சேர்ந்த குருக்கள் பகுதியில் இன்றும் சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணி வருவதுடன் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களோடும் பின்னிப்பிணைந்து வளர்ந்து வரும் பாடசாலையாக கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் விளங்குகின்றது.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் நூறு ஆண்டுகள் பத்து தசாப்தங்கள் கொண்ட பல தலைமுறையினரை உருவாக்கிப் பெருமை படைத்து அதன் நூற்றாண்டு நிறைவு நினைவாக "வரம்" என்ற நூலையும் வெளியிடுவதனூடாக பாடசாலையின் பாரம்பரியம் மற்றும் வழக்காறுகள் ஆகியவற்றையும் பாடசாலையின் வளர்ச்சியையும் ஆவணப்படுத்தும் செயற்பாடுகளைக் கல்விச் சமூகம் முன்னெடுத்துள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்துவரும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் பழைய மாணவர்கள் ஆகியோரின் பணிகள் மேலும் சிறப்புற மேலோங்குவதுடன் பாடசாலையின் கல்வி அபிவிருத்தியிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் மேலும் சாதனைகளைப் படைத்து வடமராட்சியில் உன்னதமான ஒரு பாடசாலையாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
கௌரவ கல்வி அமைச்சர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்.

## ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

### வேரூன்றிவிட்ட வேதாரணியேஸ்வரத் தாயே வாழி!

**அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி**

குருக்கள் பள்ளி எனக் கரணவாய் பதிவாழ் மக்களால் உச்சரிக்கப்படும் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா [illegible] "வரம்" சிறக்க வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பள்ளிக்கூடம் வேதாரணியேஸ்வர ஆதீனத்துக்குரித்தான காணியில் 1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. குருக்கள் பகுதியைச் சேர்ந்த [illegible] 1963 ஆம் ஆண்டு [illegible] வேதாரணியேஸ்வர வித்தியாலயம். ஆயினும் இப்பிரதேசத்தில் வாழும் அனைத்து மாணவர்களும் இப்பள்ளியில் உள்வாங்கப்பட்டனர். கரவெட்டிக் கோட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை நிகழ்த்தும் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். 1990 களில் இப்பள்ளியின் அதிபராகவிருந்த திருமதி.ம.நடராசாவின் காலத்தில் சுமார் 10 மாணவர்கள் இப்பள்ளியில் புலமைப் பரிசில் பரீட்சையில் [illegible]

சைவசமய பாரம்பரியங்களோடும் ஒழுக்க விழுமியங்களுடனும் சிறப்புடன் இயங்கி வரும் பாடசாலையாக அறியப்படுகின்றது.

இப்பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் பல [illegible] அக்காலத்தில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் இப்பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வைத்த பெருமை திருமதி.ம.நடராசாவையே சாரும்.

[illegible] மலர் "வரம்" பல்வேறு சிறப்புக்களை வாரி வழங்கி பாடசாலை அதிபர் மலர்க்குழு மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கு என்பாராட்டுதல்களை தெரிவித்து [illegible]

இப்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்கள் 6ம் வகுப்புக்காக விக்னேஸ்வராக் கல்லூரியை நாடி வருவது வழக்கம். இவ்வகையில் விக்னேஸ்வராக்கல்லூரியின் ஊட்டப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பள்ளி இயங்கியது. கொத்தணிப் பாடசாலை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது கரவெட்டிக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக விக்னேஸ்வராக்கல்லூரி விளங்க கொத்தணியின் அங்கத்துவப் பாடசாலைகளில் ஒன்றாக வேதாரணியேஸ்வர வித்தியாலயம் இயங்கியது. நாட்டிலேற்பட்ட அசாதாரண யுத்தமும், மக்களது இடப்பெயர்வும் பிறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இப்பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை நலிவுறச் செய்தது. ஆயினும் இப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர்.

நூற்றாண்டு விழாக் காணும் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் இப்பிரதேசம் வாழ் மக்களின் எண்ணறிவையும் எழுத்தறிவையும் வழங்கித் தொடர்ந்து நீடிக்க வாழ்த்துகின்றேன்.

திரு. [illegible] அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்.

**திரு. வ. செல்வராசா**
ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

## பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பாடசாலையினை, 100 ஆண்டுகள் வளர்த்து எடுத்து, நின்று நிலைத்திடச் செய்வது என்பது சாதாரண காரியமில்லை. பாடசாலைச் சமூகம் சார்ந்தோரின் அர்ப்பணிப்புடனான சேவையே இதற்குப் பிரதான காரணம்.

1917ல் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை, 1962ல் அரசுடமை ஆக்கப்பட்டது. மேலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில், மாணவர்கள் சிறப்புறச் சித்தியெய்தியுள்ளனர். இப்பாடசாலை பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது அனைவரும் அறிந்ததே.

இப்பாடசாலை சைவ சமய மற்றும் தமிழ்ப் பாரம்பரியங்களோடும், ஒழுக்க விழுமியங்களோடும் பின்னிப் பிணைந்து, வளர்ந்து வருகின்றது. இங்கு கல்வி கற்றோர் ஆன்மீக, அரச துறைகளில் பிரகாசிப்பவர்களாக உள்ளனர்.

இப்பாடசாலையின் கல்விப் பணிகள் மேன்மேலும் சிறப்புற்று, கற்கும் மாணவர்களின் தேர்ச்சி அடைவு மட்டம் இன்னும் அதிகரிக்க, எல்லாம் வல்ல ..இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகளைக் காண எனது வாழ்த்துக்கள்.

**திரு. அ. பத்திநாதன்**
பிரதம செயலாளர்,
வட மாகாணம்.

## வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இறைஞர்கள் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய கல்விச் சமூகத்தினரால் பாடசாலையின் நூறு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் "வரம்" நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1962ம் ஆண்டில் அரசுடமையாக்கப்பட்டு நூறு ஆண்டுகளைக் கடந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைத்துள்ளது. இப்பாடசாலை குருக்கள் பகுதியிலே சைவப் பாரம்பரியங்களோடும், ஒழுக்க விழுமியங்களோடும் பின்னிப்பிணைந்து வளர்ந்து வரும் பாடசாலையாகும்.

பாடசாலையின் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக்கு காலம் வெளிவரும் பாடசாலை சஞ்சிகைகள்/ நினைவு மலர்கள் அமைகின்றன. அந்த வகையில் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மலரை வெளியிடுவதிலும் பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக்காட்டுவதிலும் இப்பாடசாலை செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் நூற்றாண்டு விழா நிகழ்வும் மலர் வெளியீடும் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இரவீந்திரன்**
செயலாளர்
வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்குமாகாணம

## விவசாய அமைச்சின் செயலாளரின்
## வாழ்த்துச் செய்தி

இந்தியாவின் வேதாரணியத்துடன் தொடர்புபட்டதான மிகவும் தொன்மை மிக்க வரலாற்றினை கொண்ட வடமராட்சி பிரதேசத்தில் கரவெட்டிப் பிரதேசத்தின் கரணவாய் என்னும் கிராமத்தில் பல அறிஞர்களையும் கல்விமான்களையும் உருவாக்கிய யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பிரதேசத்தின் பிரதேச செயலாளராக கடமையாற்றியவன் என்ற வகையிலும் இப்பிரதேச மக்களின் உயரிய சமூக சமய விழுமியங்களை மதித்து கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய வாழ்க்கை நிலையினையும் நன்கறிந்தவன் என்ற வகையில் பெருமைமிக்க இக்கிராமத்திற்கு மகுடம் வைத்தாற்போல் இப்பாடசாலை ஒரு வரலாற்றுப் பதிவாக அமைந்திருப்பதனை குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன்.

இப்பிரதேசத்தினைச் சேர்ந்த பலர் தமது ஆரம்பக்கல்வியினை இப்பாடசாலையில் கற்று பின் ஏனைய பாடசாலைகளில் தமது உயர்கல்வியினைத் தொடர்ந்து அரச பணிநிலைகளில் பல்வேறு உயர்பதவிகளைஅலங்கரித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதுடன் பண்பாட்டிலும் ஒழுக்கத்திலும் மேன்மை பெற்றிருப்பதுடன் சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும் காணப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

இப்பாடசாலை தனது பணியில் இன்னும் பல ஆண்டுகள் உயர்வான சேவையினை வழங்கி இன்னும் பல்லாயிரக்கணக்கான மாணாக்கர்களை உருவாக்க வேண்டுவதுடன் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிவரும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பாடசாலையினதும் இப்பிரதேச மக்களினதும் ஒளிமயமான எதிர்காலத்திற்கு எல்லாம் வல்ல வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வரப் பெருமானின் அருள்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்,
விவசாய அமைச்சு,
வடமாகாணம்.

## மகளிர் விவகார அமைச்சின் செயலாளரின்
## வாழ்த்துச் செய்தி

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் 100வது ஆண்டிலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். குருக்கள் பகுதியிலே சைவசமயப் பாரம்பரியங்களோடும் ஒழுக்க விழுமியங்களோடும் பின்னிப்பிணைந்து வளர்ந்து வரும் பாரம்பரியம் மிக்க பழைமை வாய்ந்த பாடசாலை இதுவாகும்.

இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பாடசாலை சமூகம் காட்டும் ஆர்வம், மாணவர்கள் வெளிக்காட்டும் திறமை, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை அத்துடன் தலைமைத்துவத்தின் ஆளுமை, ஆற்றல், தன்னலமற்ற சேவைமனப்பாங்கு என்பன இப்பாடசாலையை தனித்துவம் மிக்க பாடசாலையாக அடையாளப்படுத்தி உள்ளன.

ஆரோக்கியமான சூழலில் சமூகத்தின் அற்புதமான அரவணைப்புடன் பல சாதனைகளை நிகழ்த்தி இன்று வரை வெற்றி நடை போட்டு அடுத்த நூற்றாண்டுக்குள் காலடி வைத்திருக்கும் இப்பாடசாலை "வரம்" என்ற நூற்றாண்டு விழா மலரினையும் இந்நாளில் வெளியிடுவதையிட்டும் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் இப்பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் மேலும் சாதனைகள் புரியவும் சிறந்த முன்மாதிரிப் பாடசாலையாகத் திகழவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**இ. வரதீஸ்வரன்**
செயலாளர்
மகளிர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாணசபை உறுப்பிரின்
## வாழ்த்துச் செய்தி

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு அவற்றைச் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நன்நோக்கோடு, இந்தியாவிலுள்ள வேதாரணியேஸ்வர ஆதீனத்தோடு தொடர்புபட்ட குருமார்களால் 1917ல் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் அமைக்கப்பட்டதாக அறியக்கூடியதாக உள்ளது. .குருக்கள் பகுதியில் சைவப் பாரம்பரியங்களோடும் ஒழுக்கவிழுமியங்களோடும் பின்னிப் பிணைந்து தரமான பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருக்கும் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவிற்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அர்ப்பணிப்போடு சிறந்த நிர்வாகத்துடன் செயலாற்றிய பண்பான ஆசிரியர்களினதும், கற்றல் கற்பித்தல் நுணுக்கங்களோடு நல்ல முறையில் ஈடுபாடு கொண்ட அர்ப்பணிப்புள்ள சிறந்த ஆசிரியர்கள் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கியதனூடாக சிறந்த தேர்ச்சிகளையும், பெறுபேறுகளையும் பெற்று வடமராட்சியிலுள்ள முன்னணிப்பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலையில் வைக்கப்படும் நிகழ்வுகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பாடசாலைச் சமூகமே ஒன்றிணைந்த செயற்பாடே இப்பாடசாலையின் சிறப்பு அம்சமாகும்.

இன்றைய தினத்தில் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்பாகவும், மகிழ்ச்சிகரமாகவும் இருக்க வேண்டும் எனவும் இப்பாடசாலை மேன்மேலும் பல சாதனைகளையும் சிறப்புக்களையும் பெற்று இப்போது இருக்கும் சிறந்த நிலையிலும் இன்னும் உயர்ந்த நிலைக்கு வர இறைவனின் ஆசியை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**திரு. க. தர்மலிங்கம்**
கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.

## மாகாணக்கல்விப் பணிப்பாளரின்
## வாழ்த்துச் செய்தி

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தினது நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கரணவாய் கிராமத்தில் சைவசமயப் பாரம்பரியங்களோடு கூடிய கல்வியை வழங்கும் நோக்கில் 1917ம் ஆண்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1962ம் ஆண்டில் அரசுடமையாக்கப்பட்ட இப்பாடசாலை வடமராட்சி வலயத்தில் சிறந்த ஆரம்பக்கல்வியை வழங்குகின்ற பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த ஒழுக்க விழுமியப் பண்புகளைக் கொண்டவர்களாகவும் கல்வி அடைவுகளில் சிறப்பான அடைவினை வெளிக்காட்டுபவர்களாகவும் உள்ளனர். இக்கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் தங்களது பிள்ளைகளை இப்பாடசாலையில் கற்பதற்கு சேர்ப்பதில் ஆர்வத்துடன் உள்ளமை இப்பாடசாலையினது சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

நூற்றாண்டு விழாக்காணும் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று இக்கிராம மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க வாழ்த்துகின்றேன்.

**திரு. செ. உதயகுமார்**
மாகாணக்கல்விப்பணிப்பாளர்,
வடக்குமாகாணம்.

## வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/தோரணியேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் மகுடமாக வெளிவருகின்ற "வரம்" என்ற மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கரவெட்டிப் பிரதேசத்தின் கரணவாய்ப் பகுதியில் குருக்கள் பகுதியினர் வாழ்ந்து வருகின்ற கிராமத்தில் தென்னிந்திய வேதாரணியேஸ்வர மடாலயத்தின் ஆதீன பரம்பரைக்கு சொந்தமான காணியில் 1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று நூற்றாண்டைக் கடந்து கல்விச் சாதனைகள் படைத்து முன்னேறி வருவது பாராட்டுக்குரியது.

சைவப்பாரம்பரியத்தையும், தமிழ்பண்பாட்டு விழுமியங்களையும், ஆன்மீக ஈடேற்றலையும் இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட இவ்வித்தியாசாலையின் நூற்றாண்டு வளர்ச்சிப் பாதையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஓய்வு பெற்ற அதிபர்களையும், இறையடி சேர்ந்த அதிபர்களையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

ஆரம்ப காலங்களில் குருக்கள் பாடசாலை என அழைக்கப்பட்ட இவ்வித்தியாசாலை 1962ம் ஆண்டு அரசுடமையாக்கப்பட்டு துரிதமான வளர்ச்சியடைந்து வடமராட்சி வலயத்தின் ஆரம்பப்பிரிவின் முன்னிலைப் பாடசாலையாக உயர்ந்துள்ளதோடு 2017 ஒக்டோபர் 15ம் திகதி தனது நூற்றாண்டு விழாவையும் வெகுவிமரிசையாக கொண்டாடுவதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

தென்னிந்திய வேதாரணியேஸ்வரா மடாலயத்தோடு இன்று வரை தொடர் உறவைப் பேணிவருகின்ற இப்பாடசாலை தென்னிந்தியாவிற்கும் வடமராட்சிக்கும் இடையிலான சைவப்பாரம்பரிய, கலாச்சார தொடர்புகளுக்கு உறவுப்பாலமாகவும் செயற்படுவது பாராட்டுக்குரியது.

நூற்றாண்டு விழாவின் வரலாற்றுச் சான்றாக வெளிவருகின்ற "வரம்" என்ற நூற்றாண்டு மலரானது வேதாரணியேஸ்வரம் என்ற பாடசாலைப் பெயரினை மலரின் பெயராகக் கொண்டு வெளியிடப்படுவது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் கிடைக்கின்ற வரமாக இருப்பதையிட்டு மகிழ்வடைகின்றோம். எதிர்காலத்தில் தொடர் கல்விச் சாதனைகளையும், இணைபாடவிதானச் சாதனைகளையும் சமூகத்திற்கு வழங்க கடின உழைப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயலாற்றி வித்தியாசாலையின் வளர்ச்சியோடு ஒன்றித்து செயற்பட பாடசாலைச் சமூகத்தையும், கிராம மக்களையும் அன்போடு வேண்டி நிற்கின்றேன்.

**சி. நந்தகுமார்**
வலயக்கல்விப்பணிப்பாளர்
வடமராட்சி.

## ஓய்வுநிலை அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய நூற்றாண்டு மலரான "வரம்" மலருக்கான வாழ்த்துச் செய்தி

"வரம்" நூற்றாண்டு மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பாடசாலையினதும் ஊரினதும் நிலையை ஆவணப்படுத்துவதுடன் அடுத்த சந்ததியின் பார்வைக்கு கொண்டு செல்லும் ஒரு நல்ல செயற்பாடாகும்.

கரணவாய் என்னும் அழகிய விவசாயக்கிராமம் வடமராட்சியில் தென்மேற்குப்பகுதியில் இயற்கை வளங்களுடன் அமைந்துள்ள சோலைவனம் ஆகும். இப்பகுதி மக்கள் சைவநெறிநின்று ஆன்மீகத்தை வளர்க்கும் கல்வி நிலையைப் பெற்றுள்ளனர். இச்சைவ பரம்பரையினர் ஆன்மீகத்துடன் தமிழ், சமஸ்கிருதம், சோதிடம் என்பவற்றை அறிந்திருந்ததுடன் சைவக்கிரியைகளையும் செய்வதில் சிறந்து விளங்கினார்கள்.

இச்சைவ பரம்பரையினர் தென்னிந்தியாவில் வேதாரணியத்தை நிறுவி ஆன்மீகப் பணியை வளர்த்து வருகின்றனர். அக்கால மக்கள் தங்களது நிலங்களை வேதாரணிய நிலையத்திற்கு நன்கொடை வழங்கியும் வந்தனர். உயர் விஸ்வநாதக்குருக்கள் செவ்வந்திநாதக் குருக்கள் 60 வருடங்களுக்கு மேலாக இதனை நிருவகித்தும் வந்துள்ளார். இவ்வேதாரணிய நிறுவனம் கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தை 1917ல் ஆரம்பித்து 45 வருடங்களாக நிருவகித்து வந்தது 1962ல் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.

மூன்று சந்ததியினருக்கு கல்விப்பணி புரிந்த இக்கல்லூரி பாராட்டுதற் குரியது. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளும் கல்லூரியின் வளர்ச்சிப்படிகளில் மறக்க முடியாத நிகழ்வுகளாகும். கல்லூரி இன்று நல்ல பண்பான அதிபர், ஆசிரிய வளங்கள் மூலம் நன்கு வளர்ந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. இவ்வூரைச் சேர்ந்த திரு.வி.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் திட்டமிடல் அதிகாரியாகவும் வடக்கு கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராகவும் செயற்பட்டார். இவர் தமது ஊரிலும் இக்கல்லூரியின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டார். இவரது

பணிகள் இவரது சகோதரர் பொறியியலாளர் திரு.வி.எஸ்.சிவப்பிரகாசம் அவர்களால் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 2009ம் ஆண்டளவில் மீள் எழுச்சி திட்டமும் இணைக்கப்பட்டு ஊரின் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டது.

கல்விப்பணியில் இவ்வூர் மக்களது ஈடுபாடும், அவதானிப்பும் அதிகரித்து வருவதனை உணரக்கூடியதாக உள்ளது. ஊர்மக்களது ஆர்வத்துடனும் கல்விச் சமூகத்தினது வழிகாட்டலிலும் இக்கல்லூரி மிகவும் சிறந்து விளங்கஇப்பகுதி சிவனை வேண்டி நிறைவு செய்கிறேன்.

**திரு. வே. விசுவலிங்கம்**
ஓய்வு நிலை அரசஅதிபர்,
மன்னார்.

## ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

### வேரூன்றிவிட்ட வேதாரணியேஸ்வரத் தாயே வாழி!

குருக்கள் பள்ளி எனக் கரணவாய் பதிவாழ் மக்களால் உச்சரிக்கப்படும் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வு அடைகின்றேன்.

இப்பள்ளிக்கூடம் வேதாரணியேஸ்வர ஆதீனத்துக்குரித்தான காணியில் 1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. குருக்கள் பகுதியைச் சேர்ந்த பிள்ளைகள் சைவசமயப் பாரம்பரியத்திற் கல்வி கற்க வேண்டுமென்ற சிந்தனையில் உருவானதே வேதாரணியேஸ்வர வித்தியாலயம். ஆயினும் இப்பிரதேசத்தில் வாழும் அனைத்து மாணவர்களும் இப்பள்ளியில் உள்வாங்கப்பட்டனர். கரவெட்டிக் கோட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை நிகழ்த்தும் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். 1990 களில் இப்பள்ளியின் அதிபராகவிருந்த திருமதி.ம.நடராசாவின் காலத்தில் சுமார் 10 மாணவர்கள் இப்பள்ளியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததை நான் நன்கு அறிவேன். யுத்த சூழ்நிலை நிலவிய அக்காலத்தில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் இப்பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வைத்த பெருமை திருமதி.ம.நடராசாவையே சாரும்.

1963 ம் ஆண்டு விக்னேஸ்வராக்கல்லூரியில் கல்வி கற்ற காலம் முதல் இப்பாடசாலையை நான் அறிவேன். 5ம் வகுப்பு வரை இப்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்கள் 6ம் வகுப்புக்காக விக்னேஸ்வராக் கல்லூரியை நாடி வருவது வழக்கம். இவ்வகையில் விக்னேஸ்வராக்கல்லூரியின் ஊட்டப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பள்ளி இயங்கியது. கொத்தணிப் பாடசாலை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது கரவெட்டிக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக விக்னேஸ்வராக்கல்லூரி விளங்க கொத்தணியின் அங்கத்துவப் பாடசாலைகளில் ஒன்றாக வேதாரணியேஸ்வர வித்தியாலயம் இயங்கியது. நாட்டிலேற்பட்ட அசாதாரண யுத்தமும், மக்களது இடப்பெயர்வும் பிறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இப்பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை நலிவுறச் செய்தது. ஆயினும் இப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர்.

நூற்றாண்டு விழாக் காணும் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் இப்பிரதேசம் வாழ் மக்களின் எண்ணறிவையும் எழுத்தறிவையும் வழங்கித் தொடர்ந்து நீடிக்க வாழ்த்துகின்றேன்.

**திரு. வ. செல்வராசா**
ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

## ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளரின்

## வாழ்த்துச் செய்தி

### ஐயர் பள்ளிக்கூடம் – அரசபள்ளிக்கூடம்

கரணவாய் குருக்கள் குடியிருப்பு என்பது அனைவராலும் அறியப்பட்ட ஒருபகுதி. இங்கு வாழ்ந்து ஆத்மீகப்பணியில் ஈடுபட்ட அந்தணப் பெரியார்களின் பிள்ளைகளும், மற்றும் அச்சூழலில் வாழ்ந்த சைவப் பெரியார்களின் பிள்ளைகளும் கற்பதற்கென 1917ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கல்விக்கூடமே யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம். இவ்வித்தியாலயம் இன்று தழைத்தோங்கி நூற்றாண்டுகால வாழ்வைக்கண்டு மிளிர்கிறது. இவ்வித்தியாலயத்தை ஐயர் பள்ளிக்கூடம் என்றே பலரும் வழங்கி வந்தனர். ஒரு சில மாணவர்களுடன் திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் 1960ம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டவுடன் அரசபள்ளிக்கூடமானது. படிப்படியாக விரிவாக்கம் பெற்றது. சமூகப்பாடசாலை ஆனது, தனது சுற்றாடலில் வாழும் அனைத்துப் பிள்ளைகளையும் அரவணைத்துக் கொண்டது. தன்னை நாடிவரும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் நல்ல விருட்சமாக நின்று அவர்களைக் காத்து வருகின்றது. இவ்வித்தியாலயத்தின் அயலில் வேதாரணியேஸ்வரா முன்பள்ளியும் இயங்கி வருகின்றது. இம்முன்பள்ளி இவ்வித்தியாலயத்தின் ஊட்டப்பள்ளியாகத் திகழ்கின்றது. இம்முன்பள்ளியில் கற்கும் அனைத்து சிறார்களும் இவ்வித்தியாலயத்தையே தமது ஆரம்பக் கல்விக்கான அடித்தளமாகக் கொள்கின்றனர். தவிர, இவ்வித்தியாலய சூழலில் வைத்தீஸ்வர சுவாமி அறநெறிப்பாடசாலையும் இயங்கிவருகின்றது. இக்கல்விச் சூழல் மிகவும் உகப்பானது. இம்மூன்று நிறுவனங்களும் கல்வியை மட்டுமன்றி நற்பிரஜை உருவாக்கத்திலும் முன்னின்று உழைத்து வருகின்றன.

இந்திய சைவ பாரம்பரியங்களின் எச்சங்கள் இன்றும் எமது பிரதேசத்தில் நிலைத்திருப்பதற்கான சான்றாக இவ்வித்தியாலயம் திகழ்கின்றது. இப்பிரதேசத்தில் வேதாரணிய பரம்பரைக்கு உரித்தான வேறு வளங்களும் காணப்படுகின்றன. இவ்வளங்களிலிருந்து கிடைக்கும் பலன்கள் இன்றும் வித்தியாலயத்திற்கு கிடைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வளங்களின் ஊடாக இங்கு பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு முதலான வரப்பிரசாதங்களுடன் பாடசாலையின் அத்தியாவசிய தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன.

எமது பெற்றோர் மத்தியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பெறுபேற்றினைக் கொண்டு பாடசாலைகளை மதிப்பிடும் ஒரு நடைமுறை

இருந்து வருகின்றது. இந்நடைமுறை ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல. ஆனால் இவ்வித்தியாலயம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பெறுபேற்றுடன் இங்கு கற்று வெளியேறும் அனைத்து மாணவர்களும் அடிப்படைத் தேர்ச்சிகளை உறுதிப்படுத்திவருகிறது. இங்கு கற்று வெளியேறும் மாணவர்கள் தமது இடைநிலைக் கல்விக்காக வடமராட்சியின் பிரபலமான பாடசாலைகளை நாடும்போது இவர்கள் அப்பாடசாலைகளில் விரும்பி வரவேற்கப்படுகின்றார்கள்.

இவ்வாண்டு இவ்வித்தியாலயம் நூற்றாண்டு விழா காணும் வேளையிலேயே இதன் தொன்மையை அறிந்து வியப்புற்றேன். எமது பிரதேசத்தில் சில பாடசாலைகள் கால ஓட்டத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல் மறைந்து விட்டன. ஆனால் இவ்வித்தியாலயம் விரிவாக்கம் பெற்றதுடன் சமூகத்தினரின் அபரிதமான ஆதரவையும் பெற்றுத் திகழ்கின்றது. பாடசாலைகளின் தரிசனத்தின் போதும் குழுநிலை மேற்பார்வைகளின் போதும் இவ்வித்தியாலயத்தைப் பலமுறை தரிசித்துள்ளேன். இவ்வித்தியாலயத்தின் அமைவிடமும் இதன்கல்விச் சூழலும் நிர்வாக நடைமுறைகளும் சிறப்பாக அமைந்திருந்தன. சிறந்த ஒரு ஆரம்பப் பாடசாலைக்கான கவின்நிலை இங்கு அமையப் பெற்றிருந்தது.

நல்லாசிரியர்களுடன் நல்ல அதிபர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த இவ்வித்தியாலயம் தன்து நூற்றாண்டு காலப்பயணத்தை தொய்வின்றி மேற்கொண்டுள்ளது. நூற்றாண்டு காணும் இக்காலத்தில் இவ்வித்தியாலயத்தை உருவாக்கிய அந்தணப் பெரியார்கள் வித்தியாலயச் சூழலில் வாழ்ந்த பெருமக்கள் இங்கு கடமையாற்றிய ஆசிரியர்கள், நிர்வகித்த அதிபர்கள், கற்றுத்தேறிய மாணவர்கள், இன்று விழாவெடுத்து மகிழும் பெருந்தகைகள் அனைவரும் நினைவுகூரத்தக்கவர்கள். நின்று நிலைத்து நீடித்த புகழுடன் திகழும் இவ்வித்தியாலயம் இன்னும் பலநூற்றாண்டுகள் நிலைத்து நின்று நீடித்த கல்வியை வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. ஆ. ராஜேந்திரன்**
முன்னாள் மாகாணக்கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்

## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கரவெட்டி கரணவாய் வேதாரணியேஸ்வர தன்னுடைய நூற்றாண்டு விழா மலரான "வரம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கரவெட்டிப் பிரதேசம் புலமையின் வேராக விளங்கி வருவதற்கு பாடசாலைகளில் வகிபாகமும் அவற்றோடு ஒன்றிணைந்த ஆசிரியர்களின் சேவைகளுமே காரணமாக விளங்குகின்றது. இந்த வகையில் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு சேவையானது பாராட்டுக்குரியதாகும்.

மிகச் சிறந்த புறச்சூழலில் சைவமும் தமிழும் மேலோங்க குருக்கள் பகுதியிலே சைவசமய பாரம்பரியங்களோடு பின்னிப் பிணைந்து அமையப் பெற்ற இப்பாடசாலையும் அதனோடு இணைந்த சமூகமும் வெளியிடுகின்ற இவ் நூற்றாண்டு சிறப்பு மலரில் இப் பாடசாலையானது தனது சாதித்த வரலாற்றினை நூலாக்கி எதிர்காலச் சந்ததியினருக்கு சமர்ப்பிக்கும் என்ற நம்பிக்கையோடு எதிர்காலத்தில் உபயோகிக்கப்படும் இத்தகைய வரலாற்று ஆவணத்தை ஆக்கித்தந்துள்ள பாடசாலை அதிபர்களுக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் மலர் குழுவிற்கும் இதனுடன் தொடர்புடைய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. க. ஸ்ரீமோகனன்**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

## மனமகிழ்வைத் தரும் தருணம்

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1917ம் ஆண்டில் வேதாரணியேஸ்வர ஆதீன பரம்பரைக் காணியில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆரம்பப் பாடசாலை இன்று பெரு வளர்ச்சி கண்டுள்ளது. அமைதியான கிராமச்சூழலில் இப்பாடசாலை இயங்கி வருவது மாணவர்கள் சிறந்த ஒழுக்கத்துடன் கூடிய கல்வியைப் பெறுவதற்கு உகந்ததாக உள்ளது.

சைவப்பிள்ளைகளின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பேணக்கூடிய விதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது மாணவர்களுக்கு சிறந்த கல்வியை ஊட்டும் நிறுவனமாக வடமராட்சி வலயத்தின் ஆரம்பப் பாடசாலைகளில் புகழ்பூத்து திகழ்ந்திருக்கிறது எனக் கூறுவது மிகையில்லை.

மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தினையும் விழுமியப் பண்புகளையும் புகட்டி வருவதன் மூலம் சிறந்த பிரஜைகளை உருவாக்கி வழிப்படுத்தி உள்ளது. இதற்கு வித்திட்ட இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் சமூகத்தினது ஒத்துழைப்பு என்றும் பாராட்டுக்குரியது. இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று பிரதேச மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தினை அள்ளி வழங்க வாழ்த்துகின்றேன்.

**திரு. அ. விநோராஜ்**
செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
கரவெட்டி

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் பக்திநெறி சார்ந்த கல்வி, கேள்வி ஞானங்களில் சிறந்து விளங்குகின்ற பண்பாளர்களின் சமூகப் பின்னணியிலே 1917இல் தோற்றம் பெற்று இன்றும் கரவெட்டிப் பிரதேசத்தில் தனது நற்பெயரோடு முத்திரை பதித்து மிளிர்கின்றது.

வேதாரணியேஸ்வர ஆதீன பரம்பரையினரின் காணியில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிலையம் இலங்கையின் கல்வி வரலாற்றில் 1869ம் ஆண்டு பொதுசன அறிவுறுத்தற் திணைக்களம் உருவாக்கப்பட்டு அரச பாடசாலைகளும் அரச உதவி பெறும் பாடசாலைகளும் நிர்வகிக்கப்பட்டு வந்த காலப்பகுதியில் தோற்றம் பெற்று 1960ம் ஆண்டு கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம் நிறுவப்பட்டு எதிர்காலத் தேவைக்கான கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அரச உதவி பெறும் பாடசாலைகள் 1961 அரசுடமையாக்கப்பட்டதனைத் தொடர்ந்து இப்பாடசாலையும் 1962ல் அரசுடமையாக்கப்பட்டு சிறந்த கல்விமான்களை உருவாக்குகின்ற ஏணியாக மிளிர்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கல்வி வழங்குகின்ற நிறுவனங்களில் அதாவது கல்வியியல் கல்லூரிகளிலிருந்து பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சிக்கு விரும்பி வருகின்ற பாடசாலையாக மிளிர்கின்றது. மாணவர்களின் பண்பு, பக்குவம், சமூகத்தின் கல்வி நோக்கு என்பன இப்பாடசாலையின் சிறந்த வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றன. வடமராட்சி வலயத்தில் வருடாந்தம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைத் தருகின்ற பாடசாலையாக இதனையும் குறிப்பிடலாம்.

நூற்றாண்டுகளைக் கண்டு இறும்பூதெய்தி "வரம்" தந்து வாழ்த்தும் வரத்தோடு வாழ்க்கைக்கு வரம் தரும் வரமான வித்தியாலயம் பருவிருட்சமாக மிளிர்ந்து எண்திசையும் கல்வி மணங்கமழ இறைவரம் இரந்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

நன்றி

**திரு.க. க. யோகநாதன்**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
கரவெட்டி.

## வாழ்த்துச் செய்தி

'நற்றுணையாவது நமச்சிவாயவே'

மறை ஓதும் அந்தணர்களும், மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டிகளாகத் திகழும் சைவகுருமாரும், ஏனைய பல்சமூகத்தாரும் ஒங்கே இணைந்து வாழும் எங்கள் கருணைவாய் கிராமத்திலே தென்னிந்தியா வேதாரணியம் (திருமறைக்காடு) திருக்கோவில் மற்றும் ஆதிவாரமட பரிபாலனங்களின் தர்மகாவலர்களாக விளங்கும் கருணிகர்கள் வழிவந்த கரணவாய் சைவக்குருமார்களின் சிந்தனையிலே உருவான எங்கள் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் நூற்றாண்டு நாளை கொண்டாடும் இந்நன்னாளிலே அன்னையின் பிள்ளையாயிருந்து ஸ்தாபகர் வழிவந்த அன்பன் நல்லாசி வழங்க எம்பெருமானின் திருவருள் கிடைத்தமை மிக்க அகமகிழ்வைத் தருகின்றது.

எங்கள் வித்தியாலய அன்னை குடியிருக்கும் நிலத்தின் உரிமையாளரான ஆதிவாரமட பரம்பரை தர்மகாவலர்களில் ஒருவராயிருந்து இறைபதம் எய்திய சிவஸ்ரீ.சொக்கநாதக்குருக்கள். விஸ்வநாதக்குருக்கள் அவர்கள் அத்திவாரமிட்டு வளர்த்தெடுத்த பிள்ளை இன்று அகவை நூறை அடைந்து புதுப்பொலிவுடன் 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர்சுவாமிகளின் அருள்வாக்குக்கமைய அறிவுப்பசியுடையோருக்கு வேண்டியவற்றை வாரி வழங்கி வருவது பதிவு செய்ய வேண்டிய செய்தியாகும்.

இதற்கு உறுதுணையாக ஸ்தாபகர் பெரும்கனாரின் வம்சாவழியினர் வேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலை வைத்தீஸ்வரப் பெருமான் அறநெறிப்பாடசாலை முதலாய அறிவாலயங்களை அமைத்து மக்களை அறநெறி மார்க்கத்தில் வாழ்ந்துவர வழிகாட்டியாக உள்ளமை எம் அன்னையின் பணிக்கு அணிசேர்ப்பதாயமைந்துள்ளமை பெருமைக்குரியதாகும்.

ஆதிவாரமட தர்மத்தின் ஓர் அங்கமாக அமைந்து அறவழியில் நற்பணியாற்றும் வேதாரணியேஸ்வர வித்தியாலய அன்னைக்கு பண்ணினேர்மொழியாள் சமேத வேதாரணியேஸ்வர சுவாமியின் திருவருள் என்றும் கிடைத்து அவள்தம் அரும்பணி சிறப்புற எம்பெருமானை இறைஞ்சி நல்லாசி கூறி நிறைவு செய்கின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

**வி. செ. சிவப்பிரகாசம்**

*சிவப்பணி செம்மல், சமூகசேவாரத்ன பண்டாரசந்நிதி*

## ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். சைவமும் தமிழும் செழித்தோங்கிய பிரதேசங்களாக கரணவாய் குருக்கள் பகுதியும் ஒன்றாகும். வரணி குருக்கள் பகுதியும் விளங்குகியிருக்கின்றன. இப்பிரதேசங்களைச் சேர்ந்த சைவக்குருக்கள்மார் நாயன்மார்களால் தேவாரம் பாடப்பெற்ற சிறப்பைக் கொண்ட தமிழ்நாடு வேதாரணியம் கோவிலுடன் வரலாற்றுக்காலம் தொடக்கம் நெருங்கிய தொடர்புகளைப் கொண்டிருந்தனர். இதனால் இப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு வேதாரணியேஸ்வர வித்தியாலயம் எனப் பெயரிட்டு இப்பகுதி மக்கள் சைவத்தமிழ் பண்போடு வளர்ந்து வருகின்றனர்.

கல்வியின் நோக்கமும் ஆன்மீக சிந்தனையுடன் கூடிய நற்பண்புகளை உடைய பிரஜைகளை உருவாக்குவதாகும் இப்பாடசாலை நூற்றாண்டுகளாக இப்பணியினைச் சிறப்பாக செய்து வந்துள்ளது. நான் கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில் (2000 - 2010) பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளையும் பாடசாலையோடு சமூகம் கொண்டிருந்த தொடர்புகளையும் அவதானித்திருக்கின்றேன். இப்பிரதேச மக்களும் இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களும் ஆசிரியர்களும் இணைந்து மேற்கொண்ட இடையறாத முயற்சியினால் கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள முன்னணி ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

நூற்றாண்டு விழாவையொட்டி பாடசாலைச் சமூகத்தினரால் வெளியிடப்படும் மலர் பாடசாலையின் கடந்த காலச் சாதனைகளை எடுத்துக் காட்டுவதாக விளங்கும். இது இன்றைய மாணவர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தும். இப்பணியைச் சிறப்பாக மேற்கொள்ளும் பாடசாலையின் இன்றைய அதிபர் திரு.த.பாலகுமார் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். நான் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இப்பாடசாலைய்யச் சூழ உள்ள சைவக்குருமார்களோடும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கின்றேன். அவர்களது கல்வித் தரத்தில் முன்னேற்றம் வாழ்க்கை வசதிகளில்

அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதும் அவர்களது ஆன்மீக வாழ்க்கையும் இனிமையான கிராமியப் பண்புகளும் உலகமயமாதலால் மாற்றமடையாது இருந்து வருவதை அவதானிக்கின்றேன். இவ்வுயர்ந்த பண்புக்கு அடிப்படையாக அமைவது இப்பாடசாலையால் வழங்கப்பட்ட ஆன்மீக அடிப்படையிலான கல்வியாகும்.

இவ்வித்தியாலயமானது கல்விநிலை வேறுபாடுகள் பொருளாதார நிலை வேறுபாடுகள் சமூகசமயநிலை வேறுபாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது யாவர்மாட்டும் சமமான பார்வைகள் செலுத்தி பயன்கருதாது சிரத்தையோடு பணியாற்றும் நற்பிரஜைகளை உருவாக்கும் பணியைத்தொடர்ந்து வழங்கிவர எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை மனதார வேண்டுகின்றேன்.

நான் பணியில் இருந்து ஓய்வு பெற்று பலவருடங்கள் சென்ற பின்னும்கூட மறக்காது இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி தருமாறு கேட்டுக் கொண்ட பாடசாலைச் சமூகத்திற்கு என்றென்றும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**திரு. க. அம்பலவாணர்**
ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி
கரவெட்டிக் கோட்டம்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி

## வேதாரணியேஸ்வரா எனும் பண்பாட்டு மையம்

கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு மலருக்கான வாழ்த்துச்செய்தி அளிப்பதில் நான் பெருமகிழ்வும் பெருமிதமும் கொள்கிறேன்.

1917 ஆம் ஆண்டு எமது கரணவாய் பிரதேசத்தின் குருக்கள் பகுதி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று நூறு வருடங்களைக் கடந்து வெற்றிகரமாக பல சாதனைகளுடன் தொடர்ந்து இயங்கி வருவது என்பது வரலாற்று நிகழ்வு.

சைவசமயப் பாரம்பரியங்களை அடிநாதமாகக் கொண்டு அதன் அடிப்படையில் சமூகத்திற்கான ஒழுக்க விழுமியங்களை பேணிக்கொள்வதற்கு எமது பாடசாலை மூலாதாரமாக இருந்து வருகிறது.

தென்னிந்தியாவின் வேதாரணிய ஆதீனசபையின் ஆசியுடன் உருவாக்கப்பட்ட பாடசாலை அதே பெயரைக்கொண்டு சைவசமயத்துக்கான வடமராட்சியின் மையங்களுள் ஒன்றாகத் திகழ்வது அதன் மிகப்பெரிய சிறப்பம்சமாகும்.

ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கிறிஸ்தவ மிஷனரியின் செல்வாக்கு அதிகரித்து, கல்வியுடன் மதம் உள்நுழைகின்ற சந்தர்ப்பத்தில் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் தோற்றம் நிகழ்ந்திருப்பது என்பது அதன் வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்தியம்பக் காரணமாகின்றது.

சைவசமயத்தைக் கல்வியுடன் இணைத்த காலப்பகுதியில் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் இயக்கமும் அதன் இருப்பும் அங்குள்ள அனைவராலும் விரும்பப்பட்டது. பாடசாலையை தொடர்ந்தியக்குவது தமது காலக்கடமை என்று உணர்ந்து அனைவரும் இணைந்து செயற்பட்டனர்

குறிப்பாக பிராமணக்குருக்கள் சமூகத்தினருடன் இணைந்து சைவ மரபினர் தங்களுக்கான சைவமரபையும், தமிழ் மொழியின் நீட்சியையும் அவற்றோடிணைந்த கலாச்சார. பேறுகளையும் பேணிக்காத்துவருவதற்கு வேதாரணியேஸ்வரா வித்தியாலயம் ஒரு மையக்களமாக இருந்ததை செயற்பட்டதை நாம் கவனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.

கல்வியால் மத ஊடுருவலைத் தவிர்ப்பதை கல்விச் செயற்பாட்டு மையமாக தனது, உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்த எமது பாடசாலை, தொடர்ந்தும் தனது உன்னத நோக்கத்தை கைவிடாது அனைத்து சைவச்சிறார்களையும் உள்வாங்கி ஒரு பண்பாட்டு மையமாக விளங்குவதை நாம் கண்கூடு காண்கிறோம்.

இத்தகைய வரலாற்று அடையாளமாயும் சமூக பண்பாட்டு செயற்பாட்டு மையமாகவும் இருக்கக்கூடிய வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் உறுதியான இருப்புக்கும் காத்திரமான செயற்பாட்டுக்கும் நாம் எல்லோரும் இணைந்து தொடர்ந்தும் பங்களிப்போம். பாடசாலை எம்மைக் கடந்து காலங்காலமாக எமது சந்ததியின் எதிர்காலத்தை உருவாக்கும் உன்னத நிலைக்கு வரவேண்டும் என வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

குணரட்ணம் சசிக்குமார்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/ வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்,
கரவெட்டி.

## பழைய மாணவர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கற்றோர் மிகுந்த கருணையூர் எனப் போற்றப்படும் கரணவாய்க் கிராமத்திடை சிறந்த ஆரம்பப் பாடசாலையாகத் திகழும் பெருமைமிக்க யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் எம் பிரதேச சிறார்களின் கல்விக் கண்ணைத் திறக்கும் அறிவாலயமாக திகழ்கிறது எனில் மிகையாகாது. இப்பிரதேச மாணவர்கள் ஒழுக்க சீலர்களாகவும் பல்துறை விற்பன்னர்களாகவும் உருவாகினார்கள், உருவாகின்றார்கள் என்றால் அதற்கு இப்பாடசாலையே களமாவும், தளமாகவும் அமைந்து விளங்குகின்றது. குருக்கள் பள்ளிக்கூடம் என ஆரம்பகாலத்தில் அழைக்கப்பட்ட இவ் ஆரம்பப் பாடசாலை இன்று சாதனைகள் பல கண்டு நூற்றாண்டை நிறைவு செய்வதை எண்ணும் போது உள்ளம் பூரிக்கின்றது.

சைவமும் தமிழும் தழைத்தோங்க ஒளியூட்டி வழிகாட்டிய எம் பாடசாலை சாதனைகளை பதிவு செய்யம் இவ் வேளையில் பழையமாணவர்சங்க செயலாளர் எனும் வகையில் இச்சாதனைகள் எதிர் காலத்தில் பல்கிப்பெருகி எம்பாடசாலை கல்வி உலகில் கலங்கரை விளக்கென திகழ வேண்டும் எனவும் கல்லூரியின் சாதனைப்பயணம் தொடர வேண்டும் எனவும் எல்லா வல்ல இறைவனை வேண்டி மென்மேலும் பெயரும் புகழும் பெற வாழ்த்துகின்றேன்.

**திரு. ஸ்ரீ. குகதீப**
செயலாளர்
பாடசாலை பழையமாணவர் சங்கம்.

## மலர்க்குழுவின் உள்ளத்திலிருந்து

ஈழமணித்திருநாட்டில் சைவமும் செந்தமிழும் மேலோங்கி நிற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தன்னிகரற்ற அறிவியலில் சிறந்து விளங்கும் வடமராட்சிப் பிரதேசத்தின் வளங்கள் நிறைந்த கரணவாய்ப் பகுதியிலே கரணவாய் மூத்த விநாயகரினதும், வீனாவாத விதூசனி சமேத வேதாரணியேஸ்வரப் பெருமானினதும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானினதும், உச்சில் புவனேஸ்வரி தாயாரினதும் அருட்கடாட்சத்தில் தழைத்தோங்கியும் ஆதி சைவமரபில் வந்த பெரியோரினதும் ஆசியுடனும் கம்பீரமாக மிளிர்ந்து நிற்கும் யா/.கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் தனது நூறாம் ஆண்டில் தடம்பதிக்கும் இத்தருணம் மலர்க்குழுவின் சார்பில் "வரம்" எனும் இம்மலரை வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறோம்.

1917ம் ஆண்டு இந்தியாவிலுள்ள வேதாரணியேஸ்வர ஆதீன சபை ஊர்மக்களின் உதவியோடு இப்பாடசாலையை நிறுவி கல்விச் செல்வத்தை வழங்கி வந்தனர். ஆரம்பத்தில் இந்துப் பாரம்பரிய விழுமியங்களுக்கு அமைவாக கல்விச் செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வந்தன. அக்காலப்பகுதியில் மரநிழலையும் குடிசைகளையும் கொண்டு இயங்கி வந்தது. பின்னர் அரசுடமையாக்கப்பட்டு பலவுட்கட்டமைப்பு வசதிகளைப் 1960ம் ஆண்டு தேசியவுடமையாக்கும் சட்டத்தின் கீழ் பாடசாலைச் சொத்துக்கள் யாவும் அரசுடமையாக்கப்பட்டதோடு அக்காலத்தில் போதித்து வந்த ஆசிரியர்கள் அரச அங்கீகாரம் பெறறனர். இவ்வாறாக படிப்படியாக பரிணாம வளர்ச்சியைக் கண்டு வந்த இப்பாடசாலையானது இன்று கற்றல் கற்பித்தலோடு இணைபாட செயற்பாடுகளிலும், மாணவர்களது நல்லொழுக்கம், பண்பாடு சீர்மியம், ஆளுமைவிருத்தி, சேவைமனப்பாங்கு போன்ற உயர் சிறப்பம்சங்களை தனதாக்கி பாடசாலையின் "அறிவு மிளிர்க" எனும் மகுடவாசகத்திற்கு இலக்கணத்துக்கு இலக்கியமாக மலர்ச்சி கண்டுள்ளது.

நூற்றாண்டு காணும் எமது பாடசாலையானது பல வள்ளல் பெருமக்களின் உதவியோடு புதுப்பொலிவு பெற்றுள்ளது. எம் பாடசாலையின் இவ்வரலாற்று பயணத்தை அறிந்து எதிர்கால சந்ததியையும் இதன் தொடர்ச்சியைப் பேணி அர்ப்பணிப்பான தங்கள் சேவையை வழங்க முன்வர வேண்டும். அதற்கு மலர்க்குழு உறுதுணையாக இருக்குமென நம்புகின்றோம். இப்பாடசாலையின்

புகழையும், காத்திரமான கட்டுரைகளையும் சிந்தனையை மெருகூட்டும் வகையில் சமகாலத்தையும் எதிர்காலத்தையும் நோக்கி நகர்த்தும் ஆவணமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இப்பாடசாலையானது சமூகத்திற்கு வரலாற்று ஆவணமாகவும் அமையும் என்று எதிர்பாரக்கின்றோம். இவ்வரம் என்ற சஞ்சிகையானது இப்பாடசாலை சமூகத்திற்கு இனிவரும் காலம் தன்னிகரில்லாச் சிறப்புக்கள் நிறைந்த எமது பாடசாலையானது இவ்வாறு பல நூற்றாண்டுகளைக் கடந்து, பலநூற்றாண்டு மலர்களை வெளியிட வழிகோல வேண்டுமென நூற்றாண்டு மலர்க்குழு மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

"வாழிய பல்லாண்டு – எம்பாடசாலை
வாழிய வாழியவே"

**மலர்க்குழு.**

## அதிபரின் சிந்தனையிலிருந்து..................

தனபாலசிங்கம் பாலகுமார்
அதிபர்,
யா/கரணவாய் வேதாரணியேஸ்வரவித்தியாலயம்.

'அறிவுமிளிர்க'என்றமகுடவாசகத்தைக் கொண்டுஅறிவுப் பசியோடுவரும் மாணவர் களுக்கெல்லாம் அறிவுப் பசியைப் போக்கும் யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியா லயம் ஆரம்பக் கல்விப் போதனையில் மகத்தானகல்விப் பணியாற்றிவருகிறது.

இந்தப் பாடசாலையானது நூற்றாண்டுவிழாக் காணுவதுபெருமைக்குரியது. ஆரம்ப காலங்களிலே 1917ல் சிறுகொட்டிலிலேயே சிறுஅளவான மாணவர்களுடன் திண்ணைப் பள்ளிக் கூடமாக ஆரம்பமாகி சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கோடு குருக்கள் பகுதியிலே சைவச் சிறார்களுக்கு கல்வியையும், ஒழுக்கத்தையும், சைவப் பாரம்பரியத்தையும் போதித்துவந்த இப் பாடசாலை காலவோட்டத்திலே சிறுகச் சிறுக நாளொரு பொழுதும், பொழுதொரு வண்ணமுமாக வளரர்ச்சியடைந்து 01.10.1960ல் அரசாங்க பாடசாலையாக உள்வாங்கப்பட்டு கல்விப் போதனையில் மிகவேகமாக வளர்ந்து இன்று நகரப் பாடசாலைகளுக்கு ஈடான சித்தி வீதத்தைப் பெற்றுவருகிறது. என்பது மகத்தானதொரு சாதனையாகும்.

ஏழைச் சிறார்களையும், குறைந்தளவு வளங்களையும் கொண்டு இச் சாதனைகளை நிகழ்வது பாராட்டுக்குரியது. இப் பாடசாலையின் வளர்ச்சியில் வேதாரணியேஸ்வர ஆதீனத்தின் பங்குபோற்றுதற்குரியது. இப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு தமது காணியை வழங்கியதோடு இன்றும் நலிவுற்ற பிள்ளைகளுக்கு காலை உணவு, பால் போன்றவற்றை வழங்குவதோடு தரம் 5 மாணவர்களை ஊக்கப்படுத்தி பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர் என்ற வகையில் அவர்களது பணியும் இப் பாடசாலையைப் பொறுத்த மட்டில் மகத்தானது.

மேலும், இப் பாடசாலையின் சொத்தாகஅமைந்தது இப் பாடசாலையின் அதிபர்களும், ஆசிரியர்களும் ஆவர். இன்றுவரை இவர்கள் ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் கடமையாற்றுவதனாலேயே இப் பாடசாலையின் வளர்ச்சி வேகம் அதிகரிக்கின்றது. இப் பாடசாலையின் மீது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் போன்றோர் கொண்டிருக்கின்ற நன்மதிப்பும், விருப்பும், பக்தியும் இப் பாடசாலையின் மாணவர் சேரும் வீதத்தை கூட்டுகின்றது என்பது எனது கணிப்பாகும். தற்போது இப் பாடசாலையானது பிள்ளை நேயப் பாடசாலையாக வளர்ந்திருப்பது இப் பாடசாலை கண்ட வெற்றியாகும். இந் நிலை நீடிக்கும் போது இப் பாடசாலை நகரப் பாடசாலைகளுக்கு இணையாக விளங்கும் என்பது வெள்ளிடை மலையாகும்.


மேலும், இந்த நூற்றாண்டுநிறைவுக்காலத்தில் நானும் இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும், பழைய மாணவர்களும், வெற்றோர்களும் பாக்கியம் பெற்றவர்கள் என்றே கூற வேண்டும். ஏனெனில் இப்படியானதொரு சந்தர்ப்பம் அடுத்த பரம்பரைக்கு கூட கிட்டாது எனலாம். எனவே, இந்த நூற்றாண்டு விழாவிலே அனைவரும் கலந்து சிறப்புப் பெறுவோமாக.

பாடசாலை முதல்வர்




திரு. த. பாலகுமார் (B.A, PG.DE, Trd. Commerce)


# பாடசாலையை அலங்கரித்த அதிபர் பெருமக்கள்




திரு. சு. கைலாசபிள்ளை



திரு. A. கணபதிப்பிள்ளை




திரு. வ. சின்னத்தம்பி




திரு. த. கந்தவனம்



திருமதி நாகமுத்து ஆழ்வாப்பிள்ளை




திரு. சொ. நடராசா




திரு. ச. செல்வநாயகம்



திருமதி மனோன்மணி நடராசா




திரு. ம. ஜெயவரதராசா



திரு. த. ரவீந்திரன்




திருமதி தவமலர் ஜெயக்குமாரன்




திரு. த. பாலகுமார்

# பாடசாலையை அலங்கரித்த ஆசிரியப் பெருந்தகைகள்


திரு. சி. கந்தையா


திருமதி மீ. முருகேசு


திருமதி ம. நடராசா


திரு. க. சி. அச்சலிங்கம்


திருமதி சி. இராஜேஸ்வரன்


திருமதி வ. முருகானந்ததாஸ்


சிவஸ்ரீ. கை. நமசிவாயக்குருக்கள்


திருமதி ம. கணேசமூர்த்தி


திருமதி பா. குமரேசன்


திருமதி அ. அன்ரன் இராஜநாயகம்


திருமதி வ. கந்தசாமி


திருமதி. ஷ. சஞ்சீவன்


திரு. த. வைகுந்தன்


செல்வி. சி. நடராசா


திருமதி. சா. சுதர்சன்


திருமதி அ. நிவேந்தன்


செல்வி. தி. காயத்திரி

செவ்வந்திநாததேசிகர்
பண்டிதர். சிவப்பிரகாசதேசிகர்
செல்வி. க. வள்ளிப்பிள்ளை
திரு. வ. குமாரசுவாமி
திருமதி நாகமுத்து
திரு. க. சிற்றம்பலம்
திருமதி M. நடராசா
திரு. K. செவ்வந்திநாதர்
திரு. S. அருட்பிரகாசம்
திரு. S. விசுவநாதர்
திருமதி P. இளையதம்பி

திரு. A. சுப்பிரமணியம்
திரு. K. நடராசா
திரு. K. மயில்வாகனம்
திருமதி நா. செல்லையா
திரு. பொ. பூபாலன்
திருமதி அ. மாணிக்கம்
திரு. கா. அருளானந்தம்
திரு. மு. கனகசிங்கம்
திரு. அ. சிதம்பரப்பிள்ளை
திரு. சி. கிட்ணர்
செல்வி. S.நிர்மலா
திரு. க. கருணாநிதி

# யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் வரலாறு

## அமைவிடம்

ஈழமணித்திருநாட்டின் தலையாம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிழக்குப் பகுதியான வடமராட்சிப்பகுதியிலே யாழ் பருத்தித்துறை பிரதான வீதிக்கு தெற்குப் புறமான நிலப்பகுதியிலே தென்னையும் பனையும் வயல்நிலத்தினாலும் சூழப்பெற்ற கரணவாய்ப்பகுதியிலே வடக்கே மூத்தவிநாயகரும் தெற்கே உச்சில் புவனேஸ்வரி அம்பாளும், கிழக்கே வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வரப்பெருமானும் அருளாட்சி பொழிகின்ற வேதம் ஓதும் சைவப்பெருமக்கள் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் காத்துவருகின்ற பெரும்பணி ஆற்றிவருகின்ற குருக்கள் பகுதியிலே தென்னிந்திய வேதாரணிய ஆதிவார மடதர்மத்தின் அன்பளிப்பிலே வழங்கப்பெற்ற காணியிலே அமைந்து கம்பீரமாக எழுந்து நிற்கும் கல்விக்கூடம் தான் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.

## இதன் ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் வடமராட்சிப்பகுதி கட்டைவேலி கோயிற்பற்று கரவெட்டிக்குறிச்சி வென்றிக்குறிச்சியிறை நொச்சித்தோட்டம் நிலப்பரப்பு 8 தோட்டம் 1 படி நில.ப.10 ½ வீடு 1 நி.ப 8 ¼ இப்பிரிவுகளின் ஆட்சிப்படி நி.ப 11 எல்லை கிழக்கு வெள்ள வாய்க்கால் வடக்கு மயில்வாகனம் முத்துக்குமாருவுக்கு உரிய ஆதனம் மேற்கு பொன்னையா பெண் தங்கம்மாவுக்கு உரிய ஆதனம் தெற்கு ஒழுங்கையும் சந்திரசேகர் விஸ்வநாதருக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் பனைகள் அடங்கலும் (ஆனால் பாடசாலைக்கட்டடம் புறநீங்கலாக)

## தோற்றம்:

ஈழத்திருநாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி முற்றுமுழுதாக ஸ்தாபிக்கப்பட்டு வேரூன்றியபின் வடபகுதியிலே மிசன்மாரின் ஆதிக்கம் வேரூன்றி தம்மதத்தையும் கலாசாரத்தையும் பரப்ப முனைந்த போது அதற்கு கல்வியை ஒரு சாதனமாக பயன்படுத்தினர். இதனால் வடபகுதி எங்கும் பெரிய பெரிய கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டு அங்கு கிறிஸ்தவ ஆலயங்களும் ஸ்தாபிக்கப்பட்டது. இதனால் சைவசமயிகளை கிறிஸ்தவர்களாக மாற்றியிருந்தனர். இதனால் சைவசமயத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட காலாயிருந்தது. இத்தருணத்திலே தான் பல சைவப்பெரியார்கள் சைவத்தையும் தமிழையும் காக்க திடசங்கற்பம் பூண்டு எழுந்தனர். அக்காலத்திலே தான் இக்கிராமத்திலும் சைவத்தையும் தமிழையும் காக்க கரணவாய் குருக்கள்பகுதியிலே சைவசமய மரபை பேணிவந்த சைவக்குருமாரின் சபையான கரணவாய் வேதாரணியேஸ்வர ஆதீன சபை

சைவசமய வளர்ச்சி பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தது. இதனால் தென்னிந்தியாவிலே உள்ள இவர்களின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதியையும் பெற்றனர். இதன் நிமித்தம் 1917ம் ஆண்டளவில் இச்சபையின் தலைவரான ஸ்ரீலஸ்ரீ சோ.விஸ்வநாதக்குருக்கள் காரியதரிசியான கைலாயநாத தேசிகர் ஆகியோர் ஊர்மக்களிடம் பெற்றுக் கொண்ட பனை மரங்கள் முதலான பொருட்களைக் கொண்டு ஆதீனத்தின் சொத்தான இக்காணியில் ஓலைக் கொட்டில் அமைத்து இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் நோக்கம் அந்நியமத ஊடுருவலை தடுத்து சைவசமயத்தை காப்பதே இப்பாடசாலையின் முகாமையாளராக இலங்கை வேதாரணிய ஆதீனத்தின் காரிய தரிசியே (கைலாயநாததேசிகர்) கடமையாற்றியிருந்தார். இப்பாடசாலையின் முதல் அதிபராக சு.கைலாசபிள்ளையும் உதவி ஆசிரியர்களாக ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத தேசிகர், பண்டிதர் ஞா.சிவப்பிரகாசதேசிகர், செல்வி. க. வள்ளிப்பிள்ளை ஆகியோர் கடமையாற்றியிருந்தனர்.

1917ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1930ம் ஆண்டளவில் அரசு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. இக்காலத்தில் அரசு அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற முதல் அதிபராக திரு.ஆ.கணபதிப்பிள்ளை கடமையாற்றினார். இவரது காலத்தில் வ.குமாரசாமி, நாகமுத்து, க.சிற்றம்பலம், சி.கந்தையா ஆகியோர் உதவி ஆசிரியர்களாக கடமையாற்றினர். இவரது காலத்தில் பாலர் வகுப்பு முதல் சிரேஸ்ட தராதரப் பத்திரம் வரை (S.S.C) வகுப்புக்கள் நடைபெற்றன. இக்காலத்திலும் முகாமையாளராக கைலாயநாததேசிகர் அவர்களே கடமையாற்றி இருந்தார். ஆதீனத்தின் தலைவருமான விஸ்வநாதக்குருக்கள் அவர்களும் இயன்றவரை தம்மாலான பணிகளைச் செய்து வந்தார். இப்பாடசாலைக்கான காணியை பெற்றுக் கொடுப்பதில் பெரும் பணியாற்றியிருந்தார்.

## இப்பாடசாலையை அரசுபொறுப்பேற்றமை:

இப்பாடசாலை 1960.10.01ம் திகதியில் கிராமியப் பாடசாலைகளை தேசிய உடைமையாக்கும் சட்டத்தின் கீழ் இப்பாடசாலையும் அரச சொத்தாக்கப்பட்டது. அக்காலத்தில் இப்பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர்களும் அரச பாடசாலை ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர். இப்பாடசாலையின் காணியும் அரச சொத்தாக்கப்பட்டது.

## ஆளணி விபரம்:

இப்பாடசாலையில் காலத்திற்குக் காலம் பற்பல அதிபர்களும் ஆசிரியர்களும் கடமையாற்றியிருந்தனர். இவர்கள் பாடசாலையை இன்றைய நிலை வரை வளர்த்து வந்துள்ளனர். ஆரம்ப காலத்தில் இருந்து (1917 - 2017 வரை) பதின்மூன்று அதிபர்கள் கடமையாற்றி முறை தவறாமல் பாடசாலையை

ஒழுங்குற தலைமை தாங்கி வழிநடத்தி இன்று இப்பாடசாலை நகரப்பாடசாலைகளுக்கு இணையாக வளர்ந்து ஒரு பிள்ளைநேயப்பாடசாலையின் பண்புகளைக் கொண்டு பெற்றோராலும் பிள்ளைகளாலும் விரும்பப்படும் ஒரு பாடசாலையாக மாறி இன்று ஏனைய முன்னணிப் பாடசாலைகளின் சித்திவீதத்தையும் இணைப்பாட விதானங்களிலும் பாடசாலைகளுடன் போட்டி போடுகின்ற அளவுக்கு வளர்ந்து விட்டமையால் அனைத்து அதிபர்கள் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது.

அந்த வகையில் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை கடமையாற்றிய அதிபர்களின் பெயர் விபரங்கள் வருமாறு

திரு. க. கைலாசபிள்ளை
திரு. த. கணபதிப்பிள்ளை
திரு. S. சுப்பிரமணியம்
திரு. மு. சின்னத்தம்பி
திரு. த. கந்தவனம்
திருமதி ஆ. நாகமுத்து
திரு. சொ. நடராசா
திரு. S. செல்வநாயகம்
திருமதி ம. நடராசா
திரு. ம. ஜெயவரதராசா
திரு. த. இரவீந்திரன்
திருமதி த. ஜெயக்குமாரன்
திரு. த. பாலகுமார்

ஓலைக் கொட்டிலுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1960களில் அரசு பொறுப்பேற்ற போது ஒரு நிரந்தரக் கட்டிடத்தையும் ஒரு தற்காலிக கொட்டகையும் கொண்டதாக இருந்த இப்பாடசாலைக்கு 1977ல் பாடசாலை அலுவலகம் ஏற்கனவே இருந்த நிரந்தரக் கட்டிடத்துடன் சேர்த்து அமைக்கப்பட்டது. இதற்கு முன்னதாக 1973களில் இரண்டாவது கட்டிடம் அரசால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 1984ல் மூன்றாவது கட்டிடம் அமைக்கப்பட்டது. இப்பாடசாலையின் எல்லை வேலிகள் நீண்ட காலமாக அடைக்கப்படாமல் திறந்த நிலையில் காணப்பட்டன. இவைகள் 1960ல் சிறுவர் பாதுகாப்பு நிதியமான அரசசார்பற்ற நிறுவனத்தினால் 350 அடி நீளமான மதில் சுவர் அமைத்துத் தரப்பட்டது. மேலும் ஏனைய எல்லை மதில் சுவர்களும் பழையமாணவர், மக்களின் பங்களிப்பினாலும் கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் பெற்றுத் தரப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் மூலம் 2016ல் தெற்குப்புற 100 அடி மதிலும் மிகுதி 2017ம் ஆண்டு மாகாணசபை உறுப்பினர் திரு. அகிலதாஸ் அவர்கள் ஒதுக்கிய பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதி 100000/= மூலமும் பூர்த்தி செய்யப்படுகின்றது. மேலும் பாடசாலைக்கான சைக்கிள் தரிப்பிடம் ஒன்று 2017ல்

மாகாணசபை உறுப்பினர் திரு. க. தர்மலிங்கம் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து 40000/= வும் வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர் சட்டத்தரணி கருணாநிதி என்பவர் பழைய மாணவர் சங்கத்தினூடாக தரப்பட்ட 25000/= வுடன் பழைய மாணவர் சங்கத்தினால் தரப்பட்ட 5000/= வையும் இணைத்து 70000/= பெறுமதியான 20 அடி நீளமான இரும்பினால் செய்யப்பட்ட சைக்கிள் தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு காலத்தில் பாடசாலை மெய்வன்மைப் போட்டிகளுக்கு தேவையான உபகரணங்கள் அயற்பாடசாலைகளில் இரவல் வாங்கியே பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் இடம் பெற்று வந்துள்ளன. ஆனால் தற்போது அதற்குரிய உபகரணங்கள் பெற்றோரினதும் பழைய மாணவர்களினதும் உதவியுடன் பாடசாலைக்கு தேவையான உபகரணங்கள் எல்லாம் உருவாக்கி வைக்கப்பட்டுள்ளன. 2009க்கு முன்னர் பாடசாலைக் கட்டிடங்கள் யாவும் திறந்த கட்டிடங்களாக இருந்தன. ஆனால் 2009க்கு பின்னர் கல்வித்திணைக்களத்தின் சிபார்சுக்கமைய யுனிசெவ் நிறுவனம் பாடசாலைக் கட்டிடங்களை மாற்றி அவை முழுவதற்கும் தீந்தை பூசப்பட்டு நவீன கட்டடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு தேவையான கணனியறை 2011ம் ஆண்டு அமைக்கப்பட்டு 4 கணனிகளும் கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்டன. ஏற்கனவே பாடசாலை பழைய மாணவர் ஒருவரால் வழங்கப்பட்ட ஒரு கணனி பாடசாலையில் இருந்து அதனுடன் சேர்ந்து பாடசாலையின் கணனி அறையில் ஐந்து கணனிகள் பாடசாலை மாணவர்களின் உபயோகத்தில் இருந்தன. ஆனால் தற்போது மூன்று கணனிகள் பழைமை காரணமாக செயல் இழந்து போயுள்ளன.

2012 ம் ஆண்டு மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் வகுப்பறை கட்டிடங்கள் மீள திருத்தப்பட்டு புதிய நிலங்கள் போடப்பட்டு புதிய மின் இணைப்பும் வழங்கப்பட்டது. இதற்காக அரசு ஐந்து லட்சம் ரூபாவையும் வழங்கியிருந்தது. அவ்வருடமே கணனி அறைக்கான நிலத்திற்கு 100000/= செலவில் மாபிள் இடப்பட்டு அது நவீனமாக்கப்பட்டது.

2015ம் ஆண்டளவில் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்பட்ட சிறுதிருத்த நிதியின் மூலம் பாடசாலையின் ஆசிரியர்களின் கழிப்பறை புனரமைக்கப்பட்டு மாபிள் இடப்பட்டு நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலையின் நீர்த்தாங்கி புனரமைக்கப்பட்டு வெடிப்புக்கள் நீக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களுக்கான ராட்டணங்கள் ஊஞ்சல்கள், கோபுரங்கள், சறுக்கும் உபகரணங்கள் யாவும் திருத்தம் செய்யப்பட்டு தீந்தை பூசப்பட்டு இன்று அவை மாணவர்களின் பாவனையில் உள்ளன.

2016ம் ஆண்டில் NBBS வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலையின் மூன்றாவது கட்டிடம் நிலம் போடப்பட்டு புதிய மின்விசிறிகள், மின்விளக்குகள் பொருத்தப்பட்டு கட்டிடத்திற்கு தீந்தை பூசி கட்டடம் புனரமைக்கப்பட்டது. அத்தடன் உலக உணவுத்திட்டத்தால் அமைத்துத் தரப்பட்ட சமையலறையும் புகைபோக்கி போன்றன உடைத்து உயர்த்தி கட்டப்பட்டு இன்று நல்லமுறையில் பாவனையில் உள்ளன.

இவ்வாறு ஓரளவு பௌதீகவளத் தேவைகள் பூர்த்தியடைந்த நிலையிலும் முக்கியமான தேவையாக சில தேவைகள் அடையாளப்படுத்தப்பட்டு இனம் காணப்பட்டுள்ளன. அவையாவன அதிபர் அலுவலகம், ஆராதனைமண்டபம், களஞ்சிய அறை, பல்நோக்கு அறை, வகுப்பறை ஒன்று இவைகளை உள்ளடக்கியதாக ஒரு இருமாடிக்கட்டிடம் (90 x 25)ல் கிடைத்தால் பாடசாலையின் பௌதீகவளத் தேவைகள் நிறைவடையும்.

இன்று இப்பாடசாலை இவ்வூர் மக்களின் ஆரம்ப கல்வித் தேவையை பெருமளவுக்கு நிறைவு செய்வதால் பாடசாலையில் மாணவர் வரவு திருப்தி தருவதாக உள்ளதோடு தரம் 1 க்கான அனுமதிக்காக வரும் மாணவர்களின் அதிகரித்துச் செல்லும் போக்கை காணக்கூடியதாக உள்ளது. அதுமட்டுமன்றி கடந்த கால புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை ஒப்புநோக்கும் போது அது ஏறுமுகமாக உள்ளதை காணக்கூடியதாக உள்ளது. தவணைப்பரீட்சை பெறுபேறுகளை நோக்கும் போது 80% க்கு மேலான மாணவர்கள் Merit சித்தியை பெறுபவர்களாக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கோட்டமட்ட, வலயமட்ட, மாகாணமட்ட தேசியமட்ட போட்டிகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டு பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றமையும் குறிப்பிட்த்தக்கது. இனி வரும் காலங்களிலும் இப்பாடசாலை பல சாதனைகளை நிகழ்த்தி வடமராட்சி வலயத்தில் முன்னணிப்பாடசாலையாக மிளிரும் என்பதில் ஐயம் இல்லை.

**திரு. த. பாலகுமார்,**
அதிபர்
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர
வித்தியாலயம்.

# தோம்புப் பதிவுகள் வெளிப்படுத்தும் கோயிற்சொத்துடமை: வடகிழக்கிலங்கை கோயிற்குடியிருப்புக்களின்பிரதான தளமாக தம்பலகாமம்–ஆதிக்கோணநாதேஸ்வரம்

## Thombu Manuscripts expose the Temple Property As the Strategic Center for Temple' Settlements in theNorth East – Thambalagamam Adhi Koneswaram

**Professor S. Krishnarajah**

**ஆய்வுச்சுருக்கம் :**

தென்னாசியாவில் கோவில்கள் மனித வாழ்வின் உயிரோட்டமான மையங்களாக திகழ்ந்து வந்திருக்கின்றன. அவை காலங்களினூடே அவ்வவ் பிரதேச மக்களது வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இத்தொழிற்பாடனது தென்னாசியப்பிராந்தியத்தில் மனித நாகரிக வாழ்வின் ஆரம்பம் முதற்தொட்டே நிலைத்து வந்தமையையும் காணமுடிகின்றது. இப்பின்னணியில் தென்னாசியாவின் தென்கோடியில் விரவிக் காணப்படும் தொன்மை வாய்ந்த இந்துக்கோவில்களின் பங்களிப்புக்கள் பன்மொழி பேசும் மக்களது வாழ்வியலின் ஜீவனோபாய அடிப்படைகளை உருவாக்கிக் கொடுத்திருந்தமையை இவ்வாய்வில இடம்பெற்றுள்ள தோம்புக் குறிப்புக்கள் வாயிலாக கண்டுகொள்ள முடிகின்றது. ஈழத்தின் வடகீழ்த்திசையில் இசைமரபோடு இறையுணர்வினைப் பரப்பிக்கொண்டிருக்கும் திருக்கோணாதமலை கோண நாதேஸ்வரப் பதியின் பண்பாட்டுப் பதிவுச் சுவடுகள் இந்துமரபோடு இணையப்பெற்ற ஒருபன்மைப் பண்பாட்டுச் சூழ்நிலையினை உருவாக்கி வைத்திருந்த முறையினைவெளிப்படுத்தியுள்ளன.குறிப்பாக சோழர்காலப்பரப்பிலிருந்து பின்பற்றப்பட்ட கோயில் வழமைகள், காரியங்கள் யாழ்ப்பாண இராச்சியகாலத்திலும் பின்பற்றப்பட்டு, அதுவே பின்னர் ஒல்லாந்தர் காலத்திலிருந்து பதியப்பட்டுக்கிடைத்த தோம்பு ஆவணங்களாகவும் அவையே பின்னர் ஆங்கிலேயர் காலத்து கோயிற்பதிவேடுகளாகவும் மாற்றுவிக்கப்பட்ட நிலையில் இன்று எமக்குக் கிடைத்துள்ளன. வடமராட்சி வியாபாரிமூலையில் வாழ்ந்து, மறைந்த அமரர். சி.நா. சொக்கநாதபிள்ளையிடமிருந்து எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட அத்தகைய தோம்புச் சுவடிகள் ஊடாகவே திருக்கோணாதமலை கோணநாதேஸ்வரர் திருக்கோயிலின் கோயிற்காரியங்கள் மற்றும் அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் கொண்டதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பின்பற்றப்பட்ட ஆய்வு முறையானது வரலாற்று மூலங்களுடான விபரண ஆய்வு முறையியலாக அமைந்துள்ளது.

Key words : திரிலோகண பல்லவ வம்சம், சிலப்பதிகாரம், மணிபல்லவம், மண்டலாய், முக்கந்தர், தோம்பு, தொண்டு-தொழும்பு, பராமரிப்புக்காரர்கள், பற்றுச்சீட்டு, இருபாகைமுதன்மை, திருவாசி, நேர்க்கடன்.

### ஆய்வறிமுகம்

இத்தீவின் பண்பாட்டுப் பரப்பிலும் நாகரிக வாழ்விலும் ஆதிக்கோண நாதேஷ்வரப்பதியின் சுவடுகள் காலத்தினாலும் அழிக்கப்பட முடியாதவனாக உள்ளன. இதற்கான அடிப்படையாது காலத்தின் வளர்ச்சிக் கட்டங்களுடாக அம் மையம் சிறப்பாகப் பெற்றிருந்த உள்நாட்டு- வெளிநாட்டு வர்த்தக வாணிபச்சூழலே ஆகும். (**சரவணபவன்,க., 2003,ப.12**). பல இனத்தவர்களும், பன்மதத்தவர்களும், பல்வேறு நாட்டினரும் ஒருங்கேசர்க்கப்பட்டு வந்த மையமாதலால் கோணநாதஸ்வரப்பதியின் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் அம் மையம் ஒரு சர்வதேச பண்பாட்டு வயப்பாட்டின் மரபின் வளர்ச்சிப் போக்கினைப் பெற்றுக் கொள்ளக் காரணமாயிற்று. உள்நாட்டு மாறுதல்களுடன் இவ்வளர்ச்சிப் போக்கும் இணைந்து ராஜீய- நிர்வாக உருவாக்கத்தின் களமாகவும் அம்மையம் வளர்ச்சிபெறக் காரணமாயிற்று. அப்பின்புலத்தில் கோணநாதேஸ்வரப் பதியையும், அதன் வளர்ச்சி நிலைகளையும் சர்வதேச சமூகமட்டத்திற்கு எட்ட வைத்த நிகழ்வுகளும் நடந்தேறின (**சரவணபவன்,க.,2003,ப.13**). அந்நிகழ்வுகள் உள்ளிட்ட வளர்ச்சி நிலைகளின் வெளிப்பாடானது பண்பாட்டு அலைகளாக உள்நாட்டிலும்-வெளிநாட்டிலும் மக்களால உள்வாங்கப்பட்டு நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு நிலைநிறுத்தி வைக்கப்பட்டனவற்றுள் இன்று எமக்கு கிடைப்பவை அத் தலத்தை பற்றிய மான்மிய இலக்கியங்கள், பதிகங்கள், கல்வெட்டுக்கள், விக்கிரகங்கள், தோம்புப் பதிவுகள், வெளிநாட்டுப் பயணிகளின் பிரயாணக் குறிப்புக்கள் என்பனவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு கோணநாதேஸ்வரப் பதியின் தோற்றம், வளர்ச்சி, மற்றும் அதன் சொத்துக்கள், வருமான நிர்வாகப் பகிர்வு முறைகள் போன்றவற்றை ஆராயமுடிகின்றது. இக்குறிப்பிட்டகோவிலினது தொண்டர்கள், சொத்துடமை, கோயிற்திருக்காரியங்கள் போன்றவற்றை அவதானிக்கும்போது பல்லவர், சோழர்கால இந்துக்கோயில் நிர்வாக முறைகள் திருக்கோணேஸ்வரத்ததினை மையப்படுத்திய வகையில் ஆங்கிலேயர் காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டுவந்திருந்தமையைஉறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அவ்வகையில் ஈழத்துப் புராதன இந்துப் பண்பாட்டுச் சூழலின் பின்னணியில் (**குணசிங்கம், செ. கோணேஸ்வரம்., 1973, ப.12**) வடகிழக்கிலங்கையின் பாரம்பரியத் தேடலில் கோணநாதேஸ்வரப் பதியின் சுவடுகள் உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட பண்பாட்டுச் பொக்கிசமாக காணப்படுவது என்பது இன்றைய காலகட்டத்தில் எடுத்தாராயத்தக்க ஒரு விடயமாக காணப்படுகின்றது.

### பெயர்த்தோற்றம்

ஈழத்துநிலவரம்பிற்குள் உட்பட்ட இடப்பெயர்- பெயர்த் தோற்றம் பற்றிய ஆய்வுகள் பெருமளவிற்கு இன்று பாளி – சிங்கள, வடமொழிவழிவந்த உருத் தோற்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதேநேரத்தில் ஈழத்திற்கு

மிகவும் அண்மித்த பெருநிலப்பரப்பான தமிழகத்தின் அல்லது தென்னியந்தியக் குடியமைவின் பண்புகளும் மொழிப்பிரயோகப்பின்னணியில் வரலாற்றுக் காலத்திலிருந்தே வடகிழக்கிலங்கையின் குடியமைவின் போக்கினை நிர்ணயித்து வந்துள்ளன என்பதனையும் மறந்துவிடலாகாது. வடக்கு மற்றும் வடகிழக் கிலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகள் அவ்வுண்மையை தெளிவுபடுத்தியுள்ளன **(குணசிங்கம், செ., 1973, ப.)**. தென்னிந்தியக் குலங்குடிகளின் தன்மைகள் - ராஜீய- வாணிக முறைமைகள் ஈழத்தை நன்கு பாதித்து சென்றுள்ளன என்பதனை ஆய்வறிக்கைகள் நிரைப்படுத்தியுள்ளன. திருக்கோணேஸ்வரப் பதியின் பெயர்த் தோற்றம் பற்றிய ஆய்வும் இப்பின்னணியிலேயே நோக்கப்படுதல் வேண்டும். கொகர்ண, கோக்கண்ண, கோகர்ண, கோகணம், கோனாமலை, கொட்டியாரம் போன்ற இடப்பெயர்குறித்த பதங்கள் யாவும் திருக்கோணாதமலையையே குறித்து நின்ற சொற்றொடர்களாகும்.

**திரிலோகண பல்லவ வம்சம்**

இதுவரையில் திருக்கோணேஸ்வரம் என்ற பெயர்த்தோற்றம் தொடர்பாக வெளிப்படுத்தப்படாத ஓர் அம்சத்தினை இங்கு தருவது பொருத்தமாகின்றது. இராமச்சந்திர தீட்சிதர் சிலப்பதிகாரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு வரைந்த தனது அறிமுகவுரையில் திரிலோகண பல்லவ வம்சத்தினைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கி.பி. 5ம் நூற்றாண்டில் இருந்த திரிலேகண பல்லவ வம்சத்தின் இடம் தாயகம், தலைநகர், அதிகார வரம்பு பற்றிய எந்த விடயங்களும் இன்னும் தென்னிந்திய வரலாற்று வெளிச்சத்திற்குள் அகப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ள தீட்சிதர் சங்ககாலத்து சோழ இளவரசனான கரிகால்வளவனது ஆட்சிக்குச் சற்று பிற்பட்டதாக இவ்வம்சம் வாழ்ந்திருக்க வேண்டும் என முடிவு கொள்கிறார். அவருடைய இத்தகைய ஓர் அனுமானமானது ஆதிப்பல்லவ வம்சம் ஒன்றினது ஈழத்தொடர்பின் பின்னணியில் திருக்கோணேஸ்வரத்தின் பெயர்த் தோற்றத்திற்கான ஊற்றினைக் கண்டுகொள்ள வழிவகை செய்கின்றது. திருக்கோணேஸ்வரப் பிராந்தியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல்லவர் காலத்திற்குரிய வடமொழி மற்றும் பல்லவ- கிரந்தக் கல்வெட்டுச் சான்றுகள், மற்றும் தொல்லியல் சான்றுகள் எமக்கு திரிலோகண பல்லவ வம்சத்துடன் திருக்கோணேஸ்வரத்தினைத் தொடர்புபடுத்தி பார்ப்பதற்கு உதவுகின்றன.

திரிலோகண பல்லவ வம்சமானது சங்ககாலத்து சோழ இளவரசனான கரிகால்வளவனது ஆட்சிக்குப் பிற்பட்டது என்பது இராமச்சந்திர தீட்சிதருடைய கருத்தமைவாகும். சிலப்பதிகாரத்தின் தோற்ற காலமும் ஈழத்து திரிலோகண பல்லவ வம்சகாலமும் ஏறக்குறைய சமகாலமாகலாம். செ. இராசநாயக முதலியார் முன்வைத்துள்ள"மணிபல்லவம் - பல்லவ வம்சத்தின் தாயகம்" என்ற கோட்பாடும் ஓரளவிற்கு இராமச்சந்திர தீட்சிதருடைய திரிலோகண பல்லவ வம்ச காலத்தினை எட்டியதாக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ள

குறிப்பொன்றின்படி, சோழநாட்டிலிருந்து படையெடுத்துவந்த இளவரசன் ஒருவன் 36000 இளைஞர்களை பிடித்துச்சென்றான் என்ற செய்தி கரிகாலன் என்ற சோழ இளவரசன் காவிரிக்கு குறுக்கே கல்லணை கட்டுவதற்காக இலங்கையிலிருந்து நீர்ப்பாசனதொழினுட்ப வல்லுனர்களை (சிங்கள இளைஞர்களை) பிடித்துச் சென்ற சம்பவத்தினை குறிப்பதாகும் என்பது வரலாற்றாசிரியர்களது கருத்தாகும். இக்காலத்தில் திருகோணமலை வாணிகநடவடிக்கைகளில் மிகவும் முக்கியம் பெற்றிருந்த துறைமுகநகராக விளங்கி, பின்னர் திரிலோகண பல்லவ வம்சகாலத்தில் கோணேஸ்வரப்பதியின் கீர்த்தி மேலோங்கிய நிலையில் இத்துறைமுகம் பாடல்பெறுவதற்கும் காரணமாக விளங்கியது.

**திரிலோகணம்: ஆதிபல்லவ வம்சத்தின் துறைமுக நகர்**

செ. இராசநாயகம் முன்வைத்த "மணிபல்லவம் : பல்லவரது தாயகம்" என்ற கோட்பாடானது படிப்படியாக தொல்லியற் சான்றுகள் வாயிலாக ஈழத்தில் வலுவடைந்து கொண்டு வரும் இக்கட்டத்தில் "திரிலோகண பல்லவர்" பற்றிக் கிடைத்த தகவலானது ஈழத்து வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாக அமையும். பல்லவப் பண்பாட்டின் வெளிப்பாட்டிற்குரிய சின்னங்களாக நாகதீப கலசங்கள் இம்பர்சிட்டி – வியாபாரி மூலையில் இருந்து அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டன. வியாபாரி மூலைக்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. புலோலி – பல்லப்பைக் கிராமத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல்லவர் பாணிக்குரிய போதி மாதவனின் சிரசு கிடைத்திருப்பது இப்பிராந்தியத்தில் பல்லவர் கலை மரபின் செறிவினைக் காட்ட உதவுகின்றது எனலாம். **(கிருஸ்ணராசா, செ.,தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும், 2015, ப.236)**

வடமராட்சி கிழக்கில் உள்ள கரையோரக் கிராமமான அம்பன் என்ற பெயர் உடைய குறிச்சிப்பிரிவு தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றான யாவாத் தீவினது மையப் பகுதியில் காணப்படுகிறது. வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணியை அடுத்துக் காணப்படும் மண்டலாய்ப் பிள்ளையார் கோவில் மத்திய யாவாவிலுள்ள பௌத்தப் பாரம்பரிய வணக்க முறைகளுடன் தொடர்புபட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவையாவும் பல்லவப் பண்பாட்டின் கடல் கடந்த செல்வாக்கினடியாகவே ஈழத்திலும் நிலை பெற்றிருந்தன. இவற்றுக்கெல்லாம் தொடர்புகளை ஏற்படுத்தித்தந்த வட கிழக்குக் கரையோரத்துறை முகங்கள் யாவும் பல்லவ வம்சத்தின் மேலாதிக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது என்றால் அது மிகையாகாது. அவ்வகையில் வட கிழக்குக் கரையோரத் துறைமுகங்களுள் திருக்கோணேஸ்வரம் வாணிகர்களினால் மிகவும் விரும்பப் பட்டதாகவும் இருந்து வந்துள்ளது. அவ்வகையில் திரிலோகண பல்லவ வம்சத்துடன் தனது வளர்ச்சியையும் செல்வாக்கையும் இணைத்து ஒரு சிறந்த துறைமுக நகராகவும் அதே நேரத்தில் புனித ஸ்தலமாகவும் மாறியிருந்த திருக்கோணேஸ்வரம்

இலங்கை மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கினை பெற்றுக்கொண்டதில் வியப்பேதும் இருக்க முடியாது (**பல்லவராசசேகரன், பல்லவ இராச்சியம், 2007, ப.53**).

**களப்பிரர் கால ஈழத்துப்பல்லவ வம்சம்**

தமிழகத்தில் களப்பிரின் மேலாதிக்கம் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் ஈழத்தின் கிழக்குக் கரையில் திரிலோகணம் எனப்பெயர் பெற்றிருந்த திருக்கோணேஸ்வரம் ஒரு துறைமுக நகராகபொலிவுற்றுச் சிறப்படைந்திருக்க வேண்டும். களப்பிரரின் தாக்கத்திலிருந்து ஆதி பல்லவ வம்சம் தம்மைப் பாதுகாத்து வளர்த்தெடுத்துக் கொண்ட ஒரு மையமாகவும் அமைந்திருக்க வேண்டும். பல்லவங்க, பல்லவபொக்கு, பல்லவராயன்கட்டு போன்ற மையங்கள் திருக்கோணேஸ்வரத் திருப்பதியின் அண்மித்த குடியிருப்புக்களாகும். இவை யாவும் பல்லவர் காலத்து வாணிப மையங்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது. இவ்மையங்கள் யாவும் **முக்கந்தர்** என்ற உயர் தலைமையின் கீழ் பெரு வாணிப நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருந்தன என்பதனை இலக்கியச் சான்றுகளினூடாக கண்டுகொள்ள முடிகின்றது (**மோசஸ் பொன்னையா, நாடார் வரலாறு, 1978, ப. 58.**).

முதற்பெயரான **"திரிலோகணம்"** என்பதில் உள்ள **"கணம்"** பெயரீறு வணிகக் கணத்தினைச் சுட்டுவது எனக் கொண்டால் அதனை விசேடித்து நிற்கும் **"திரிலோ"** என்பது **"திரைலோக்கிய"** என்ற பதத்தின் மருவுப் பெயராகவே அமையும் எனலாம். இப்பெயர் பொதுவாக அரசவம்சத்தை சேர்ந்த பெண்களின் பெயராகவோ அன்றி ஓர் இனப்பெயராகவோ குறிக்கப்படுதலையும் காணலாம். **"திரைகடல் ஓங்கி நித்திலங் கொழிக்கும் கோணமாமலை"**யின் பெயர்த் தொடக்கம் **திரைலோக்கிய கணமாகிப்** பின்னர் **திரிலோகணம்** என மருவிற்று என்று கொள்வதே பொருத்தமானதாக தோன்றுகின்றது.

அவ் வகையில் **"திரிலோகணம்"** என்ற பெயர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் நன்கு நின்று நிலைபெற்ற ஒன்று எனக் கொள்வது இவ்வாய்வுக்கு பொருத்தமாகின்றது. இப்பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பற்றிய பிற்பட்ட காலவரலாற்றினையும் கிடைத்த தோம்பு ஆவணங்களுடாகவும் ஆராய முடிகின்றது. திருக்கோணேஸ்வரப் பதியும் **முக்கந்தர்** என்ற **வாணிபத் தலைவர்களினால்** நிர்வகிக்கப்பட்ட செய்தியை பல்லவர்கால சமூகவரலாறு உறுதிப்படுத்துவதனை மோஸஸ் பொன்னையா தனது **நாடார் வரலாறு** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ( தம்பசெட்டி – வியாபாரிமூலையில் வாழ்ந்து அமரத்துவமடைந்த **கந்தயினார்** என்ற நிலப்பிரபு பல்லவ வம்சத்தொடர்பு வழிவந்த **முக்கந்தர்** பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. கந்தயினாருக்கு உரிய ஆதனமாக காணப்பட்ட மிகப்பழமைவாய்ந்த தம்பசிட்டத்துறை முகத்தின் மருங்கில்

உள்ள பிள்ளையார் கோயில் மடமொன்றில் பல்லவர்கால பண்பாட்டுச்சின்னங்கள் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. **(கிருஸ்ணராசா,செ., தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும், 2015, ப.268)**

**தோம்பு ஆவணம்**

திருகோணமலை கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலின் "தொண்டு"- "தொழும்பு" பற்றிய பல விபரங்களை கோணேசர் கல்வெட்டு போன்ற இலக்கியச் சான்றுகளில் விபரமாக எடுத்துக் குறிப்பிடப்பட்டிருந்தும், போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப் பெற்ற கலையழிவுக் கொள்கைக்குப் பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலைப் பற்றிய தகவல்கள் குறிப்பாக தம்பலகாமம் சிவன் கோவிலைப் பற்றியதும் அதற்குரிய தேவஸ்தான வயல் நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவேடுகளாக முத்திரைகள் குத்திப் பாதுகாக்கப்பட்டுள்ளன. பின்னர் அத் தோம்புச் செய்திகள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் கோயிற் பதிவுப் புத்தகங்களில் நிரைப்படுத்தப்பட்டு கோவைப்படுத்தப்பட்டன. கி.பி.1800ஆம் ஆண்டளவில் கோயிற்புத்தகங்கள் (TempleRegister) கச்சேரி ரீதியாக இத்தகைய பாவனைக்காக இடப்பட்டுள்ளன.

இந்த வகையில் ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புகளாகவும் அவை பின்னர் படியெடுக்கப்பட்டு இருந்த ஆவணப்படிவங்களாகவும் (உறுதிகளாகவும்) நீண்ட காலமாக தம்பசிட்டி – வியாபாரி மூலையிலுள்ள அமரர் சொக்கநாதம்பிள்ளை அவர்களின் வீட்டில் பாதுகாக்கப்பட்டிருந்தன. (அவரது இல்லம் முழுவதுமே ஓர் ஆவணகாப்பக மையமாக விளங்கியிருந்தது. அவரது அமரத்துவத்தின் பின்னர் அந்நிலையானது முற்றாகவே சீர்குலைந்து விட்டது. அந்த வகையில் நாம் ஏற்கனவே அவருடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் அடிப்படையிலே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணப்பிரதிகளை பார்த்து படியெடுப்பதற்கு வாய்ப்பாக இருந்தது.) இவ்வாறு சேகரிக்கபட்ட வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தம்பலகாமம் ஆதிக் கோணநாதேஸ்வரர் கோயில் நிர்வாகம் தொடர்பான குறிப்புக்களை விபரண ரீதியாக இங்கு தரமுடிகின்றது. அவற்றை வரலாற்று மூலம் என்ற வேரடிப்படையில் ஈழத்தமிழரது பண்பாட்டு எழுத்தியலுக்கு உதவும் ஆதாரமாகக் கொள்வதற்கும் வாய்ப்பாகின்றது.

**தோம்புப் பதிவின் தொடக்கவுரை**

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோயில் தொடர்பான சாதனங்கள் யாவற்றிலும் வரலாற்றுப் பெறுமதிமிக்க தொடக்கவுரையாக இத்தோம்பின் ஆரம்பம் இடம் பெற்றமையை அவதானிக்க முடிகின்றது. திருகோணமலையைப் பற்றிய வரலாற்றாய்வுக்கு அப்பகுதி பெருமளவிற்கு உதவுவதாகவுள்ளது.இப் பகுதி பின்வருமாறு:-

1. "திருக்கோணாதமலையை சேர்ந்த தம்பலகமக் கோயிற் குடியிருப்பில் சைவ சமய பிரபல்யமாய் விளங்கும் கோண நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு....."
2. "சூரிய– சந்திர– அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழமஹாராசன் மரபிலுதித்த கஜவாகுமஹாராசாவின் தெக்ஷிணகைலாயம் கோண நாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு....."

இவ்வாறு பதியப்பட்டுள்ள முகப்புரை பாரம்பரியமாகவே உள்வாங்கப்பட்டு வந்த வரலாற்று மரபினை தோம்புகள் வெளிப்படுத்துவதாக உள்ளன. கந்தளாயில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களில் குளக்கோட்டனைப் பற்றியதும் கயவாகு மன்னனான இரண்டாம் கஜவாகு பற்றியதுமான செய்திகளில் இத்தோம்பில் இடம்பெற்றுள்ள சில செய்திகள் இடம்பெற்றிருப்பது மேலே கூறப்பட்டவற்றுடன் ஒப்பு நோக்கி மேலும் ஆராயத்தக்கதாகும். தோம்பிலும் உரிமைச்சாசன பட்டயமொன்றிலும் பதியப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகள் பின்வருமாறு தொகுத்து வகுத்து தரப்படுகின்றது. அவை பின்வருமாறு:-

".....எப்பொழுதும் பூசகராகவும், முதன்மையாகவும்,"இராசகுலகுரு" என்னும் சகல பொருட்களையும் அதிகாரமாக நின்று நடப்பித்து அவ்வாதனங்களின் வருமானத்தில் பத்திலிரண்டு பங்கும் பிரயோஜனம் தங்களுபயோகங்களுக்கென்றும் மற்றைய எட்டுப் பங்கும் கோயிற்பூசை,உற்சவம், திருப்பணி போன்ற சகல காரியங்களுக் கென்றும் எம்முன்னோர் சாதனம் எழுதிக்கொடுக்கப் பெற்றவர் ஆகையாலும் அவ்வுரித்தின் பிரகாரம் கோணநாதேஷ்வரப் பெருமானின் கல்வெட்டிலும் புராணத்திலும் சொல்லிய....."

"..... குறித்த கோவிலுக்கும், கோவிலின் கல்வெட்டிலும், புராணத்திலும் சொல்லிய இருபாகை முதன்மைக்கும் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருப்பவர்களாகிய கனகசுந்தரப் பெருமாள் கோயிற் பராமரிப்புக்காரர்கள், கரணம், அடப்பற்தாளத்தார், வரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப்பகுதி, முதலிய பரிசாரகர்களை கொண்டு குறித்த கோவிலின் கல்வெட்டிலும்,வேதம்,ஆகமம்,புராணம், ஆகியவற்றிலும் சொல்லிய படியும் வழமைப்படியும், மேற்குறித்த....."

"...... குறித்த கோவிலின் ......மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து அக்கோயிலில் நடக்க வேண்டிய பூசை, திருவிழா முதலியவற்றையும், கந்தளாய்க் குளத்திலும், மாகாமத்திலும், காலத்துக்குக் காலம் நடக்க வேண்டிய வேள்விகள், கிராம சாந்திகள், முதலியனவற்றையும், ஆலடி பத்தினியம்மன் வேள்விகள் முதலியவற்றையும், திருக்கோணாதமலை கொட்டியாரப்பற்றில் கங்குவேலி சிவன்கோவில், மேற்படிப்பற்றில் வெருகல் சித்திர வேலாயுதசுவாமி கோவில் ஆகிய

அவைகளின் பூசை திருவிழாக்களையும். அடி அமவாசைத் தீர்த்தங்களுக்குரிய கீரத்தியங்களையும் மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து செய்தும் செய்வித்தும் வருபவர்களுக்கும் வேதம்,ஆகமம், புராணம், கல்வெட்டில் சொல்லிய பிரகாரமும் வழமைப் பிரகாரமும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்விப்ப தற்காக" (33 ஊர்களில் உள்ள 33 பேர்களை) "பராமரிப்புக்காரர்களாக நியமிக்கத் தீர்மானித்து மேற் சொல்லப்பபட்ட பேர் வழிக்காரர்களை பின்னாங் சொல்லப்படும் காரியங்களை நடத்துவதற்காக..... இத்தால் பெயர் குறித்து நியமித்து ஏற்படுத்தி அதிகாரம் கொடுக்கின்றேன்"

**அவ்வதிகாரங்களாவன:**

அ) குறித்த கோவிலுக்குத் தொழும்பாளராகிய கனகசுந்தரப்பெருமாள் கோயிற் பராமரிப்புக்காரர், கங்காணம், அடப்பன் தாளத்தார், பாரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப் பகுதி முதலிய பரிசாரர்களாகிய இவர்கள் குறித்த கோணநாதேஷ்வர சுவாமி கோளிலுக்கும், இருபாகை முதன்மையாகிய .................. பின் சந்ததியாருக்கும் குறித்த வேதம்,ஆகமம், புராணப் பிரகாரமும் கோயிலின் கல்வெட்டுப் பிரகாரமும் வழமைப் பிரகாரமும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களைக் கொண்டு விதிப்படியும் முறைப்படியும் செய்விக்க.

ஆ) குறித்த கோணாதேஸ்வர சுவாமி கோவிலினதும் கங்குவேலிச் சிவன் கோவிலினதும் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயிலினதும் கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவற்ற ஆதனங்களையும்...... குத்தகை கொடுக்கவும் குத்தகைப் பணங்களை அறவிடவும் பற்றுச்சீட்டக் கொடுக்கவும் அந்தந்தக் கோவில்களின் வருமானங்களி லிருந்து அந்த(ந்த) க் கோவில்களின் பூசைகள் ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள், கிராம சாந்திகள், வேளிவிகள் இன்னும் அநேக வேதாகாரச் சடங்குகளையும் குறித்த கோவிலின் திருப்பணிகளையும் வேதம் - ஆகமம் - புராணம் - கல்வெட்டு வழமையாகிய இவைகளுக்கு அமையச் செய்விக்கவும்......

இ) குறித்த கோவில்களின் தொகுப்பாளர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினால் அவர்களை... நட்டம் அல்லது நட்டங்களை அறவிடவும், அவர்களைக் கொண்டு குறித்த கருமங்களை விதிப்படி செய்விக்கவும் மன இணக்கமாய் செப்பம் பண்ணி வைக்கவும், அப்படிக் குற்றம் செய்தவர்களை நீக்கி அவர் அல்லது அவர்களின் இடத்துக்குப் பதிலாக அக்குடும்பத்திலே பதிலாளிகளைத் தெரிவு செய்து நியமிக்கவும் அவ்வண்ணம் நீக்கப்பட்டவருக்குக் கோவிலால் விடப்பட்டிருக்கும் காணிகளை

அல்லது வருமானங்களை அவர்களிலிருந்து எடுத்துப் பதிலாக வைக்கப்பட்டவர்களுக்கு ஒப்புக்கொடுக்கவும்.

ஈ) இருபாகை முதன்மையாகிய எனக்கு அல்ல எனது பின் சந்ததி அல்லது சந்தானங்களுக்கு உதவி தேவை என விரும்பிய காலங்களில் உதவிக்காக வந்திருக்கும் பூசகர், குருமார்கள், சாதகாசாரியார், அலங்கிருதாசாரியார், போதகாசாரியார் முதலிய இவர்கள் இருபாகை முதன்மைக்குத் தேவையான உதவிகளைச் செப்பமாய்ச் செய்ய வேண்டும். அவ்வண்ணம் செய்யாமலிருந்தால் அல்லது செய்யத்தவறினால் இருபான்மை முதன்மையாகிய அவர்களுடைய முத்திலிரண்டு பங்கால் அல்லது குறித்த கோவிலினுடைய பத்திலெட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது ஆதனங்களைக் குறித்த தத்துவக்காரர் அவர்களிலிருந்தெடுத்து பத்திலிரண்டு பங்கு ஆதனத்திலிருந்து கொடுபட்டால் இருபாகை முதன்மையாகிய எனக்கும் அல்ல எனக்குப் பின் எனது பிற்சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பத்திலெட்டுப் பங்கு ஆதனத்திலிருந்து கொடுக்கப்பட்டால் குறித்த கோவிலுக்கும் சேரும் படி செய்ய வேண்டும்.

உ) குறித்த கோயில்களுக்குரிய ஆதனங்களைப் பற்றிய நீர்ப்பாச்சல் வட்ட விதானையிடம் இருக்குமிடாப்பில் சொந்தக்காரன் என்ற பந்தியில் முதன்மையாகிய நானே குறித்த கோயில்களின் வகைக்காக கையொப்பமிட வேண்டியிருப்பதனால் குறித்த பந்தியில் மேற்சொல்லிய அவர்களில் எவராவது ஒருவர் அல்லது இருவர் குறித்த முதன்மையின் வகைக்காக கையொப்பமிடுவதாக......

ஊ) .... மன இணக்கமாக குறித்த கருமங்களை நடப்பிக்கத் தவறினால் அல்லது அவர்களுக்கிடையில் ஏதும் வாக்குவாதம் வந்தால் அல்லது... எவராவது இறக்கச் சம்பவித்தால் அல்லது வேறெவ்வகையாகவேனும் ஒருமித்து அல்லது அவர்களிலாதிக்கத்தி இருப்போர்..... அவர்களுக்குள் நான்கு பேருக்கு அல்லது மூன்று பேருக்கு அதிகாரம் கொடுத்து குறித்த கருமங்களை அல்லது அவைகளின் எப்பகுதியையேனும் வெயிவிக்க .... இவர்களுக்கு அதிகாரமுண்டு...

எ) குறித்த கோவில்களிடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்ட – சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினடமாக வைக்க வேண்டியது. குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது .... ஒருமித்து நியமிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த

கோவில்களில் நேர் கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி, முதலியவைகளை இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக்கோவிலுக்கு வேண்டியவற்றை செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஏ) குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டுவஷ்திரங்கள், திருவாசி முதலிய சகலமும் மற்றும் தட்டுமுட்டுச்சாமான்கள் சகலமும் கோவிலின் இருக்கு வீட்டில் இருக்கும் படி செய்ய வேண்டும்.

ஐ) குறித்த கோவில்களின் வருமானங்களைப் பற்றிய வரவு – செலவுக் கணக்குகளை வெளிப்படுத்தும் படி கேட்கும் காலம் இவர்கள் அக்கணக்குகளை வெளிப்படுத்தவும் கணக்குக் கொடுக்கவும் இருபாகை முதன்மையாகிய எனக்கும்..... எனது சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பாத்திரவாளிகளாயிருத்தல் வேண்டும்.

ஒ) குறித்த.... கோவில்களிடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்டு – சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று - இரு பாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது ... ஒருமித்து நிமதிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியவைகளை இன்னும் வேற சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றை செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஓ) மேற்சுட்டிய ஆதனம் வருமாறு

1) திருகோணமலை தம்பலகாமப் பற்று தம்பலகாமம் கோண நாதேஷ்வரசுமாமி கோவிலாதனமாய் அக்கோயிலின் ஏக பூசகரும் இருபான்மை முதன்மையும் என்னும் அதிகார முறைப்படி எனது உரிமையாட்சியின் காணி கீழ்மாகாணம் திருக்கோணாத மலை டிஸ்திரிக் தம்பலகாமப்பற்றுமாக்கை வெளியிலிருக்கும். பெத்தராசி வயல் எனும் ஒரு துண்டு நிலம் - இதற்கு எல்லை வடக்கும் கிழக்கும் மாக்கைத்திடல் தெற்கு குடமிருட்டியாறு மேற்கு ஆற இவ்வெல்லை பூண்டு காணியின் சொரியலாய் ஆறிலொரு பங்கு.

2) தம்பலகாமம் மாக்கை வெளியிலிருக்கும் பெரிய ஆண்டி வெட்டுவன் என்னும் ஒரு துண்டு வயல் நிலம், எல்லை கிழக்கும் வடக்கும் வெட்டுக்காடு மேற்கு ஆறு தெற்கு வீரக்குட்டிக்கும் கணவதிப்பிள்ளைக்கும் உடைய வயல்.

3) **தம்பலகமம் மாக்கை வெளியிலிருக்கும்** சின்னாண்டி வெட்டுவன் என்னுமொரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் வடக்கும் கந்தர் கீத்து மேற்கு கோணநாயகர் கோவில் பிறபாகைக்குரிய முதலயார் வயல், தெற்கு முத்துக்குமார சுவாமி கோயில் வயல்.

4) **தம்பலகமம் மாக்கை வெளியிலிருக்கும்** காட்டுக்கும்பியன் வயல் என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் தெற்கும் கோணநாயகர் கோயில் வயலும் மறுபேருடைய வயலும் மேற்கு வாய்க்கால் வடக்கு பச்சன் பவரை.

5) **தம்பலகமம் மாக்கை வெளியிலிருக்கும்** பெரிய வெட்டுக்காடு என்னுமொரு துண்டு வயல் நிலம் மேற்கு முடிக்குரிய தரையும் உதுமாகலெவ்வை காஜியாரின் தரையும் வடக்கு பச்சன்பவரை தெற்கும் கிழக்கும் வெறுவயல்.

6) **தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும்** ஓலுக்குனி என்னும் ஒரு வயல் நிலம் எல்லை கிழக்கு வீரக்குட்டியின் சுவாத்தியர் வரை வடக்கு ஆறு மேற்கு அப்புக்குட்டி மரிக்காரருக்கும் வேகன் கணபதிப்பிள்ளைக்குமுடைய வயல் தெற்கு பக்கீரத்தம்பியின் கரையான் வயல்.

7) **தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும்** கரையான் வெட்டுக்காடு என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு கோணநாயக்கர் கோயில் பிறப்பாகைக்குரிய மந்தணடைக்கீத்து வடக்கும் மேற்கும் ஆறு தெற்கு சபாபதிப் பிள்ளையின் தரை.

8) **தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும்** கொண்டு முனைப்பகுதி என்னும் ஒரு துண்டு வயல் நிலம் கிழக்கும் தெற்கும் ஆறு மேற்கு கோணநாயக்கர் கோயிலுக்குரிய அட்மயோடைப்பகுதி வயல் வடக்கு கோயிற் பிறப்பாகைக்குரிய மணற்பகுதி வயல்.

9) **தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும்** பிரமணன் கீத்து என்னும் ஒருதுண்டு வயல் நிலம் எல்லை வடக்கு கட்டை வயல் கிழக்கு வல்லிபுரத்தின் தரை தெற்கு கோணநாயகர் கோயில் வயல் மேற்கு வாய்க்கால்.

10) **தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும்** உப்புக்குழி என்றழைக்கப்படும் ஒரு துண்டுவயல் நிலம் எல்லை வடக்கு சிறுபயனி ஆறு மேற்கு பொன்னுச்சாமி குருக்களின் தரை தெற்கு கோயில் வீதி கிழக்கு கோயிலுக்குரிய தரை.

11) **தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும்** மாந்தோட்டடியான வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப்பள்ளம் வடக்கு கோயிலுக்குரிய தெளவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் சின்ன அணை வெட்டுவான் வயல். வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப்பள்ளம் வடக்கு கோயிலுக்குரிய தெளவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் தெற்கு சின்ன அணை வெட்டு வான் வயல்.

12) **தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும்** சின்ன அணை வெட்டு வான் பெரிய அணை வெட்டுவான் என்றழைக்கப்படும்.ஒரு துண்டு வயல் எல்லை கிழக்கு கோயில் வயலும் ஆறும் வடக்கு மாந்தோட்டியான் வயலும் காதர் தாமோதரம் பிள்ளையின் வயலும் தெற்கு ஆறும் பழனியப்பரின் தரையும் மேற்கு கோயில் பிரம்பருங்காட்டுக் கீத்து.

13) **தம்பலகமம் சம்பந்துறையில் பிராமணன் கீத்து** என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு வெட்டுக்காட்டு தரை மேற்கு கட்டை வயல் வடக்கு மூக்கறுத்தலைவரை தெற்கு பண்டாரியாக் கீத்து.

14) **தம்பலகமம் பண்டார வெளியில் பெரிய பகுதிமணற்பகுதி** என்றழைக்கப்படும் ஒரு துண்டு தரை வயல் தரை எல்லை வடக்கு கட்டாடிக்கீத்து என்றழைக்கப்படும் வயல் தெற்கு கொட்டுமுகப்பகுதி வயல் கிழக்கு சிறு பயனி ஆறு மேற்கு களத்துத்தரை.

15) **தம்பலகமம் பற்றவெளியில் உள்ள மந்தண்டைக்கீத்து** என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு இதரம்பள்ளம் என்றழைக்கப்டும் கோயில் வயல் தெற்கு சிறுபயனி கிழக்கு கோயில் சூகர வேட்டை (சூரசங் கார வேட்டை) த்தரை ஆமற்கு கரையான் வெட்டுக்காடு.

16) **தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் இதரமள்ளி** எள்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை கிழக்கு இலந்தையடி வயல் என்னும் கோயில் வயல் தெற்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல் மேற்கு கோயிலாறு வடக்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல்.

17) **தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் மூத்தார்** என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு சின்னவிக்கும் மறு பேருக்குமரிய தோட்டம் கிழக்கு விளங்கண் குடா என்னும் வயல் தெற்கு ஆறு மேற்கு சுவாந்தி அலவரையும் ஆறும்.

18) **தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் உள்ள ஒரு துண்டு தரையும்** அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்கள்.

19) **தம்பலகமம் கோயில் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும்** அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும்.

20) **தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும்** அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும் எல்லை வடக்கு பிறப்பாகைத் தரை கிழக்கு ஒழுங்கை மேற்கு ஆறு.

21) தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டுத்தரையும் அதிலிருக்கும் தென்னம் மரங்கள் முதலியவான பயிர்களும்.

22) தம்பலகமம் பண்டாரவெளியிலிருக்கும்ஒரு துண்டு தரையும் அதற்கு சேர்மானமான சகல உரித்துக்களும் எல்லை வடக்குவழி தெற்கு மணல் பகுதி பெரிய பகுதி மேற்கு ஆறு கிழக்கு பிறபாகை வயலும் கட்டாடிக் கீத்தும்.

(மேலே சொல்லப்பட்டிருக்கின்ற தோம்புப் பதிவுகளின் படி திருத்தம் பலகமம் கோணநாதேஸ்வரர் கோயிலுக்கு 6600 ஏக்கர் வயல் விளை நிலமும் **181x215** பாகம் தென்னந்தோட்டமும் தேவதானமாக இருந்து வந்தமையை அண்ணளவாக கணக்கீடு செய்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் பெருமளவிலான நிலப்பரப்பிற்கு கந்தளாய்க் குளத்தின் நீர்ப்பாசன வலைப்பினலுக்குட்பட்ட பாசனக்கால்வாய்களுடாகவே அதாவது குளக்கோட்டன் நிர்மாணித்த நீர்ப்பாசனவியல் நுட்பத்தின் பிரகாரமே பாசனம் பெற்றது என்பதும் ஆய்வாளர் முடிவாகும்.

**தோம்புப் பதிவில் இடம்பெற்றுள்ள திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில இடப்பெயர்கள்**

1. தம்பலகாமம் நாய்மார்திடல்
2. தம்பலகாமம் கரைச்சித்திடல்
3. தம்பலகாமம் கூட்டாம்புளி
4. தம்பலகாமம் பட்டிமேடு கோணமலை
5. தம்பலகாமம் கள்ளிமேடு காறிக்குடி
6. தம்பலகாமம் குச்சியம்படுதிடல்
7. தம்பலகாமம் வண்ணாமேட்டுத் திடல்
8. கொட்டியாரப்பற்றுக்குச் சேர்ந்த கீச்சிலம் பற்றை
9. கோறளைப்பற்று கதிரவெளி
10. திருக்கொட்டியாரப்பற்று மல்லிகைத் தீவு
11. கொட்டியாரப்பற்று கங்குவேலி
12. கொட்டியாரப்பற்று சம்பூர்

**பேரரசப் பல்லவர் காலத்துத் திருக்கோணேஸ்வரம்**

பேராசியரியர் நீலகண்ட சாஸ்திரி உட்பட்ட பல வரலாற்று ஆசிரியர்களால் பல்லவர் காலப் பக்தி இயக்கப் பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பெற்றிருந்த முக்கியத்துவம் நன்கு ஆராயப்பட்டுள்ளது. செல்லத்துரை குணசிங்கம் என்பவர் தனது கோணேஸ்வரம் என்ற நூலில் பல்லவர் காலத் தொடர்புகளை நன்கு ஆராய்ந்துள்ளனர். இருப்பினும் பல்லவர் காலச் சமூக பொருளாதார உருவாக்கப் பின்னணியில் காஞ்சி (கச்சி) ஆராயப்பட்டது. போன்று திருகோணமலை இன்னும் ஆராயப்படவில்லை என்றே கூறவேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படும் பத்திரகாளி அல்லது மகிஜமர்த்தினி

கோவில்கள், அவற்றோடு இணைந்திருக்கும் பல்லவ சோழ கல்வெட்டுக்கள் போன்றன அக்காலச் சமூக பொருளாதார உறவுகளை அறிவதற்குரிய சான்றாதாரங்களாகின்றன.ஈழத்தில் வெளிப்படுத்தப்பட்ட பெருமளவிலான பல்லவ கிரந்தக் கல்வெட்டுக்களும், வடமொழிக் கல்வெட்டுக்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டவை ஆகும். இது பல்லவ வம்சத்திற்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் இடையே இருந்திருக்கக் கூடிய மிக நெருக்கமான பண்பாட்டு அரசியல் தொடர்புகளையே இனங்காட்டுவதாக கொள்ள வைக்கின்றது. பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற தலச் சிறப்புக்களின் பின்னணியில் வாணிபப் பண்டங்களின் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மையை நோக்கும் போது அங்கு சமுத்திரவியல் வழிவந்த பண்பாட்டு செல்வாக்கினை நாம் அவதானிக்க முடிகின்றது. இதன் நிமித்தம் அவை பெருமளவுக்கு கடற்கரைக் கோயில்காக அமைவதற்கும் காரணமாயிற்று. திருக்கோணேஸ்வரமும் இத்தன்மைக்கு விதி விலக்கல்ல.

**பல்லவர், சோழப் பேரரசர் காலத்தின் பின் திருக்கோணேஸ்வரத்தில் கருமம் ஆற்றியகோவில் நிர்வாகிகள்**

“.....கோயிற்பூசை, உற்சவம், திருப்பணி போன்ற சகல காரியங்களுக் கென்றும் எம்முன்னோர் சாசனம் எழுதிக்கொடுக்கப் பெற்றவர் ஆகையாலும் குறித்த கோவிலின் கல்வெட்டிலும் வேதம்,ஆகமம், புராணம் ஆகியவற்றிலும் சொல்லியபடியும் வழமைப்படியும் கோவிலின் “தொண்டு தொழும்பு” செய்த நிர்வாகிகளின் பெயர் கடமை விபரங்கள் போன்றவற்றை தோம்புப் பதிவுகள் இன்று தந்துதவுகின்றன. போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப்பெற்ற கலையழிவுப் கொள்கைக்கு பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோயிலைப் பற்றிய அரிய தகவல்கள் குறிப்பாக தம்பலகமம் சிவன் கோயிலைப் பற்றியதும் தேவஸ்தான வயல்நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஓலைச்சுவடிகள் பலவற்றில் எழுதிப்பாதுகாக்கப்பட்டிருந்தன.அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவுகளாக முத்திரை குத்திப் பாதுகாக்கப் பட்டிருந்தன. இவற்றில் இடம்பெற்றுள்ள சொற்பதங்கள் அதிகாரிகளின் பெயர்கள் ஆவணத்தின் உள்ளடக்கம் போன்றன பல்லவ – சோழ அரசர்களின் தேவஸ்தானக் கொடைகளில் இடம்பெற்றுள்ளவாறு அதே வகையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மை மேலும் ஆய்வுக்குரிய பொருளாகின்றது.

“திருக்கோணாத மலையைச் சேர்ந்த தம்பலகாமம் பற்றிய தம்பலகமக் கோயிற் குடியிருப்பில் சைவசமயப் பிரபல்யமாய் விளங்கும் கோணநாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு சூரிய – சந்திர – அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரியகுலத்து மனுநீதிச் சோழ மஹாராசன் மரபிலுதித்த வரராம தேவராசாவின் புத்திரன் குளக்கோட்டு மஹாராசன் மரபிலுதித்த கயவாகு மஹாராசவினால்......” செப்பேட்டு சாசனம் வரையப்பட்டு இக்கோவிலின் நிர்வாக ஒழுங்கு முறைகள் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு தாமிரசாசனம் செய்து

வைக்கப்பட்டதன் பிரகாரம் கோயிற் பணிகளும், பணியாளர் நியமனமும், பொறுப்புக்களும் இக்கோவிலின் பிரதான நிர்வாகியான "இருபாகை முதன்மை" யினால் மேற்கொள்ளப்பட்டது.

இக்கோவிலின் நிர்வாகிகளுள் "இருபாகை முதன்மை" என்ற பதவி மிகவும் அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது. பொதுவாக "இராசகுலகுரு" என்ற ஸ்தானத்தினை வகிப்பவரே இக்கோவிலின் இருபாகை முதன்மையாக விளங்குவார். பல்லவ சோழக்கோயிற் கல்வெட்டுக்களில் இப்பதப் பிரயோகம் பொதுமையானதாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. கரணம், அடப்பற்தானத்தார், வரப்பத்தார், சங்கமம், சிந்துநாடு போன்ற நிர்வாகப் நிலைகளாகும். இத்தோடு சேர்ந்த இன்னொரு நிர்வாக நிலை "கட்டுக்குளப்பகுதி" என அழைக்கப்பட்டது. கோவிற் பலிசாளர்களுள் கட்டுக்குளப்பகுதி என்னும் நிர்வாகத்துறையானது சோழர் காலத்து ஏரிவாரியப் பெருமக்களது பணியைப் போன்று தொழிற்பட்டது எனக் குறிப்பிடலாம்.

கோவிலின் முதன்மை நிர்வாகியான **"இருபாகை முதன்மை"** தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ்க்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நியமித்தும் அதிகாரங்களை வழங்கியும் அவ்வடிப்படையில் தேவஸ்தானத்திற்குரிய ஆதனங்களை வழங்கியும் தொழிற்பட்டிருந்தார் என்பதை அறியமுடிகின்றது.

அவ்வாறு தொழிற்பட்ட உத்தியோத்தர்களுள் சிலர் **பூசகர், போதகாசாரியார், சாதகாசபரியார், அலங்கிருதாசாரியார், குருமார், பண்டாரம், ஓதுவார்** எனக் குறிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட கோயில் உத்தியோகத்தர் "இருபாகை முதன்மைக்கு" தேவையான உதவிகளையும் கடமைகளையும் செப்பமாகச் செய்யாவிடில் அவ்வாறு இருபாகை முதன்மை முடிவு செய்யும் பட்சத்தில் கோவிலின் இருபாகை முதன்மை என்ற நிலையில் மேலே குறிப்பட்ட உத்தியோகதர்களுகுரியபத்தில் இரண்டு பங்கால், அல்லது குறித்த குறித்த கோவிலினுடைய பத்தில் எட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது ஆதனங்களை அவர்களிடமிருந்து மீள எடுத்துக்கொள்வதற்கு உரிமையுடையவராவார்.

இக்கோவிலின் நிர்வாகம் தொடர்பாக குறிக்கப்பட்டுள்ள இன்னொரு முக்கிய அம்சம் **"இருப்பு வீடுகள்"** ஆகும். குறித்த கோவில்களிடமாக "இருப்பு வீடுகள்" கட்டி அந்தந்தக் கோவில்களின் சகல சம்பத்துக்களையும் அந்தந்த கோவில்களுக்குரிய சாசனங்கள் தாமிரப்பட்டயங்கள் உறுதிகள் போன்றவற்றை அந்தந்த கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்கவேண்டியது. குறித்த வீடுகளுக்குள்ள இரண்டு திறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையிடமும் மற்றது ஒருமித்து நியமிக்கும் ஒருவரிடமும் இருக்க வேண்டியது குறித்த கோவில்களின் நேர்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியனவைகளும் இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோயிலுக்கு

தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்று கோவிலுக்கு வேண்டியவற்றுக்காகச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டு வஷ்திரங்கள், திருவாசி முதலியன சகலமும் மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் சகலமும் கோயிலின் **இருப்பு வீட்டில்** வைக்கும் படி செய்ய வேண்டும். இவ்வாறு இருப்பு வீட்டின் முக்கியத்துவம் கோயில் நிர்வாக முறையில் எடுத்துச் கூறப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். இத்தகைய ஒரு செயன்முறையை மத்திய காலத்து வழமைப்பிரகாரம் அண்மைக்காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டு வந்திருந்தமையைக் காண்கின்றோம்.

**நிலம், சொத்துக்கள், அசைவற்ற ஆதனங்கள்**

பின்னாற் சொல்லப்படும் ஆதனங்கள் திருக்கோணதமலை தம்பலகமப்பற்று, தம்பலகமம் திருக்கோணநாதேஸ்வரர் சுவாமி கோவிலாதனமாக அக்கோவிலின் ஏகபூசகரும், இருபான்மையும் என்னும் அதிகாரமுறைப்படி உரிமை மாட்சி பெற்ற ஆதன்ங்களாகும். அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

தம்ாலகமப்பற்று மாக்கை வெளியிலிருக்கும் பெத்தராசிவயல், பெரியஆண்டிவெட்டுவன் வயல் சின்னண்டிவெடடுவான் வயல், காட்டுக் குடும்பியன்வயல், பெரிய வெட்டுக்காட்டு வயல், முதலியார் வயல் தம்பலகமப்பற்று ,பெற்ற வெளியிலிருக்கும் ஓலுக்குணி வயல், கரையான் வெட்டுக்காட்டு வயல், சுவாந்தியார் வயல், மந்தணடைக் கீத்துவயல், கரையான்வயல், தம்பலகமப்பற்றுபண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனை வயல், பிராமணன் கீத்துவயல், உப்புக்குழி வயல், மூத்தார் வயல், மாதோட்டியான் வயல், சின்ன அணைவெட்டுவான் பெரிய அணைவெட்டுவான் வயல், பிரம்மபரு காட்டுக்கீத்து வயல், தெளவில் வெட்டுவான் வயல், தம்பலகமப்பற்று சம்பாந்துறையில் உள்ள பெருந்தரையும் அதில் உள்ள தென்னை மரங்கள், தென்னம் பிள்ளைககள் முதலிய வான் பயிர்கள், தம்பலகமப்பற்று பண்டார வெளியிலிருக்கும் ஒரு துண்டுத் தரையும் அதற்கு சேர்மானமான சகல உரித்துக்களும் ஆக ஏறத்தாழ 6600ஏக்கர் நெல் வயல் விளைநிலமும் 181 x 215 பாகம் பரப்புடைய தென்னந் தோட்டமும் தேவதானமாக ஆங்கிலேயர் காலம் வரைக்கும் இருந்து வந்தமையை தோம்புகளினூடாக அறிகின்றோம். இவை யாவும் கந்தளாய்க் குளத்தின் நேரடியான பாசனமுறைக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் கோணநாதேஸ்வரப்பதிக்கும் பெரும் நீர்ப்பாசன நிறுவனங்களின் மீதான சொத்துடமை இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கந்தளாயக் குளத்திலும், மகாமகக் குளத்திலும் காலத்திற்கு காலம் நடைபெற்ற **வேள்விகள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்களின்** மூலமும் அங்கு நடைபெற்ற **யாகங்கள்** மூலமும் **கிராமசாந்திகள்** மூலமும் பெருந்தொகையான வருமானம் கிடைத்தமை

இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும். ஆலடிப்பத்தினியம்மன் கோவிலின் வேள்விகள் மூலம் பெற்ற வருமானமும் கோணநாதேஸ்வரப் பதிக்கே சென்றடைந்தது. திருகோணாதமலை கொட்டியாரப்பற்றில் உள்ள கங்குவேலி சிவன் கோயில், வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் ஆகியவற்றின் பூசை, திருவிழாக்கள், ஆடிஅமாவாசைத் தீர்த்தங்கள் அதற்குரிய கிருத்தியங்கள் மூலம் பெற்றுக்கொண்ட வருமானமும் கோணேஸ்வரப் பதியையே சென்றடைந்தது. மேலும் கந்தளாய் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவுள்ள – அசைவற்ற ஆதனங்களின் வருமானமும் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

**கோயிற் குடியிருப்புக்கள்**

தம்பலகாமப் பற்றைச் சேர்ந்த நாய்மார்திடல், கரைச்சித்திடல், கூட்டாம் புளியடி, பட்டுமேடு, கோணமலை, கள்ளிமேடு – காறிக்குடி, குச்சியம் படுதிடல், வண்ணா மேட்டுத்திடல், கொட்டியாரப்பற்றைச் சொந்த கீச்சிலம் பற்றை, கங்குவேலி, சம்பூர், கோறளைப் பற்றைச் சேர்ந்த கதிரவெளி திருக்கொட்டியாரப் பற்றைச் சேர்ந்த மல்லிகைத்தீவு ஆகியன ஆதிக்கோண நாதேஸ்வரா கோவிலுக்குரிய பிரதான கோயிற் குடியிருப்புக்களாக விளங்கின. இக்கோயிற் குடியிருப்புக்களுக்குரிய தொழுப்பாளர்களாக ஈரங்கொல்லி (திருக்குளக்கட்டாடி) பரியாரி, பண்டாரம், கந்தியடப்பன், மதிரிப்பணிக்கள், சங்கமம், தோம்புதோர் ஆகியோர் சேவை புரிந்தனர். ஆதிக்கோண நாதேஸ்வரர் திருக்கோவிலின் திருப்பட்டாடை உற்பத்தியை கந்தியடப்பர் அல்லது செங்குந்தர் (சேணியர்) என்ற குல மக்களே மேற்கொண்டிருந்தனர்.

**முடிவுரை.**

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவிலின் தோற்றம் வளர்ச்சி, நிலம் சொத்துக்கள், வருமானம், பரிபாலன முறைகள் தொடர்பான சில அடிப்படை ஆய்வுக்குறிப்புக்களை ஆதிப்பல்லவ வம்சமரபு ஒன்றுடன் இணைத்த வகையில் இங்கு நிரைப்படுத்த முடிந்தது. தோம்புக் குறிப்புக்களில் இக்கோவிலைப் பற்றிய மேலதிக விபரங்கள் இன்றும் காணப்படுகின்றன. இக்கோவிலைப் பராமரிப்பதற்காக ஒரு சபை உருவாக்கப்பட்டிருந்தது. அச் சபையில் 33 ஊர்களைச் சேர்ந்த 33 உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களது விபரங்கள், கடமைகள் கூட தோம்பில் பதிவு செய்யப்பட்டுக் காணப்படுகிறது. இவை மாத்திரமன்றி, திருக்கோணாதமலை கோணநாதேஸ்வரப் பெருமானின் பட்டித்தொகுதியில் வளர்க்கப்பட்டுவந்த மாடுகளின் இனம், பெயர்கள் , குறியீடுகள் போன்றனவும் விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளமையும் நன்கு ஆராயத்தக்கது. இச்சிறு ஆய்வுக் கட்டுரையின் கண் அவற்றை விபரமாகக் கொடுக்க முடியாதிருக்கின்றது. ஏற்கனவே சோழர் காலத்தில் இந்த இந்துக்கோயில் நிர்வாகம் தொடர்பாக செ. குணசிங்கம்

என்பவர் மிகவும் விபரமாக ஆராய்ந்துள்ளார். இங்கே சொல்லப்பட்ட தகவல்கள் ஆய்வாளர்களுக்கு இப்பொழுது தான் முதன் முறையாகக் கிடைக்கின்றது எனலாம். இவ்வகையில் இக்கட்டுரையின் நோக்கம் இக்கோவிலைப் பற்றிய தோற்றம் தொடர்பாக எதிர்கால ஆய்விற்கு ஆய்வாளர்களை வழிநடத்திச் செல்வதே எனலாம். திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவில் பற்றிய அரிய தகவல்கள் இன்னும் தம்பசெட்டி வியாபாரி முலையில் மறைந்து காணப்படுகின்றன. வியாபாரிமூலைக்கும் தம்பலகாமம் ஆதிக் கோணநாதேஸ்வரர் கோவிலுக்குமிடையே காணப்பட்டிருக்கக்கூடிய ஆதிப்பல்லவ வம்சத் தொடர்புகளை உரியமுறையில் ஆராய்ந்து, அவற்றையும் சேகரித்துப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் கோணநாதேஸ்வரர் கோயிலின் வரலாற்றை முழுமையாக வரைந்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டும் என எதிர்பார்க்கலாம்.

**ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள், ஆவணங்கள்.**


1) Ramachchandra Dikshitar, V.R (Tranld) **The Silappadikaram**, Introduction: PP 01-74: Oxford Uni.press, 1939
2) Devakunjari,D., **Madurai through the ages**, pub. by SHAER, Madras, 1979.
3) Draniyagala, S.U., **The prehistory of Sri Lanka, part I**, pub by the department of Archacological survey of Sri Lanka, Colombo – 1992.
4) Gunasingam,S,. **The Tamils and Trincomalee**, peradeniya, 1979.
5) Xavier, J.T., **The land of letter**, Trincomalee, 1977.
6) Navaratnam, C.S., **Tamils and Ceylon**, Jaffna, 1958.
7) தோம்புக் கட்டுத்தொகுதி: வியாபாரிமூலையில் வாழ்ந்த அமரர் சி.நா. சொக்கநாதபிள்ளை அவர்களின் சேகரிப்புக்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுத் தகவல்கள்.
8) மோஸஸ் பொன்னையா., **நாடார் வரலாறு**, சீயோன் பதிப்பகம், மதுரை, 1978.
9) பல்லவராசசேகரன், **பல்லவராச்சியம்**, ஈழத்து இலக்கியச்சோலை, திருகோணமலை,2007
10) கிருஸ்ணராசா, செ., **தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும்**, பிறைநிலா வெளியீடு, கோண்டாவில்,2015.
11) குணசிங்கம், செ., **கோணேஸ்வரம்**, பேராதனை, 1973.

# தீவகத்தில் நிலவும் பல்லினக் கலாச்சார ஒருங்கிணைப்பு – ஒரு வரலாற்று நோக்கு

## (நயினாதீவினை அடிப்படையாகக் கொண்டது)


செல்வி. ம. சிவகுமார்
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Mangalaruby1989@gmail.com


இலங்கைத் தீவினது வரலாற்றினை வெறுமனே ஒரு இனத்திற்கோ அல்லது ஒரு மதத்துக்கோ சார்பான தீவாக யாருமே கருத முடியாது. ஏன் எனில் இலங்கையானது சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என பல்லின சமயம், சமூகம், பண்பாட்டினைக் கொண்டதொரு தீவாகவே இன்றுவரை மிளிர்கின்றது. ஒவ்வொரு இனத்தினைச் சார்ந்தவர்களும் தமக்கென தனியானதும், தனித்துவமானதுமான வரலலாற்றுப் பாரம்பரியங்களைக்கொண்டமைந்துள்ளனர். பெரும்பான்மை இனத்தை சார்ந்தவர்களாக சிங்களவர்கள் காணப்பட, சிறுபான்மை இனத்தவர்கள் என்ற வரையறைக்குள் தமிழர்களும் இஸ்லாமியர்களும் உள்ளடங்குகின்றனர். இலங்கையின் கிரீடமெனப் போற்றப்படுபவை சப்த தீவுகளே. இலங்கையின் தீவுகள் இலங்கையின் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள ஏழு தீவுகள் சப்த தீவுகள் எனப்படும். இத்தீவுக் கூட்டங்கள் 79º, 49 – 80 40 வரையான கிழக்கு நெடுங்கோட்டுக்கும் 9, 36-9– 5040 வரையான வட அகலக் கோட்டுக்குமிடையில் அமைந்துள்ளன. குடாநாட்டின் மேற்குக் கரையிலிருந்து தென்மேற்காக 35 கிலோமமீற்றர் தூரத்திற்குள் அத்தீவுக்கூட்டங்கள் அமைந்துள்ளன.

லைடன்தீவு (வேலணைத்தீவு), புங்குடுதீவு, நயினாதீவு, காரைநகர், நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு ஆகிய ஏழு தீவுகளும் ஒன்றிணைந்ததே சப்த தீவுகள். இவற்றைவிட கச்சதீவு, பாலைதீவு, கேரதீவு போன்ற சிறிய தீவுகளும் இங்கே காணப்படுகின்றது. ஆயினும் இங்கு நிரந்தர மக்கள் குடியிருப்புக்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. கால முன்னேற்றத்தினால் காரைதீவு யாழ்நகருடன் தொடர்பு கொண்டு காரைநகராக மாறியுள்ளது. (சதாசிவம் சேவியர்,ச.,1979). லைடன்தீவு, புங்குடுதீவு, காரைநகர் ஆகியவை கடல் வழி சாலைகள் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனைய நான்கு தீவுகளான எழுவைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு என்பவற்றுக்கு யாழ்ப்பாணத்துடன் கடல்வழிப் போக்குவரத்து மட்டுமே உண்டு.

ஒவ்வொரு தீவுகளும் தமக்கேயுரிய வரலாற்றுப் பாரம்பரியங்கள் பண்பாட்டம்சங்களையும் கொண்டமைந்துள்ளது. இலங்கை புராதன காலத்தில் பல்வேறு நாடுகளுடன் தொடர்புகளை பேணியதை போன்று இத்தீவுகளுடனும் பிற நாட்டவர்களது தொடர்பு ஏற்பட்டதை தொல்பொருட் சான்றுகள் வாயிலாக அறிய முடிகிறது. இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. இங்கிருந்த இயற்கைத் துறைமுகங்களேயாகும். பெருங்கற்காலப் பண்பாடு தொடக்கம் அரேபிய, சீன, போர்த்துக்கேய, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என பல்வேறு நாட்டவரது தொடர்பினை இங்கு காண முடிகிறது. (சிவசாமி,வி.,2014). தற்காலப் பகுதியில் இங்கு மக்கள் தொகை (பல்வேறு நோக்கிங்களின் பொருட்டு வெளியேறுவதால்) குறைவடைந்து செல்கின்ற போதும் அவர்களது பண்பாட்டம்சங்கள் மறையவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

புராதன காலத்தில் தீவகத்திற்கும் பிற நாடுகளுக்கிடையிலும் கலாச்சார தொடர்புகள் பேணப்பட்டாலும் அவை காலப்போக்கில் மறைந்து போயுள்ளதைக் காணமுடிகிறது. ஆயினும் வேலணைத் தீவில் இந்து இஸ்லாமிய கலாச்சார ஒருங்கிணைப்புக்கள் இன்றும் பின்பற்றப்படுகின்றன. இவற்றையும் தாண்டி நயினாதீவில் இந்து - இஸ்லாமிய - பௌத்த கலாச்சார ஒருங்கிணைப்பு நிலவுகின்றமை சிறப்பம்சமாகும். புராதன காலம் முதல் இன்று வரை இக் கலாச்சார ஒருங்கிணைப்பில் இன ரீதியான முரன்பாடுகள் எவையும் ஏற்படவில்லை என்பது நயினாதீவுக்கு மட்டுமேயுள்ள தனித்துவம்மிக்க பண்பாகும். வட இலங்கையில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் இக் கலாச்சார ஒருங்கிணைப்பில் எவ்வித மாறுதல்களையும் உண்டுபண்ணவில்லை. இந்துமதம் செழித்து வளர்ந்த தீவகத்தில் எவ்வாறு இஸ்லாமிய பௌத்த கலாச்சார ஒருங்கிணைப்புக்கள் ஏற்பட்டதென்பது வியப்பிற்குரியதே.

**நயினாதீவின் அமைவிடம்**

சப்த தீவுகளிலும் தனிப்பெரும் சரித்திரப் புகழ் பெற்றது நயினாதீவு. இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறீஸ்தவ, மதங்களைக் கொண்ட சர்வமத சந்நிதியாக விளங்குகின்றது. இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து கடல் வழியாக தென்மேற்குத் திசையில் 23 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இதன் கிழக்குத் திசையில் புங்குடுதீவும் நேர் வடக்கில் அனலைதீவும் அமைந்துள்ளன. 57 சதுர கிலோமீற்றர் பரப்பளவினை கொண்டது. 2.5 கிலோ மீற்றர் நீளமும், 1.5 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட சிறிய நிலப்பரப்பில் இத்தீவு அமைந்துள்ளது.

**நயினாதீவும் இந்து சமயமும்**

நயினாதீவில் வாழும் பெரும்பான்மைத் தமிழர்கள் இந்து சமயத்தையே பின்பற்றுகின்றனர். ஏனைய தீவுகளில் காணப்படுவதைப் போன்று சிவன், பிள்ளையார், முருகன் , வைரவர் போன்ற தெய்வ வழிபாடுகள் பேணப்பட்டாலும் தாய்த்தெய்வ வழிபாட்டுடன் இணைந்த நாக வழிபாடே இங்கு சிறப்பிடம்

பெறுகிறது. அதற்கு இங்கு காணப்படுகின்ற நயினை நாகபூஷணி அம்மன் கோவில் சிறந்த எடுத்துக்காட்டாகும். இது தமிழர்களது பழமையான நாக வழிபாட்டின் தொன்மைகளை எமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்து கொள்கிறது. நாதீவு என்ற பெயர் நாகர்களின் குடியிருப்பாலும் நாக வழிபாட்டாலும் ஏற்பட்டது என்ற கருத்து நிலவுகிறது. நாகர்கள் யார்? அவர்கள் எந்த மொழிக்குரியவர்கள் என்பது தொடர்பாக அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படவே செய்கிறது. சரித்திர காலத்திற்கு முற்பட்ட, பெரும்பாலும் திராவிடர்களாகவே இருந்திருக்ககூடிய, தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பரந்த கிளையினரே நாகர் என சேர்.பொன்.அருணாச்சலம் அவர்கள் Sketches of Ceylon History என்ற தனது நூலில் கூறுகின்றார். (சரவணபவன். ஐ., 2012). கா.அப்பாத்துரை அவர்கள் மேலும் ஒருபடி சென்று நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த சாதியர் இயக்கர் நாகர் என்போராவர். இவர்களுள் நாகர் திராவிட இனத்தினர் என்றும் அவர்கள் நனி நாகர்கள் என்றும் நாகரிகம் என்ற சொல்லே நாகரிலிருந்து தோன்றிற்று என்றும் சண்முகநாதபிள்ளை. நா.க அவர்கள் புராதனி நயினை நாகபூணி என்னும் நூலிலே விரிவாக எடுத்துரைத்துள்ளார். அவர்கள் மிகவும் தொன்மையான இனத்தவர் என்பதும் நாகத்தை வழிபடுவதும் அதனைத் தமது இனக்குறியாகக் கொள்வதும் அவர்களின் வழக்கம் என்பது ஆதாரபூர்வமானவை.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்தியாவின் முதற் குடிகளாய் விளங்கியவர்கள் நெக்றொயிட் அல்லது நெக்றிட்டோ இனத்தவர்களாவர். இன்று இவர்கள் இந்தியாவில் முற்றாக அழித்தொழிக்கப்பட்டு விட்டனர். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து அராபியா ஊடாகவும் ஈரான் பலுச்சிஸ்தான் கரையோரங்கள் ஊடாகவும் இந்தியாவினுள் நுழைந்தவர்கள். உணவு உற்பத்தியாளர்களாக இன்றி உணவு சேகரிப்பவர்களாகவே விளங்கினர். புறாட்டோ ஒஸ்ரலொயிட்டுக்களால் கொல்லப்பட்டோ உள்வாங்கப்பட்டோ தங்களின் தனித்தன்மையினை இழந்த போதிலும் இவர்கள் இன்றும் சிறிய அளவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நெக்றிட்டோ இனத்தின் எச்ச சொச்சங்களை இன்றும் அசாமிலுள்ள நாகர்களிற் காணலாம். இந்தியாவிற்கு வெளியில் இவர்கள் மலாயா இந்தோனேசியா பிலிப்பைன்ஸ் நியூக்கினியா ஆகிய இடங்களிலும் சிறிய அளவில் வாழ்கின்றனர்(சோமசேகரன், வை., 2015).

இன்று ஆதிக்குடிகளாய் படிப்படியாக மறைந்து வரும் நாகரினம் ஒரு காலத்தில் நாகரிகமும் ஆட்சித்திறனும் பொருந்தி விளங்கியமைக்குச் சான்றுகள் உள்ளன. வேதகாலத்திலும் குப்தரின் எழுச்சிக்கு முன்பும் நாகர் ஆட்சியாளராய் இந்தியாவில் விளங்கியமையை வரலாற்றாசிரியர்கள் காட்டத்தவறவில்லை. நாகர்கள் போலவே அவர்களின் வழிபாடும் மிகத் தொன்மையானதாகும். சிந்துவெளி நாகரிக காலத்தில் அங்கு வாழ்ந்த மக்கள் சிவனையும் தாய்த்

தெய்வத்தையும் எருது முதலான விலங்குகளை மட்டுமன்றி நாகத்தையும் வழிபட்டதாகத் தெரியவருகின்றது. இவ்வகையில் நாகவணக்கம் யக்ஷ வணக்கம் என்பனவும் மொஹஞ்சதாரோவில் நிலவின என ஊகிக்கலாம் (சோமசேகரன், வை., 2015).

தமிழக ஆதிக்கம் நல்லூரில் குறைந்தது 3000 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான முது மக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு சிவப்பு கறுப்புநிற மட்பாண்டங்களின் உடைந்த துண்டுகளும், எலும்பில் செய்த ஆயுதங்கள், இரும்பு, செம்பு, பொன் முதலிய உலோகங்களில் செய்த பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மணிமேகலை, நற்றிணை, பதிற்றுப்பத்து, புறநானூறு முதலிய சங்கத் தமிழ் இலக்கியங்கள் விபரிக்கும் இறந்தோர் உடலைப் புதைக்கும் முறை நல்லூரில் ஒழுங்கு பிசகாமல் பின்பற்றப்பட்டுள்ளது. இதே அமைப்பினை ஒத்த அடக்கு முறை இலங்கையின் மேற்குப் பகுதியில் பொம்பரப்பி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (சுப்ரமணியன்,டி,எஸ்.,2004).

நாக வழிபாட்டில் திழைத்த தமிழ்க் குடியினரான தீவுகளிலும் யாழ் குடாநாட்டிலும் சிறப்புற்று வாழ்ந்திருக்கலாம் என கருத இடமுண்டு. புகழ்பூத்த இச்சிறிய தீவின் பெருமைக்கு அணியாய் இன்றும் சிறப்புற்று விளங்கும் ஆலயங்கள் பல. ஆதி மனிதன் தன் சிந்தனைக்கும் செயலுக்கும் மேலாக மூலமாய் நின்று வழிநடத்திச் செல்லும் சக்தி ஒன்று உண்டென்று ஒரு காலத்தில் உணர்ந்தான். அக்காலத்தில் இருந்தே இச்சிறிய தீவில் தொன்மையான வழிபாட்டு நெறி இருந்து வந்துள்ளது. (சரவணபவன், ஐ., 2012). இத்தீவு வாசிகளில் பெரும்பான்மையினர் சைவ சமயத்தவர் இவர்களின் பழமையான வழிபாட்டு நெறியின் சான்றாய் இத்தீவின் பெருமைக்கு முக்கிய காரணமாக விளங்குவது நாகபூசணி அம்மன் ஆலயமாகும்.

சிற்ப வடிவில் செதுக்கியோ செப்புருவாய் வார்த்தெடுத்தோ பிரதிஸ்டை செய்யப்படாது தாமாகவே தோன்றி வழிபாட்டிற்கு இடமாகும் தெய்வ உருவங்கள் சுயம்பு மூரத்தம் என வழங்கப்படும். இந்தியா இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இது இருக்கிறது. நயினை ஆலயத்தின் கருவறையிலே ஐந்துதலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது. அம்பாளின் விக்கிரகம் ஆயிரம் ஆண்டுகாலம் பழமை வாய்ந்தது எனவும் அதன் முன்பே நாகப்பிரதிஷ்டை ஏற்பட்டிருக்கலாம் எனவும் காரைக்குடி எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் 11.03.1951 இல் வெளியான வீரகேசரியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வடபாகத்தில் நாகர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் நாகத்தை வழிபட்டனர் என்று இதிகாச நூல்கள் குறிப்பிடுகின்றன. நாகபூஷணி அம்மன் கோவிலின் மூலஸ்தானத்திலே சுயம்புவாய் அமைந்துள்ள ஐந்துதலை சர்ப்பச்சிலை இதற்குத்தக்க சான்றாகும் என்று ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். இந்திய

புராதன சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர் நரசிம்மன் அவர்கள் 1951இல் நயினாதீவுக்கு வந்த வேளையில் அம்பாள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்தது. மூலமூர்த்தியின் அருகே சென்று தரிசிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. நரசிம்மன் அவர்கள் மூலஸ்தானத்தில் அம்பாள் சிலையின் பின்புறத்தே விளங்கும் ஐந்து தலை நாகச்சிலை 1400 வருடம் பழமையான தனது நுண்கருவி மூலம் பெறப்பட்ட படத்தினை ஆராய்ந்த இவர் இந்த நாகச்சிலை சிறப்பு வாய்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார் (வேதநாதன்,மா.,2012). அதிஷ்ட விஞ்ஞானம் எனும் சோதிட நூலின் ஆசிரியர் சேதுராமன் இதனை மகா குண்டலினி சக்தி என எடுத்துக்காட்டுகிறார். எது எவ்வாறு அமைந்திருப்பினும் நாக வழிபாட்டின் சிறப்பிடம் இன்றுவரை விளங்கும் நயினைதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் நாகரை நினைவுபடுத்துவதாகவே அமைகிறது.

**நயினாதீவும் பௌத்தமத தொடர்புகளும்**

இலங்கையில் பௌத்த மதத்தினது வரலாற்றை கூறுவதில் மகாவம்சம் பிரதான பங்கினை வகிக்கின்றது. நயினாதீவினை பௌத்த மதத்துடன் தொடர்புபடுத்திப் பல்வேறு குறிப்புக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. நாகதீபம், மணிபல்லவம் ஆகிய பௌத்தமயச் சார்புடைய பெயர்களைக் குறிப்பாக நயினாதீவுடன் தொடர்புபடுத்தும் தொல்பொருட் சான்றுகள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் நாகதீவு (நாதிவ) எனும் பெயர் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் குறிப்பதாக வழங்கப்பட்டதற்கு அசைக்க முடியாத சான்றாக வசப மன்னன் காலத்தில் பொறிக்கப்பட்ட வல்லிபுரப் பொற்சாசனம் விளக்குகிறது. அப்பொற்சாசனத்தின் குறிப்புக்கள் பின்வருமாறு அமைகிறது. (சிவசாமி,வி.,1990). “சித்த மகாராஜ வஹயஹ ராஜெகி அமெத இஸிகிரய நகதிவ புஜமெறி புடகர அதன ஹி பியகக-திச விஹர கரிதெ”

நயினாதீவுக்கு தென்கிழக்கு திசையில் அமைந்திருக்கும் புங்குடுதீவில் பௌத்த ஞானிகளான அல் உறந்த்ஸ் என்போர் வாழ்ந்தனர் என்ற செய்தியே இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி புங்குடுதீவு எவ்வாறு பௌத்தமதம் சார்ந்த இடமாக விளங்கியதோ அதே போன்று நயினாதீவும் பௌத்தமதம் சார் தொடர்புபட்ட இடமாக விளங்கியதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை என்றே கூறலாம். ஏனெனில் சப்த தீவுகள் தமக்கிடையே பண்பாட்டு கலாச்சார தொடர்புகளை பிற தீவுகளுடன் பகிர்ந்து கொண்டமை இங்கு நோக்கத்தக்கது. மணிபல்லவம் என்ற பெயரும் “நாகதீபம்” என்ற பெயரைப் போன்று முழு யாழ்ப்பாணக் குடாநாட்டையுமே குறிப்பதாக வழங்கப்பட்டது என்பது சுவாமி ஞானப்பிரகாசர் முதலியார் இராசநாயகம் ஆகிய அறிஞர்களது கருத்தாகும் போல் பீரீஸ், பரணவிதான போன்ற சிங்கள தொல்பொருளியல் அறிஞர்களும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர் (சிவசாமி,வி.,1990).

இலங்கை வரலாற்று நூலான தீபவம்சம், மகாவம்சம் மற்றும் தமிழ் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை போன்ற நூல்கள் நாக

மன்னர்களுக்கு இடையே நடந்த போர் பற்றி விளக்குகிறது. விஜயனின் வருகைக்கு முந்திய காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடும் அயலிலுள்ள தீவுகளும், திருமலை, வன்னி மன்னார் மற்றும் கிழக்கு மேற்குக் கரையோரப் பட்டினங்களும் நாகர்களது குடியிருப்புக்களாக இருந்தன. யாழ்ப்பாணக் குடாநாடும் அயல் தீவுகளும் நாகதீபம் என்ற பெயருக்கு ஏற்றவாறு கதிரமலையினை தலைநகராகக் கொண்ட ஒரு நாக அரசின் கீழ் இருந்தன. (இராசநாயகம்,செ.,1933) நயினாதீவும், யாழப்பாண குடாநாட்டை போன்று சரித்திர காலத்திற்கு முன்னர், அதாவது விஜயன் வருகைக்கு முன்னர் நாகர்களது குடியிருப்பு இருந்திருக்கலாம். நயினாதீவுக்கு நாகர்கள் எக்காலப் பகுதியில் வந்து குடியேறினார்கள், எப்பகுதியிலிருந்து வந்து குடியேறினார்கள் என்பதனை திட்டவட்டமாக கூறமுடியாதுள்ளது. ஆனால் நயினாதீவு, நாகதீவு, நாகதீவினை, நாகநயினாதீவு போன்ற நயினாதீவினை அழைக்கப் பயன்பட்ட தொன்மை வாய்ந்த இடப்பெயர்களை இதனுடன் தொடர்புபடுதத்த இடமுண்டு. நாகர்களின் பிரதான வழிபாடான நாக வழிபாட்டில் பிரசித்தி பெற்ற இடமாக இன்றும் நயினாதீவு விளங்குகின்றமை இங்கு சுட்டிக்காட்டிக் காட்டத்தக்கது.

புத்தர்பிரான் வெவ்வேறு காலங்களிலே இலங்கையில் கால்பதித்துப் புனிதமாக்கிய இடங்கள் மூன்று. ஒன்று சிவனொளிபாதம் மற்றையது கல்யாணி என்னும் களனி மூன்றாவது மணிபல்லவம். புத்தரின் காலம் கி.மு 566 - 483 ஆகும். அவரது வருகைக்கு முன்பே நாக மன்னர்களது ஆட்சி நயினாதீவில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

புத்தரின் வருகையைப் போற்றி நினைவு கூரும் வகையில் தரும பீடிகை அமைந்திருந்ததையும் அதனை மணிமேகலை வழிபட்டமையும் மணிமேகலைக் காப்பியத்தால் அறியவரும் செய்தி.

'பெரியவன் தோன்றா முன்னர் இப்பீடிகை
கரியவன் இட்ட காரணத்தானும்'

எனவரும் அடிகளும் நாக அரசர்க்கு புத்தர் கூறிய அறிவுரையினைக் கூறுவதுடன் நாக அரசு பற்றிய செய்தியை நிலைநாட்டுவதாகவும் அமைகிறது.

நயினாதீவில் ஆட்சி செய்த நாகமன்னர்களான மகோதரன், குலோதரன் ஆகிய இருவரும் நவரத்தின சிம்மாசனத்தினை பெறும் பொருட்டு போரிலே ஈடுபட்டனர். இவர்களது போரை தடுத்து நிறுத்தும் பொருட்டு புத்தர் நாகதீபத்திற்கு தோன்றினார் என்ற செய்தியினை ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையும் இலங்கை வரலாற்றை கூறும் தீபவம்சம், மகாவம்சம் போன்றனவும் குறிப்பிடுகின்றன. (இராசநாயகம்,செ.,1993). இந்த யுத்தம் இடம்பெற்ற இடம் நாகதீபம் என மகாவம்சம் கூறுகின்றது. இதே யுத்தம் மணிபல்லவத்தில் இடம்பெற்றது என மணிமேகலை காப்பியம் கூறுகிறது. மணிமேகலைக் காப்பியம் கூறும் மணிபல்லவம் நயினாதீவாக இருக்கக்கூடும் என்று கருத இடமுண்டு.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது போசனை தூரத்தில் அமைந்திருந்தது என்று மணிமேகலை கூறும் விபரங்கள் நயினாதீவுக்குப் பொருந்துவனவாக உள்ளன. புத்தபெருமான் இங்கு வந்து போரை நிறுத்தி மணியாசனத்தில் அமர்ந்து பஞ்சசீலத்தை போதித்த செய்திபற்றி சிங்கள வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. மணிமேகலை காப்பியம் உருவானது சங்கமருவிய காலப்பகுதியாகும். அதாவது கி.பி மூன்றாம் நூறற்றாண்டளவில் நயினாதீவு மணிபல்லவம் என்று அழைக்கப்பட்டது என்றும் இப்பிராந்தியம் நாக அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது என்று கொள்வது தவறன்று (சிவசாமி,வி.,1990).

சிலப்பதிகாரத்தின் கதாநாயகனான கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாக பிறந்தவள் மணிமேகலை. கோவலனின் மரணத்தின் பின்னர் மாதவி தன் மகளை பௌத்த துறவியாகவே வளர்த்தாள். உதயகுமரன் என்ற சோழ மன்னன் மணிமேகலை மீது காதல் கொள்ளவே மணிமேகலையின் உலக இன்பங்கள் துறந்த வாழ்க்கையை பாதுகாக்க கடல் கடவுள் அவளை அறியாமலேயே மணிபல்லவம் என்ற தீவில் கொண்டு போய் விட்டாள். அத்தீவிலே மணிமேகலை ஒரு புத்த பீடிகை மூலம் தன் முற்பிறப்பினை பற்றி அறிந்தாள். கோமுகி பொய்கையிலிருந்து ஆபுத்திரனின் அமுதசுரபி எனப்படும் அட்டசய பாத்திரத்தை பெற்றாள். இச் செய்திகள் தமிழ் பௌத்த மரபினை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

இருங்கலை நியமத்துக் கலாவல்லியினால் அருளப்பெற்ற அமுதசுரபி என்னும் அள்ள அள்ளக் குறையா அன்னசுரபி கொண்டு ஆபுத்திரன் என்பான் அகிலத்தவரின் உறுபசி போக்கிடும் அரும்பணியினை ஆற்றி வந்தான். அவனது பெருந்தொண்டு கண்டு பொறாமை கொண்டு இந்திரன் பாண்டிநாடெங்கும் மழை பொழியவைத்து வளம் கொழிக்கம் பூமியாக மாறிட வழிசமைத்தான். இதனால் ஆபுத்திரனிடம் உணவை நாடிவருவோர் இலராயினர். தன் கையகத்துள்ள அமுதசுரபி பயனற்றுப் போயிற்றே என்று கலங்கினான். அவ்வேளை சாவக நாட்டில் மழைவளம் குன்றி அங்குள்ளோர் உணவுதேடி அலைந்து திரிந்தனர். அதனை அறிந்த ஆபுத்திரன் சாவக நாட்டினை நோக்கி கப்பலில் சென்றுகொண்டிருந்தவேளை புயல் காரணமாக கப்பல் மணிபல்லவத்தில் கரையொதுங்கியது. புயல் அடங்கியதும் கப்பலில் வந்தோர் ஆபுத்திரன் ஏற்கனவே கப்பலில் ஏறிவிட்டான் என்றெண்ணி மணிபல்லவத்தைவிட்டு நீங்கினர். ஊழ்வினை காரணமாக கப்பலில் ஏறத்தவறிய ஆபுத்திரன் தன்னந் தனியனாய் தன்பணி நிறைவேற உண்டான தடையால் வருந்தி தான் உறங்கிய இடத்துக்கு அருகேயிருந்த கோமுகிப் பொய்கையில் அமுதசுரபியை இட்டு தானும் உண்ணா நோன்பிருந்து மரணமடைந்தான். ஆபுத்திரனதும் அமுதசுரபியினதும் வரலாறும் அதனை மணிமேகலை பெற்ற செய்தியினை மணிமேகலைக் காப்பியம் ஊடாக அறியலாம்.

இத்தகைய குறிப்புக்கள் மூலம் சங்கமருவிய காலப்பகுதியில் நயினாதீவில் பௌத்தமதம் இருந்தது என கருத இடமுண்டு. மணிமேகலை காதையை நினைவூட்டும் வகையில் நயினாதீவில் 5ஆம் வட்டாரத்தில் மணிமேகலை வந்திறங்கியதாக கருதப்படும் இடத்தில மணிமேகலை அரங்கு என்ற மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்னுள்ள குளம் கோமுகி பொய்கையாக இங்குள்ள மக்களால் கருதப்படுகிறது. அமுதசுரபி அன்னதான சபையின் ஊடாக இன, மத, பேதமின்றி தீவினை காணவரும் யாத்திரிகர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு நாள்தோறும் இலவசமாக உணவு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் சிறப்பம்சம் யாதெனில் வருடத்தின் ஒரு நாளிலேனும் இங்கு உணவு வழங்குவது நிறுத்தப்படுவதில்லை. இது மணிமேகலையின் அட்சய பாத்திரத்தினை நினைவுபடுத்துவதாக அமைகிறது.

தற்போது நயினாதீவு இரண்டாம் வட்டாரத்தில் நாகதீபராஜமகா விகாரை அமைந்துள்ளது. ஆரம்பத்தில் பௌத்த கோயில் இருந்த 'சந்தனை' என்னும் காணியில் 1950 ஆம் ஆண்டில் பௌத்தமடம் ஒன்று அமைக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய றன்தோபே சோமசிறி திஸ்ஸ அவர்கள் நயினாதீவின் பிரதான வீதி ஓரத்தில் ஒரு காணியை வாங்கி தற்போதுள்ள விகாரையினை 1939-1940 இல் அமைந்தார். அதன் பின்னர் 1946 ஆம் ஆண்டளவில் வணக்கத்திற்குரிய பிராக்மணவத்தே பண்டித தர்மகீர்த்தி விகாராதிபதியானார். 1947இல் விகாரை கட்டப்பட்டது. 1954ஆம் ஆண்டில் பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்தர் சிலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது வணக்கத்துக்குரிய நவத்தல பதுமகீர்த்தி திஸநாயக்கதேரோ அவர்கள் இவ் விகாரையை பரிபாலித்து வருகிறார். (வேதநாதன்,மா., 2012, பக் : 22,23). நாள்தோறும் பலர் வந்து வழிபடும் பௌத்த வணக்கஸ்தலமாக இவ் விகாரை விளங்குகின்றது. பழைய பௌத்த விகாரை நயினாதீவு முதலாம் வட்டாரத்தில் காணப்படுகின்றது.

தற்போது இங்கு விகாராதிபதியாகக் கடமையாற்றுபவர் நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ மகா நாயக்க தேரோ. இவர் காலி மாவட்டத்தைச் சேர்ந்த அல்பிட்டி கிராமத்தில் அகம் பொலிவீற்றி மெண்டிஸ் முத்து முனித றோசலின் நோனா தம்பதியினருக்கு மகனாக 1961.04.03 ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அல்பிட்டி மகாவித்தியாலத்தில் கற்ற இவர் தனது 12வது வயதில் நயினாதீவிற்கு வருகை தந்தார். சின்னசாமி என்று நயினாதீவு மக்களால் அழைக்கப்படுகின்ற இவர் நயினாதீவில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தி வருகிறார். நயினை மக்களின் தேவைகளை உணர்ந்து அதனைப் பூர்த்தி செய்து வருகிறார். வீடுகள் அமைத்துக் கொடுத்தல் பாலம் போடுதல் பயணப் படகுச்சேவை ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல் தேவையறிந்து பண உதவிகள் செய்தல் போன்றன இதனுள் அடங்கும்.

## நயினாதீவில் இஸ்லாமியக் குடியேற்றங்கள்

நயினாதீவில் வாழ்கின்ற முஸ்லீம் மக்கள், இத்தீவிற்கு முதன் முதலில் எப்பொழுது வந்தார்கள் என்ற காலத்தை சரியாக கணிப்பிட்டு கூறமுடியாவிட்டாலும் காலத்திற்குக் காலம் இஸ்லாமியர் வருகை இங்கு இருந்திருக்கிறது. இலங்கையில் வாழும் பெரும்பான்மையான முஸ்லீம்கள் தம்மை அராபிய வழிவந்த இஸ்லாமியர்களாகவே அடையாளப்படுத்துகின்றனர். ஆனால் நயினாதீவு முஸ்லீம்கள் இதிலிருந்து விலகி இவர்கள் தம்மை கலப்பில்லாத கீழைக்கரை இஸ்லாமியர்கள் என்றே அடையாளப்படுத்துகின்றனர். (அருந்தவராஜா,க.,2012). இலங்கையில் ஆரம்பகால இஸ்லாமியக் குடியேற்றங்கள் துறைமுகங்களை அண்டியே அமைத்துக் கொண்டனர். இதன் பிரதான நோக்கம் வர்த்தகமே. அந்தவகையில் வர்த்தகத்தை நோக்காகக் கொண்டு நயினாதீவிலும் குடியேறியிருக்கலாம்.

ஈழத்தின் புராதன துறைமுகங்களில் ஒன்றாக நயினாதீவு துறைமுகம் விளங்கியதால், நாகர்களின் கதிரமலை அரசு சிறப்புப் பெற்றிருந்த கி.மு 3,4 ஆம் நூற்றாண்டு காலத்தில் அரபு நாட்டிலிருந்து கதிரமலை (இன்றைய கந்தரோடை) அரசர்களான நாகவளைவாணன்,ஈழசேனன் தமது தேவைகளுக்காக அரபு நாடுகளிலிருந்து குதிரை வருவிக்கப்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் இருக்கிறது. அதற்குப் பின்னர் எல்லாளன் காலத்திலும் அராபிய முஸ்லீம்களுடனான குதிரை வர்த்தக தொடர்புகள் நயினாதீவு துறைமுகம் ஊடாக இருந்ததாக கருதப்படுகின்றது. (பாலேந்திரன். ச. ஆ. 2002). ஆனால் அந்தக் காலங்களில் வர்த்தகர்களாக வருபவர்கள் தங்கள் வியாபாரம் முடிந்ததும் நாடு திரும்பி விடுவார்கள். இவர்கள் யாரும் இங்கு தங்கியதாக எந்த சான்றுகளும் இல்லை. இதற்குப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் அதாவது கி.பி 10ஆம் நூற்றாண்டளவில் ஈழத்தை சோழர்கள் ஆண்ட காலத்திலும் இந்த அரேபியருடனான குதிரை வர்த்தகம் தொடர்ந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

ஆரம்க காலங்களில் நெடுந்தீவுடனான போக்குவரத்து தொடர்புகள் நயினாதீவு துறைமுகமூடாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அராபிய வணிகர்களுடன் நெருக்கமான தொடர்பு நெடுந்தீவுக்கு இருந்தமை குறிப்பிடத் தக்கது. போக்குவரத்தினை அடிப்படையாகக் கொண்டு அராபியத் தொடர்பு நயினாதீவில் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தது எனக் கருத இடமுண்டு.

பிற்காலத்தில் தென்னிந்திய இராமநாதபுரம் சேதுபதிகள் இராமேஸ்வரத்துக்கு கீழே உள்ள எட்டு தீவுகள் சார்ந்ததும் மற்றும் ஈழத்தின் பகுதி கிராமங்களை சேர்த்து 69 கிராமங்களில் முத்துக்குளித்தல், சங்குபிடித்தல், மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கும் வந்து தங்கி தொழில் செய்துவிட்டு செல்வதாகவும் தென்னிந்திய குறிப்புக்கள் கூறுகின்றனர். (Abdul Rahim,1973). கி.பி 1794 இல்

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்க்கு வியாபாரப் பிரதிநிதியாக கல்கத்தாவில் பணிபுரிந்தார் மீரா நயினா என்ற பிரமுகர். நாகூர் துறைமுகம் வழியே இலட்சக்கணக்கான சங்குகள் வங்காளத்திற்கு ஏற்றுமதி ஆனதற்கான அரச ஆவணங்கள் உள்ளன. (சாலி,ஜே,எம்.,1981).

ஒல்லாந்தர் ஆளுகைக்குக் கீழ் ஈழத்தின் வட பகுதியும் தீவுகளும், தென்னிந்தியாவும் உட்பட்டு இருந்த காலத்தில் அவர்களும் முத்துக்குளித்தலையும் கடல் பயன் பொருட்கள் வாணிபத்தையும் கடல் வழி கப்பல் வாணிபத்தை மேற்கொண்டார்கள் என்றும் வர்தத்கத்தின் பொருட்டு தென்னிந்தியர்களை அழைத்து வந்தார்கள் என்ற குறிப்புக்கள் காணப்படுகிறது. இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களுள் கீழைக்கரையிலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் அழைத்து வரப்பட்ட இஸ்லாமியர்களும் அடங்குவர். இவ்வாறு ஒல்லாந்தர் கால இறுதிப்பகுதியில் வந்தவர்கள் நயினாதீவிலும் யாழ்ப்பாணத்தின் ஏனைய தீவுகளிலும் குடியேறியிருக்கலாம்.

தீவகத்திலுள்ள இஸ்லாமியர்களை பப்பரவர் சமூகத்துடன் தொடர்புபடுத்தி அண்மைக் காலத்தில் ஆராயப்படுகிறது. சுமார் 2000 வருடங்களுக்கு முன்னரே வட இலங்கையில் ஆபிரிகர்கள் குடியேறியுள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் கிடைத்துள்ளன. யாழ் நகரின் வேலணைத்தீவில், அல்லைப்பிட்டி என்னம் ஊரில் கிணறு வெட்டியபோது சில ஆபிரிக்க சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதன் முகத்தோற்றம் ஆபிரிக்க இனத்தவரின முக அமைப்பினை ஒத்துள்ளன. இவை 2000 வருடம் பழமையானவை. இதன் மூலம் ஆபிரிக்கர்கள் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்துள்ளமை உறுதியாகின்றது. (பாலேந்திரன். க, ச, ஆ.,2002). இதனை உறுதிப்படுத்தும் வகையில் வையாபாடல் என்ற நூலில் ஆபிரிக்க கூலிப் படையினர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன். வையாபாடல் ஆபிரிக்கர்களை பப்பரவர் என்ற பெயரிலேயே அழைக்கிறது. பப்பரவருடன் தொடர்புபட்ட சில இடப்பெயர்கள் இவர்களது இருப்பினை ஞாபகப்படுத்துவனவாக அமைகிறது.

இப்பப்பரவர் சமூகத்தினை இஸ்லாமியரல்லாத சமூகம் என்றே யாழ்ப்பாண வைபவமாலை வேறுபடுத்துகின்றது. அதே போன்று கி.பி 1970ற்குரிய ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம் பற்றிய ஆவணங்களும் இதே கருத்தையே வலியுத்துகிறது. வரலாற்றறிஞர்களில் ஒருவரான ப.புஷ்பரட்ணம் அவர்கள் பப்பரவர்கள் இஸ்லாமிய சமூகத்துடன் தொடாபுபட்டவர்கள் என்றே கூறுகிறார். இவரது கருத்தின்படி தீவகத்திலுள்ள 'பப்பரபிட்டி' நயினாதீவிலுள்ள 'பப்பரவன் சல்லி' போன்ற இடப்பெயர்கள் இஸ்லாமிய சமூகத்துடன் தொடர்புபட்டவையே. இதனை அடிப்படையாக கொண்டு நோக்கின் நயினாதீவுடனான இஸ்லாமிய தொடர்புகள் சுமார் 2000 வருடங்களுக்கு முன்னர் தோன்றியதென்று கூறலாம்.

இவற்றினை வைத்து நோக்கும்போது நயினாதீவுடனான இஸ்லாமியர் தொடர்புகள் நீண்ட காலம் பழமைக்குரியது. தற்காலப் பகுதியில் நயினாதீவில்

வாழும் இஸ்லாமியர்கள் ஒல்லாந்தர் கால இறுதிப் பகுதியிலும் ஆங்கிலேயர் கால ஆரம்பப் பகுதியிலும் வந்து குடியேறியிருக்கலாம். இவர்களின் வம்சங்களே வளர்ந்து இன்று நயினாதீவில் வாழும் முஸ்லீம்கள் என்ற முடிவுக்கு வரலாம்.

நயினாதீவில் வாழும் இஸ்லாமியர்கள் இங்கு வாழும் பெரும்பான்மை சைவ மக்களோடு சமூகமான முறையில் ஒற்றுமையாக இணைந்து சாழ்ந்து வருகின்றார்கள். ஒருவருக்கொருவர் உதவுவதிலும் இன்ப துன்பங்களில் கலந்து கொள்வதிலும் கலை நிகழ்வுகள் விழாக்களில் பங்கு பற்றுவது என சகல வழிகளிலும் தமது பங்கினை வெளிப்படுத்துகின்றனர். இந்திய இராணுவத்தினர் ஈழத்தில் கோரத் தாண்டவம் ஆடிய காலப்பகுதியில் உணவுத்தட்டுப்பாடு நிலவியது. தமது கண்டத்தையும், நஸ்டத்தையும், உயிராபத்தையும் பார்க்காமல் இஸ்லாமியர்கள் படகுகள் மூலம் உணவுப் பொருட்களை பெற்று நயினாதீவு வாழ் மக்களுக்கு வழங்கினர். இதில் தாஷீா என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

1990-1995 காலப்பகுதி யாழ்குடாநாடு முழுவதும் இடப்பெயர்வு இடம்பெற்ற காலப்பகுதியாகும். குடாநாட்டு மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த போதும், இஸ்லாமியர்கள் இங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். நயினாதீவு தவிர்நத ஏனைய தரைவழியாக இணைக்கப்பட்ட தீவுகளிலிருந்த மக்களும் இடம்பெயர்ந்தனர். ஆனால் நயினாதீவு கடற்படையினர் கட்டுப்பாட்டில் இருந்ததனால் இங்குள்ள மக்கள் இடம்பெயரவில்லை. அதே போன்று முஸ்லீம்களும் வெளியேற்றப்படவில்லை என்பது இலங்கையிலுள்ள இஸ்லாமியரது வரலாற்றில் நயினாதீவு இஸ்லாமியருக்கு மட்டுமே உள்ள சிறப்பம்சமாகும்.

**முடிவுரை**

தமிழர் பாரம்பரியத்தின் பிறப்பிடமாகவும் அதன் காப்பிடமாகவும் விளங்கும் தீவகப் பிராந்தியங்கள் இந்து சமயப் பாரம்பரியத்தையும் அதனுடன் சார்ந்த வாழ்வியல் அம்சங்களையும் பேணுவதிலேயே அதிக சிரத்தையுடன் செயற்பட்ட காலத்தில் இஸ்லாமிய பௌத்த மதங்கள் பரவியதைக் காணமுடிகிறது. பல்லின மக்கள் வாழும் சமூகத்தில் முரன்பாடுகளுக்கான வாய்ப்புக்கள் அதிகம் ஆயினும் இங்கு இன முரன்பாடுகள் அற்ற ஒரு சுமூகமான கலாச்சார ஒருங்கிணைப்பினைக் காணலாம். இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படுவதைப் போலன்றி இங்கு மக்களுக்கிடையிலான தொடர்புகள் சகோதரத்துவ முறையில் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். நயினாதீவில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் இந்துக்களுக்கு மட்டுமன்றி அங்கு இஸ்லாமிய மற்றும் பௌத்தர்களுக்கு காவல் தெய்வமாகவே விளங்குகின்றாள். தங்களது மதக்கடமைகளில் மிகவும் இறுக்கமான நிலையினையும் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்காத பண்பினையும் கொண்டவர்கள் இஸ்லாமிய மக்கள் என்பது உலகறிந்த விடயம். இருப்பினும் நயினாதீவில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களில் பலர் தங்களது மதக்கடமைகளை

நிறைவேற்றுகின்ற அதேநேரத்தில் நாகபூசணி அம்மனையும் அவர்கள் வழிபடத் தவறுவதில்லை. அதே போன்று இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்களில் பலர் பௌத்த விகாரைகளில் பணியாற்றுவதை இங்கு காணலாம். இலங்கையின் தற்காலத் தேவையான இன மத ஒருமைப்பாட்டின் தேவையை தீவகத்தில் காணமுடிகிறது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


i. குகபாலன், 2000, தீவகம் பல்துறை நோக்கு, புவியியல்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

ii. சதாசிவம் சேவியர், 1979, சப்த தீவுகள்.

iii. சிவலிங்கராஜ்,எஸ்., 2014, யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தக இல்லம்.

iv. சிற்றம்பலம்,சி,க., 1992, யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

v. சிவசாமி,வி., 1990, தீவகம் ஒரு வரலாற்று நோக்கு, செட்டியார் அச்சகம்.

vi. பாலேந்திரன்,ச,ஆ., 2002, காரைநகர் தொன்மையும் வன்மையும், பாலாவோரை அம்மன் பதிப்பகம் கொழும்பு.

vii. நடராசா,ஆ, சி., 2010 வரலாற்று உலா, சிவத்தமிழ் மானிடவியல் கழகம்.

viii. பாலசுந்தரம்,இ., 2002, ஈழத்து இடப்பெயர் ஆய்வு, ரொறன்ரோ, கனடா.

ix. தனபாக்கியம்,கு., 2001, இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிடர் கலாசாரமும், சென்னை மணிமேகலைப்பிரசுரம்.

x. பொற்தாமரை., 2012, நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம்.

xi. கோமுகி., 1972, மணிபல்லவ கலாமன்றம்.

xii. மணிபல்லவம்., 1990, மணிபல்லவ கலாமன்றம்.

xiii. Abeysekera, C. and Gunasinghe, N. (Ed) (1987) Facets of Ethnicity in Sri Lanka Social Scientists Association, Colombo.

xiv. Sivathamby, K. (1987), "The Sri Lankan Ethnic Crisis and Muslim Tamil Relationships – A Socio Political Review" in Abeysekera, C. and Gunasinghe, N. (Ed.) in Facets of Ethnicity in Sri Lanka, Social Scientist Association, Colombo.

xv. Murdock, G.P. (1957) "World Ethnographic Sample" American Anthropologist Marga Institute (1986) The Muslim Community of Sri Lanka, A Marga Publication, Colombo.

## தொழிநுட்பமாணி பட்டப்படிப்பும் எதிர்கால தொழில்வாய்ப்புகளும்

**சிரேஸ்ட விரிவுரையாளர் தபோதரன்**

**அறிமுகம்**

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 2016ஆம் ஆண்டிலிருந்து தொழில்நுட்பப் பட்டப் படிப்புக்கான கற்கைநெறிகள் ஆரம்பமாகியுள்ளன. இக் கற்கைநெறிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேர்ச்சிபெற்ற தொழினுட்ப வல்லுனர்களுக்கான தேவை அதிகரித்து வருவதை அவதானித்து, அவ்வாறான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சிறந்த, பன்முக ஆற்றல் மிக்க தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குவதையும், தொழில் தருனர்களினால் எதிர்பார்க்கப்படும் பொருத்தமான திறமைகளை மாணவரிடையே வளர்த்துக் கொள்வதையும், தமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தாமே தொழிநுட்பம் சார்ந்த தீர்வுகளைக் காணக் கூடிய தொழிநுட்பவியலாளர்களை உருவாக்குவதையும் தமது அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சையில் தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் (ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் 'C' சித்தியைப் பெற்றிருக்க வேணடும்) சித்தியெய்திய எவரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரத்தில் இந்தப் பாடங்களைக் கற்கலாம். உயர்தரத்தில் தொழிநுட்பப் பிரிவில் கல்வி கற்க விரும்பு எவரும் கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள பாடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்:

| பாடம் 1 | பாடம் 2 | பாடம் 3 |
|---|---|---|
| 1. பொறியியல் தொழில்நுட்பம் | தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | 1. பொருளியல் |
| 2. உயிர் முறைமை தொழில்நுட்பம் | | 2. புவியியல் |
| | | 3. மனைப் பொருளியல் |
| | | 4. ஆங்கில மொழி |
| | | 5. கணக்கியல் |
| | | 6. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் |
| | | 7. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| | | 8. கலை |
| | | 9. வியாபாரக் கற்கைகள் |
| | | 10. விவசாயம் |

மேலே குறிக்கப்பட்டுள்ள அட்டவணையில் பாடம் 1 நிரலில் இருந்து ஒரு பாடத்தையும், பாடம் 2 நிரலில் இருந்து ஒரு பாடத்தையும், பாடம் 3 இல்

இருந்து ஏதாவது ஒரு பாடத்தையும் தேர்வு செய்து மாணவர்கள் தமது க.பொ.த. உயர்தரக் கற்கையை மேற்கொள்ளலாம். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் எவரும் பல்கலைக் கழங்களிலே இந்தத் தொழில்நுட்ப மாணிக் கற்கைநெறிகளை கற்கலாம்.

**பல்கலைக் கழகக் கற்கைநெறிகள்**

இலங்கையிலுள்ள பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் 2016 ஆம் கல்வியாண்டிலிருந்து தொழில்நுட்பமாணிக் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். இவற்றுள், கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனப் பல்கலைக் கழகம், களனிப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், வயபம்ப பல்கலைக் கழகம் என்பவை இந்தக் கற்கை நெறிகளை வெவ்வேறு பாடப்பரப்புகளில் சிறப்புத் தேர்ச்சியுடன், இன்றைய தொழில் தருநர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் பல கவர்ச்சிகரமான கற்கை நெறித் தலைப்புகளில் பட்டப்படிப்புகளை வழங்குகின்றன. மேலும் தொழிநுட்பமாணிக் கற்கை நெறிகளுக்குத் தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களது அறிவை மேம்படுத்தும் முகமாக முதலாம் வருடத்தில் அடிப்படை விஞ்ஞானம், தூய மற்றும் பிரயோக கணிதம், அடிப்படைக் கணனிப் பயிற்சிகள் என்பன வழங்கப்பட்டு அவர்கள் தொழில்நுட்பம் சார்ந்த கற்கை நெறிகளைத் தடையின்றிக் கற்கவும் ஆயத்தப் படுத்தப் படுகின்றார்கள்.

கொழும்புப் பல்கலைக் கழகம் பொறியியல் தொழில்நுட்பக் கற்கைநெறி மாணவர்களுக்கு கருவியாக்கல் மற்றும் தானியங்கியாக்கல் (Instrumentation and Automation) ஆகிய பாடப் பரப்பிலும், உயிர் தொழில்நுட்பக் கற்கைநெறி மாணவர்களுக்கு சூழலியதொழில்நுட்பம் மற்றும் விவசாயம் ஆகிய இரண்டு பாடப் பரப்புகளிலும் பட்டப் படிப்புக் கற்கை நெறிகளை வழங்குகின்றது.

ஸ்ரீ ஜெயவர்த்தனப் பல்கலைக் கழகம் வருடம் தோறும் 300 மாணவர்களை பொறியியல் தொழில் நுட்பம், உயிர் முறைமைத் தொழில் நுட்பம் மற்றும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகிய நான்கு வருட கற்கை நெறிகளுக்கு உள்வாங்குகின்றது. இவர்களுள் பொறியியல் தொழில் நுட்பக் கற்கைநெறிக்கு உள்வாங்கப்படும் மாணவர்கள், சக்தி மற்றும் சூழலியல், மெக்காற்றோனிக்ஸ், கட்டுமானம் மற்றும் கட்டடச் சேவைகள், மற்றும் அகழ்வாரய்ச்சித் தொழில்நுட்பம் ஆகிய நான்கு பாடப் பரப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தமது நான்கு வருடப் படிப்பிற்குத் தேர்வு செய்து தமது பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யலாம். உயிர் முறைமைத் தொழில் நுட்பக் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் உயிரச் செயற்பாட்டுத்தொழில்

நுட்பம் மற்றும் பொலிமர் செயற்பாட்டுத் தொழில் நுட்பம் ஆகிய பாடப் பரப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தமது நான்கு வருடப் படிப்பிற்குத் தேர்வு செய்து தமது பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யலாம். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் செய்னிரலாக்கல் தொழில்நுட்பம், பல்லூடக தொழில்நுட்பம் மற்றும் வலையமைப்புத் தொழிநுட்பம் ஆகிய பாடப் பரப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தமது நான்கு வருடப் படிப்பிற்குத் தேர்வு செய்து தமது பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பொறியியல் தொழில்நுட்ப மாணவர்களுக்கு கட்டுமானத் தொழில்நுட்பம், வாகனப் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் ஆகிய மூன்று துறைகளில் சிறப்புக் கற்கை நெறிகளையும், உயிர் முறைமைத் தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களுக்கு வர்த்தக ரீதியிலான பசுமைப் பண்ணையாக்கல் தொழில்நுட்பம் மற்றும் உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு துறைகளில் சிறப்புக் கற்கை நெறிகளை யும் வழங்குவதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்பமாணிப் பட்டப்படிப்பை வழங்குகின்றது.

களனிப் பல்கலைக்கழகம் தனது தொழில்நுட்பப் பீடத்தை கணிப்பிடல் மற்றும் தொழில்நுட்பப் பீடம் என்று பெயரிட்டுள்ளதுடன், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு பாடப்பரப்புகளில் நான்கு வருட பட்டப்படிப்பை வழங்குகின்றது.

ருகுண பல்கலைக் கழகம், பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைத் தொழில் நுட்பம் மற்றும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் நான்கு வருட கற்கை நெறிகளை வழங்குகின்றது.

தென்கிழக்குப் பல்கலைக் கழகமும்?, றியியல் தொழில் நுட்பம், உயிர் முறைமைத் தொழில் நுட்பம் மற்றும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் நான்கு வருட கற்கை நெறிகளை வழங்குகின்றது.

மேற்குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களில் யாழ்ப்பாணபல்கலைக் கழகமே, பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிர்முறைமைத் தொழில்நுட்பம் ஆகிய துறைகளுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களுக்கு மிகவும் சிறப்பான பட்டப்படிப்புகளை வழங்குகின்றது. மேற்படி இரண்டு கற்கை நெறிகளும் இன்றைய தொழிற்சந்தையில் மிகவும் கேள்வி நிரம்பிய இரு துறைகளாகும்.

**தொழில்நுட்பப் பட்டதாரி மாணவர்களுக்கான தொழில்வாய்ப்புகள்**

தொழில்நுட்பப் பட்டதாரி ஒருவர் "Technologist" என அழைக்கப்படுவார். ஒரு தொழில்நுட்பப் பட்டதாரியானவர் ஏனைய பட்டதாரிகளை விடவும் ஆற்றலிலும், தொழில்சார் தகைமைகளிலும், தொழில்நுட்பத் தேர்ச்சியிலும் கூடியவராக இருப்பார். இப்பட்டதாரிகள், நேரடியான தொழில்நுட்பம்சார் செயன்முறைக் கற்கைகளை மேற்கொண்டவர்களாகவும், தொழில்னுட்பத்தின் பிரயோகத்தை நேரடியாகக் கைக்கொண்டவர்களாகவும் இருப்பதனால், தொழில்சந்தையில் இவர்களுக்கான கேள்வி எப்பொழுதும் அதிகரித்தே காணப்படும். இவர்களுக்கான பாரியளவு வேலைவாய்ப்புக்கள் தொழிற்சாலைகள், வியாபாரம் மற்றும் அரச நிறுவனங்களில் காணப்படும், ஆரம்ப நிலைப்பதவிகளுக்கு உட்புகும் இப்பட்டதாரிகள் பொறியியல் கருத்துருக்களை வடிவமைப்பவர்களாகவும், சாதனங்களை உருவாக்குபவர்களாகவும் தமது தொழிலை ஆரம்பிக்கின்றார்கள். தமது தொழிற்கல்வியை மேலும் விருத்தி செய்பவர்கள், தொழில்சார் நிபுணர்களாகவும், தொழில்நுட்ப ஆலோசகர்களாகவும் நல்ல நிலைக்கு வரக்கூடிய வாய்ப்புக்கள் மிகவும் உண்டு. எதிர்கால நிறுவன நடவடிக்கைகள் யாவும் பசுமை சார்ந்ததாகவும், சூழல் மாசடைவதைக் குறைப்பதாகவும், நிலைபேண்தகு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவனவாக இருப்பதனாலும், இந்தத் தொழில்னுட்பப் பட்டதாரிகளுக்கான எதிர்காலம் மிகவும் பிரகாசமானதாகவே இருக்கும்.

---- முற்றும் ------

## அறிவாளிகளின் சமுகமும் முயற்சிகளும்

பொதுவாக அவன்/ அவள் நல்ல ஐ. கியூ ஆனவன் ஆனவள் என்று கூறுவதைப்பார்க்கின்றோம். அது ஒரு ரியூப் லைற், அவர் கற்பூரம் போன்றவர். என்றெல்லாம் கூறுவதைக் கேட்கிறோம். நீங்கள் ரியூப் லைற்றா? கற்பூரமா? சிந்தித்துப் பாருங்கள் முன்பெல்லாம் சிறுவயதுப் பிள்ளைகளிடம் எங்கள் வீட்டுச்சேவல் உங்கள் வீட்டில் முட்டை இட்டால் அந்த முட்டை யாருக்குரியது என்று கேட்பதுண்டு. ஒருறாத்தல் பஞ்சோ ஒருறாத்தல் இரும்போ பாரம்கூட என்பதும் அண்ணன் தம்பி இருவர் மொத்தம் எத்தனை பேர், ஆட்டுக்கும் சின்னக் குட்டிக்கும் எத்தனை கால்கள். இவ்வாறு பல வினாக்கள் தெரிந்தோ தெரியாமலோ நம்முன்னோர்கள் பல கேள்விகளைக்கேட்டு சிறியவர்களைப் பரீட்சிப்பது வழக்கம் பெரும்பாலும் இவை வாய்மொழி வினாக்களாக உலவி வந்தன. இன்று கேட்பதற்கும் பதிலளிப்பதற்கும் யாருக்குமே நேரமில்லை என்பது ஒருபுறம். இவ்வாறான கேள்விகள் அவசியந்தானா? என்பது மறுபுறமாக இம்முயற்சிகள் அற்றுப்போய்விட்டன. இருப்பினும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக இவ்வாறான சாயல் கொண்ட சில வினாக்கள் வினாவப்படுகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

Intelligence – quick understanding என்று Lifco அகராதி கூறுகிறது. இதிலிருந்து Intelligentsia என்று The dever section of a nation அதாவது அறிவாளிகளின் சமூகம் என்று குறிப்பிடப்படும் அளவிற்கு விதந்துரைக்கப் படுகின்றது. இந்த Intelligence என்பது தான் (I.Q) ஐ. கியூ என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது. IQ நுண்மதி, நுண்ணறிவு, விவேகம், உளத்திறன், உள ஆற்றல், உளச்சார்பு ஆகிய சொற்கள் ஏறத்தாழ ஒரே பொருளில் கையாளப்படுகின்றன. பொதுவாக விவேகம் என்பது சிந்திக்கும் திறன் அல்லது குறிப்பாக கருத்து நிலையில் சிந்திக்கும் திறன் என்றும் கண்டுபிடித்தல், கிரகித்தல், நெறிப்படுத்தல் ஆகிய திறன்கள் என்றும் பலவாறாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். நான்கு அடிப்படை இயல்புகளை; கிரகித்தல், நினைவில் வைத்திருத்தல், பகுப்பாய்வு செய்தல், விளக்குதல் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் என இன்று விளக்கம் அளிக்கப்படுகின்றது.

பொது விவேகம் என்பது குறிப்பிட்ட விடயத்தை மிக விரைவாக விளங்கிக் கொள்ளுதல் (Comprehension), அவ்விடயங்களை நினைவில் வைத்திருத்தல் (Retiention), நினைவில் வைத்திருக்கும் விடயங்களைத் தேவைக்கேற்ப பகுப்பாய்வு செய்தல் (Analysis), இவ்வாறு பகுப்பாய்வு செய்த உண்மைகளை விளக்குதல் (Interpretation) ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய ஓர் ஆற்றல் எனப்படுகின்றது. நுண்ணறிவு என்பது ஒவ்வொருவரினதும் வாழ்வாதாரத்தோடு தொடர்புடையது என்பதும் நுண்ணறிவு தொடர்பான ஆய்வுகள் இன்று பல்வேறு துறைகளிலும்

முக்கியத்துவம் உடையதாக மாறி வருகின்றது என்பதும் மாணவர்களை வகைப்படுத்தி கற்பிக்கவும் உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறவும் தொழில்வாய்ப்புக்களை வழங்கவும் விவேகப் பரீட்சைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் இன்று மனங்கொள்ளப்பட வேண்டியதே.

நுண்ணறிவு என்பது ஒரு பாடமல்ல. இது ஒவ்வொருவரிடையேயும் உற்றறியப்படாத அல்லது அளவிடப்பட முடியாத மாறுபாடு. மதிப்பினைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடர் என்றளவில் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஒரு மனிதனின் இயல்பான ஆற்றல் (Natural ability) பொது விவேகம் ஆகும். அறிவும் (Knoowledge) விவேகமும் (Intelligence) ஒன்றுடன் ஒன்று நேரடித் தொடர்புடைன அல்ல. அறிவாளி விவேகியாக இருக்கலாம். ஆனால் விவேகிகள் அனைவரும் அறிவாளிகள் என வரையறை செய்ய முடியாது. ஒரு சினிமாப்பாடல் வரிகள் கூறுவது போல் புத்திசாலி மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை. வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை. விவேகம் அறிவிலிருந்து வேறுபட்டதொன்றாகும். இவ்வகையில் நுண்ணறிவென்பது ஒருவகை விழிப்புணர்ச்சி என வரையறை செய்யலாம் என்பது முக்கியம் இந்த விழிப்புணர்ச்சி என்ற அம்சத்தின் முக்கியத்துவத்தினால் தான் அநேக தெரிவுகளிலும் இது வலியுறுத்தப்படுகின்றது எனலாம்.

பொது விவேகப் பரீட்சைகள் பல்வேறு திறன்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக பின்வரும் 9 திறன்களை அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.

1. எண்திறன் (Numeral ability)
2. சொற்திறன் (Verbal ability)
3. மொழித்திறன் (Language ability)
4. ஆய்ந்தறிவுத் திறன் (Reasoning ability)
5. தர்க்கத்திறன் (Logical ability)
6. அவதானிப்புத்திறன் (Observation ability)
7. கணிதத்திறன் (Mathamatical ability)
8. கற் திறன் (Visual ability)
9. இரகசிய கணிப்பீட்டுத் திறன் (Code words ability)

மேற்கூறிய 9 திறன்களை அடிப்படையாகக் கொண்டுதான் விவேகப் பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன.

இன்னோர் வகையில் இவை 10 விடயப் பரப்புகளை உள்ளடக்கி இருப்பதையும் பார்க்கிறோம். அவையாவன.

01. மொழித்திறன்
02. கிரகித்தல் மற்றும் நிபந்தனை
03. கோலங்களும் வடிவங்களும்
04. கணிதத் திறன்
05. இரகசியக் குறியீட்டுத் திறன்
06. கூற்றுக்கள்
07. தகவல் ஒழுங்கமைப்பு
08. வரிசை ஒழுங்கமைப்பு
09. வரைபுகள், அட்டவணைகள், பாய்ச்சல்கோட்டுப் படங்கள்.

உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம் என்பது ஒரு தத்துவப்பாடல். உன்னையே நீ அறிவாய் என்றார் சுவாமி விவேகானந்தர். ஒருவன் தன்னையும் தன் சுற்றாடலையும் பற்றிய முழுமையான விழிப்புணர்வைக் கொண்டிருத்தலே விவேகத்திற்கான விளக்கம். பொது விவேகம் என்பதனை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் அல்பிறட் பீனே (Alfred Binet) என்பவராவர். நுண்ணறிவுச் சோதனைகளின் தந்தை எனக் கணிக்கப்படுகின்றார். ஒருவரை அளவிடுவதற்கு முன் அளவீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் பண்புகளின் அல்லது குணங்களின் இயல்புகளைத் தெளிவாக கூறியிருத்தல் வேண்டும் என்றும் சரியான தீர்ப்பும் தர்க்கித்தலும் நுண்ணறிவு நடத்தையின் பிரதான அம்சங்கள் என்றும் கூறினார்.

உளவயது எனும் மிக முக்கியமான எண்ணக்கருவை எடுத்துக்கூறியவர் பீனே. பாடசாலைகளில் சாதாரணமாக வழங்கப்படும் கல்வியினால் உரிய பயனைப் பெறமுடியாத மாணவர்களுக்குப் பொருத்தமான கல்வி முறையைத் தயாரிக்குமாறு 1904 இல் பிரான்ஸ் கல்வி அமைச்சு கேட்டுக்கொண்ட நிலையில் சாதாரணமாக வழங்கும் கல்வியினால் பயன்பெற முடியாத பிள்ளைகள் யார் எனத் தெரிவு செய்யவேண்டிய தேவை பீனேக்கு ஏற்பட்டதால் நுண்ணறிவுப் பரீட்சையை முதன்முதலில் கொண்டு வந்தார். இந்நிலையில் அன்றாட வாழ்வில் பிள்ளைகள் சாதாரணமாக ஈடுபடும் பல செயற்பாடுகளைத் தெரிவுசெய்து கொண்டார். இச்செயற்பாடுகள் பிள்ளைகள் சுதந்திரமாக நடமாடுவதை அவதானித்ததன் மூலமும் பெற்றோரிடமிருந்து பெற்ற தகவல்கள் மூலமும் தெரிவுசெய்யப்பட்டன. இவ்வாறு தெரிவு செய்து கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பல்வேறு வயதில் உள்ள பிள்ளைகட்கு வழங்கப்பட்டு, செயற்பாடுகளின் கடினத்தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டன. ஒரே வயதிலுள்ள 75%மானோருக்கு ஏதாவதொரு செயற்பாட்டை பிழையின்றிச் செய்து முடிக்கக் கூடியதாயிருந்தால் அச்செயற்பாடு அந்த வயது பிள்ளைகட்குப் பொருத்தமான ஓர் உருப்படியாகக் கருதப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு வயதிலும் உள்ள பிள்ளைகட்குப் பொருத்தமாக அமையும் உருப்படிகளை ஒன்று சேர்த்து பல்வேறு வயதிலுமுள்ள பிள்ளைகட்கு

சோதனைகள் தயாரிக்கப்பட்டன.

பொதுவாக ஒரே பிறப்பு வயதில் இருக்கும் பிள்ளைகள் பல்வேறு மட்டங்களில் நுண்ணறிவுச் செயல்களைச் செய்வதற்கான திறன் உள்ளவர்கள் எனலாம். சிலவேளை 8 வயதுள்ள பிள்ளை 9 வயதுப் பிள்ளைகள் அல்லது 10 வயதுப் பிள்ளைகள் சாதாரணமாகச் செய்யும் நுண்ணறிவுச் செயற்பாடுகளைச் செய்வதற்கு முடியுமாயிருக்கும். அதேபோல் 8 வயதுள்ள சில பிள்ளைகள் 8 வயதில் அல்லது 7 வயதில் உள்ள பிள்ளைகள் சாதாரணமாக செய்யும் வேலைகளைக்கூடச் செய்ய முடியாமலிருப்பார்கள். இதன்படி 8 வயதுப் பிள்ளை 10 வயதுள்ள பிள்ளை சாதாரணமாகச் செய்யும் நுண்ணறிவுச் செயல்களைச் செய்யுமாயின் அப்பிள்ளையின் உளவயது 10 எனவும் 8 வயதுப்பிள்ளை 6 வயதுப்பிள்ளை சாதாரணமாகச்செய்யும் நுண்ணறிவுச் செயல்களை செய்யுமாயின் அப்பிள்ளையின் உளவயது 6 எனவும் கூறப்படும். ஒருவரின் நுண்ணறிவுத் திறன்கள் எப்போதும் அவரின் பிறப்பு வயதுக்கு ஏற்பவே இருப்பதில்லை. ஆதலால் ஒருவரின் உளவயது நுண்ணறிவு அளவிலே காட்டும் ஓர் அளவீடாகக் கருதப்படுகிறது.

ஒருவரது உள ஆற்றலை (Mental ability) அளவிடவே நுண்ணறிவுப் பரீட்சைகள் பயன்படுத்தப்படுகின்றன. நீண்ட காலமாக நுண்ணறிவை அளவிட விவேக ஈவு (Intelligence quotiont) எனும் முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இன்று வேறு பல முறைகளும் நுண்ணறிவைப் அளவிடப் பயன்பட்டு வருகின்றன. உளவயதையும் காலவயதையும் அடிப்படையாகக் கொண்டே இக்கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால வயதிலும் பார்க்க உளவயது கூடுதலாக அமையுமாயின் உதாரணமாக கால வயது 10 உள்ள மாணவன் உளவயது 15 மாணவனுக்குரிய வினாத்தாளுக்கு விடையளிக்க வேண்டும். இங்கு விவேக ஈவு கணிப்பிடின்

$$\text{விவேக ஈவு} = \frac{\text{உளவயது}}{\text{கால வயது}} \times \text{பெற்ற புள்ளிகள்}$$

ஒரு மாணவன் பரீட்சையில் 80 புள்ளிகளையும் பெறுவானாயின் அவன் பெறும் உண்மையான புள்ளியானது $\frac{15}{10} \times 80 = 120$ ஆகும். இதன் அடிப்படையில் 100 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் மாணவன் உண்மையான விவேகி எனலாம். இங்கு அவன் 60 புள்ளிகளைப் பரீட்சையில் பெற்றிருப்பின் விவேக ஈவு $= \frac{15}{10} \times 60 = 90$ இங்கு 100 இற்குக் குறைவாகப் பெற்றுள்ளான். சராசரியாக 100 இற்குக் குறைவாகப் பெற்றதனால் விவேகம் குறைவாகக் கருதப்படும். ஆயின் சராசரி ஆற்றலுடையவன் 100 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஒருவரது உள ஆற்றல் பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. பிள்ளை வளர்ப்பு முறை, இனம், கலாசார வேறுபாடுகள், கல்வி, தேகாரோக்கியம், வர்க்கப் பின்னணி, வீட்டிலுள்ள நவீன தொடர்புச் சாதனங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் பாதிப்பு ஏற்படலாம். பொதுவாக விவேகப் பரீட்சைகள் ஒரு வகையில் நேரப் பரீட்சைகளே இப்பரீட்சைகளில் நேரம் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு வினாவும் இலகுவானதாகக் காணப்படலாம். ஆனால் குறிக்கப்பட்ட நேரத்துக்கிடையில் செய்ய முடியாது போகலாம். எனவே எல்லா வகையான வினாக்களுக்கும் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் விடை அளிப்பதன் மூலமே ஒருவரது ஆற்றலை அளவிட முடியும். பொதுவிவேகப் பரீட்சையில் தரப்படும் வினாக்கள் சாதாரண பரீட்சையில் தரப்படும் வினாக்களைப் போன்று செய்முறைக் கணிப்பீடுகளுடன் தொடர்பு உடையனவல்ல. எனவே மிக வேகமாக ஒரு விடயத்தை வாசித்து அவற்றை நினைவில் வைத்து அதனை ஆராய்ந்து விடை அளிக்க வேண்டும். இதற்கு பல்வேறு விவேக நூல்களைக் கற்பதன் மூலமும் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடுவதன் மூலமும் தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

எந்த ஒரு மனிதனும் ஏதோ ஒரு துறையில் ஆற்றல் உடையவனே என்பதில் இக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் இத்தகைய ஒரு துறையில் கொண்டிருக்கும் சிறப்பான ஆற்றலிலும் பார்க்க பல துறைகளில் பொதுவான ஆற்றல் உடையவனே சிறப்பாகக் கருதப்படுகிறான். குறித்த ஒரு துறையில் மட்டும் ஆற்றல் உடையவனின் பெறுபேற்றிலும் பார்க்க எல்லாத் துறைகளிலும் சாதாரண பெறுபேறு உடையவனின் ஆற்றல் கூடுதலாகக் காணப்படும். ஆகையால் எல்லாத் துறைகளிலும் ஆற்றல் உடையவனே உண்மையான விவேகியாக கருதலாம். இன்று சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலும் ஆற்றல் உடையவர்களே தேவைப்படுகின்றனர். (Two in one, Three in one என்பது போல் Many in one முக்கியமாகின்றது) இத்தகைய ஆற்றல் உடையவர்களைக் கண்டறிவதற்கே விவேகப் பரீட்சைகள் துணைபுரிகின்றன. பொது விழிப்பு, பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், நியாயப்படுத்தும் ஆற்றல், கிரகிப்பதற்கும் தொடர்பாடலுக்குமான ஆற்றல் ஆகிய நான்கும் இன்று அவசியமாகின்றன. பொதுவாக உயர்மட்டப் பொது விவேகப் பரீட்சைகளில் மேற்கூறிய நான்கு விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

பொது விழிப்பு என்பது தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக் கருக்களினதும் மெய்ப்பாடுகளினதும் விமர்சன ரீதியான விழிப்பாடும் பொருளாதார, சமூக, கலாசார, சுற்றாடல், சட்ட, விஞ்ஞானத் தொழில் நுணுக்கத் துறைகளில் உள்ள தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பான எண்ணக்கருக்கள் இதில் இடம் பெறும். அடுத்து பிரச்சினை தீர்த்தல் என்பது மூன்று உள் நோக்கங்களை உள்ளடக்கியது. அவையாவன,


பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்தவேண்டிய தகவல்கூறுகளைப் பெறல். அவற்றின் இயல்பொத்த நிலைமைகளைக் காணல்., அதனை மீள அமைத்தல் என்பனவே ஆட்கள், இடங்கள், பொருட்கள், நிகழ்ச்சிகள், எண்கள் போன்றவற்றுக்கிடையிலான விளைவுகளைக் கண்டுபிடிக்கும் ஆற்றலே நியாயிக்கும் ஆற்றல் எனப்படும். கிரகிப்பும் தொடர்பாடலும் பல செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட கருத்துக்களை இனங்காணல், அவற்றைத் திருத்தமாக எடுத்துரைத்தல் ஆகியன இதில் இடம்பெறும்.

பொது விவேகப் பரீட்சைகள் இன்று பல்வேறு தேவைகளைக் கருத்திற்கொண்டு பரவலாக நடைபெறுகின்றன. மாணவர்கள், தொழில்களை நாடும் இளைஞர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் இன்று விவேகப் பரீட்சைகள் கல்வியின் ஓரங்கமாகிவிட்டன. என்றே கூற வேண்டும். இவ்விவேகப் பரீட்சைகள் பகுப்பாய்வுத் திறன், தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன், சொற்திறன், மொழித்திறன் என்பனவற்றை மதிப்பிடுவதால் பல்வேறு தெரிவுகளுக்கும் குறிப்பாக தொழிற்தெரிவு, உயர்கல்வித் தெரிவு, புலமைப் பரிசில் தெரிவு என்பவற்றுக்கு இவை அவசியம். ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல அறிவாளிகளின் சமூகம் எனப்போற்ற இவ்விவேகப் பரீட்சைகள் அவசியமாகின்றன. தொடர்பயிற்சியினாலும் இடைவிடா முயற்சியினலும் விவேகத்தரம் உயர இப்பரீட்சைகளும் அதற்கான செயற்பாடுகளும் உறுதுணை புரியும்.

**உசாவியவை**

1. கற்றலின் விளைவுகளை மதிப்பிடல் - இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
2. கல்வியில் அளவீடும் மதிப்பீடும் - பேராசிரியர். க. சின்னத்தம்பி
3. கல்வி உளவியல் - பேராசிரியர் ச. முத்துலிங்கம்
4. கல்வியில் மனவியல் - பேராசிரியர் எஸ். சந்தானம்.

**திரு. ந. பார்த்தீபன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**வ.தே.க.க.,**
**வவுனியா.**



## பதின்ம வயதினரே
## உங்கள் தோற்றம் உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா?

**Dr. எம்.கே. முருகானந்தன்**
M.B.B.S. (Cey): D.F.M(Col),
F.C.G.P(Col)
குடும்ப மருத்துவர்

"இது மற்றப் பக்கத்தைவிடப் பெரிசாக இருக்கிறது" என்றாள் அவள்.

கலந்தாலோசனை முடிந்து வெளியேற எழுந்தபோதுதான் அப்படிச் சொன்னாள். காய்ச்சல், சளி, இருமலுக்காக மருந்தெடுக்க வந்திருந்தாள் அந்தப் பள்ளி மாணவி.

தனது வலகு கையைச் சுட்டிக் காட்டுவது கண்ணில் பட்டபோது, அடுதத நோயாளி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்படி இருப்பது இயற்கைதானே. அதிகம் உபயோகிக்கும் கை மற்றதைவிட சற்று மொத்தமாக இருக்கும்" என ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்துவிட்டு அடுத்தவர் பிரச்சனையில் மூழ்கினேன்.

"மூக்கு சற்று வளைவாக இருப்பதாக" அதே பெண் அடுத்த முறை வந்து சொன்னபோது சற்று உசாரானேன். அவளது முகத்தில் சற்று வாட்டம் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

சற்று ஆறுதலாகப் பேசியபோது அவளுக்கு தனது தோற்றம் (உடற் பிம்பம் Body image) பற்றிய தற்குறை இருப்பதை உணர்ந்தேன்.

பதின்ம வயதுகளில் உடல் துரிதமாக வளர்கிறது. ஹோர்மோன்கள் சுரக்கின்றன. இதனால் உடல் உறுப்புக்களிலும் தோற்றங்களிலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றங்கள் அனைத்துமே மனதுக்கு பிடித்தவையாக இருக்கும் என எண்ண முடியாது. சில மகிழ வைக்கும். வேறு சில திருப்தி அளிக்காது. சில ஏமாற்றத்தையும் தரலாம்.

பதின்ம பயதுகளில் பாலுணர்வும் அதன் நீட்சியாக எதிர் பாலினரிடம் கவர்ச்சியும் ஈர்ப்பும் ஏற்படுவது இயல்பு.

இதனால் பதின்ம வயதினரிடையே தமது உடற்தோற்றம், அழகு போன்றவை பற்றிய அக்கறையானது பெரும்பாலும் முதன்மைப்படுவது சகசம். எல்லோருக்குமே எல்லாமே பூரண எழிலுடனும் நிறைவாகவும் இருக்க மாட்டாது.

சில குறைகள் இருக்கும் சில நிறைவுகளும் இருக்கவே செய்யும்.

உடற் பிம்பம் (Body image) என்பது ஒருவர் தனது உடலைப் பற்றி என்ன எண்ணுகிறார் என்பதாகும். தான் கவர்ச்சியாக இருக்கிறாரா மற்றவர்கள் தனது தோற்றத்தை விரும்புகிறார்களா என எண்ணுவதாக விளங்கச் சொல்லலாம்.

பதின்ம வயதுகளில் தங்களது உடற்பிம்பம் அல்லது சுயதோற்றம் பற்றிய எண்ணக் கருக்கள் தோன்றுவது அதிகம். சிலர் தங்களது நிறைகளை முன்னிறுத்தி மற்றவர்களிடம் பாராட்டுப் பெற்றுவிடுவர். மாறாக வேறு சிலர் குறைகளையே எண்ணி கவலையில் மூழ்குவதுண்டு.

- ஒரு பக்க மார்பு பெரிசாக எனப் பெண்களுக்கு
- அல்லது ஒரு பக்க விதைப்பை பெரிசாக எனப் பையன்களும் கவலைப்பட்டுக் கொண்டு மருத்துவர்களிடம் வருவது அதிகம்.
- தான் உயரமாக அல்லது குள்ளமாக இருப்பதான உணர்வு.
- தனது நிறம் குறைவாக இருப்பதாக எண்ணல் இப்படிப் பல
- தமது சருமம் மிருதுவாக இல்லை.
- தனது குரல் கரகரக்கிறது.
- தனது பல் சற்று பழுப்பு நிறமாக இருக்கிறது.
- தலைமுடி கொட்டுகிறது.
- நகம் அசிங்கமாக இருக்கிறது.

இவ்வாறெல்லாம் தமது உடல் பற்றிய மறையான சிந்தனைகள் பலவும் பதின்மங்களில் ஏற்படுகின்றன.

இப்படியான எண்ணங்கள் உங்களுக்கும் ஏற்பட்டால் அது பற்றி கவலைப்படவோ வெட்கப்படவோ வேண்டாம். நீங்கள் மட்டுமல்ல நிறையப்பேருக்கு இத்தகைய சிந்தனைகள் வருவதுண்டு.

இதனால் மனப் பதற்றம் (Anxiety) மனவிரக்தி (Depression) ஆகியன ஏற்படக் கூடும்.

தனது உடல் பற்றிய எண்ணங்களுக்கும் (Body image) சுய மதிப்பீடுகளுக்கும் (Self-esteem) நிறையத் தொடர்பிருக்கிறது.

சுயமதிப்பீடு என்பது ஒருவகை மதிப்பீடுதான். நீங்கள் எந்தளவு பெறுமதியானவர் அல்லது முக்கியமானவர் என நீங்களே மதிப்பீடு செய்வதாகும். அத்துடன் மற்றவர்கள் உங்களை எந்தளவு கணக்கில் எடுக்கிறார்கள் என்பதாக நீங்கள் எண்ணுகிறீர்கள் என்பதும் உள்ளடங்கும்.

சுயமதிப்பீடு (self-esteem) என்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் எந்தளவு உங்களைப் பற்றி உயர்வாக எண்ணுகிறீர்களோ அந்தளவுக்கு உங்கள் உள நலமும் உயர்ந்த நிலையில் இருக்கும். அத்துடன் மற்றவர்களோடு நட்பு ஏற்படுத்துவதும் பேணுவதும் சுலபமாக இருக்கும். உறவாடுவதும் மனதிற்கு இனியதாக இருக்கும். ஏனெனில் தங்களைப் பற்றிய உயர்ந்த சுயபிம்பம் கொண்டவர்கள் தங்கள் திறமைகளையும் இயலாமைகளையும் புரிந்திருப்பர்.

தனது உடல் அழகாக இல்லை, அசிங்கமாக இருக்கிறது என எண்ணுபவருக்கு தன்னைப் பற்றிய தாழ்வுணர்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் எனலாம். தாழ்வு மனப்பான்மை என்பதும் இதனோடு தொடர்புடையதே.

முதலில் குறிப்பிட்ட பெண்ணுக்கு தனது உடற்தோற்றம் பற்றிய திருப்தியின்மையானது கவலையுடன் கூடிய மனச்சோர்வாக (anxiety with deprssion) மாறியிருந்தது. அதனால்தான் அவளது முகத்தில் வாட்டம் ஒட்டிக்கொண்டிருந்தது.

அதேபோல ஒவ்வொருவரும் தமது தோற்றம் பற்றிய தாழ்வுமனப்பான்மை (Inferiority complex) உளம் சார்ந்த நோய்களாக மாறாது தடுப்பது அவசியம்.

அதற்கான துடுப்பு அவரவர் கைகளிலேயே இருக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

அப்படியான மறை எண்ணங்கள் வந்தால் நீங்கள் செய்யக் கூடியது என்ன?

எல்லோரிடமும் ஏதாவது சில சிறப்பு அம்சங்கள் கவர்ச்சிகள் அல்லது திறமைகள் இருக்கவே செய்யும். உங்களிடம் நிச்சயமாக பல சிறப்பம்சங்கள் இருக்கவே செய்யும். அவற்றை கண்டறியுங்கள். உங்களிடம் இருக்கும் நீங்கள் அக்கறை எடுக்காத தனிச்சிறப்புகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பியுங்கள்.

நிறம் கறுப்பாக இருந்தாலும் உங்கள் கண்கள் கவர்ச்சியுடையவ்னாக இருக்கலாம்.

உங்கள் சிரிப்பில் உள்ள ஏதோ ஒரு மோகனம் மற்றவர்களை ஈர்க்கலாம்.

அல்லது உங்கள் உரையாடல் திறன் மற்றவர்கள் உங்களோடு மனம் திறந்துபேச வைக்கலாம்.

விளையாட்டு, சமையல், கையெழுத்து.........

இப்படி ஏதாவது ஒரு சிறப்பு அல்லது பல சிறப்புகள் உங்களிடத்தில் மறைந்து கிடக்கலாம். அவற்றைக் கண்டுபிடியுங்கள். கண்டு பிடித்ததை மெருகூட்டுங்கள். மனம் மகிழ்ச்சியில் ஆளும்.

உங்கள் சிறப்புகளையும் கவர்ச்சிகளையும் தனித்துவமான திறமைகளையும் மீள நினைத்தல் நன்று.

உங்கள் சிறப்புகளை நினைத்துப் பார்ப்பதுடன் நின்றுவிடாது அவை பற்றி குறிப்புகள் எழுதி வைப்பது இன்னும் மேலானது.

எழுதத் தவறிவிட்டாலும், தினமும் உங்களை மகிழ்வுறச் செய்த சம்பவங்களை படுக்கைக்கு சென்று தூங்குமுன்னர் இரை மீட்டிப் பார்ப்பதுவும் சுயபிம்பத்தை உயர்த்தக் கூடியதாகும்.

தினமும் குறைந்தது மூன்று மகிழ்வூட்டிய நிகழ்வுகளையாவது நினைவுபடுத்துங்கள்.

உதாரணத்திற்கு நீங்கள் கூறிய விடைக்கு ஆசிரியர் திருப்தி எனச் சொல்லியிருக்கலாம்.

அல்லது உங்களுக்கு தெரிந்திருந்தும், நீங்கள் விடையளிக்க முன் வேறொருவர் அதே விடையைச் சொல்லிப் பாராட்டைப் பெற்றிருக்கக் கூடும். விடை உங்களுக்குத் தெரிந்திருந்ததை உங்களுக்குக் கிடைத்த வெகுமதியாக எண்ணி மகிழுங்கள்.

"அட நான் சொல்லாமல் விட்டுவிட்டேனே" எனக் கவலைப்படுவது கூடவே கூடாது. உங்களது உடை, அல்லது நீங்கள் தயாரித்த உணவு, அல்லது நீங்கள் சொன்ன ஜோக் மற்றவர்களைக் கவர்ந்திருக்கும்.

உங்கள் வெற்றிகளை நினைவுபடுத்துங்கள்.

அவற்றை உங்களுக்குக் கேட்குமாறு வாய்விட்டு உரத்துச் சொல்லுங்கள். அல்லது உங்கள் பெற்றோர், அண்ணன், அக்கா அல்லது உங்களைப் புரிந்து கொண்ட ஒருவருடன் பகிர்ந்து மகிழுங்கள். இவை யாவுமே உங்களைப் பற்றிய உங்கள் சுயபிம்பத்தை உயர்த்த உதவும்.

உங்களுக்குள் ஏதோ ஒரு அழகு ஒளிந்திருக்கிறது. உங்களின் மனது மற்றவர்களைக் கவருகிறது. உங்களுக்கு மட்டுமே தனித்துவமான ஏதோ ஒரு ஆற்றல் அழகு குணம் குடிகொண்டிருக்கிறது.

அதை நினையுங்கள். அதையிட்டுப் பெருமைப்படுங்கள், அதை மேலும் வளர்த்தெடுக்க முயலுங்கள்.

ஒளிமயமான எதிர்காலம் உங்கள் வரவிற்காகக் காத்திருக்கிறது. பயன்படுத்தாது தப்ப விட்டுவிடாதீர்கள்.

# பிள்ளை வளப்படுத்தலில் பெற்றோர் ஆசிரியரின் பங்கு

**Dr. முல்லை பரமேஸ்வரன்**
M.B.B.S. (Ja.....), Pc,Dip in
Psyd,,,,,,,, (Colombo)

பிள்ளைகள் பெரியவர்களாக வளப்படுவதானது ஒரு விதையிலிருந்து மரக்கன்று ஒன்று முளைத்து வளர்ந்து விருத்தி, முதிர்ச்சியடைவதற்கு ஒப்பான ஒரு செயற்பாடாகும். எப்படி ஒரு வளமான ஆரோக்கியமான காலநிலை, சூழல் கன்று வளர்வதையும் விருத்தயடைவதையும் ஊக்குவிக்கின்றதுவோ அது போன்றதே பிள்ளைகளின் வளர்ச்சியினையும் விருத்தியினையும் வளப்படுத்துவதில் பெற்றோர் பெரியோரின் பங்காக அமைகின்றது. தக்க சமயங்களில் தக்க வளப்படுத்தல் கிடைக்காது போகும் பொழுது எப்படி ஒரு மரக்கன்று வாடி நராங்கிப் போகின்றதோ அல்லது பட்டுப்போகின்றதோ, அதுபோன்றே சரியான சமயத்தில் தக்க வளப்படுத்தல் பெறப்படாத பிள்ளைகளும் அற்றுப்போகின்றார்கள்.

எனவே இதிலிருந்து விளங்கிக்கொள்ளமுடியும். ஒருபிள்ளையின் ஆளுமையானது பெற்றோர், ஆசிரியர், சூழ்ந்திருக்கும் பெரியவர்களின் செயற்பாடுகள், மற்றும் பரம்பரைப்பழக்கவழக்க முறைமைகளால் நிர்ணயிக்கப் படுகின்றது.

உளவளர்ச்சியில் குழந்தையின் உடல்கட்டுமானம், அதிகரித்த நெருக்கீடுகள் (மலம், சலம் கழித்தலில் ஏற்படும் சிக்கல்கள்), ஆரோக்கியமான உறவினைப்பேணுதல், வயதிற்கேற்ற செயற்பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்தல் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றது. இதில் ஏற்படும் சிக்கல்கள் - குழந்தையின் ஆரோக்கியமான உளவளர்ச்சியினைப்பாதிக்கும்.

சிறு குழந்தைகளுக்கு உணவூட்டலில் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை அறிமுகப்படுத்தல் (அதிக சீனி, உப்பு தவிர்த்தல்) அளவுக்கதிகமான உணவூட்டலைத் தவிர்த்தல், மலம் - சலம் கழித்தவுடனேயே குழந்தையைத் தூய்மைப்படுத்தல், சூழலில் காணப்படும் தூண்டல்களை அனுபவிக்கவிடல் உதாரணமாக, வேறுபட்ட ஒலிகளை, வெவ்வேறு நேரங்களில் உணர்வித்தல், வெவ்வேறு வண்ணங்களில் காணப்படும் மலர்கள், இலைகள் என்பவற்றை அனுபவிக்கத்தூண்டல், காற்றில் இலைகள் அசைவதை உணரத்தூண்டல், வெப்பதட்பநிலைகளை உணரவைத்தல் வேறுபட்ட வாசனைகளை உணரத்தூண்டல் என்பனவற்றுடன் உடல் அசைவுகள் இயக்கங்களைக் கருத்துள்ளமுறையில் செயற்படுத்துதல். என்பன முக்கியமாக பிறந்தகுழந்தையிலிருந்து இரண்டு வயதுப் பிள்ளைகளுக்கான செயற்பாடுகளாக அமையும். (0 - 2 வயது புலனியக்கப்பருவம்)

இரண்டு தொடக்கம் ஏழு வயதுப்பிள்ளைகளுக்கு மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் மாதிரிச் செயற்பாடுகளை ஆரோக்கியமான முறையில் அறிமுகப்படுத்தல் வேண்டும். இக்காலப்பகுதியில் பிள்ளை தன்னைச் சுற்றியுள்ளவர்களைப்போல் செயற்படுகின்றது. (Symbolic Ploy) ஆசிரியர்போல், தாத்தாபோல், அம்மாபோல், நாய்க்குட்டிபோல், அயலவர்போல் என்று செயற்படுகின்றது. எனவே இக்காலப்பகுதியில் குடும்ப உறுப்பினர்களின் பாங்குகள் பண்புகள் குழந்தையின் உளத்தில் பதிவடைகின்றது.

ஏழு தொடக்கம் பன்னிரண்டு வயதுவரை தூயசிந்தனைப் பருவமாகும். உலகத்திலிருப்பதை அவ்வாறே உணருதல் ஆகும். எனவே இக்காலப்பகுதியில் பிள்ளைகள் பார்க்கும் பேசும் விடயங்களைப்பற்றி அவர்களுடன் உரையாடுதல் சிந்திக்கத்தூண்டுவதற்கு அவசியமாகும்.

பன்னிரண்டு வயதுக்குமேல் ஒவ்வொரு விடயத்தினையும் கருப்பொருள் ஆய்வு செய்யக்கூடிய சிந்தனைவளம் கூடிய பருவமாகும். இக்காலப்பகுதியில் நிறைய விடயங்களை வாசித்து அறிதல், பல செயற்பாடுகளைப்பற்றி விவாதித்தல் என்பன பிள்ளையின் சிந்தனைகள் ஒழுங்குபட வழிவகுக்கும். இதற்கு பெரியவர்கள் தங்கள் தொடர்கற்றற் செயற்பாட்டில் ஈடுபடல் ஆரோக்கியமானதாகும்.

குறிப்பாக 10 வயது முதல் பிள்ளைகள் நண்பர்களாக இணைந்து செயற்பட ஆரம்பிக்கின்றார்கள். ஒத்த தன்மையுடைய நண்பர்கள் ஒன்றாகச் செயற்படுவார்கள் குழுமமாவார்கள். எனவே பெற்றோர் ஆரோக்கியமான நண்பர்குழாமினை உருவாக்குதலில் ஈடுபாடு செலுத்துதல் வேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் ஆரோக்கியமான பிணைப்பிலிருத்தல் வேண்டும். பிள்ளைகள் தங்களுக்குப் பெற்றோருடனிருத்தல் உடல் உள பாதுகாப்பை உணர்த்துவதுடன் பிள்ளைகள் தொழிற்படுவதற்கான (வயதிற்கேற்ப) களத்தினை வழங்கவேண்டும். சிறுகுழந்தை பெற்றோர் தூக்கிக்கொண்டு திரிவதை விரும்பும். அத்துடன் ஒருவயது ஆகும் பொழுது பெற்றோர் முன்னிலையில் உலாவ செயற்படவிரும்பும். மூன்று வயதில் வீட்டுச்சூழலில் தனித்தியங்க விரும்பும். 5 வயதின் பின்னர் வெளிச்சூழலில் சிறிது பொழுதைக் கழிக்க விரும்பும். இதனாலேயே பாடசாலை வயது 6 ஆக அமைந்துள்ளது.

பிள்ளைகள் 16 வயது வரை முற்றிலும் தங்கியிருப்பவர்களாகவே கருதப்படுகிறார்கள். இக்காலகட்டப்பகுதியில் பெற்றோர், ஆசிரியர்கள் பிள்ளைகளின் நெறிப்படுத்துனர்களாக நோக்கப்படுகின்றார்கள். எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் செயற்பாடுகளை அவதானித்து நெறிப்படுத்துதல் பெரும் பொறுப்பாக உணர்தல் வேண்டும்.

குறைபாடுள்ள பிள்ளைகளைப் பின்வரும் விடயங்கள் மூலம் இனங்காணலாம். வளர்ச்சிப் படிகளில் முரண்பாடு, பாடசாலைக்குச் செல்ல மறுத்தல், பாடசாலையில் சராசரிப்புள்ளிகளைவிட மிகக்குறைவான புள்ளி எடுக்கும்பிள்ளைகள், பாடசாலையில் சிறப்பாகச் செயற்பட்டபிள்ளை திடீரெனப் புள்ளிகள் குறைவாகவெடுத்தல் அடிக்கடி தலையிடி, வயிற்றுநோ, உடல் உபாதை சொல்லும் குழந்தைகள், மயங்கிவிழும் பிள்ளைகள், அதிகம் அழும் கோபப்படும் பிள்ளைகள் உடனடியாக உளக்கவனிப்பிற்குட்படுத்தப்படுபவர்களாக இருக்க வேண்டும். உளநலம் சார்ந்த துறையினரின் உதவியை நாடிக் கொள்ளலாம்.

சாதாரணமாக மாணவர்களிடம் காணப்படும் பிரச்சனைகளாக மதுபாவனை, இளவயது - பாலியல் தொடர்புகள், கர்ப்பம், அதிகளவு சினிமா - TV பார்த்தல், பரீட்சை நெருக்கடிநிலை, பெரியவர்களுடன் முரண்படும் நிலை, இச்சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை பிரச்சனைகளிலிருந்து விடுபட உதவிசெய்தல் நல்ல பாதையில் சேர்ந்து பிள்ளைகளுடன் இயங்குதல் பெரியவர்களின் கடமையாகும்.

வளர்ந்தோர் குறிப்பாகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடல் சிறந்த பிள்ளைகளை உருவாக்க வழிவகுக்கும்.

01. குழந்தைகளின் வளர்ச்சிப்படிகளை ஆரோக்கியமான வகையில் ஊக்குவித்தல்.
02. சிறப்பான முன்மாதிரியான செயற்பாட்டாளர்களாயிருத்தல்.
03. சிறந்த சமூக நடத்தைகளான - உதவிசெய்தல், பகிர்ந்து கொள்ளல், ஒத்துழைப்பு வழங்கல் போன்ற செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபடுவதுடன் குழந்தைகளையும் ஈடுபடுத்துதல்.
04. பிள்ளைகளுக்கு அச்சுறுத்தலான சூழலைத் (சண்டை சச்சரவு, கேளிக்கை மிகுமி, ஒழுக்கமற்ற சூழல்) தவிர்த்தல்.
05. உங்களுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருடனும் தனித்தனி 10 நிமிடங்களைச் செலவழித்தல். அனுபவங்களை குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றாகவிருந்து, நேர்த்தியான முறையில் பகிர்ந்து கொள்ளல். இரவு உணவு அருந்தும் நேரம் சேர்ந்திருத்தல், சமூகப்பண்பு, உங்கள் தனித்துவம், எங்கள் கலாசாரம் போன்றவை பற்றிப் பேசுங்கள்.
06. பிள்ளைகளின் நற்பண்புகளை ஊக்குவிப்பதுடன் மீள்வலியுறுத்திப் பாராட்டுதல்.
07. பிள்ளைகளுக்குக் கல்வியறிவினையூட்டல்.
08. பிள்ளைகளின் பலம், பலவீனங்களைப் பெற்றோர் உணர்ந்து கொள்ளலும் அவற்றினைப் பிள்ளைகளுக்கு உணரவைத்தலும்.
09. பிள்ளைகள் தங்கள் வாழ்விற்கான இலக்குகளை நோக்கி நடைபோட வழிப்படுத்துங்கள். உதாரணம் - கற்றற்பருவம், தொழிற்கற்றல், தொழிலில் உறுதிபெறல், திருமணம், பெற்றோர் பொறுப்பேற்றல், முதுமைப்பருவ - ஓய்வு. போன்ற பிரதானமான காலப்பகுதிகளுக்கான இலக்கமைத்தல்.
10. வாழ்க்கைத்திறன்களான - விடயங்களை ஆராய்ந்து சிந்தித்தல், புதுமையாகச் சிந்தித்தல், பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணல், தீர்மானமெடுத்தல், தன்னின்

பலம், பலவீனங்களையுணர்தல், தொடர்பாடல்திறன், ஆளிடைத் தொடர்பினை நல்லமுறையில் பேணல், நெருக்கடிகளை முகம்கொடுத்தலும் திறன்களைப் பெரியவர்கள் வெளிப்படுத்துவதுடன் பிள்ளைகளையும் அவற்றை வளர்ப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஊக்குவித்தல்.

11. பெரியவர்கள் வேலை செய்யும்பொழுது சிறுவர்களையும் உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் பிரதான செயற்பாட்டாளர்களாகவும் நீங்கள் சிறு உதவிபுரிந்து கொடுப்பவர்களாகவும் இருங்கள்.
12. ஒரு kmக்கு மேற்பட்ட தூரங்களுக்கு சிறுவர்க்ளைத்தனியே செல்ல அனுமதியாதீர்கள்.
13. குடும்பத்தில் பெரியமுடிவுகள் எடுக்கும் பொழுது பிள்ளைகளின் கருத்துக்களையும் உள்வாங்குங்கள். உதாரணம் - வேலைமாற்றம், வீடுமாறுதல், பாடசாலை மாற்றம், தொழிலினைத்தீர்மானித்தல், விவாகரத்து, திருமணம், மறுமணம் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக.
14. பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது உடனடியாகவே சுட்டிக்காட்டுவதுடன் அதை உடனேயே சரியான முறையில் அவர்களைக் கொண்டே சீர்செய்வியுங்கள். அதேபோன்று பெரியவர்களும் தவறுகளை உடனுக்குடன் ஏற்றுக்கொள்வதுடன் திருத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.
15. பிள்ளைகளுக்கு Mentor (வழிநடத்துனர்) ஒருவரை இனங்கண்டு அறிமுகப்படுத்துங்கள். பிள்ளை அவரிடம் தனக்கான அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக விருக்கும்.

ஆரோக்கியமற்ற பெற்றோர்களாக பின்வரும் வகுப்பினர் அடங்குவர்.

01. முரண்பாடான பெற்றோர்/ விவாகரத்துப்பெற்றோர்.
02. ஒரு பெற்றோர்.
03. பெற்றோரற்றோர்.
04. தாய் - தந்தை தெரியாத குழந்தைகள்.

மேற்படி நிலையில் காணப்படும் பிள்ளைகள் மனச்சோர்வு, போதைப்பொருள் பாவனை, பாலியல் நடத்தைப் பிறழ்வு, சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடல், கற்றற்குறைபாடு, ஒழுங்கீனமான நடத்தைகள் - உளநோய்கள் போன்றவற்றிற்கு ஆளாகின்றார்கள்.

"தக்கார் தகவிலர் என்பத வரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பது பொய்யாமொழியாகும். எனவே பெரியவர்கள் ஆரோக்கியமான பெற்றோர்களாக இருப்பதுடன் சிறுவர்களுக்குச் சிறந்த மேய்ப்பர்களாக இருப்பதன் மூலம் எமது பிள்ளைகளைச் சிறந்த சிற்பிகளாக உருவாக்க முடியுமென்று உறுதிபடக் கூறுகின்றேன்.

# எனது பார்வையில் வேதாரணியேஸ்வரா

கல்வியின் ஊற்றாக கருதப்படும் வடமராட்சி மண்ணில் சிறந்த ஆரம்பப் பாடசாலையாக விளங்கும் கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவிற்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன்.

"ஐயர் பள்ளிக்கூடம்" என பலராலும் சொல்லப்படும் இப்பாடசாலையானது. கரணவாய் பிரதேசத்தில் குருக்கள் பகுதியில் சிவாச்சாரியார்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக சிறிய பாடசாலையாக தனியாரால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று நூறு ஆண்டுகள் பூர்த்தியடைந்தது. அக்கிராம மக்கள், கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்கள் எல்லோரும் பெருமையுடன் நினைவு கூர்ந்து ஆர்வத்துடன் செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய விழா பாராட்டப்படவேண்டிய அரியதோர் முயற்சியாகும். இவ்வாறு வெளியிடப்படும் மலர்கள் பாடசாலையின் பாரம்பரியம்,வரலாறு என்பவற்றை எக்காலத்திலும் எல்லோராலும் அறிந்து கொள்வதற்கான சான்றாக அமையும்.

இந்த நூறு ஆண்டுகளில் பல அதிபர்கள் ஆசிரியர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி தங்களது பெயரையும் இதன் வரலாற்றோடு ஒன்றித்திருக்கிறார். அந்த வரிசையில் தற்போதைய அதிபருக்கு முன்னதாக 7 ஆண்டுகள் (2005 - 2012) அதிபராக கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது இக் காலத்தில் அர்ப்பணிப்பான ஆசிரியர்களின் சேவையும் பெற்றார்களின் ஒத்துழைப்பும் திணைக்கள அதிகாரிகளின் உதவிகள் போன்றவற்றால் பௌதீக வளர்ச்சியோடு கல்விச் செயற்பாட்டிலும் பல சாதனைகள் படைக்கக்கூடியதாக இருந்தது. இவை எனது சேவைக்காலத்தில் மனநிறைவைத் தருகின்றது. அந்த வரிசையில் தற்போதைய அதிபர் பாலகுமார் அவர்களின் காலத்தில் பாடசாலை நூற்றாண்டு விழா கொண்டாடுவது அவருக்கு இறைவனால் கிடைத்த வரமாக கருதுகின்றேன்.

இந்த நூற்றாண்டுகளில் எத்தனை அறிவாளிகளை துறை சார்ந்த நிபுணர்களை, மத, சமூக ஒழுக்க விழுமியங்களை கொண்ட மக்களை எம் கல்வித்தாய் அறிவூட்டி வழிகாட்டி வளர்த்திருப்பாள். அவ்வாறானவர்களின் பங்களிப்பும் நல்லாசியும் காரணமாகத்தான் இன்று எம் அன்னை உயிர் ஓவியமாக காட்சி தருகிறாள்.

ஆக்கம் என்பது அழிவு என்பதும் பொருளின் நிலை மாற்றம் ஆகும். நூறு ஆண்டுகளில் வளர்ச்சித் தன்மையும் இடையிடையே தளர்ச்சித் தன்மையும் காணப்பட்டது. இது சமூகத்தின் மனநிலை மாற்றங்கள்.

கடந்த 15 வருடங்களாக எனது பார்வையில் அன்னையின் கல்விச் செயற்பாடுகள் இணைப்பாட விதான செயற்பாடுகள், பௌதீக வளங்கள் என்பன படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. மாணவர்களின் எண்ணிக்கையும் கூடிச் செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள் இணைந்த செயற்பாடுதான் உண்மையான காரணமாகும். இதில் ஒருவரின் செயற்பாடு குறைந்தாலும் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும்.

தற்போது நூறாவது ஆண்டு நிறைவிலே பாடசாலைக்கு மண்டபத்துடன் இணைந்து வகுப்பறைகள் கொண்ட இருமாடிக்கட்டிடம் அமைய இருப்பதாக அறிந்தேன். அத்தோடு பாடசாலை சுற்றுமதிலும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இவ்வளங்கள் கிடைப்பது பாடசாலையின் தற்போதைய அதிபர் திரு. பாலகுமார் அவர்களின் ஆளுமை வெளிப்பாடாகும்.

இவ்வாறு பௌதீக வளம் வளர்ச்சியடையும் சம காலத்தில் பாடசாலைச் சூழலிலுள்ள பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளை இப் பாடசாலையில் இணைத்து அன்னையை வளர்க்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் ஒவ்வொரு வகுப்பும் இரண்டு பிரிவுகள் கொண்டதாக வளர்ச்சியடைய வேண்டும்.

இவ்வாறு வளர்ச்சியடைவதன் மூலம் எதிர்காலத்தில் வடமராட்சியின் ஓர் முன்னணிப் பாடசாலையாக வளரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக காலநேரம் பாராது உழைக்கும் அதிபர் ஆசிரியர்கள் உங்களது கால் சாதனைப் பதிவுகள் எதிர்கால அதிபர் ஆசிரியர்களுக்கு உந்து சக்தியாக வழிகாட்டியாக அமைய வேண்டும். அதனால் இப் பாடசாலை இன்னும் பல சாதனைகள் நிலைநாட்டும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்த இலட்சியக் கனவு நனவாகி வடமராட்சி மண்ணின் தனித்துவமான ஒரு ஆரம்பப் பாடசாலையாக விளங்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவாயினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

**திரு. த. ரவீந்திரன்,**
முன்னைநாள் அதிபர்
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.

## அறிமுகம்

நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களாக பதினேழு (17) அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றின் கீழ் 169 இலக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியுள்ளன. இந்த இலக்குகள் 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி நடைமுறைக்கு வருவதுடன் 2030ஆம் ஆண்டிற்குள் வெற்றி கொள்ளப்பட வேண்டியவையாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகள் உலக நாடுகள் எல்லாவற்றினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வெற்றியடைந்து கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன.

## நிலையான அபிவிருத்திக் குறிக்கோள் ஓர் அறிமுகம்
## An Introduction to sustainable developed Goals

பொதுவாக அபிவிருத்தி என்பது வளர்ச்சியும் அதனூடாக ஏற்படுகின்ற மாற்றமும் எனக் குறிப்பிடலாம். ஆரம்பக் காலங்களில் அபிவிருத்தி என்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டு வந்த எண்ணக்கருவானது பிற்காலத்தில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற மேம்பட்ட எண்ணக்கருவாக பதத்தினால் அழைக்கப்படுகிறது. இந்த எண்ணக்கருவானது உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுவதுடன் தொடர்ந்து மாற்றங்கண்டு புதிய பரிமாணத்தில் வளர்ச்சியடைந்து செல்கின்றது. பிரெண்லான்ட் ஆணைக்குழு முதன்முதலில் 1987ம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்திக்கான வரைவிலக்கணத்தினை பின்வருமாறு விபரித்துள்ளது. "எதிர்காலச் சந்ததியினருக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் மக்களின் இன்றைய தேவையினை பூர்த்தி செய்து மற்றும் வறுமையினைக் குறைப்பதற்கான ஓர் நடவடிக்கை என வரையறுத்துள்ளது. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பொருளாதார செய்முறையில் சுற்றாடல் மற்றும் இயற்கை மூல வளங்களைப் பேணுதல் மூலம் நிலைபேறான அபிவிருத்தியினது இலக்கை அடைந்து கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எண்ணக்கருவானது பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் மற்றும் சூழல் என்கின்ற பரிமாணங்களில் கட்டியெழுப்பப் படுகின்றது. பொதுவான நோக்கின் நிலைபேறான அபிவிருத்தியானது பின்வரும் ஐந்து வழிப்படுத்தல் தத்துவங்களினூடாக இயக்கப்படுகின்றது.

1. பேண்தகு பொருளாதாரத்தை அடைதல்
2. நல்ல ஆளுகையை உறுதிப்படுத்தல்
3. சுற்றாடல் வரையறைக்குள் வாழ்தல்
4. உறுதியானதும் ஆரோக்கியமானதுமான சமூகத்தை உருவாக்குதல்.
5. விஞ்ஞான அறிவை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தல்.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது சமூக, பொருளாதார உட்கட்டுமானங்களின் வளர்ச்சியினை முன்னேற்றுவது மட்டுமன்றி முக்கியமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

## நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் 2000ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் எட்டுப் பிரதான இலக்குகள் ஐக்கிய நாடுகள் சபையில் உருவாக்கப்பட்டன. இந்த பிரகடனத்தில் இலங்கையும் கையெழுத்திட்டு குறிப்பிடக்கூடியளவு முன்னேற்றத்தின் குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதில் வெற்றிகண்டது. இந்த வெற்றியைத் தொடர்ந்து 2015ம் ஆண்டளவில் ஐக்கியநாடுகள் சபையானது பலபங்குதாரர்களின் பங்குபற்றலுடன் பதினொரு நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை வரையறை செய்துள்ளது. இந்த குறிக்கோள்களின் கீழ் நூற்றுஅறுபத்தொன்பது (169) இலக்குகளையும் 227 குறிகாட்டிகளையும் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கட்டமைப்பானது.

- வறுமையை முடிவுறுத்தல்
- கோளினைப் பாதுகாத்தல்
- அனைவருக்குமான சுபீட்சத்தை உறுதிப்படுத்தல்

ஆகியவற்றுக்கான செயற்பாட்டுத்திட்டங்களாகக் காணப்படுகின்றது. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளானது பின்வரும் ஐந்து பரந்த விடயங்களில் கவனம் செலுத்துகின்றது.

1. **மக்கள்:** இந்த விடயத்தின் கீழ் வறுமை மற்றும் பட்டினி என்பவற்றினை அவற்றின் அனைத்து வடிவங்களிலும் இல்லாதொழித்தல் மற்றும் எல்லா மக்களும் சாதாரணமான சூழலில் கண்ணியம் மற்றும் சம்மதத்துடன் வாழ்வதனை உறுதி செய்தல்.
2. **கோள்:** இந்த விடயத்தின்கீழ் இயற்கை மூலவளங்களின் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றத்தினை கட்டுப்படுத்துவதன் மூலம் நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் தேவைகளை நிறைவு செய்வதனை உறுதிப்படுத்துவதன் மூலம் கோளினைப் பாதுகாத்தல்.
3. **சுபீட்சம்:** இந்த விடயத்தின் கீழ் அனைத்து மனிதர்களும் சுபீட்சமானதும் நிறைவானதுமான வாழ்க்கையை அனுபவித்தலை உறுதிப்படுத்தல்.
4. **சமாதானம்:** இந்த விடயத்தின் கீழ் பயம் மற்றும் வன்முறையற்ற அமைதியான சமுதாயம் வளர்வதனை உறுதிப்படுத்தல்.

5. **பங்குடமை:** இந்த விடயமானது அனைத்து மக்களும், நாடுகளும் பங்குபற்றுதலுடன் நலிவுற்ற மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு பூகோள ரீதியான பங்குடமையினை உறுதிப்படுத்தி வழிப்படுத்துவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

மேற்குறிப்பிட்ட ஐந்து பிரதான பரப்புக்களின் கீழ் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பின்வரும் பதினேழு (17) குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. எல்லா இடங்களிலும் அனைத்து வடிவங்களிலும் உள்ள வறுமையை ஒழித்தல்.
2. நிலைபேறான விவசாயத்தை முன்னிறுத்தி பசியை ஒழித்து உணவுப்பபாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல்.
3. அனைத்து வயதிலும் நலமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தல்.
4. அனைவரும் உள்ளடங்கிய சமத்துவமான கல்வியையும் வாழ்நாளுக்கான கற்றல் சந்தர்ப்பத்தினையும் உறுதிப்படுத்தல்.
5. பால்நிலைச் சமத்துவத்தினை அடைவதுடன் அனைத்துப் பெண்களையும், சிறுமிகளையும் வலுப்படுத்தல்.
6. நிலைபேறானன முகாமைத்துவத்தினூடாக நீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவருக்கும் உறுதிப்படுத்தல்.
7. அனைவராலும் பெறக்கூடிய நியாயமான நம்பகத்தன்மை கொண்ட நிலைபேறான மற்றும் நவீன சக்தியினை உறுதி செய்தல்.
8. கௌரவமான மற்றும் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் வேலை வாய்ப்பினையும் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினையும் முன்னிறுத்தல்.
9. உறுதியாக உட்கட்டமைப்பினை கட்டியெழுப்புவதுடன் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான தொழில் மையவாக்கத்தினையும் புத்தாக்கத்தினையும் வளர்த்தல்.
10. நாட்டிலுள்ள மற்றும் நாடுகளுக்கு இடையேயுள்ள சமத்துவமின்மையைக் குறைத்தல்.
11. உள்ளடக்கமான பாதுகாப்பான உறுதியான மற்றும் நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் அமைத்தல்.
12. நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி வழிமுறைகளை உறுதி செய்தல்.
13. காலநிலை மாற்றங்களையும், அதன் விளைவுகளையும் எதிர் கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல்
14. நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்புடன் நிலைத்திருக்கும் வகையில் பயன்படுத்துதல்.

15. சூழலியலின் நிலையான பயன்பாட்டினை பாதுகாத்தல், மீளமைத்தல், முன்னிறுத்தல் மற்றும் காடுகளை நிலைபேறான முகாமை செய்வதுடன் பாலைவனமாதல் மற்றும் நிலம் தரமிழத்தலைத் தடுப்பதற்கும் மாற்றுவதற்கும் போராடுவதுடன் உயிர்ப்பல்வகைத்தன்மையின் இழப்பினை நிறுத்தல்.
16. நிலைபேறான அபிவிருத்திக்கு சமாதானமான மற்றும் உள்ளடக்கமான சமூகங்களை ஊக்குவித்தல், அனைவருக்கும் நீதியினை அணுகும் வசதியினை வழங்கல், அனைத்து மட்டங்களிலும் வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகத்தன்மை கொண்ட உள்ளடக்கமான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்.
17. நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய பங்காளித்துவத்தினை உறுதி செய்து நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்தி புத்துயிரளித்தல்.

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பல்வேறு துறைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகவுள்ளன. முக்கியமானவையாக விவசாயம், மீன்பிடி, பொருளாதார உட்கட்டமைப்பு, சமூக உட்கட்டமைப்பு பெண்கள் வலுவூட்டல், மற்றும் சமாதானமும் நல்லிணக்கமும் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான பல்வேறு துறைகள் சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அவையாவன

1. சூழல்சார் சவால்கள்.
2. சமூகம் சார் சவால்கள்.
3. கலாசாரம் சார் சவால்கள்.
4. பொருளாதாரம் சார் சவால்கள்.
5. அரசியல் சார் சவால்கள்.

நிலைபேறான அபிவிருத்தி என்ற எண்ணக்கருவானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு சாதாரண குடிமகனில் இருந்து சர்வதேச நிறுவனங்கள் வரை பல்வேறுபட்ட பங்குதாரர்கள் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை வலியுறுத்தப்படுகின்றது. இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் பங்குபற்றலும் இன்றியமையாததாகவுள்ளது.

**திரு. வி. சொக்கநாதன்**
**உதவித்திட்டமிடல் பணிப்பாளர்**
***பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம்-திட்டமிடல்***
***வடமாகாணம்***

*யா/ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம*

## தொழில் தகமை திறன் ஒன்றை கற்றுக்கொள்
## கவலை உனக்கில்லை ஒப்புக்கொள்

பெற்றார் தமது பிள்ளைகள் நன்றாகக்கற்று கல்வியில் முன்னேற வேண்டும் என பாடசாலைக்கு அனுப்புவதுடன் ஆண்டு ஐந்துவரை பெற்றார் ஓடித்திரிந்து கஸ்டப்பட்டு பாடசாலைப்படிப்புடன் தனியார் கல்வி நிறுவனங்களிலும் இரவு பகல் பாராது உழைக்கிறார்கள். பிள்ளைகளும் இளமையில் கூடுதலானவற்றை கற்று தேறியபோதும் எல்லா மாணவர்களும் கல்வி பொதுதராதரப் பரீட்சைகளில் தமது திறமைகளை வெளிப்படுத்துவதில்லை. க.பொ.த. பரீட்சை முடிவுகளின்படி 9வது இடத்தில் (கடைசி) வடமாகாணம் இருப்பதை காணலாம். க.பொ.த. (சாதாரணம்/ உயர்) தரங்களில் சித்தியடையாதவர்கள் திறமையற்றவர்கள் என கருதிவிடமுடியாது. ஏனெனில் இவர்களில் பலர் தொழில் நிபுணர்களகவும் தொழில் அதிபர்களாகவும் விளங்குகின்றனர். வகுப்பறையில் நன்றாக கல்விகற்க முடியாதவர்கள் செய்முறைக் கல்வியில் அக்கறை காட்டி கற்கின்றார்கள். தொழில் தகைமை பயிற்சி நெறிகளில் செய்முறை ஊடான செயற்பாடுகள் அதிகளவில் உள்ளன. இதனால் ஏற்படும் ஆர்வத்தினால் அவர்களின் மூளையின் கற்றல் பாகம் சிறப்பாக தொழில்படுவதனால் அத்துறையில் நிபுணத்துவம் அடைகிறார்கள். தொடர்ந்து தமது திறமை ஊடாக டிப்ளோமா கற்கைநெறி, தொழில்நுட்ப பட்டப்படிப்புகளை தொடரக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் ஒரு ஆண்டில் பாடசாலைகளில் தரம் ஒன்றில் சராசரியாக மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் மாணவர்கள் இணைத்து கொள்ளப்படுகின்ற அதே வேளை 25,000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கல்வி அனுமதியைப் பெறுகின்றனர். இதேவேளை வருடாந்தம் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் மாணவர்கள் தொழில் தகைமை கல்வி ஊடாக அரச, தனியார் துறை கல்லூரிகள் நிறுனங்களில் பயிற்சி பெற்று தொழில்நுட்ப வல்லுனராக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுள்ளார்கள். பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்காக ஆண்டுக் கணக்காக காத்திருக்கின்றார்கள். தொழில் தகைமை திறன் பெற்ற மாணவர்களில் ஒரு பகுதியினர் உயர்கல்வி கற்று முன்னேறியுள்ளனர். இன்னொரு தொகுதி மாணவர்கள் சுயதொழில் மூலம் வாழ்வாதாரத்தை உயரத்தியுள்ளார்கள்.

வருடாவருடம் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தொழில் திறன் அற்றவர்களாக ஆரம்பிக்கின்றனர். இவர்கள் சரியான வழிகாட்டல் இல்லாமல் விடப்படும் சந்தர்ப்பங்களில் சிலர் தவறான வழிகளில் செல்வதால் வீட்டுக்கும் நாட்டுக்கும் இழப்புகளை ஏற்படுத்துவதுடன் தாமும் சீரழிந்து போகிறார்கள். இவர்களையும் தொழில்திறன் ஊடாக தொழில்துறையில் உள்வாங்குவது இன்றைய தேவையாகும். வேலையற்ற இளைஞர்கள் வேலை தேடி உட்புகுவது தொழில்

உலகில் ஆகும். தொழில் உலகில் உட்புகுவதற்காக பாடசாலை கல்வியறிவு மட்டும் போதாது. தொழில் புரிவதற்கான தொழில்நுட்பத் திறன்கள் இருத்தல் அவசியம். தொழில்நுட்பத்திறன் என்பது மிகவும் பெறுமதியான ஒன்றாகும். தொழில்நுட்பத்திறனையும், அறிவையும் பெற்றுக் கொள்வதற்கு தேசிய தொழில் தகைமை (NVQ – National Vocational Qualification) பயிற்சி நெறிகளைக் கற்க வேண்டும்.

| | உள்நுழை தகைமை | பயிற்சி காலம் | தொழிற்பயிற்சி காலம் | தகைமை சான்றிதழ் | பதவி | தொழில் |
|---|---|---|---|---|---|---|
| 7 | | 2-4 வருடம் | இருவருடம் | பட்டப்படிப்பு | திட்டமிடலாளர் | திட்டமிடலை மேற்கொள்ளல் |
| 6 | G.C.E A/L அல்லது NVQ L6 | 2 வருடம் | 6 மாதம் | உயர்தேசிய டிப்ளோமா | முகாமையாளர் | ஏனையோரை நிர்வகித்தல். |
| 5 | G.C.E A/L அல்லது NVQ L5 | 1 வருடம் | 6 மாதம் | டிப்ளோமா | மேற்பார்வையாளர் | ஏனையோரை மேற்பார்வை செய்தல். |
| 4 | G.C.E A/L அல்லது NVQ-L4 | 6 மாதம் | 6 மாதம் | தேசிய சான்றிதழ் | சுயாதீனமாக செயலாற்றும் கைப்பணியாளர் | சுயாதீனமாக பணியாற்றல் |
| 3 | G.C.E O/L | 4-6 மாதம் | – | தேசிய சான்றிதழ் | குறிப்பிட்ட மட்டமேற்பார்வையின் கீழ் பணியாற்றுவோர். | குறிப்பிட்ட மேற்பார்வையின் கீழ் வேலை செய்தல். |
| 2 | தொழில் திறன் | 4-5 மாதம் | – | சான்றிதழ் | தொடர்ச்சியான மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர் | முழுமையான மேற்பார்வையின் கீழ் வேலை செய்தல் |
| 1 | தொழில் திறன் | 4-5 மாதம் | – | சான்றிதழ் | அடிப்படை ஆரம்ப அறிவுள்ள கைப்பணியாளர் | அடிப்படை ஆரம்பத்திறன் பெறல் |

நன்றாக தொழில் புரிவதற்கு வாழ்க்கை தொழில் திறன்களுடன் உயிர்நாடி திறன்களையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும். தேசிய தொழில் திறன்களையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும். தேசிய தொழில் தகைமை பயிற்சியுடன் தொழிலுடனான பயிற்சி (OJT – on the Job Training) பெற்றிருத்தல் அவசியமாகும். தாய் மொழியுடன் ஆங்கில மொழியை ஓரளவு விளங்கிக் கொள்ளவும் பேசவும் தெரிந்திருத்தல் முக்கியமான விடயமாகும். NVQ மட்டம் 3 மற்றும் 4ற்கு கற்கை நெறிகளுக்கு துணைப்பாட விதானமாக அகிலம் போதிக்கப்படும் டிப்ளோமா உயர் டிப்ளோமா, பட்டப்படிப்பு ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும். தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்கள் மூன்றாம் நிலைக்கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் கணிப்பீடு செய்து வழங்கப்படுகிறது.

**தேசிய தொழில் தகைமையின் முக்கியத்துவம்.**

- தொழில் தகைமை உள்ளவர்கள் தொழில் சந்தையூடாக வேலை வாய்ப்பைப் பெறும் வாய்ப்பு
- அரசியல் அல்லது வேறு செல்வாக்கின்றி வேலையைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- சுய தொழில் வாய்ப்பை உருவாக்கி சிறு கைத்தொழிலில் இருந்து பெரிய கைத்தொழில் சாலைவரை தனியாகவும் கூட்டாகவும் அமைத்து தொழிலதிபர்களாக உருவாகும் வாய்ப்பு உள்ளது.
- அரசாங்கத்தின் பல உதவிகள் மானியங்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.
- வங்கிகள் இலகு கடன் வசதிகளை ஏற்படுத்தி தருகின்றன.
- உயர் கல்வி வாய்ப்பைப் பெறுதல்.

பாடசாலையில் இருந்து இடையில் விலகியோருக்கும் குறைந்த மட்ட பாடசாலைக்கல்வியைக் கற்றோருக்கும் அவர்கள் விரும்பும் துறையில் தரமான பயிற்சியை வழங்கி தேசிய தொழிற்தகைமை மட்டம் 3, 4 ல் சான்றிதழ் வழங்கி தொடர்ந்து இடை உயர் நிலைக்கல்வியை க.பொ.த உயர்தரம் கற்காமலே பெற முடியும். இங்கு ஆசிரியரை மையமாகவோ அல்லது மாணவர்களை மையமாகவோ வைத்து பயிற்சிகள் நடைபெறுவதில்லை.

**திருப்புமுனை**

தேசிய தொழிற்தகைமை பயிற்சி நெறிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 2017 தைமாதம் தொடக்கம் திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக அரசாங்கத்தினால் வரவு செலவுத்திட்டம் 2017ல் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

- அரசாங்கத்தால் கட்டணம் அறவிட்டு நடாத்தப்பட்ட தேசிய தொழிற்தகைமை பயிற்சி நெறிகள் அனைத்தும் நூற்றுக்கு நூறு வீதம் இலவசப் பயிற்சி நெறியாக முன்னெடுக்கப்படும்.
- க.பொ.த சாதாரண தரத்திற்கு சமமாக NVQ மட்டம் 4ற்கும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதற்கமைய அரசாங்க சேவையிலுள்ள தொழில்நுட்பத் துறைகளுக்கு கல்விப் பொதுத் தராதரத்திற்கு (சாதாரணம் / உயர்தரம்) பதிலாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 3, 4 உடையவர்கள் உள்வாங்கப்படுவார்கள் என பொது நிர்வாக சுற்றறிக்கை 28/2016 மூலம் அரசு அறிவித்துள்ளது.

எதிர் வரும் காலங்களில் பாடசாலைகளில் தேசிய தொழிற்தகைமை பாட நெறிகள் மட்டம் 3, 4ற்கு ஆரம்பிக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் செயல் திட்டத்தின் பலாபலன்களை தெற்கிலுள்ள மாணவர்கள் பயன்படுத்துமளவிற்கு வடக்கிலுள்ள மாணவர்கள் பயன்படுத்துவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். போதுமான வழிகாட்டல் சேவையோ அல்லது விழிப்புணர்வு முயற்சிகளோ இங்கு இல்லாமல் இருக்கலாம்.

**பாடநெறித் தெரிவு**

தொழிற்தகைமைப் பயிற்சியை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு திறமை இருக்க வேண்டும். தமது திறமைக்குப் பொருந்தும் வகையில் இளம் பருவத்திலேயே தொழிற்பயிற்சியை தேர்ந்தெடுத்தால் எதிர்காலத்தில் தொழில் நிபுணர்களாக உருவாக முடியும்.

**பயிற்சி நெறிகளை நடாத்தும் நிறுவனங்கள்.**

சான்றிதழ் பயிற்சி நெறிகள் (NVQ மட்டம் 3,4)

1. இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் (VTA) பயிற்சி நிலையங்கள்
2. தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நிலையங்கள் (NAITA)
3. அரச தொழில்நுட்பக் கல்லூரி
4. யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
5. யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்
6. பனை அபிவிருத்தி அதிகார சபை

7. வடமாகாணசபை சுற்றுலா அமைச்சு

**டிப்ளோமா (NVQ மட்டம் 5,6)**

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கல்லூரி (NVQ 5,6)
2. இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (கிளிநொச்சி NVQ 5,6)
3. இலங்கை விவசாயக் கல்லூரி (வவுனியா, குண்டகசாலை) NVQ மட்டம் 6
4. விவசாயக்கல்லூரி (பரந்தன்) (NVQ மட்டம் 5)
5. யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம் (NVQ மட்டம் 5)
6. இலங்கை தொலைத் தொடர்பு நிறுவனத்தின் பயிற்சி நிலையங்கள்.
7. தொழில்நுட்ப கல்லூரியின் பட்டப்படிப்பு

**இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் UNIVOTEC**

உலக தொழிற் சந்தையில் தொழில்தகமை திறனுடைய ஊழியர்களின் கேள்வி அதிகரித்துள்ளது. இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். வழிகாட்டல் கல்வி கருத்தரங்குகள் அரச, தனியார் நிறுவனங்களால் நடாத்தப்படுகிறது. இவற்றில் மாணவர்கள் கலந்து கொள்வதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகப் பெரியோர்கள் ஊக்கப்படுத்தவேண்டும். இளைஞர்கள் ஆர்வமுடன் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால் அவர்களை சமூகப்பிரச்சனைகள் அணுகமாட்டாது. மேலும் வாழ்வாதாரம் உயர்வடைந்து வாழ்க்கை சிறப்புறும்.

**மு.கந்தசாமி**
**விரிவுரையாளர் / பயிற்சிநெறி இணைப்பாளர் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.**

## நூற்றாண்டு விழாக் குழு - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திரு. கை. திருக்குமார், திரு. வி. சொக்கநாதன், திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திரு. பா. பார்த்தீபன், திரு. ச. உதயநாதன்.
நிற்பவர்கள் இடமிருந்து - திருமதி சா. சுதர்சன், திருமதி ஜெ. அச்சுதன், திருமதி க. இராசலிங்கம், செல்வி. கி. மாதங்கி, திருமதி ம.தனராஜ், திருமதி கா. உமாகரன்.

## ஆலோசனைக் குழு



இடமிருந்து – திரு. க. பொன்னையா, திரு. த. பாலகுமார், திரு. த. ரவீந்திரன்

## மலர் வெளியீட்டுக் குழு



இடமிருந்து அமர்ந்திருப்பவர்கள் – திரு. ச. உதயநாதன், திரு. வி. சொக்கநாதன், திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திரு. பா. பார்த்தீபன், சிவஸ்ரீ. வி. செவ்வந்திநாதக் குருக்கள்.

நிற்பவர்கள் இடமிருந்து – செல்வி. கி. மாதங்கி, திரு. கை. திருக்குமார், திரு. க. சுதாகரன், திரு. க. சுதர்சன், திருமதி க. இராசலிங்கம்.

## அதிபர் ஆசிரியர்கள் குழாம் - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திருமதி க. செல்வமாலா, திருமதி உ. விநாயகமூர்த்தி, திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி க. இராசலிங்கம், திருமதி செ. சுரேந்தர்
நிற்பவர்கள் இடமிருந்து - செல்வி. தி. காயத்திரி, திருமதி ம. தன்ராஜ், திருமதி மே. பிரசன்னா, திருமதி ர. கிருஸ்ணகுமார், திருமதி கா. உமாகரன்

## பழைய மாணவர் சங்கம்



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து – திரு. ஸ்ரீ. குகதீப், திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், சிவஸ்ரீ. வி. செவ்வந்திநாதக் குருக்கள், செல்வி. ச. தேவகி.
நிற்பவர்கள் இடமிருந்து – திருமதி ஜெ. அச்சுதன். திருமதி பு. ராகுலன், திரு. வி. சண்முகராசா, திரு. சோ. ராகுலன், திரு. கி. மயூரேசன்

# ஒடுக்கப்பட்டவர்களுக்கான ஓயாத படைப்புக்குரல்

# செ.கதிர்காமநாதன்

***தருமராசா அஜந்தகுமார்*** *B.A(Hons) M.Phil*
*யா/ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்*

யா/கரணவாய் வேதாரணியேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் இக்கல்லூரியில் எழுபதாண்டுகளுக்கு முன்னர் கல்வி கற்ற ஒரு புகழ்பூத்த மாணவனின் நினைவுகளை சிந்தனைகளை நீள நினைந்து நிற்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது. இலங்கை நிர்வாகசேவை அதிகாரியாகவும் ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளராகவும் விளங்கிய செ.கதிர்காமநாதன் என்ற படைப்பாளியைப் பற்றியதே இக்கட்டுரை.

## செ.கதிர்காமநாதன் அறிமுகம்

கரவெட்டி கரணவாயைச் சேர்ந்த தமிழாசிரியர் செல்லையா , பொன்னம்மா தம்பதியினரின் ஏகபுத்திரனாக 8.03.1942 ஆம் ஆண்டு செ.கதிர்காமநாதன் அவர்கள் பிறந்தார். கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியையும் தொடர்ந்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் கற்றுக்கொண்ட இவர் 1961 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழத்துக்குச் சென்றார். தாய்மொழியில் பட்டப்படிப்பை மேற்கொண்ட முதல்தொகுதி மாணவரில் ஒருவராய் 1963 ஆம் ஆண்டு கலைமாணிப் பட்டத்தைப் பெற்று வெளியேறினார். அதன் பிறகு தனியார் கல்விநிலையங்களில் சிறிதுகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்துவந்தார். 1966 ஆம் ஆண்டு வீரகேசரியில் உதவி ஆசிரியராக இணைந்து ஆறு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1968 ஆண்டு இவருடைய முதலாவது சிறுகதைத் தொகுதியான 'கொட்டும் பனி' வெளியாகி 1969 ஆம் ஆண்டு' சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக்கொண்டது. அதே வருடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.திருமதி தம்பிராஜா தம்பதிகளின் மகளான சரோஜா அவர்களைத் திருமணம் செய்தார். 1970 ஆம் ஆண்டு இராகுலன் என்ற மகன் அவர்களுக்குப் பிறந்தான். 1971 ஆம் ஆண்டு மூவர் கதைகள் என்ற செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன் ஆகிய மூவரின் சிறுகதைகள் அடங்கிய தொகுதி வெளிவந்தது. அதே வருடம் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தார். வவுனியாவில் உள்ள கமநலத் திணைக்கள உதவி ஆணையாளராகப் பணிசெய்து கொண்டிருக்கும் போது 'நான் சாக மாட்டேன்' என்ற தொகுதியை வெளிக்கொணரும் பணியிலும் தீவிரமாக இருந்தார். திடீரென ஏற்பட்ட காய்ச்சலால் பீடிக்கப்பட்டு கொழும்பில் உள்ள சுலைமான் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனற்றுப் போக 01.09.1972 ஆம் ஆண்டு கதிர்காமநாதன் காலம் ஆகினார். 'அதிமேதைமைக்கும் அற்ப ஆயுளுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது' என்று மு.தளையசிங்கத்திற்கு சு.ரா எழுதிய குறிப்பு

கதிர்காமநாதனுக்கும் பொருந்திவிடும் அவலம் நிகழ்ந்தது. நான் சாகமாட்டேன் என்று தன்னுடைய படைப்புகளால் கதிர்காமநாதன் சாகாவரம் பெற்றுள்ள உண்மை மறுதலிக்கமுடியாதது. முப்பதுவயதுவரை வாழ்ந்தாலும் 'மூத்த படைப்பாளி' ஒருவருக்குரிய முதிர்ச்சியுடன் தன் ஆளுமையைப் படைப்புகள் வழி சுவடாக்கிச் சென்றுள்ளார் கதிர்காமநாதன்.

செ.கதிர்காமநாதன் அவர்களது பதின்மூன்று வருடகால எழுத்தூழியமானது கரவெட்டி மண்ணின் வாழ்வியலையும் கதைகளையும் தனது உயிர்த்துடிப்புமிக்க மொழியால் பதிகைசெய்ததுடன் அது நம் மக்கள் வாழ்கின்ற இலங்கையையும் தாண்டி உலகெங்கும் வாழ்கின்ற மனிதகுலமனைத்தும் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு எதிர்க்குரல் கொடுப்பதாகவும் அமைந்திருக்கின்றது. இத்தகைய ஒருவரது சொந்தச் சிறுகதைகள், மொழிபெயர்ப்புக்கதைகள், கட்டுரைகள், விமர்சனக்குறிப்புகள், பத்தி எழுத்துக்கள், கவிதை என பன்முகப் படைப்புகளை ஒன்றுதிரட்டி பெருந்திரட்டாய்த் தொகுப்பாக்கம் செய்கின்றபோது எம்முன் உருக்கொண்ட – எண்ணங்கள் -சிந்தனைகள் இங்கு விரிகின்றன.

ஒரு பிரதேசத்தின் மண்வளத்தையும் மனிதர்களையும் உலகளாவிய தன் பார்வையால் வெளிக்கொணர்நத ஒரு படைப்பாளியின் படைப்புகளைத் தொகுக்கும்போது அப்படைப்பாளி வாழ்ந்த காலத்துக்கு உயிர்கொடுக்கின்றோம். வரலாற்றுக்கு வெளிச்சம் பாய்ச்சுகின்றோம். அந்தச் சிந்தனைப் பாதைகளில் பயணம் செய்கின்றோம். போராட்டங்களில் கண்ணீரில் துயரங்களில் மகிழ்ச்சிகளில் பங்குகொள்கின்றோம். 'நான் சாகமாட்டேன்' என்ற அந்தப் படைப்பாளியின் கனவுகளுக்குள் நுழைந்துகொள்கின்றோம். என்றோ மறைந்துபோன அந்தப் படைப்பாளி இரத்தமும் சதையுமாய் புன்னகையுடன் உயிர்த்துடிப்போடு எழுந்து சமூகத்தில் - வரலாற்றில் பயணம் செய்யத் தொடங்குகின்றான்.

## கதிர்காமநாதனின் படைப்புலகம்

செ.கதிர்காமநாதனின் படைப்புலகம் சிறுகதையுடனேயே ஆரம்பிக்கின்றது. 1959 ஆண்டு விக்னேஸ்வராக் கல்லூரிச் சஞ்சிகையான 'கலையொளி'யில் அவரது முதலாவது சிறுகதை வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. எனினும் கலைச்செல்வியில் 1959இல் எழுதிய 'எல்லாம் உனக்காக' என்ற சிறுகதை மூலம் பாடசாலைக் காலத்திலேயே 'ஆரோக்கியமான இலக்கிய உலகில்' பொதுவாசகர்களை சென்றடையும் வகையில் கதிர்காமநாதன் அறிமுகமானார். அவருடைய சிறப்புத்துறை, சிறுகதை என்று கூறுமளவுக்குப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதிக் கவனிப்புப் பெற்றார். இவரது படைப்புகள் தமிழின்பம், வசந்தம், கற்பகம், வசந்தம், அஞ்சலி முதலான சஞ்சிகைகளிலும், வீரகேசரி, மித்திரன், தினகரன் முதலான பத்திரிகைகளிலும் இளங்கதிர், கதைப்பூங்கா போன்ற பல்கலைக்கழக வெளியீடுகளிலும் வெளியாகின. இந்தியாவில் தாமரை, கார்க்கி முதலிய இதழ்களிலும் வெளியாகின.

1966 ஆம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட 'ஒரு கிராமத்துப்பையன் கல்லூரிக்குச் செல்லுகின்றான்' இவரது சிறந்த சிறுகதையென எல்லோராலும் போற்றப்பட்டதோடு யுனெஸ்கோ நிறுவனத்தினால் அறுபதிற்குமேற்பட்ட உலக மொழிகளில் வெளியிடப்படுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஈழத்துச் சிறுகதைகளில் ஒன்றாயமைந்தது. 'வெறும் சோற்றுக்கே வந்தது' சிறுகதை சாகித்திய மண்டலத்தினரால் சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்கெனத் தேர்வு செய்யப்பட்டது. அண்மைக்காலத்தில் கூட செல்வா கனகநாயத்தினால் இவரது சிறுகதை ஒன்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. தன்னுடைய சிறுகதைகள் மொழிபெயர்க்கப்படும் தகுதியுடையனவாகப் படைத்ததோடு அமையாது இந்திய எழுத்தாளர்களினதும் மேலைத்தேச எழுத்தாளர்களினதும் படைப்புகளை தமிழில் திறம்பட மொழிபெயர்த்து வெளியிட்ட ஒருவராகவும் விளங்கினார். வீரகேசரியில் பிறமொழிக்கதைகள் என்று வாராவாரம் வெளியிடும் கைங்கரியத்தை நிறைவேற்றினார். அஞ்சலி முதலிய இதழ்களிலும் இவருடைய மொழிபெயர்ப்புக்கதைகள் வெளிவந்தன.

விக்னேஸ்வராக் கல்லூரியில் கற்கின்ற காலத்திலே மாணவர்கள் வெளியிட்ட 'கலையொளி' சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கியவர். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே மாணவனாக இருந்த போது அங்கு வெளியிடப்பட்ட 'இளங்கதிர்' ஆசிரியராகவும் விளங்கியவர். பல்கலைக்கழகக் கல்வியை நிறைவுசெய்ததும் வீரகேசரி – மித்திரனில் உதவி ஆசிரியராக விளங்கி ஆரோக்கியமான படைப்புகளுக்கு பின்புலமாயமைந்தவர். அஞ்சலி என்ற இதழின் காத்திரத்தன்மைக்குப் பின்புலமாக அமைந்தவர். கதிர்காமநாதன் ஓர் இதழாசியராகத் தன் வாழ்நாள் முழுவதும் ஏதோவொரு வகையில் இலக்கியப் பணிசெய்தவராகக் காணப்படுகின்றார்.

வீரகேசரியில் பணிசெய்த காலத்தில் ''சேனா' என்ற பெயரோடு பல கட்டுரைகளையும் சிலவேளைகளில் தன்சொந்தப் பெயரையும் பெய்து 'உரைகல்' என்ற நூல் அறிமுக –விமர்சனப் பகுதியிலும் தொடர்ந்து எழுதிவந்திருக்கின்றார். சங்க இலக்கியத்தில் இருந்து நவீன இலக்கியம் வரை நிறைந்த வாசிப்பு உடையவராகவும் இலக்கியத்தின் சகல வடிவங்களிலும் விருப்புக்கொண்டவராகவும் இவர் விளங்கியதை இவரது எழுத்துக்கள் மெய்ப்பிக்கின்றன. 'கதிர்' என்ற பெயரில் இளங்கதிரில் இவரது கவிதை ஒன்று வெளிவந்திருந்தது. 'தமிழ் எங்கள் ஆயுதம்' என்ற கவிதைத் தொகுப்பிலும் இவரது கவிதை ஒன்று இடம்பெற்றதாக அறியக் கிடைக்கின்றது.

இவரது இலக்கிய முயற்சிகள் உச்சம் பெற்ற காலமாக வீரகேசரிக்காலத்தையே குறிப்பிடலாம். அங்கிருக்கும்போதே உன்னதமான படைப்புகளை ஆக்கியிருக்கின்றார். 'கோடைநதி' என்ற தொடர்கதையை மித்திரனில் எழுதியிருக்கிறார். அத்தொடரைக் கண்டுபிடித்து பதிப்புச் செய்யும் முயற்சியை எமது எமது கலாசாரப்பேரவை அடுத்து எண்ணியுள்ளது.

இவரது படைப்புகளை விட முக்கியமான ஒன்று இவருக்கு இருக்கிறது. உறுதியான கோட்பாட்டுத்தளம் ஒன்றைத் தழுவி, தெளிவான சிந்தனைகளோடு படைப்பிலக்கிய முயற்சியில் ஈடுபட்டவர் என்பதே அதுவாகும். கோட்பாட்டுத் தெளிவும், பிரசாரவாடை இல்லாமல் அதை வெளிப்படுத்தும் அழகியல் கலைநுட்பங்களும் இவரது ஆளுமையை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. அத்துடன் 'மண்ணின் மணம் குன்றாமல் இலக்கியம் படைக்கமுயலும் எழுத்தாளர்கள் தங்கள் வட்டாரவழக்குகளையும் சொற்களையும் இரண்டறக் கலக்கவிடுவது இயல்புதான்' என்று தன்னுடைய கட்டுரை ஒன்றில் கூறியதுபோலவேதனது மண் மணம் கமழ ஆக்கப்பெற்ற இவரது எழுத்துக்கள் மண்வாசனையை எப்போதும் தன்னோடு வைத்திருக்கும் சிறப்புப் பெற்றவையாக உள்ளன.

## செ.கதிர்காமநாதனின் சிறுகதைகள்

செ.கதிர்காமநாதனின் பிரதானமான முகம் சிறுகதைதான். 1959 இல் கலைச் செல்வியில் வெளிவந்த 'எல்லாம் உனக்காக' சிறுகதை முதல் இறப்பதற்கு ஒருவாரம் முன்னர் வீரகேசரியில் எழுதிய 'வியட்நாம் உனது தேவதைகளின் தேவ வாக்கு' என்ற சிறுகதைவரை பல சிறுகதைகளை எழுதியிருந்தார். 1968 இல் வெளிவந்த **'கொட்டும்பனி'** தொகுதியில் கொட்டும் பனி, யாழ்ப்பாணம் இங்கே வாழ்கிறது, நிந்தனை, அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கட்டும், சில்லென்று பூத்த...,ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்லுகின்றான்.அதனாலென்ன பெருமூச்சுத்தானே,அழுவதற்கும் சிரிப்பதற்கும்,குளிர் சுவாத்தியம் ஒத்துவராது, சோழகம் ஆகிய பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. 1971 இல் வெளிவந்த **மூவர் கதைகள்** தொகுதியில் வெறும் சோற்றுக்கே வந்தது, ஒரே குடிசைகளைச் சேர்ந்தவர்கள்,தாய்மொழி மூலம் ஆகிய மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது இறப்பின் பின்னர் 1972 நவம்பர் மாதம் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்த **'நான் சாக மாட்டேன்'** தொகுதியில், ஏற்கெனவே இவரது தொகுதிகளில் இடம்பெற்ற ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்லுகின்றான், வெறும் சோற்றுக்கே வந்தது ஆகிய கதைகளோடு இவரது இறுதிச்சிறுகதையான 'வியட்நாம் உனது தேவதைகளின் தேவவாக்கு' ஆகியன இடம்பெற்றிருந்தது. இவரது சிறுகதைகளில் பதினான்கு சிறுகதைகளே தொகுதியில் இடம்பெற்றிருக்கின்றன. தொகுதிகளில் இடம்பெறாத கலைச்செல்வியில்(1959) வெளிவந்த எல்லாம் உனக்காக, பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்த கதைப்பூங்காவில் வெளிவந்த எட்டுமாதங்கள், இளங்கதிரில் வெளிவந்த நெஞ்சில் நஞ்சு ஆகிய மூன்று சிறுகதைகள் இத்தொகுதியிலே இடம்பெறுகின்றன.

கதிர்காமநாதன் எழுத வேண்டும் என்பதற்காக எழுதியவரல்லர். அவர் தனக்குரிய கோட்பாட்டுத்தளத்தில் உறுதியாக நின்று கலைநேர்த்தி குன்றாமல் எழுதியவராகக் காணப்படுகின்றார்.

'கலையும் இலக்கியமும் மக்களுக்காக என்ற கோட்பாட்டை நான் தழுவிநிற்பவன். ஒடுக்கப்பட்ட மக்களது வாழ்க்கையின் பிரதிபலிப்புகளும் விளைவுகளுமே என்

கதைகளின் உள்ளடக்கம். வாழ்க்கை, தாங்கொணாத – அழுத்திக் கொல்கிற – சுமையாக ஏன் இருக்கிறதென்பதைத் துருவி ஆராயும் உளப்பாங்கே எனது கதைகளின் ஊற்றுக்கண் ஆதலின் கலைக்காகவும், கலை அழகுக்காகவும் எப்படியும் எழுதலாம் என்ற குழம்பிய இலக்கியக் கோட்பாடுகளின் அடியொற்றி வாழ்க்கைக்கு முரணான கற்பனைககளைத் தழுவிநிற்கும் சமத்காரம் எனது கதைகளுக்குக் கிடையா. 1959 -இல் எழுத ஆரம்பித்த நான், எனது முதலாவது 'சவலை'க் கதையிற்கூட இப்பரிணாமத்தைப் பிரதிபலிக்கத் தவறவில்லை.' என்று பிரகடனம் செய்தவர்.

தனது இலக்கியக் கொள்கையை முதலாவது கதையில் இருந்து பின்பற்றியவர் என்பது அவரது தெளிவைக் காட்டுகின்றது. இன்றைய இளம் எழுத்தாளர்கள் கற்றுக்கொள்வதற்கு ஏராளமான பாடங்கள் இவரிடம் இருக்கின்றன. முற்போக்குத் தளத்தில் நின்ற பலரின் கதைகளில் பிரசாரவாடை அதிகம் அடித்தபோது தனது கருத்தைக் கலைநேர்த்தி குன்றாமல் பதிகை செய்த ஆளுமையாக இவர் விளங்கினார். இவரது சிறுகதைகள் உத்தி என்று வெளித்தெரியாத நுண் உத்திகளால் ஆக்கப்பட்டவை. அது மட்டுமன்றி இவரது கதைகளின் தலைப்புகள் எளிதில் மறக்கமுடியாதவையாக விளங்குகின்றன. இவரது சிறுகதைகளின் இன்னொரு சிறப்பு கரவெட்டியின் உயிரோட்டமிக்க பேச்சுமொழியை தனது கதைகளில் பதிவு செய்தமை ஆகும். ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்லுகின்றான், வெறும் சோற்றுக்கே வந்தது என்ற சிறுகதைகளின் பேச்சுமொழியே கதைகளை இன்னும் ஆழப்படுத்தி மனதைக் கீறி உள்நுழைந்து துருத்தி நிற்கின்றன. கரவெட்டியின் ஒரு காலத்து பேச்சுவழக்கின் கோவையாகவும் இவரது சிறுகதைகளைக் குறிப்பிடலாம்.

இவர் எழுதுவதோடு நிற்காமல் முற்போக்குப் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட சமூகப்போராளியாகவும் விளங்கினார். எழுத்தையும் வாழ்வையும் பிரிக்கமுடியாத கலைஞனாக விளங்கினார். தான்சார்ந்தவர்களுடன் ஒன்றுபட்டு ஆக்கமுயற்சிகளில் ஈடுபட்டார். இதன் சாட்சியாகவே 'மூவர்கதைகள்' விளங்குகின்றது.

'முற்போக்கான அரசியல் நம்பிக்கை இம்மூவருக்கும் குறைந்தபட்ச ஒருமைப்பாட்டை விளங்குகின்றது. அதன் விளைவாக எதிர்காலத்தில் உறுதியான நம்பிக்கையும், சிறப்பான எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டதோடமையாது அதை உருவாக்கும் பணியில் - போராட்டத்தில் எழுத்தாளனுக்கும் பங்குண்டு என்ற உறுதிப்பாடும் , அத்தகைய போராட்டம் விஞ்ஞானபூர்வமான தத்துவத்தையும் வெகுஜனங்களின் பங்குபற்றலையும் நிறைவாகப் பெற்றிருக்கவேண்டும் என்ற உணர்வும் எமக்குப் பொதுவான நம்பிக்கையாயிருக்கின்றது. இந்த நம்பிக்கை எமக்குப் பொதுவாக இருப்பதால், வெவ்வேறு அளவில் இக்கதைகளிலும் பிரதிபலிக்கின்றது. தனிப்பட்டவர்களின் ஆளுமைக்கேற்பவும், அனுபவம், ஆற்றல், கல்வி, பயிற்சி என்பவற்றிற்கியையவும் இந்த நம்பிக்கை பெறும் அழுத்தம் வேறுபடக்கூடும். ஆனால் மாற்றம் வேண்டும் என்ற எண்ணம் ஏறத்தாழ எல்லாக்கதைகளிலும் இழையோடுகிறது என்பதில் தவறு இருக்காது'

ஆனால் கருத்து வெளிப்பாட்டிற்காக சோரம் போகும் படைப்புகளை ஆக்கிப் பெயர் பெறும் ஒருவராக அவர் விளங்கவில்லை. 'ஆத்ம திருப்தியளிக்கும் ஆக்கங்களையே படைக்கவேண்டுமெனச் சத்திய விரதம் பூண்டு' நம்பிக்கையோடு எழுதியவர் என்பதால் தனது படைப்புக்களின் செம்மையாக்கத்தில் கலைநுட்பத்திலும் மொழியிலும் அதீத அக்கறை காட்டினார் என்பது முக்கியமானது. இதற்குச் சான்றாக இளங்கதிரில் வெளிவந்த 'சோழகம்' என்ற சிறுகதையைக் குறிப்பிடலாம். 'கொட்டும்பனி' தொகுதியில் இச்சிறுகதை வெளிவந்தபோது ஏராளமான செம்மைப்படுத்தல்களுடன் வெளிவந்ததைக் குறிப்பிடலாம். படைப்பாளியின் பொறுப்புணர்வை இதன் மூலம் இனங்கண்டு கொள்ளமுடிகின்றது

## கதிர்காமநாதனின் மொழிபெயர்ப்புகள்

செ.கதிர்காமநாதன் புனைகதைகளை மொழிபெயர்ப்பதில் மிகுந்த ஆற்றல் பொருந்தியவராக விளங்கினார். கிருஷன் சந்தரின் நான் சாகமாட்டேன் என்ற குறுநாவல், முகமது பஷீரின் பூவன்பழம் நெடுங்கதை, கிருஷன் சந்தரின் செம்மலர்கள், ஆசியா விழித்துவிட்டது, பிறேம்சந்தின் கோயில்கதவுகள், முல்கராஜ் ஆனந்தின் ஒரு காயமடைந்த புறா, நோரா அடமியனின் மகன், மாபஸானின் ஓடலி, மினாயில் ஷோலகோவ் இன் குதிரைக்குட்டி, போலந்து எழுத்தாளர் ஜென்கோ ஊஜீனோவின் மாஜி ஆசிரியர், யங்கா பிரிலின் என் அன்னை, 'ங்மீ வாங்குவானின் ஒருநாள் பிரதியீடு முதலிய சிறுகதைகளையும் மொழிபெயர்த்துள்ளார். இவையே எமக்குக் கிடைக்கப்பெற்ற மொழிபெயர்ப்புகள்.

இவரால் மொழிபெயர்க்கப்பெற்ற குறுநாவல், நெடுங்கதை, சிறுகதைகள் இவரது கொள்கைகளுக்கு சார்பானவைகளாகவும் ஒரே குரல் உடையனவாகவும் விளங்குவதை அவதானிக்கலாம். இவை இவரது தீவிர வாசிப்பினையும், நல்ல படைப்புகளை இனங்காணும் ஆற்றலையும், அவற்றை இலகுவாக வெளிப்படுத்தும் மொழிபெயர்ப்புத் தாடனத்தையும் காட்டுகின்றன. சில சிறுகதைகளைத் தவிர பெரும்பாலும் இவரது மொழிபெயர்ப்புக்கதைகளைப் படிக்கும் போது மொழிபெயர்ப்பு என்று உணரத்தோன்றாத வகையில் மொழியும் களமும் பாத்திரங்களும் வாலாயப்பட்டு இருப்பதைக் காணலாம். இவரது பிறமொழிக் கதைகளின் பயில்வும் மொழிபெயர்ப்பு முயற்சியும் சேர்ந்தே 'வியட்நாம் உனது தேவதைகளின் தேவவாக்கு' என்ற சிறுகதை எழுதப்பெற்றது.

'சர்வதேச ரீதியில் மனித குலமனைத்தையும் அதன் துயரத்தையும் இக்கதை பகிர்ந்துகொள்ளத் துடிக்கிறது. இன்றைய காலகட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மீது தாக்குவதை மனிதகுல நேசமுள்ளவர்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் அல்லவா? நீங்களும் நீதிதேவதையின் பக்கமே நிற்பீர்கள்.

வெளிநாட்டுப் பிரச்சினையை அலசும் முதல் தமிழ்க்கதையாக (ஈழத்தில்) இது இருக்கக்கூடும்'

என்று தன் இறுதிச் சிறுகதையை வீரகேசரிக்கு அனுப்பிய போது செ.க கடிதம் எழுதி இருந்தார். வெளிநாட்டுப் பிரச்சினையை அந்தச் சூழமைவில் உயிரோட்டமாக இவரால் எழுத முடிந்தமைக்கு இவரது வாசிப்பும் மொழிபெயர்ப்பு முயற்சிகளும் காரணமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது ஆகும். கரவெட்டிக்களத்தில் இருந்து வியட்நாம் வரை அடக்குமுறைகள் எங்கெல்லாம் என்னவடித்தில் நிகழ்ந்தாலும் அதற்காகக் குரல் கொடுக்கின்ற மனிதகுல நேசமுள்ளவராய் இவர் விளங்கியிருந்தார்.

**ஏனைய படைப்புகள்**

சிறுகதைகள், மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்பவற்றைத் தவிர இவர் எழுதிய கட்டுரைகள், பத்திகள், விமர்சனங்கள், அறிமுகங்கள் இவருடைய வாசிப்பின் தேர்வு, இலக்கியக்கொள்கை, ஆளுமை என்பவற்றைப் புலப்படுத்துவனவாக உள்ளன. வீரகேசரியிலேயே இவைபெரும்பாலும் வெளிவந்திருந்தன. இளங்கதிர், அஞ்சலி என்பவற்றிலும் எழுதியுள்ளார்.

தன் படைப்புநிலைப்பாட்டை தனது கட்டுரைகள் வழியாக வெளிப்படுத்தும் தன்மை இவரிடம் காணப்பட்டது. சிறுகதைகளில் வட்டாரவழக்கை நயம்படக் கையாண்ட காரணத்தை இலங்கையிலும் இருக்கிறார்கள் என்ற கட்டுரையிலே கூறுகின்றார்.

தான் சார்ந்த இலக்கிய அபிமானத்தை இலங்கையிலும் இருக்கிறார்கள், சுதேசிகள் படைத்த விதேசி இலக்கியம்என்ற கட்டுரைகளில் செ.க வெளிப்படுத்துகின்றார். இளங்கதிர் ஆசிரியர் குறிப்பை 'நமக்குள்ளே பல கதைகள்' தலைப்பிட்டு ஈழத்துக்குழுமனப்பான்மைக்கு சாவுமணி அடிக்கவும் ஆராக்கியமான இதழ்களின் எழுகைக்கு வழிகோலவும் தேசிய உணர்வுமிக்க சமூகப் படைப்புகளை ஆக்குவதற்கும் அறைகூவல் விடுப்பதை மிகுந்த உணர்வுபூர்வமாக எழுதியிருந்தார்.

'நமது பேனாவலியை மற்றவர்கள் உணர்வைக்கவேண்டுமானால் 'நமது' என்ற தேசிய உணர்வு தோன்றவேண்டும்! அதன் அத்திவாரத்திலே, நம்மிடையே இருக்கும் கோஷ்டிப் பிரிவினைகள் மாறவேண்டும்...! சமூகச் சித்திரங்களை – அதன் ஏற்றத்தாழ்வுகளை மூலை முடுக்கெங்கும் புகுந்து சுக்குநூறாகப் பிரித்துச் சுட்டிக்காட்டும் வன்மை படைத்தவர்களாக சமூக சமத்துவ நோக்குடையவர்களாக – உண்மையான சமூகச் சிற்பிகளாக மாறவேண்டும்.

நாவல்கள் பற்றிய கருத்துக்களை ஆர்.கே.நாராயணனின் வழிகாட்டிக்கு அமெரிக்கத் தயாரிப்பாளரின் 'சத்திரசிகிச்சை' , ஹிந்தி இலக்கியத்தில் இருள் விலகியது, நகைச்சுவையும் நல்ல நாவல் ஆகலாம், யுத்த பின்னணியும் தமிழ்நாவல்களும் நந்திக்கடல், ஒரு நோக்கு ஆகிய கட்டுரைகளிலும் பத்தியிலும் விளக்கிச் சொல்லுகின்றார். இதில் எல்லாம் இவரின் வாசிப்பின் ஆழம், பிறமொழி இலக்கியப் பயில்வு, நமக்கோர் கலை இலக்கிய மரபை ஆழப்படுத்தும் பிரக்ஞை, ஆய்வு மனப்பான்மை, எள்ளல் என்று

பலவிடயங்களைக் காணமுடிகின்றது. மிகச் சுவாரசியமாகவும் இவரது கட்டுரைகள் அமைந்துள்ளன.

காதலி ஆற்றுப்படை பற்றியும் இவரால் எழுத முடிகின்றது - 'கிந்தி வங்காள ஆங்கில இலக்கியங்களைப் பற்றியும் இவரால் எழுத முடிகின்றது.

கவிதை தொடர்பான இவரது எண்ணங்களை கவிதைநயம் நூலுக்கு எழுதிய குறிப்பில் காணமுடிகின்றது. சிறுகதை தொடர்பான கருத்துக்களை விண்ணும் மண்ணும், கதைக் கனிகள் ஆகிய நூல்களுக்கு எழுதிய அறிமுகக்குறிப்புகளிலும் காணமுடிகின்றது.

தனது கொள்கைக்கேற்ற எழுத்தும் வாசிப்பும் இவரது தொடர்செயற்பாடுகளாயமைந்தன. பிறமொழி இலக்கியங்களை மிகச் சரளமாக அறிமுகப்படுத்த இவரால் முடிந்திருக்கின்றது. நம்முடைய இலக்கிய உலகை வளப்படுத்தவேண்டும் என்ற ஓர்மமும் இவரிடம் காணப்பட்டிருக்கின்றது. இவரது கதையுலகமும் ஏனைய எழுத்துக்களும் ஒரு கோட்டிலேயே பயணம் செய்தவை என்பதை இலகுவில் இனங்காணலாம்.

## முகாமைத்துவக் குழு - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திருமதி க. செல்வமாலா, திரு. த. பாலகுமார், திரு. மு. பிரபாகர், திருமதி க. இராசலிங்கம்.
நிற்பவர்கள் இடமிருந்து - செல்வி. தி. காயத்திரி, திருமதி செ. சுரேந்தர், திருமதி ர. கிருஸ்ணகுமார், திருமதி உ. விநாயகமூர்த்தி.

## பாடசாலை அபிவிருத்திக் குழு - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திருமதி சா. சுதர்சன், சிவஸ்ரீ. வி. செவ்வந்திநாதக் குருக்கள், திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், செல்வி. ப. இன்பமலர், திருமதி உ. விநாயகமூர்த்தி.

நிற்பவர்கள் இடமிருந்து - திரு. கு. சசிக்குமார், திரு. ச. உதயநாதன். திருமதி கா. உமாகரன், திருமதி. செ. சுரேந்தர். திருமதி கு. சொக்கநாதன், திருமதி க. இராசலிங்கம், திருமதி க. செல்வமாலா, திரு. த. ஜெயசீலன்.

## விளையாட்டுக்குழு -2017



இடமிருந்து – திருமதி செ. சுரேந்தரர், திருமதி க. இராசலிங்கம். திரு. த. பாலகுமார், திரு. மு. பிரபாகர், திருமதி க. செல்வமாலா

## ஒழுக்காற்றுக்குழு -2017



இடமிருந்து – திருமதி செ. சுரேந்தர், திரு. மு. பிரபாகர். திரு. த. பாலகுமார். திருமதி க. இராசலிங்கம்.

## உள்ளக மதிப்பீட்டுக்குழு (2017)



இடமிருந்து – திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி க. இராசலிங்கம்.

## பிள்ளைநேயக் குழு – 2017



இருப்பவர்கள் இடமிருந்து – திருமதி க. செல்வமாலா, திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி க. இராசலிங்கம்.
நிற்பவர்கள் இடமிருந்து – திருமதி செ. சுரேந்தர், திருமதி ர. கிருஸ்ணகுமார், செல்வி. தி. காயத்திரி, திருமதி உ. விநாயகமூர்த்தி.

## பரீட்சைக்குழு - 2017



இடமிருந்து - திருமதி செ. சுரேந்தர், திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி க. இராசலிங்கம், திருமதி உ. விநாயகமூர்த்தி.

## உணவுக்குழு - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திருமதி க. இராசலிங்கம். திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி செ. சுரேந்தர்
நிற்பவர்கள் இடமிருந்து - செல்வன், கு. கிசாகர், திருமதி க. ஜெயரூபி, திருமதி கா. கீர்த்திகா, செல்வன். உ. குபேசன்.

## சுகாதாரக் குழு - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திருமதி க. செல்வமாலா, திருமதி செ. சுரேந்தர், திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி உ. விநாயகமூர்த்தி, திருமதி க. இராசலிங்கம்.
நிற்பவர்கள் இடமிருந்து - செல்வி. க. சாருகா, செல்வன். கு. கிசாகர், செல்வன். உ. குபேசன், செல்வி. ஜெ. றொசாயினி.

## பாடசாலைக் குழு - 2017



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து - திருமதி செ. சுரேந்தர், திருமதி க. செல்வமாலா, திரு. மு. பிரபாகர், திரு. த. பாலகுமார், திருமதி க. இராசலிங்கம், திருமதி உ. விநாயகமூர்த்தி,
நிற்பவர்கள் இடமிருந்து - செல்வி. தி. காயத்திரி, திருமதி கா. உமாகரன். திருமதி கி. கணேஸ்வரன், திருமதி மே. பிரசன்னா, திருமதி ஜெ. அச்சுதன், திருமதி ர. கிருஸ்ணகுமார், திருமதி ம. தவராஜ்.

## தேசவழமைச் சட்டம் – ஓர் அறிமுகம்

பொதுவாக சட்டமானது, இனம், மதம் இடம், கலாசாரம் போன்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு அனைவருக்கும் சமனான வகையில் ஏற்புடையதாகின்றது. உதாரணமாக குற்றவியல் சட்டமானது இலங்கையில் உள்ள சகலருக்கும் ஏற்புடையதாகும். மாறாக ஏதேனும் குறிப்பான அம்சம் அல்லது தன்மை காரணமாக குறித்த சிலருக்கு அல்லது குறித்த சில இடத்திற்கு மாத்திரம் ஏற்புடையதாகுமாயின் அச் சட்டம் விசேட சட்டம் என அழைக்கப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையில் கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம், தேசவழமைச் சட்டம் என்பன விசேட சட்டங்களாகக் காணப்படுகின்றன.

### 1. தேசவழமைச் சட்டத்தின் தோற்றம்

'தேசவழமை' என்ற சொற்பதமானது குறித்த நாட்டின் வழக்காறுகள் எனப் பொருள்படுகின்றது. இலங்கையில் தேசவழமை என்பது யாழ்ப்பாணத் தமிழர்களின் வழக்காறுகள் எனக் கொள்ளப்படலாம். யாழ்ப்பாண மக்களின் இவ் வழக்காறானது 1707ஆம் ஆண்டு டச்சுக்காரரால் தொகுக்கப்பட்டது. டச்சுக்காரரின் ஆட்சிக்காலத்தின்போது சைமன்ஸ் என்ற ஆளுநரின் கட்டளைக்கு அமைய யாழ்ப்பாணத் தமிழர்களின் சட்டம் மற்றும் வழக்காறுகள் தொகுக்கப்பட்டு தேசவழமை ஒழுங்கு விதிகள் பிரகடனப்படுத்தப்பட்டன.

### 2. தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடமை

தேசவழமைச் சட்டமானது யாருக்கு ஏற்புடையதாகும் என்று நோக்குமிடத்து, குறித்த சட்டமானது யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தர வாசிகளுக்கு ஏற்புடையதாகும் என 1707ஆம் ஆண்டின் தேசவழமை ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு யாழ்ப்பாண மாகாணமென்பது தற்போதைய வடமாகாணத்தையும் மலபார் வாசிகள் என்பது தமிழ் மக்களையுமே குறிப்பதாக நீதிமன்றங்கள் பொருள்கோடல் செய்துள்ளன. நீதிமன்றங்களில் தீர்க்கப்பட்ட வழக்குகளின்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் வசிக்கும் தமிழ் மக்கள் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படுகின்றனர். இம்மாவட்டங்களில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு இச்சட்டம் ஏற்புடையதாக மாட்டாது.

### 3. தேசவழமைச் சட்டத்தின் கீழான திருமணம்

தேசவழமைச் சட்டத்தின் கீழ் திருமணம் ஒன்று வலிதானதாக இருப்பதற்கு அத் திருமணம் கட்டாயம் பதிவுசெய்யப்பட்டு இருக்க வேண்டும் என்ற தேவைப்பாடு இல்லை. தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படுபவர்கள் இந்துக்களாயின் இந்துமதகுரு ஒருவர் ஓமம் வளர்த்து மணமகனினால் மணமகளின் கழுத்தில் தாலி அணிவிக்கும் சடங்கானது உறவினர்கள் மத்தியில் இடம்பெற்றால் அது

வழக்காற்றுத் திருமணம் என்ற அடிப்படையில் வலிதான திருமணமாக கொள்ளப்பட்டது. கிறிஸ்வதவர்கள் ஆயின் கிறிஸ்தவ தேவாலயங்களில் பாதிரியார் முன்னிலையில் நடைபெறவேண்டும்.

இதேவேளை தரப்பினர் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள் என்பது உறவினர்களாலும் நண்பர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களிலும் அது நடப்பும் மதிப்பும் என்ற வகையில் வலிதான திருமணமாக கருதப்பட்டன.

**4. தேசவழமைச் சட்டத்தின் கீழான ஆதனம்**

தேசவழமைச் சட்டமானது ஒருவருக்குச் சொத்தானது முதுசொம், சீதனம், தேட்டம், உரிமை ஆகிய நான்கு வழிகளில் வந்தடையலாம் எனக் குறிப்பிடுகின்றது.

ஒருவரிற்கு ஒரு ஆதனமானது அவரது பெற்றோர் சொத்துக்களை விட்டிறந்ததன் மூலம் வந்தடைந்திருக்குமாயின் அது முதுசொச் சொத்து எனப்படும்.

ஒரு பெண்ணிற்கு திருமணத்தை நோக்கமாகக் கொண்டு அவரது பெற்றோராலோ சகோதரங்களாலோ ஆதனமொன்று வழங்கப்படுமாயின் அது சீதனம் எனப்படும். குறித்த சீதனமானது திருமணத்தின் முன்னரோ அல்லது திருமணத்தின் போதோ அல்லது திருமணத்தின் பின்னரோ வழங்கப்படலாம். சீதனமாக ஆதனமொன்றைப் பெற்ற பெண் ஒருவர் பெற்றோர் இறக்கும்பொழுது விட்டுச் செல்லும் ஏனைய சொத்துக்களில் பங்கு எதுவும் பொதுவாகக் கோரமுடியாது. ஆனால் சீதனம் கொடுத்த சொத்திலும் பலமடங்கு பெறுமதியான சொத்துக்களை பெற்றோர் விட்டிறப்பின் குறித்த சீதனமாகப் பெற்ற சொத்தையும் விட்டுச்சென்ற ஏனைய சொத்துக்களையும் ஒன்றிணைத்து அவற்றைச் சமமாகப் பகிருமாறு நீதிமன்றத்தின்மூலம் கோரலாம். சீதனமாக வழங்கப்படும் ஆதனத்தில் கணவனுக்கு எந்தவித உரித்தும் இல்லை.

வலிதான திருமணமொன்று நிலைத்திருக்கும் காலப்பகுதியில் தரப்பினரால் உழைத்த இலாபங்களைக் கொண்டு கொள்வனவு செய்யப்படும் ஆதனங்கள் அனைத்தும் தேடிய தேட்டமாகக் கொள்ளப்படும். குறித்த ஆதனமானது கவணனின் பெயரில் மட்டுமோ அல்லது மனைவியின் பெயரில் மட்டுமோ கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் கூட அது இருவருக்கும் சமனான உரிமை உடையதாகவே கொள்ளப்படும். இந்நிலையில் வாழ்க்கைத் துணையில் ஒருவர் உயிரிழந்தால் உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு அவருக்குச் சொந்தமான அரைப்பங்குடன் உயிரிழந்த வாழ்க்கைத் துணையின் அரைப்பங்கில் அரைவாசியும் சேர்த்து மொத்தமாக முக்காற் பங்கு சொந்தமானதாகும். மிகுதிக் காற்பங்கு பிள்ளைகளைச் சென்றடையும். பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் குறித்த பிள்ளைகளுக்குரிய காற்பங்கு உயிரிழந்த வாழ்க்கைத் துணையின் பெற்றோரையோ அல்லது சகோதரர்களையோ சென்றடையும். இதே வேளை பெண்ணின் சீதனப் பணத்திலோ அல்லது தரப்பினரின் முதுசொ ஆதனங்களை

விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்திலோ கொள்வனவு செய்யப்படும் ஆதனங்கள் தேடிய தேட்டமாகக் கொள்ளப்படாது தரப்பினரின் தனிப்பட்ட ஆதனமாகவே கருதப்படும்.

ஒருவரிற்கு அவரது சகோதரர்களோ அல்லது உறவினர்களோ இறந்ததன் பேரில் சொத்து ஒன்று வந்தடையுமாயின் அது அவரது உரிமைச் சொத்து எனப்படும். குறித்த உரிமையானது சீதனம் பெற்றவர், பெறாதவர் என்ற வேறுபாடு இன்றி அனைவரையும் சமனாக வந்தடையும்.

**5. தேசவழமைச் சட்டத்தின் கீழான முன்வாங்குரிமை**

முன்வாங்குரிமைச் சட்டம் என்பது ஒரு சொரியல் ஆதனமானது கூட்டுச் சொந்தக்காரர்களைத் தவிர்த்து வெளியாட்களுக்கு பராதீனப்படுத்தப் படுவதைத் தடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும். இச் சட்டத்தின்படி சொரியல் ஆதனமொன்றை விற்பனை செய்ய விரும்பும் ஒருவர் முதலில் கூட்டுச் சொந்தக்காரர் ஒருவரிற்கே அவ்வாதனத்தை விற்பனை செய்வதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும். கூட்டுச் சொரந்தக்காரர் எவரும் குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய முன்வராத சந்தர்ப்பத்திலேயே குறித்த சொரியல் ஆதனத்தை வெளி ஆட்களுக்கு விற்பனை செய்யலாம்.

சொரியல் ஆதனத்தின் சொந்தக்காரர் குறித்த ஆதனத்தில் தனக்குரிய பங்கை விற்பனை செய்வது தொடர்பில் ஆதனத்தின் விலையைக் குறிப்பிட்டு பிரதேச சபையில் அறிவித்தல் ஒன்றைக் காட்சிப்படுத்துதல் வேண்டும். இந் நிலையில் குறித்த ஆதனத்தைக் கொள்வனவு செய்யவிரும்பும் மற்றைய கூட்டுப்பங்காளர் குறித்த விலையைச் செலுத்தி குறித்த சொரியல் ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம். அவ்வாறு பிரதேச சபையில் காட்சிப்படுத்தப்படாது குறித்த ஆதனம் கூட்டுப்பங்காளர் அல்லாத ஒருவரிற்கு விற்பனை செய்யப்படுமாயின் குறித்த விற்பனை உறுதி பதிவுசெய்யப்பட்டு ஒரு வருட காலத்தினுள் குறித்த ஆதனத்திற்குரிய கிரயத்தை நீதிமன்றில் வைப்புச் செய்து வழக்கொன்றைத் தொடருவதன்மூலம் குறித்த விற்பனையை இரத்துச் செய்து குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய விரும்பம் கூட்டுப்பங்காளர் ஒருவர் கொள்வனவு செய்துகொள்ளலாம். இதேவேளை கூட்டுச் சொந்தக்காரர் அல்லாத அயல் ஆதன உரிமையாளருக்கு குறித்த ஆதனம் தொடர்பில் முன்வாங்குரிமை இல்லை.

**6. ஏனையவை**

***கணவரின் சம்மதம்***

தேசவழமை சட்டத்தால் ஆளப்படும் பெண் ஒருவர் தேச வழமைச் சட்டத்தால் ஆளப்படாத ஆண் ஒருவரைத் திருமணம் செய்வாராயின் அத் திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதிவரை குறித்த பெண் தேசவழமைச்

சட்டத்தால் ஆளப்படமாட்டார். இதேபோல தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படாத பெண் ஒருவர் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படும் ஆண் ஒருவரைத் திருமணம் செய்வாராயின் திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதிவரை குறித்த பெண்ணும் தேசவழமைச் சட்டத்தாலேயே ஆளப்படுவார்.

தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் திருமணமான பெண் ஒருவரிற்குச் சொந்தமான அசையாத ஆதனங்கள் தொடர்பில் அவர் அவ் ஆதனங்களை கையாளுவதற்கு கணவனது எழுத்தினாலான சம்மதம் அவசியமானதாகும். ஆனால் குறித்த சம்மதத்தை வழங்க கணவர் நியாயமற்ற விதத்தில் மறுத்தால் அல்லது குறித்த கணவன் மனைவியைக் கைவிட்டுச் சென்றிருந்தால் அல்லது குறித்த கணவன் புத்திசாதுரியமற்றவராக இருப்பின் மனைவி தான் வசிக்கும் மாவட்டத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்றின் மூலம் விண்ணப்பித்து அனுமதியைப் பெற்ற பின் குறித்த ஆதனத்தை தனது கணவரின் சம்மதமின்றியே கையாளலாம்.

**சீவிய உரித்து**

ஒருவர் தனக்குச் சொந்தமான ஆதனத்தை இன்னொருவரிற்கு நன்கொடையாக அல்லது சீதனமாக வழங்கும் பொழுது குறித்த ஆதனத்தை தொடர்ந்தும் தான் ஆண்டு அனுபவிக்கும் உரித்தை (சீவிய உரித்து) தக்கவைத்துக்கொண்டு ஈகை செய்யலாம். அவ்வாறு சீவிய உரித்தைக் கொண்டிருப்பவர் குறித்த ஆதனத்தில் வாழ்வதற்கான உரிமையைக் கொண்டிருப்பாரே தவிர அவ்வாதனத்தை மீண்டும் பராதீனப்படுத்தும் உரித்தை கொண்டிருக்க மாட்டார். குறித்த சீவிய உரித்தைக் கொண்டிருப்பவர் காலமாகும் சந்தர்ப்பத்தில் குறித்த உரித்து அற்றுப் போய்விடும். சீவிய உரித்தைக் கொண்டிருப்பவர் உயிரோடு இருக்கும் காலப்பகுதியில் குறித்த ஆதனத்தை பெற்றுக்கொண்டவர் சீவிய உரித்தாளரின் சம்மதமின்றி அவ்வாதனத்தைப் பராதீனப்படுத்தமுடியாது.

**ஈடு**

ஒருவர் தனது தேவை கருதி தனது ஆதனத்தைப் பொறுப்பாகக் கொடுத்து வட்டிக்குப் பணம் பெறுவாராயின் அது ஈடு எனப்படும். குறித்த பணத்தைப் பெற்றவர் கடன்கொடுத்தவர் கேட்ட நேரமே குறித்த பணத்தைத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும். தவறின் பணம் கொடுத்தவர் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்து ஈடாக எழுதிக் கொடுத்த காணியை விற்பனை செய்து வட்டியையும் முதலையும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஒற்றி**

ஒருவர் தனக்குரிய ஆதனத்தை பயிர்செய்யக் கொடுத்து அதிலிருந்து கிடைக்கும் பிரயோசனத்தை வட்டிக்கு பதிலாக அனுபவிக்கும்படி கூறி பணம் பெறுவாராயின் அது ஒற்றி எனப்படும். ஒற்றிக்குக் கொடுத்தவர் குறித்த ஆதனத்தை

தான் விரும்பிய காலத்தில் பணத்தைச் செலுத்தி மீள முடியாது. குறித்த ஆதனமானது நெற் செய்கைக்கு எனக் கொடுக்கப்பட்டிருப்பின் ஆவணி, புரட்டாதி மாதங்களிலும், பனந்தோட்டம், புகையிலைத் தோட்டம் என்பனவாயின் கார்த்திகை மாதத்திலுமே மீளமுடியும்.

**வாரம்**

ஒருவர் இன்னொருவரிற்குச் சொந்தமான ஆதனத்தில் பயிர் செய்வாராயின் கிடைக்கின்ற வருவாயில் மூன்றிலொரு பங்கினை ஆதனத்தின் சொந்தக்காரருக்கு வழங்குதல் வேண்டும். இவ்வாறு பயிர் செய்தல் வாரத்துக்கு பயிர் செய்தல் என அழைக்கப்படும்.

**பயன்தரு மரங்களின் பிரயோசனம்**

ஒருவர் தனது ஆதனத்தின் எல்லைக்குள் நாட்டி நீரூற்றி பாடுபட்டு வளர்த்த மரமொன்று கோணலாக வளர்ந்ததனால் அயற்காணிக்குள் காய்க்குமாயினும் குறித்த காய்கள் அயற்காணிக்காரருக்குச் சொந்தமானவையல்ல. ஆனால் தாமாகவே வளரும் புளி வேம்பு போன்ற மரங்களைப் பொறுத்தரை எந்த நிலத்தில் கொப்புகள் சாய்ந்து நிழல் உண்டாக்குகின்றதோ அந்த நிலக்காரருக்கே அக் கொப்புக்களின் பிரயோசனங்கள் சொந்தமானவை.

**முடிவுரை**

தேசவழமைச் சட்டத்தின் முன்வாங்குரிமையானது தமிழர்கள் அல்லாதவர்கள் வடமாகாணத்தில் காணி கொள்வனவு செய்வதனை தடுக்கின்ற காரணத்தினால் தேசவழமைச் சட்டமானது ஒழிக்கப்படவேண்டுமென தமிழர்கள் அல்லாத ஒரு தரப்பினரும் தேசவழமைச் சட்டத்தின் சில பிரிவுகள் பெண்களின் உரிமைகளை மட்டுப்படுத்துவதாக காணப்படுவதன் காரணத்தினால் குறித்த சட்டம் இல்லாதொழிக்கப்படவேண்டுமென பெண்ணியல் வாதிகள் சிலரும் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால் இச்சட்டமானது தமிழர்களின் தனித்துவத்தை பேணுவதற்கு அடிப்படையாக காணப்படுவதனால் இச்சட்டமானது நிலைத்திருப்பது அத்தியாவசியமாகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. The Thesawalame or The Laws and Customs of Jaffna – Muthukisna, Herry Francis
2. Laws and Customs of the Tamils of Jaffna – H.W.Thambiah
3. தேசவழமைச்சட்டம் - செ.செல்வகுணபாலன்



**பா.பார்த்தியன்,**
**சட்டத்தரணி**

# கால வெளியில் பின் நோக்கிய ஒரு பயணம்

'குருக்கள் பள்ளிக்கூடம்' என்ற இந்த பெயர் எமக்கு நினைவு தெரிந்த நாளிற்கு முன்பிருந்து இன்று வரை நிலைத்திருக்கும் ஒரு பெயர். எமக்கு முகவரி தந்த எமது வாழ்விற்கு ஏணியாய் அமைந்த இப்பாடசாலையில் நான் பயின்ற அந்த கால நினைவுகளை மீட்டிப்பார்க்கின்றேன்.

அன்றைய அந்த கிராமச் சூழலில் ஆங்கிலம் கலக்காத கிராம மொழியில் ஆசிரியர்களை வாத்தியார் என்றே அழைத்து பணிந்து நின்றோம். எம்மை வழிநடத்திய அதிபர் பெரிய வாத்தியார் என்றழைக்கப்பட்டார். திரு.சொ. நடராசா அவர்களின் கண்டிப்பு இன்றும் என் மனக்கண் முன்னால் நிற்கிறது. தடித்த அவரின் குரலுக்கே அனைவரும் கட்டுப்பட்டோம். எனினும் ஆங்கிலம் கற்பித்த திரு. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் மட்டும் 'சேர்' என்ற வார்த்தையால் அழைக்கப்பட்டார்.

ஒவ்வொரு மாணவனினதும் பின்புலத்தை தெரிந்த ஆசிரியர்கள் அன்று கற்பித்தனர். அதனால் அனைவரும் அரவணைத்து செல்லப்பட்டனர். முத்து ரீச்சரும் மங்களம் ரீச்சரும் கற்பித்த விதம் என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

எமது ஆசிரியர்களில் பொன்னம்பல வாத்தியார் சற்று வித்தியாசமானவர். அந்த காலத்தில் பாடத்தை சரியாக படிக்காத மாணவர்களை பார்த்து நீ என்னத்தில் கெட்டிக்காரன் என்டு சொல் குறைந்தது பொய் சொல்வதிலாவது கெட்டிக்காரன். பொய்யை சொல்லியாவது பிழைத்துக்கொள்வாய்! என உறுக்குவது இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது. அவரது வார்த்தையின் அர்த்தம் அன்று புரியாவிடினும் பிற்காலத்தில் மிக தெளிவாக புரிந்தது.

அன்பு ரீச்சர் பெயரிற்கேற்றாற் போல மிகவும் அன்பானவர். நாம் குளப்படி செய்து அதிபரிடம் அடி வாங்கவிருந்த சந்தர்ப்பங்களில் எம்மை பிணையில் விடுவித்துள்ளார்.

பொருளாதார வளமும் பலமான குடும்ப பின்னணியுமற்ற பல மாணவர்களுக்கு இப்பாடசாலை வாழ்வில் கரையேற கலங்கரை விளக்காக அமைந்தது.

அதன் மேம்பாட்டிற்கு அனைவரும் கரம் கோர்ப்போம்.

**க. சுப்பிரமணியம்**
**(1978 - 1982)**
**பிரதம பொறியியலாளர்**
**நீர்ப்பாசன திணைக்களம்.**

# ஆசிரிய தலைமைத்துவம்

புதிய மாற்றங்கள் பற்றிய கருத்தியல் வார்ப்புக்கள்ள 20 ஆம் நூற்றாண்டின் தோற்றம் பெற்ற சிந்தனைகள் கூடங்கள் விசைப்படுத்திக் கொண்டன. பூகோள மாற்றம் பற்றிய சிந்தனைகளின் உருவாக்கும் கருவியாக கல்வி விளங்குகின்றது. கல்வி பற்றிய நவீன சிந்தனைப் போக்குக்களின் பரிமாணத்தை பின் நவீனத்துவக் கருத்தாடல்கள் செல்வாக்கு செலுத்துகின்றது. இதன் விளைவாக மரபுவழிக் கோட்பாடுகளில் இருந்து மனிதகுலம் விடுபட்டு மானிட வாழ்வைச் செழிமைப்படுத்தும் நவீன வழிமுறைகள் எல்லாத்துறைகளிலும் புரையோடிக் கொண்டன. உலகமயமாக்கல் நிலையின் இன்றைய காலவொழுங்கு அறிவுப் பொருளாதாரத்தினால் கட்டியெழுப்பப்படுவதனால் அறிவு, நுட்பக் காரணிகளால் உற்பத்தி வெளியீடுகள் நிரம்பல் படுத்தப்படுகினிறன. கோளமயமாதலும் அவற்றின் அறைகூவல்களுக்குமான தீர்வுகள் கல்வியின் இயக்க வழிகளால் நடந்தேறி வருகின்றன. கல்வி பற்றிய மாற்றச் சிந்தனைகள் மரபுவழிக் கோலத்தில் இருந்து விடுபட்டு புதிய தோற்றப்பாடுகள் கல்வித் தலைமைத்துவம் பற்றிய தேவைகளுக்கு முக்கியமான இடத்தைக் கொடுத்தது.

மரபு வழிப் பணித்துறையாட்சி தலைமைத்துவ வகிபாகம் மற்றும் இலாப நோக்க வணிக நிறுவனங்களின் முகாமைத்துவ அணுகு முறைகளைப் பிரதியாக்கிய பாடசாலை முகாமைத்துவம் என்பனவற்றுக்கு மேலாக பாடசாலைத் தலைமைத்துவம் என்பது உரையாடல் களத்திற்கு 20 ஆம் நூற்றாண்டில் திறக்கப்பட்டு அதில் இருந்து முனைப்புப் பெற்றதாக ஆசிரிய தலைமைத்துவமானது விளங்குகின்றது. பாரம்பாரிய பாடசாலைக் கட்டமைப்பிலும் ஆசிரிய தலைமைத்துவம் ஆசிரிய சங்கம், ஆசிரிய நலன்புரிச் சங்கம் போன்றனவற்றில் காணக்கூடிய ஒன்றாகும்.வகுப்பறை மற்றும் பாடசாலை நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கும் வகிபாகம் முறைசார்தாகவும் ஆசிரியர்கள் தமக்கிடையே இடைவினை உறவின் பிரகாரம் தலைவராக மேலெழும் தலைமைத்துவம் முறைசார முறையிலும் காணக்கூடியதாகவுள்ளது. இது ஒரு புதியவிடயமாக இல்லாமல் புதிய கல்விக் கோட்பாடுகள் கலைத்திட்ட மறு சீரமைப்புக்கள் பாடசாலையில் செயற்படுத்த வேண்டிய ஏராளமான பணிகள் மாணவர் சமுகத்தைக் கையாளும் முறைகளில் ஏற்பட்ட புதிய போக்குகள் போன்ற விடயங்களால் தலைமைத்துவம் மீள் கருத்தாடலுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. மாற்றமுறும் இன்றைய பாடசாலை ஒழுங்கமைப்பிற்கு இசைவுற 21 ஆம் நூற்றாண்டில புதியசிந்தனைப் பிரவாக விசைப்படுத்தல்களோடு கூடிய பரிமாணங்களைக் கொண்டதாக தலைமைத்துவ ஒழுங்கும் மாற்றப்பட வேண்டியதாகின்றது. இன்றைய மாணவர்கள் நிகழ்கால எதிர்காலப் போட்டிச் சூழலில் வாழ்வியல் மற்றும் தொழில் உலகச் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கத்தக்கனவாக நிறைவு பெற்ற தேர்ச்சியைக் கொண்டவராக விளங்குவதற்குகான கல்வி ஏற்பாடுகளை உத்தம நிலையில் வழங்க மேம்பட்ட தொழில் வினையாற்றலில் கொண்ட பண்புகளுடன் கூடிய கற்பித்தல் செயன்

முறைத்துவம் நிகழ்கால உலகின் வேண்டுகையாகும் ஆசிரியத் தொழில் வாண்மைத்துவமாக அமைகின்ற போது மாற்றம் சாத்தியமாகும். ஆசிரியத் தொழில் வாண்மைத் தொழிலாக உலகம் ஏற்றுக்கொண்ட போதும் எமது நாட்டைப் பொறுத்தவரை இன்னும் ஆசிரியத் தொழிலில் அபிவிருத்தி நிலையையில் காணப்படுகின்றது பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான வரப்பிரசாதங்கள் காணப்படுவதனால் எதிர்கால ஆசிரியத் தொழில் வாண்மைத் தொழிலாக்குவதற்கான கரிசனைகள் புலப்படுகின்றது.

ஆசிரிய வாண்மையானது ஆசிரிய தலைமைத்துத்துவ வழிநடத்தல்களை வினைத்திறனான செயற்பாட்டிற்கு இட்டுச் செல்லும் உயர் சிந்தனைகளை வழங்குவதாகும் .வாண்மையானது அறிவை அடிப்படையாகக் கொண்டதும் வாடிக்கையாளரின் திருப்தியை முதன்மைப்படுத்தியதாகும். ஆசிரிய தலைமைத்துவ மானது வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடிற்கு தலைமைத்துவத்தை வழங்குவதான முன்னுரிமைப்படுத்தல்களோடு மாணவர்களின் ஏனைய செயற்பாடிற்கும் தலைமைத்துவத்தை அளித்து அதிபரின் பாடசாலைத் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் கருவியாகும். இன்றைய தேர்ச்சி மைய கலைத்திட்ட கட்டுருவாக்க வகுப்றையின் நிலைமாற்று ஆசிரிய வகிபாகம் நிலைமாற்று தலைமைத்துவ பண்புகளைக் கொண்ட இயங்கும் சக்தியாக ஆசிரியா இயல்பு காண்பது பொருத்தமானது. இலக்கு நோக்கி மற்றவர்களை வழிநடத்தும் செயற்பாடு தலைமைத்துவமாகும். தரிசன நோக்கோடு வெற்றிக்கு நம்பிக்கை தரும் உணர்வுடன் தானும் உதாரணரமாகத் திகழும் தலைமைத்துவம் நிலைமாற்று தலைமைத்துவமாகும். அறியாமையும் வறுமையும் வளப்பற்றாக் குறையும் காணப்பட்ட சிங்கப்பூர் தேசத்தை நவீன வளர்ச்சிக்கு காரணமாண லீகுவான்யூ நிலைமாற்று தலைமைத்துவத்தை வழங்கியவராவர்.

பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டவருகையானது பாடசாலை மேற்பார்வைக் குழு கலாச்சாரத்தில் இருந்து பாடசாலை மதிப்பீட்டு கலாச்சார முறைக்கு மாற்றம் பெற பாடசாலைகளில் குழுமுறை தலைமைத்துமுறை அறிமுகமானது. வழிகாட்டல் செயற்பாடுகளுக்கு ஆசிரியர் பணிகளின் தேவை அதிகரித்துக் காணப்படுவதை இன்றைய பாடசாலை முறையில் காணலாம். ஆசிரிய தலைமைத்துவ அணுகுமுறை பழையகலாச்சாரச் சூழலில் இருந்து விடுபட்டு மென்திறன் அணுகுமுறையாக புதிய பரிபாலிப்புக்களை உள்ளடக்கமாகக் கொண்டது.

**ஆசிரியதலைமத்துவப் பண்புகள்**

- மாணவர் கற்றலுக்காக அர்பணித்துச் செயற்படுதல்
- மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- தமது அறிவை இற்றைப்படுத்தல்
- கடுமையாக உழைப்பவராக இருத்தல்
- நெகிழ்ச்சியான நடத்தைக் கோலம்

➢ உயர் எதிர்பார்புடன் கூடிய வேலை நடத்தை
➢ தொழில் நிறுவனத்தின் மீது நம்பிக்கை கொள்ளல்

போன்ற பண்புகளைக் கொண்டதாகும்.

ஆசிரிய தலைமத்துவம் பல வகிபாகங்களை ஆற்ற வேண்டியுள்ளது. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடலாம்

- வசதிப்படுத்துபவர்

  மாணவர்களது தேடல்களுக்கு பாடசாலை நூலகம் ஆய்வு கூடம் கணணி மற்றும் இணையத்தள வசதிகள் வெளிக்களச் சுற்றுலா கருத்தரங்குகள் செயற்பட்டறைகள் கற்பித்தல் சாதனங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவர்
- கலைத்திட்ட இயக்குநர்

  பாடசாலையின் தேவைக் கேற்ப கலைத்திட்டத்தை நெகிழ்ச்சிப்படுத்தவும் மாணவரது கற்றல் மட்டங்களுக்கு அமைய வேலைத்திட்டங்களில் மாற்றம் செய்யவும் தேவையான நிபுணத்துவ அறிவுடையவர்
- மாற்றறங்களை நிலைப்படுத்துபவர்

  மாணவர்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி அதனை மாணவரிடத்து நிலைப்பதற்கும் வேண்டிய ஊக்குவிப்பாளர்
- கற்போன்

  தனது அறிவை இற்றைப்படுத்த தொடர்ந்து கற்போனாகவும் அதனூடாக ஏனையோர்க்குஅறிவை வழங்கி மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் பின்பற்றல்களை ஏற்படுத்துபவர்
- பாடசாலைத் தலைவர்

  அதிபருக்கான பதில் கடமையாற்றுபவர்
- தகவல் வழங்குபவர்

  தகவல் பெற்று அதனை களஞ்சியப்படுத்தி பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் செயற்பாடு தலைமைத்துவக் கலையாகும். தகவல்களைப் பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த கருமமாற்றும் தலைவராவார்.

பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு வழங்கும் பணிகள் கடமைப் பட்டியலோடு மட்டப்பாடங்களைக் கொண்டு காணப்படுதல். ஆசிரிய தலைமைத்துவம் தொடர்பாக அதிபர்கள் கொண்டுள்ள மனப் பாங்குகளின் எதிர்மறைகள், ஆசிரிய வாண்மைத்துவம் அபிவிருத்தி நிலையில் காணப்படுதல், பாடசாலை மட்ட மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் சுய தலைமைத்துவத்திற்கான திறவு கோலாக மாற்றம் பெறாமை போன்ற காரணங்கள் ஆசிரிய தலைமைத்துவத்தை வழங்குவதற்கான தடைகளை இன்றைய பாடசாலைக் கட்டமைப்பில் காணக் கூடியதாகவுள்ளது.

**திரு. மு. பிரபாகர்**
**S.L.P.S**
**B.COM PGDE M.Ed**

## பள்ளி நாட்களின் நினைவில் 1986 – 1990

முதற்கண் யா/ கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்ற எம்மை கௌரவப்படுத்தும் முகமாக எம்மிடமும் ஆக்கம் கோரிய பாடசாலை சமூகத்துக்கு நன்றி கூறி எனது பாடசாலை நாட்களில் சில பகுதிகள் என் உள்ளத்திலிருந்து......

கிட்டத்தட்ட 31 வருடங்களுக்கு முன் இந்தப் பாடசாலையில் அந்த நாட்களில் பாலர் வகுப்பு என்று சொல்லப்படும் ஆரம்ப வகுப்புக் கல்விக்காக நாம் காலடி வைத்த நாட்களில் அதிபராக அமரர் செல்வநாயகம் அவர்கள் கடமையிலிருந்தார். தற்போதுள்ள முதலாம் ஆண்டு வகுப்புக்கு முன்னால் முன்பிருந்த கொட்டகையில் மண்ணில் அ, ஆ எழுதிப் பழக்குவார் எங்கள் முத்து ரீச்சர். அன்பில் அரவணைப்பார் எங்கள் அன்பு ரீச்சர்.

என்னுடன் பாடசாலையினுள் காலடி வைத்தவர்கள் பலர். எமது கல்விக்கு வித்திட்ட ஆரம்ப பாடசாலையான கரணவாய் வேதாரணியேஸ்வர தாயின் அரவணைப்பில் வளர்ந்த நாம் ஒவ்வொருவரும் தற்போது ஏதோ இருக்கிறோம் என்றில்லாமல் தத்தமக்கென்று ஒவ்வொரு நிலையை அடைந்துள்ளோம்.

செல்வநாயகம் சேருக்கு பின் அதிபராக இருந்தவர் மனோன்மணி ரீச்சர். வெள்ளை உடை, யாரையும் மனம் நோகவைக்காத தூய்மையான வெள்ளை மனம், களங்கமில்லாத புன்சிரிப்பு இதுதான் மனோன்மணி ரீச்சர். இவர் அபிநயத்துடனும், பாடலுடனும் கற்பிக்கும் பாடங்களை நாம் மீள படிக்க வேண்டியிராது. ஏனெனில் மனதில் படமாக பதிந்துவிடும். பாடசாலை நாட்களில் 'சின்ன மாமியே, உன் சின்ன மகள் எங்கே, பள்ளிக்குச் சென்றாளோ படிக்கச் சென்றாளோ......' போன்ற நகைச்சுவையுடன் கூடிய பாடல்களுடன் கற்பித்தலை நகர்த்துவார் பிரபா சேர். முத்து ரீச்சரின் பிரியாவிடை, முத்து முத்தாய் சலித்துதிர்க்கும் எங்கள் முத்து ரீச்சர்...... மனோன்மணி ரீச்சரின் இயக்கத்தில் மங்களம் ரீச்சர் பயிற்றுவிப்பார் எம்மை நடனத்துக்காக, மங்களம் ரீச்சரின் அரவணைப்பு தனித்துவமானது. பிள்ளைகளை மிக்க அன்புடன் பாசமாக கவனிப்பார்.

பாடசாலையில் ஒரு வருடம் விளையாட்டுப் போட்டி நடைபெற்றால் அடுத்த வருடம் கலைவிழா உச்சில் அம்மன் கோவிலில் இடம்பெறும். எந் நிகழ்வானாலும் பாடல்கள், நாடகங்கள் எதுவாயினும் அன்றைய அதிபர் மனோன்மணி ரீச்சரே இயற்றுவார். கலைவிழா என்றால் உச்சிலில் நிகழ்வு நடக்க பங்குபற்றிய மாணவருக்கு கருணாநிதி சேர் வீட்டில் இரவு உணவும் வழங்கப்படும்.

இக் காலத்தில் ஆசிரிய பயிற்சிக்காக எமது பாடசாலைக்கு இணைக்கப்பட்ட சுபத்திரா ரீச்சரும் எமக்கு திறம்பட பாடங்களை கற்பித்தார் எமது ஆரம்ப பள்ளி நாட்களில் எம்மை வளர்த்தெடுத்ததில் முக்கிய பங்கு அச்சலிங்கம் ஆசிரியருக்கு உண்டு. பாட்டுகள், நகைச்சுவைகள், அன்புடனான கண்டிப்புக்கள் மற்றும் அடிகளுடன் சிறப்பாக நடைபெறும். அச்சலிங்கம் சேர் ஒவ்வொரு மாணவரையும் தன் பிள்ளைபோல் தனிக்கவனமாகப் பார்ப்பார். எமது புலமைப்பரிசில் வகுப்புகள், பாடசாலையில் அச்சலிங்கம் சேரும் பாடசாலையின் பின் தம்பையா மாஸ்ரரின் ரியூசனும் தான் எமது புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புக்கள். அந்த நேரத்தில் எமது வகுப்பில் 9 பேர் குறித்த பரீட்சையில் சித்தியடைந்தோம்.

நானும் எமது வகுப்பு நண்பர்களும்:

| இல. | பாடசாலை வரவு இடாப்பின்படிபெயர் | தற்போதுள்ள நிலை | புலமைப் பரிசில் பரீட்சை சித்தி |
|---|---|---|---|
| 01 | ஸ்ரீ. குயிலினி | கனடா (கல்வியியல் கல்லூரி ஆசிரியையாக இருந்தவர்) | ✓ |
| 02 | ம. ஜனகன் | பொறியியலாளர், சிங்கப்பூர். | ✓ |
| 03 | ம. சுதாகர் | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். | ✓ |
| 04 | ப. இராஜராஜன் | கொலன்ட் | ✓ |
| 05 | இ. றறிதா | சுவிஸ் | ✓ |
| 06 | பொ. ஜெயந்தி | பிரதேசசெயலகம், கரவெட்டி | ✓ |
| 07 | ச. மங்களராணி. | முதலீட்டுச் சபை, யாழ்ப்பாணம் | ✓ |
| 08 | நா. நயனா | லண்டன் (கல்வியியல் கல்லூரி ஆசிரியையாக இருந்தவர்) | ✓ |
| 09 | ப. முகுந்தன் | இறப்பு | ✓ |
| 10 | வி. இளங்கௌசி | சுவிஸ் | |
| 11 | ஈ. தயாளன் | பிரதேச சபை, ஒலுவில் | |
| 12 | இ. மோகன் | சுகாதார திணைக்களம், திருகோணமலை | |
| 13 | மா. பஞ்சாட்சரம் | இலங்கை போக்குவரத்துச் சபை | |
| 14 | சு. ஸ்ரீராம் | மாவட்ட செயலகம், கிளிநொச்சி (பட்டதாரி) | |
| 15 | சோ. விஜிகரன் | கனடா | |
| 16 | பா. வாசவன் | அமெரிக்கா (பட்டதாரி) | |

இவர்கள் தவிர அயல்வீட்டு பிருந்தா, இளங்கோ, அருள்மதி, சசிகலா, இராஜேந்திரபிரசாத், திருமாறன் போன்றவர்களும் எம்முடன் இப்பாடசாலையில் சிறகடித்தவர்களே.

எமது கல்லூரித் தாயின் நூற்றாண்டை ஒட்டி வெளியிடப்படும் நூலுக்காக எமது பள்ளிப் பருவத்தையும், வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களையும் சிந்தனைக்கு வரவைத்தமைக்காக "வரம்" நூலுக்கும் விழாக் குழுவுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் என்று எம் வேதாரணியேஸ்வர தாய்க்கு தலைவணங்குகின்றேன்.

நன்றி

**திருமதி அ. ஜெயந்தி,**
**பழைய மாணவி.**

## பாடசாலைக்கு பெருமை சேர்த்த சாதனையாளர்கள்



திருமதி க. குணசீலன்



திரு. வி. சொக்கநாதன்



திரு. வி. சண்முகநாதன்



திரு. சி. நவரட்ணராஜா



சிவஸ்ரீ. வி. செல்வந்திநாதக்குருக்கள்



திரு. இ. வைகுந்தவாசன்



திரு. வி. சண்முகராசா



திரு. ம. ஜனகன்



திருமதி த. ஜெகதீஸ்வரன்



செல்வி. ந. சூரியா



திரு. ஞா. அபிராம்



செல்வி. தி. சிவதர்சினி



திரு. வி. ஜெயகநாதக்குரு



திருமதி அ. ஜனகன்



திரு. க. சிவச்சந்திரன்



திரு. யோ. தனரூபன்



செல்வி. ஈ. றஞ்சனி



திரு. செ. சுதன்



செல்வி. க. மைதிலி



திரு. கை. லம்போதரன்



திரு. இ. கீர்த்தனன்



திரு. ர. நிரோஜன்



திரு. ர. குமுதன்



திரு. கை. திருக்குமார்



திருமதி சா. சுதர்சன்



திருமதி ய. காந்தீஸ்வரன்



திரு. கி. மயூரேசன்



செல்வி. செ. பாமதி



செல்வி. செ. சுமதி



திருமதி ப. சீனிவாசகம்



திரு. ந. ஆரூரன்



திருமதி து. நித்தியானந்தன்



செல்வி. பொ. நிஷாந்தி



செல்வி. வை. பிரியங்கா



செல்வி. நா. சுபாங்கனி



திரு. வி. ஐங்கரன்


திரு. பா. வாசவன்


செல்வி. மா. தாருகாசினி


செல்வி. பா. ஆஷா


செல்வி. கி. மாதங்கி


திரு. கு. கணேசானந்


செல்வி. கு. ஜனனி


திரு. செ. கலைச்செல்வன்


செல்வி. கு. அருள்ஜனனி


செல்வி. ச. தேவகி

திருமதி வா. கோகுலன்
திரு. த. பார்த்தீபன்
திரு. க. மாதுளன்
திரு. க. ஜெகந்தன்
செல்வி. க. தனுசா
செல்வி. க. தாரணி
திரு. க. சுப்பிரமணியம்
திருமதி மீ. உதயன்
செல்வி. க. எழிலரசி

திரு. வ. திருக்குமார்
திரு. ச. பாலகுமார்
திரு. த. பார்த்தீபன்
திரு. சி. அருந்தவராஜன்
திரு. சி. அருமைராஜன்
திரு. அ. மோகனலால்
திரு. சி. பிரணவன்
திரு. ம. சந்திரமோகன்
திரு. சு. ஸ்ரீராம்

திரு. சு. சுதர்சன்
திருமதி வி. செந்தில்ரஜிவன்
திரு. நா. பவீந்திரன்
திரு. மா. பாலசுப்பிரமணியம்
திருமதி வா. பாலசுப்பிரமணியம்
செல்வி. ச. நிரோஷா
திரு. V. கார்த்திக்
செல்வி. தி. பாலசிங்கம்
திரு. ஈ. தயாளுபன்

# ஆரோக்கியமும் வாழ்வும்

ஆரோக்கிய வாழ்வு என்பது இன்று சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவராலும் வேண்டப்படுவதாக உள்ளது. இக்கட்டுரை குறிப்பாக குழந்தையொன்று பிறந்ததில் இருந்து தனது ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்யும் வரைக்குமான காலத்தில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையொன்றைப் பின்பற்றுவதன் அவசியத்தை ஆராய்கின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதாரம் தொடர்பான தன்னுடைய வரைவிலக்கணத்தில் உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக ஆரோக்கியம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆரம்பக்கல்வி மாணவர்களினதும் உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக ஆரோக்கியம் தொடர்பில் சித்திித்தல் அவசியமாகின்றது. கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை ஆரோக்கியம் பற்றி 'உடலில் உறுதியுடையவரே உலகில் இன்பம் உடையவராம்' என்ற பாடலினூடாக எடுத்துரைத்துள்ளார்.

ஆரோக்கிய வாழ்வுக்கான அடிப்படையாக உடல் ஆரோக்கியமே விளங்குகின்றது. குழந்தையொன்று பிறந்தது முதல் குறிப்பிட்ட சிலவருடங்களிலேயே அதன் மூளை வளர்ச்சியின் பெரும் பங்கு நடைபெறுகின்றது. இக்காலப்பகுதியில் மூளை வளர்ச்சிக்குத் தேவையான போசணைமிக்க உணவுப் பொருட்களை உட்கொள்வது மிகவும் முக்கியமானதொன்றாகும். முதல் ஆறு மாதங்களுக்கும் தனியே தாய்ப்பாலை மட்டும் வழங்குதல் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையாகும். இது குழந்தைக்குத் தேவையான அத்தியாவசியமான போசணைப்பொருட்கள், பிறபொருளெதிரிகள் என்பன கிடைப்பதற்கு வழிவகுக்கும். குழந்தையின் வளர்ச்சிக்கு புரதம் மற்றும் பல்நிரம்பாத கொழுப்பமிலங்கள் உதாரணமாக DHA (Docosa hexaenoic acid) போன்றவற்றைக் கொண்ட உணவுகள் பெரிதும் துணைபுரியும். வளர்ந்து வரும் நாடு என்னும் அடிப்படையில் இலங்கையிலும் போசணைக் குறைபாடு, அதிக போசணை ஆகிய இரண்டு நிலைமைகளும் காணப்படுகின்றன. வறுமை, யுத்த சூழ்நிலை, சமூகக்காரணிகள் என்பன போசணைக் குறைபாட்டிற்கு காரணமாக இருக்கின்ற அதேவேளை துரிதமான உணவுகள் உடல் உழைப்பின்மை என்பன அதிக போசணைக்கு காரணமாகவுள்ளன. இவ்விரு நிலைமைகளும் மிகமோசமான விளைவுகளை நீண்ட கால ரீதியில் ஏற்படுத்த வல்லன.

திருவள்ளுவர் திருக்குறளில்

**"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றது போற்றிஉணின்"** (குறள் 942)

முன்புதான் உண்டது செரித்தது என அறிந்து தக்க அளவினை உண்டு வந்தால் உடம்பிற்கு என்று ஒன்றும் தனியே தேவையில்லை என்கின்றார். போசணைக் குறைபாடுடைய குழந்தைகள் சுகாதார சீர்கேடு கல்வியில் நாட்டமின்மை என்னும்

பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். அதிக போசணை, அதிக உடல் பருமனுக்கு வழிவகுப்பதுடன் எதிர்காலத்தில் நீரிழிவு நோய் உயர்குருதியமுக்கம் இதய நோய்கள் போன்றவற்றுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பை அதிகரிக்கின்றது.

"இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்"

குறைவாக உண்பது நல்லது.என அறிந்து உண்பவன் இடத்தில் இன்பம் நிலைத்து நிற்பது போல் அதிகமாக உண்பவன் இடத்தில் நோய் நிலைத்து நிற்கும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரும்பிரச்சனை யாக உருவெடுத்துள்ள இந்நிலைமை எமது நாட்டிலும் மிக வேகமாத்தொடங்கியுள்ளது. எனவே சுத்தமான உணவுகளை உட்கொள்ளுதல், அதிக கொழுப்பு, சர்க்கரை, மற்றும் உப்புக் கொண்ட உணவுகளை உட்கொள்வதைத் தவிர்த்தல். காய்கறிகள் மற்றும் பழங்களை உணவில் அதிகளவில் சேர்த்துக்கொள்ளுதல் என்பது பெரியவர்கள் மட்டுமல்லாது குழந்தைகளும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளாகும். உடற்பயிற்சி என்பதும் உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமானதாகும். அதுதான் பாரதியார் "ஓடிவிளையாடு பாப்பா" என்ற பாடலில் கூறியுள்ளார். அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள தொலைத்தொடர்பு சாதனங்களின் அசுர வளர்ச்சியினால் மாணவர் ஓடி விளையாடித் திரிந்த காலம் போய் vedio games மாய உலகில் விளையாடுவதற்கும் பழக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் மீது திணிக்கப்படும் அதீத கல்விச் சுமை காரணமாகப் பாடசாலைகளிலும் தனியார் வகுப்புக்களிலுமே முழுநேரத்தையும் செலவிட வேண்டிய நிலையில் உள்ளனர். சுறுசுறுப்பான வாழ்க்கை முறையொன்றைப் பின்பற்றுதல் உடல் ஆரோக்கியத்திற்கும் மனவளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரியும்.

"நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்புச் செயல்"

நோய் இன்னது என்று ஆராய்ந்து நோய்க்கு மூல காரணம் இன்னது என்று கண்டுபிடித்து அது குறைக்கும் வழியைத்தேடி உடலுக்குப் பொருந்துமாறு மருத்துவம் செய்தல் வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தைப் போலவே இக்காலப்பகுதியில் உளவிருத்தியும் பெருமளவு ஏற்படுகின்றது. குடும்ப நிலைமை, குடும்ப அங்கத்தவர் பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், மத நம்பிக்கைகள், பொருளாதார நிலைமை பல சமூகக் காரணிகள் உடல் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பிறப்பிலேயே ஏற்படும் சில குறைபாடுகள் சில மாணவர்களின் குறைந்த உளவளர்ச்சிக்கு காரணயாக அமையலாம். இப்பிரச்சனையை சீர் செய்வது கடினம் என்ற போதிலும் வேறு காரணங்களால் ஏற்படும் உளச்சிக்கல்களை பெற்றோர்களின் சரியான கண்காணிப்பு வழிநடத்தல் மூலமும் ஆசிரியர் உதவியுடனும் சுலபமாக சரி செய்ய முடியும். ஆரோக்கியமான சமூக சூழல் சிறந்த நண்பர் குழாம் விளையாட்டு என்பன உள ஆரோக்கியத்திற்கு வகைசெய்யும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்"

எவ்வளவு கற்றுத் தேர்ந்தவராயினும் உலகியல் நடைமுறையை ஒழுங்காகப் பின்பற்றாதவர் கல்லாதார் என்றே கொள்ளப்படுவர்.

சமூக ஆரோக்கியம் என்பது இன்று உடல் உள ஆரோக்கியங்களைப் போலவே மிக முக்கியமானதொன்றாக மாறியுள்ளது. மனிதன் ஒரு சமூகப் பிராணி என்ற முறையில் இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் தலைமையேற்று நடாத்தப் போகும் சமூகத்தின் இயல்புகளைத் தீர்மானிக்கின்றனர். ஆயுதப் போராட்டம், யுத்த இடப்பெயர்வுகள் எனப்பலதரப்பட்ட காரணங்களால் பாதிக்கப்பட்ட மாணவர் சமூகம் இன்று வாழ்வெட்டுக் கலாச்சாரம் போதைப்பொருள் பாவனை என்பவற்றுக்கு உட்பட்டிருத்தல் கண்கூடு. வெளிநாட்டு மோகம் புலம் பெயர் நாடுகளில் இருந்து கிடைக்கும் வருமானம் என்பன எமது மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைவதற்கும் வேலைவாய்ப்பின்மை அதன் தொடர்ச்சியாக நீளும் சமூகப் பிறள்வுககள் என்பவற்றுக்கு ஏதுவாக அமைந்துள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளில் மாணவர் எதிர்நோக்கிய குடும்பக் கட்டமைப்பு மாற்றங்களால் ஏற்படும் சிக்கல்கள் எமது நாட்டிலும் அதிகரித்தவண்ணம் உள்ளன. விவாகரத்துக்கள் பதின்மவயதுக் கருத்தரிப்புக்கள் போன்ற பிரச்சனைகளால் குடும்பத்தில் ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் மாணவர்களையும் குழந்தைகளையும் தாக்குகின்றன. தனிப் பெற்றோரால் வளர்க்கப்படும் குழந்தைகளின் சமூக ஆரோக்கியம் தொடர்பில் தொடர்ந்து அதீதகவனம் எடுக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

எமது சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பாகிய குடும்பத்தை குழந்தைக்கு மகிழ்ச்சிகரமாகப் பேணுதல். நற்பழக்கவழக்கம் உடைய நண்பர் குழாம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள வழிவகுத்தல். சமூகவிரோத சக்திகளிடம் இருந்து மாணவர்களைப் பாதுகாப்பதில் விழிப்பாக செயற்படுதல் என்பன சமூக ஆரோக்கியத்தை கட்டியெழுப்ப உதவும். பெற்றோர்களும் ஆசிரியர்களுமே குழந்தைகளின் முன்மாதிரிகள் என்பதானால் அவர்களும் உரிய பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியமாகின்றது.

“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது”

நிகரில்லாத இறைவனைச் சிந்தித்து இருப்போரைத் தவிர மற்றவர்களுக்கு தீவினைப்பால் உண்டாகும் கவலையை மாற்றுதல் என்பது அரிதாகும் என வள்ளுவர் பெருந்தகை கூறியுள்ளார்.

ஆன்மீக ஆரோக்கியம் என்பது மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு எமக்கு மேலான ஒரு சக்தி இருப்பதை உணர்ந்து கொள்ளுதலாகும். எந்த மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும் நாம் செய்யும் நல்ல விடயங்களுக்கும் தீய விடயங்களுக்கும் அவற்றிற்கு ஏற்றாற் போல பலன் கிடைக்கும் என்பதைப் புரிந்து கொள்ள உதவும். மத நம்பிக்கை என்ற போர்வையில் மதத்தின் பெயரால் வியாபாரம் நடத்துபவர்களையும் சுயலாபத்திற்காக மக்களுடைய மூட நம்பிக்கைகளை வளர்ப்பவர்களையும் இனம் கண்டு அவர்களின் பிழையான வழிநடத்தலில் இருந்து மாணவர்களைப் பாதுகாப்பதும் அவசியமானதாகும். ஆன்மீக ஆரோக்கியம் எமது உள ஆரோக்கியத்துடன் மிகவும் பின்னிப்பிணைந்து இருப்பதுடன் முறையான ஆலய வழிபாடு, தியானம், யோகாசனம் என்பவற்றால் பெரிதும் மேம்படும்.

எனவே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய சக்திமிக்க இன்றைய மாணவர் சமூகத்தின் ஆரோக்கிய வாழ்வு தொடர்பில் அதிக அக்கறை எடுக்கவேண்டியது அவசியம். ஆரோக்கியமான மாணவர் சமுதாயம் எமது சமூகத்தின் மிகப் பெரும்பலமாக விளங்கக்கூடியது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப எமது சமூகத்தில் இன்றைய தலைமுறையினரின் எதிர் கொள்ளும் மாறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து ஆரோக்கிய வாழ்வை கட்டியெழுப்ப முன்னிற்க வேண்டும்.

**திருமதி சாமினி சுதர்சன்.**

**பழையமாணவி.**



தரம் – 01 மாணவர்கள், உபஅதிபர், அதிபர், வகுப்பாசிரியர்.



தரம் – 02 மாணவர்கள், உபஅதிபர், அதிபர், வகுப்பாசிரியர்.



தரம் – 03 மாணவர்கள், உபஅதிபர், அதிபர், வகுப்பாசிரியர்.



தரம் – 04 மாணவர்கள், ஆசிரியர், உபஅதிபர், அதிபர், ஆசிரியர்.



தரம் – 05 மாணவர்கள், உபஅதிபர், அதிபர், வகுப்பாசிரியர்.



கோட்டமட்ட வினாடி வினாப் போட்டியில் 3ம் இடம் பெற்ற
தரம் 5 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



வள்ளுவன் இல்லம் – 2017



கம்பன் இல்லம் - 2017



இலங்கை நீரிழிவு சம்மேளனத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் நான்காம் இடம் பெற்ற மாணவன் இ. தமிழோவியன்




இந்துசமய கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் விருதுப் போட்டியில் தேசியமட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள்



எழுத்தாக்கம் 3ம் இடம்
செல்வன். சொ. ஆதவன்

விருதுபெற்ற மாணவர்கள் பாடசாலை அதிபர், மற்றும் அறநெறி ஆசிரியருடன்



பொதுஅறிவு மற்றும்
மனப்பாங்குப் பரீட்சை – 1ம் இடம்
செல்வி. உ. அக்சனா



# வலயமட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்



செல்வன். வி. ஷைலானந் சர்மா
சித்திரப்போட்டி 3ம் இடம்.



செல்வி. உ. அக்சனா
விரைவு கணிதம் 3ம் இடம்.



செல்வி. ச. ரக்ஷியா
பாவோதல் 3ம் இடம்



செல்வி. ச. ரக்ஷியா
ஆங்கிலதினப் போட்டி 3ம் இடம்

# கோட்டமட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர்



செல்வன். கு. சயன்
சித்திரப்போட்டி 3ம் இடம்.



செல்வி. கௌ. நீரஜா
ஆங்கிலதினப்போட்டி 3ம் இடம்.

## கால்கோள் விழா - 2017





# 2017 ஆம் ஆண்டு நிகழ்வுகள்











## அலைபேசியினால் ஏற்படும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்

எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்பிலும் நன்மையும், தீமையும் கலந்தே இருக்கிறது. அந்த வகையில் தற்போது மக்களில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருவது அலைபேசி (செல்போன்) என்ற சாதனமாகும். அமைச்சர்கள் முதல் நம் ஊரில் ஆடு மேய்ப்பவர் வரை இதைப்பயன்படுத்தாதவர்களே இல்லை எனலாம். நிச்சயமாக இதில் நன்மைகள் இருந்தாலும் இதனால் வரும் தீமைகளையும் நாம் உணர்ந்திருப்பது நல்லது.

இன்றைய அறிவியல் உலகில் தவிர்க்க முடியாத ஒரு அத்தியாவசியப் பொருளாகிவிட்ட செல்போனைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் அதிகம் என்றாலும் அதன் பயன்பாட்டைக் கருதி தவிர்க்கமுடியாமல் போவதுதான் உண்மை.

இந்த அலைபேசியினால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை சிறந்த விரைவாக எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய தொலைத்தொடர்பு சாதனம் இது. வணிகர்கள், பயணிகள். மருத்துவர்கள் என பல தரப்பட்ட மக்களுக்கும் அவசரத் தொடர்பு ஆதரவாளனாக அலைபேசி விளங்குகின்றது.

இருப்பினும் செல்போனின் ஆபத்துக்கள் பற்றியும், தீமைகள் பற்றியும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அறிவியலாளரும் சமூக ஆர்வலர்களும் அலைபேசியினால் கிடைக்கும். நன்மைகளைவிட ஏற்படும் ஆபத்துக்களே அதிகம் என்று இவர்கள் எச்சரிக்கின்றனர்.

**01. உயிருக்கே ஆபத்து**

அலைபேசியை அதிகம் பயன்படுத்துவது உயிருக்கே உலைவைக்கும் என்றால் நம்புவதற்கு கொஞ்சம் கடினம்தான் ஆனால், அது உண்மைதான் ஷீலாப்ரைஸ் என்னும் அமெரிக்கப் பெண்மணி தான் வேலை செய்யும் அலுவலகத்தில் தொடர்ந்து செல்போனைப் பயன்படுத்தியதால் மூளைப் புற்றுநோய்க்குப் பலியானார். டாக்டர் நாக்மன் பிராட்பர் என்னும் மருத்துவர் இந்த உண்மையை நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் சமர்ப்பித்து முதல் எச்சரிக்கை மணியை அடித்தார்.

**02. உருவாகும் நோய்கள்.**

செல்போனை பயன்படுத்தும் அனைவரும் சாவை உடனே சந்தித்து விடுவதில்லை. ஆனால் நிச்சயமாக நோய்களால் தாக்கப்படுவர் என்பதை பல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக செல்போன் வெளியேற்றும் மின்காந்த அலைகள் லுக்கேமியா என்னும் இரத்தப் புற்றுநோய், தோல் புற்றுநோய்கள், வலிப்பு நோய் மற்றும் மூளைப்பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்தும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அத்துடன் அலைபேசியை அதிகம்

பயன்படுத்தும் ஆண்களுக்கு ஆண்மைக் குறைவு ஏற்படும் என்றும் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து முப்பது நிமிடங்கள் அலைபேசியில் பேசிக்கொண்டிருந்தால் ஒலியை உள்வாங்கக்கூடிய நரம்புகள் பெரிதும் பாதிப்படைந்து அதன் மூலம் மூளை செயலிழக்கும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது. தொடர்ந்து மூளையில் இரண்டுவகையான (Gliomas, Acoustic neuiomas) புற்றுநோய் கட்டிகள் உருவாவதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து அதிகநேரம் பேசும்போது ஏற்படும் கதிர்வீச்சு கழுத்து, தலைப்பகுதியில் இருக்கும் நரம்புகளுக்கு அதிர்வை உண்டாக்குவதால் நரம்புத் தளர்ச்சி தொடர்பான நோய்கள் வர அதிகம் வாய்ப்புள்ளது. அதேபோல் செல்போனை அதிர்வு நிலையில் (Vibrale mode) வைப்பதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் `Radialion' எனப்படும் இந்தக் கதிர்கள் மரபணுவையே பாதிக்கக்கூடியதும் அது மூன்று தலைமுறை வரை பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்குத் தாக்கம் கொண்டவை.

மற்றவர்களைத் தொடர்பு கொள்ளும் பொழுது எதிர்முனையில் இருப்பவர் அழைப்பை ஏற்படுத்தும் காதில் வைத்துப் பேசுவது நல்லது. ஏனென்றால் பேசும் பொழுது ஏற்படும் கதிர்வீச்சு அளவைவிட 'ரிங்' போகும் பொழுது 14 மடங்கு அதிகமான கதிர்வீச்சை வெளிப்படுத்துகிறது. செல்போன்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதற்காக மேல் உறையைப் (cover) பயன்படுத்துகிறோம். ஆனால் அது போனுக்கு மட்டும்தான் பாதுகாப்பு நமக்கு பாதிப்புதான். பேசும்பொழுது வெளியிடப்படும் கதிர்வீச்சுக்கள் வெளியேறாமல் நம் உடலை அதிகமாக பாதிக்கும். எனவே முடிந்தவரை நம் பாதுகாப்பை நாமே பார்த்துக் கொள்வோம்.

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய கார்சினோ ஜெனிக் (2பி) பட்டியலில் ஏற்கனவே வானப்புகை, குளோரோ பார்ம், காரீயம், பூச்சிகொல்லி மருந்துகள், சில ஊறுகாய் வகைகள் இடம்பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் தற்போது அலைபேசியும் இடம்பெற்றுள்ளது.

இந்த அலைபேசியை அதிகம் பயன்படுத்துவோர்களில் 40 சதவீதம் பேர்களுக்கு மூளைப்புற்றுநோய் வருகிறது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கிறது. நாம் எவ்வளவு நேரம் செல்போனில் பேசுகிறோம் என்பதை அளவெடுத்து அவரவரே தங்கள் மூளையை சோதிக்கொள்ள வேண்டும் என்கின்றனர்.

மேலும் நம் ஊர்களில் குழந்தைகளிடம் அலைபேசியைக் கொடுத்து அதிக நேரம் எதிர்முனையில் இருக்கும் உறவினர்களிடம் பேசச் சொல்கின்றனர். இது தவறான வழிகாட்டுதலாகும். செல்போனை குழந்தைகளிடம் கொடுத்து நம்மை அறியாமலேயே குழந்தைகளை நோயாளிகளாக ஆக்குகிறோம். காரணம்

பெரியவர்களைவிட குழந்தைகளுக்கு மண்டை ஓடானது மிகவும் மெல்லியதாக இருப்பதால் செல்போனின் கதிரவீச்சு நேரடியாக மூளையைப் பாதிக்கும். அதனால் 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளிடம் செல்போனைக் கொடுக்காதீர்கள் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

**03. சுற்றுச் சூழலுக்கு ஆபத்து.**

இன்று செல்போன் கோபுரங்கள் ஏராளம் நிறுவப்பட்டுள்ளன. இவை மூலம் பரவும் மின்காந்த அலைகள் சுற்றுச் சூழலுக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று சூழல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பறவை இனங்கள், சிறு பூச்சிகள் வண்டுகள் போன்றவை இந்த மின்காந்த அலைகளால் தாக்கப்படுகின்றன என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**04. வீணாகும் நேரம்**

அறிவியல் தளத்திலிருந்து, சமூகத்தளத்திற்கு வந்தால், இன்னும் பல தீமைகளைச் சந்திக்கிறோம். இவற்றுக்கு ஆய்வுகளோ, அறிக்கைகளோ தேவையில்லை. நம் அன்றாட அனுபவங்களே இவற்றை உறுதிப்படுத்துகின்றன. செல்போனின் வரவுக்குப் பிறகு ஏராளமான நேரம் விரயமாக்கப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். குறிப்பாக, இளைஞர்கள், மாணவர்கள் தங்களின் பொன்னான நேரத்தை செல்போனில் உரையாடியும் குறுஞ்செய்திகள் அனுப்பியும் வீணாக்குகிறார்கள். அவசியமான பணிகளுக்கு செல்போன் பயன்படுத்தப் படுவதைவிட பொழுதுபோக்கிற்கும், உறவுத்தொடர்புகளுக்குமே இன்று அதிக நேரம் செல்போனில் செலவாகிறது.

**05. பண விரயம்**

செல்போனில் அதிகம் பேசப்பேச பணம் அலையாகக் கரைகிறது. முன்பெல்லாம் தொலைபேசி மட்டுமே இருந்த இல்லங்களில் கூடுதலாக செல்போன்களும் பயன்படுத்தப்படுகின்றன. செல்போனின் செலவு அவசியமற்ற செலவு என்பதை பெரும்பாலனவர்கள் உணராத அளவுக்கு செல்போன் பைத்தியம் மக்களை ஆட்கொண்டிருக்கிறது என்பதும் வேதனையான உண்மை.

**06. பாழாக்கும் படிப்பு**

இலங்கையில் மட்டுமல்ல பெரும்பாலான இதர நாடுகளிலும் மாணவர்கள் செல்போனை பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை வலுவடைந்து வருகிறது. மாணவர்கள் தங்களின் நேரத்தையும், கவனத்தையும் செல்போன் மூலம் இழந்து வருகின்றனர். அது மட்டுமல்ல, செல்போனின் பயன்பாடு மூளையின் நரம்புகளைப் பாதித்து, கவனம் செலுத்தும் ஆற்றலைக் குறைக்கிறது. நினைவாற்றலைப் பாதிக்கிறது என்பதையும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே மாணவர்கள் நிச்சயமாக செல்போனை பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

**07. அடிமைப் பழக்கம்**

மது, போதைப் பொருள் போலவே செல்போனின் பயன்பாடும் ஓர் அடிமைப்பழக்கமாக மாறிவருகிறது. இளைஞர்கள் செல்போனுக்கு அடிமையாகி விட்டனர் என்றும், செல்போனை பயன்படுத்தாமல் இருந்தால் பித்துப் பிடித்தவர் போலாகிவிடுகின்றனர் என்றும் சீனாவில் ஆய்வு செய்து கண்டிருக்கின்றனர். நமது நாட்டிலும் செல்போன் அடிமைகள் நிறையப்பேர் இருக்கின்றனர் என்று அடித்துச் சொல்லாம்.

**08. பண்பாட்டுச் சீர்கேடு**

பேருந்து நிலையம், மருத்துவமனை போன்ற பொது இடங்களில் கூட அருகே இருக்கும் சக மனிதர்களைப் பற்றித்துளியும் கவலைப்படாமல் செல்போனில் வெட்டிப்பேச்சுப் பேசும் நாகரீகமின்மை எங்கும் பரவி வருகிறது. வழிபாட்டுத் தலங்கள், கருத்தரங்குகள் போன்ற இடங்களிலும்கூட செல்போனை அணைத்துவிடுங்கள் (off) என்று அறிவிப்புச் செய்யும் அவல நிலையில் இருக்கிறது நம் பண்பாடு.

**09. விபத்து**

செல்போனைப் பயன்படுத்திக் கொண்டே வாகனம் ஓட்டுவதனால் விபத்துக்கள் நிகழ்கின்றன. என்பதை உணர்ந்து விழிப்புணர்வுப் பதாகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் இந்த இழிவான பழக்கம் குறைந்த பாடில்லை என்பதை அன்றாடம் நாம் பார்க்கிறோம்.

**10. ஒழுக்கவியல் தீமைகள்.**

உயிர் காக்க, அவசரத் தேவைகளுக்கு பயண நேரத்தில் என செல்போன் நல்ல பயன்பாடுகள் பல இருந்தாலும்கூட, அதே அலைபேசி பல தீய செயற்பாடுகளுக்கும் பயன்படுகிறது என்பது அச்சத்தைத் தருகிறது. கொலை, கொள்ளை, விபச்சாரம், பெண்களை இழிவுசெய்தல் போன்ற சமூகத் தீமைகளுக்கும் செல்போனை பயன்படுத்தி தொழில்நுட்பம் என்பது இருபுறமும் கூர்வாய்ந்த கத்தி என்பதை எண்ணுகின்றனர் சமூக விரோதிகள்.

இன்னும் பலவற்றை அடுக்கலாம் எடுத்துக்காட்டாக செல்போனைப் பயன்படுத்துவதால் இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கைக்கூட குறைந்த போகிறது என்று ஆன்மீகவாதிகள் குறைசொல்கின்றனர்.

**சில பரிந்துரைகள்**

1. அறவே நிறுத்தலாம் செல்போன் இல்லாமலும் நிறைவான வாழ்வு வாழ முடியும் என்று நம்புகின்றனர். கொள்கைப் பிடிப்புள்ள சிலர் மனம் இருந்தால் நிச்சயம் நிறைவேற்றலாம்.

2. நேரக் குறைப்பு கண்டிப்பாக ஒரு நாளில் எவ்வளவு நிமிடங்கள் செல்போனில்

பேசுகிறோம் என்பதைக் கணக்கிட்டு அதைக் குறைத்துக் கொள்ளலாம்.

3. வாரம் ஒரு நாள் விடுமுறை வாரத்தில் ஒருநாளைத் தேர்வு செய்து அந்த நாள்முழுவதும் செல்போனுக்கு ஓய்வு கொடுப்பது நல்ல ஒரு செயல்.

**செல்போனின் பாதிப்பிலிருந்து மீள**

1. செல்போனை (வைப்பரேட்) அதிர்வு நிலையில் இருப்பதைத் தவிர்க்கவும்.
2. செல்போனை சட்டையின் இடது பக்கவாட்டில் வைக்க வேண்டாம். இதனால் இதயத்தை கதிர்வீச்சு பாதிக்கும் வாய்ப்பைக் குறைக்கலாம்.
3. செல்போனை பேசும் பொழுது இரண்டு ஓரங்களை மட்டும் பிடித்துப் பேசவும் கைகளால் முழுவதுமாக பின் பக்கத்தை மூடிக் கொண்டு பேச வேண்டாம். காரணம் உங்கள் செல்போனில் (Internal Antena) உள்ளிருக்கும் அன்ரனா பெரும்பாலும் பின் பக்க மத்தியில் வைத்து இருப்பார்கள். இதற்கான வழிமுறையை உங்கள் Manual புத்தகத்தில் பார்த்துக் கொள்ளவும்.
4. செல்போனில் பேசும் பொழுது வலது பக்க காதில் வைத்துப் பேசாமல் இடது பக்கக் காதில் வைத்துப் பேசவும் வலது பக்கத்தில் தான் மூளை பாதிக்கப்பட அதிக வாய்ப்பு உள்ளது.
5. செல்போனில் அதிகம் விளையாட்டு விளையாடாமல் இருப்பது நல்லது காரணம் நம் கண்களில் உள்ள லென்ஸ் பகுதி பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது.
6. தூங்கும்போது செல்போனை அருகிலேயே வைத்துக் கொண்டு தூங்கும் பழக்கம் இருந்தால் உடனே அப்பழக்கத்தைக் கைவிடுங்கள்.
7. காதில் வைத்துப் பேசுவது ஹெட் போனில் பேசுவது போன்றவைகளை விட செல்போனில் ஸ்ப்பீக்கர் வசதியை பயன்படுத்தி பேசுவது சிறந்தது.
8. செல்போனில் சார்ஜ் தீரும் கடைசி நேரத்தில் பேசுவது மிக ஆபத்தானது சார்ஜ் தீரும்போது செல்போனிலிருந்து அதிகமான கதிர்வீச்சு வெளிவிடுவதால் நம் மூளையை அக்கதிர் பெரும் பாதிப்பிற்குள்ளாகி விடும்.

செல்போன் அடிமைகள் ஆகிவிட்ட நம்மால் இதை எல்லாம் கண்டு பயந்து மிகவும் அரிய அவசியமான கண்டு பிடிப்பான இந்த செல்போனை "இனி வேண்டாம்" என தூக்கி எறிந்து விட முடியுமா? முடியவே முடியாது அல்லவா?

எனில் இதைநாடினால், சில மாற்ற வழிகளை கைக்கொண்டு மேற்படி பயங்கர விபரீதத்திலிருந்து தப்பிப்போம். அதுவே புத்திசாலித்தனம்.

**திருமதி. உ. விநாயகமூர்த்தி**
**பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)**
**கல்விமாணி (B.Ed)**

## ஆரம்பக் கல்வி ஆசிரியரும் மாணவரும்

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற் பிறக்கையிலே-
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'
என்பது முன்னோர் கண்ட கூற்று. ஆனால் தற்போது குழந்தைகள் நல்லவராவதும் தீயவராவதும் ஆசிரியர் வழிகாட்டலிலே என்பது மிகவும் பொருத்தமானதாகும்.

ஒரு குழந்தையானது தாயின் கருவறையில் இருந்து இவ்வுலகைக் காண வெளிவந்த பின் தனது தாய் தந்தை உறவினர் நண்பர் அயலவர்கள் என அறிந்து பல்வேறு விடயங்களை தெரிந்து கொள்கிறான். ஒரு குழந்தை தனது ஐம்புலன்களினூர்டாக அறிந்து கொள்கின்ற விடயங்களில் நல்லவைகளும் தீயவைகளும் இருக்கலாம் ஆனால் அவற்றுள் நல்லவை கெட்டவை எது என தெரியாமலே அறிந்து கொண்ட விடயங்களை தன மழலை மொழியாலும் முல்லைச்சிரிப்பாலும் மற்றவர் மனதை கொள்ளை கொள்கின்ற சிறந்த பிள்ளையாக காணப்படுகின்றான்.

இவ்வாறு பல்வேறுபட்ட சூழலில் இருக்கின்ற குழந்தைகள் ஐந்து வயதானதும் ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக பாடசாலைகளில் வந்து சேருகின்றனர். இவ்வாறு பாடசாலைக்கு வரும் குழந்தைகள் தனது ஆசிரியரைக் கண்ட போது அகமும் முகமும் மலர்ந்து நிற்கின்றனர் அக்குழந்தைகளுக்கு முழுமையான அன்பினை எவ்வளவிற்கு கொடுக்க முடியுமோ அவ்வளவிற்கு அவ்வளவு அன்பினைக் கொடுத்து ஒரு ஆரம்பக் கல்வி ஆசிரியர் குழந்தைகளைக் தன்வசப்படுத்த வேண்டும்.

முதலில் பாடசாலைக்கு வர மறுக்கின்ற குழந்தை படிப்படியாக பாடசாலையை விட்டு வீடு செல்வதற்கு தயக்கம் காட்டுகிறது.எங்கே பாடசாலையை விட்டு சென்றாலும் ஆசிரியரை விட்டு செல்ல வேண்டும் என்ற ஏக்கம் குழந்தையின் மனதில் குடி கொள்கிறது ஒவ்வொரு குழந்தையும் பல்வேறுபட்ட இயல்புகளைக் கொண்டன தனியாள் வேறுபாடுகளைக் கொண்டன அவ்வாறான குழந்தைகளை ஒன்று சேர்த்து ஒவ்வொரு குழந்தையும் விரும்புகின்ற வண்ணம் குழந்தைள் தாம் கற்கின்றோம் என்று அறியாது கற்பதற்கான கல்வியினை எவ்வாறு வழங்கலாம் என்று குழந்தைகளுக்காகவே சிந்தித்து செயலாற்றுபவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே.

ஆசிரியர்களே எதிர் காலச் சிற்பிகளை உருவாக்குபவர்கள் என போற்றப்படுகின்றன ஒரு குழந்தையானது தனது ஆரம்பக் கல்வியில் சிறந்த முறையில் கற்றுத்தேறும் அக் குழந்தையின் எதர்காலத்தை சிறப்பாக எதிர் கொள்ளும் மேலும் சவால்களை எதிர் நீச்சல் போட்டு வென்று தனது இலட்சியக் கனவுகளை நிறைவேற்றும் எனவே ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சியில்

ஆரம்பக் கல்வி ஆசிரியரின் பங்கு முக்கியமானதாகும் தன்னிடம் ஆரம்பக்கல்வியை பெற்ற ஒரு குழந்தை எதிர்காலத்தில் சிறந்தவராக விளங்குவதனை கேள்விப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ் ஆசிரியரானவர் அக்குழந்தையை மண்ணில் ஈன்ற பொழுது தாய் எவ்வாறான மகிழ்வடைந்தாளோ அதனைப்போன்று பன்மடங்கு உவகையுறுகின்றாள்.

எந்த நிலையில் இருக்கும் குழந்தையும் ஒரேமாதிரியான கண்ணோட்டத்தில் நோக்கி குழந்தைகளின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சி என குழந்தைகளோடு தானும் குழந்தை ஆகின்றாள் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஒவ்வொரு குழந்தைகளினதும் திறமைகள் தனித்துவங்கள் அவர்களின் ஆளுமைப்பண்புகள் முதலானவற்றை இணங்கண்டு அவர்களிற்காகவே தம்மை அர்ப்பணிக்கும் திறன் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்காகவே உரிய உயரிய பண்புகள் ஆகும் அப்பண்புகளான

1. தாயுள்ளம் கொண்டவராக இருத்தல்
2. சிறந்த வழிகாட்டல் ஆலோசராக இருத்தல்
3. நற் பண்புகளையும் தூய சிந்தனைகளையும் உடையவராக இருத்தல்
4. விளையாட்டு கலைகளில் ஆர்வம் உடையவராக இருத்தல்
5. பெற்றோர்கள் மற்றும் ஏனைய அனைவருடனும் சுமுகமாகப் பழகும் ஆற்றல் உடையவராகவும் நல்லுறவைப் பேணுபவராகவும் இருத்தல்
6. சகிப்புத்தன்மை பொறுமை என்பன உடையவராக இருத்தல்
7. சூழலை நன்கு விளங்கிக் கொள்பவராகவும் ஆராய்ந்து நோக்கும் திறன் தேடி அறியும் திறன் என்பன உடையவராக இருத்தல்
8. பிள்ளைகள் விரும்பும் வண்ணம் செயற்படுபவராகவும் அதே வேளை வகுப்பினை தன்து கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியவராகவும் இருத்தல்
9. பிள்ளைகளின் விருப்பங்களை புரிந்து அவர்களுடன் இணைந்து பிள்ளைகளுடன் பிள்ளைகளாக செயற்படக்கூடியவராகவும் இருத்தல்
10. ஆடல் பாடல் விளையாட்டு மூலம் கல்வியினை முன்னெடுத்துச் செல்லக்கூடியவராக இருத்தல்
11. தன்னிடம் வரும் குழந்தைகள் பாடசாலைக்கு விரும்பி வருவதற்கு ஏற்ற வகையில் குழந்தையை தயார்படுத்தக்கூடியவராக இருத்தல்
12. பிள்ளைகள் கற்கின்றோம் என்றறியாது கற்கும் ஆற்றலை விருத்தி செய்யக்கூடியவராக இருத்தல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் ஒரு ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு இருக்கின்ற பட்சத்தில் அப்பாடசாலையானது மிகவும் உன்னதமான வெளிப்பாடுகளை வெளிப்படுத்துவதற்காக அமையும் பெற்றோரும் ஏனையவரும் இத்தகைய பாடங்களை விரும்பி தமது பிள்ளைகளை எவ்வளவு தூரமாயினும் கொண்டு வந்து விடுவதற்கு முற்படுவர் இவ்வாறு ஆசிரியர் செயற்படும் பட்சத்தில்

மாணவர்களுக்கு இது எங்கள் ஆசிரியர் என்ற மனப்பாங்கு ஏற்படும் போது ஆரம்பக் கல்வி உறுதி நிலை ஏற்படும் அவ்வாறான உறுதி நிலையாவன

1. சுய மொழியில் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தல்
2. நன்மை தீமையை பிரித்தறியும் மனப்பான்மையை விருத்தி செய்தல்
3. சுயமாக ஆக்கங்களில் ஈடுபடக்கூடிய ஆற்றல் வளர்த்தல்
4. ஒரு சமூகத்திற்கு ஏற்றவனாக ஒருவனை உருவாக்குதல்
5. சிறந்த சமூக பழக்கங்களை ஏற்படுத்தல்
6. நாட்டின் ஏனைய சமூகங்களில் பாரம்பரியங்களை மதிக்கும் மனப்பான்மையை ஏற்படுத்தல்
7. தேசிய ஒற்றுமையை பேணுவதற்கான ஆற்றலை வளர்த்தல்
8. தொழிற் கல்வி பெற்று வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல்
9. ஒழுக்க விழுமியங்களை கற்றுக் கொள்ளல்
10. மூதாதையர்களின் வரலாறுகளை அறிந்து அவற்றைப் பின்பற்றிக் கொள்ளல்
11. செயற்பாட்டு முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
12. மேற்படி நோக்கங்களுடன் வளர்ந்து வரும் சமூக விஞ்ஞான விருத்திற்கேற்ப இயைபாக்கம் பெறும் உலகை கட்டியெழுப்பும் பணிக்கு தம்மையும் அர்ப்பணிக்கும் சிறந்த மனப்பாங்கையும் கல்வி உருவாக்குதல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தை மையமாகக் கொண்டு பாடசாலைகளில் ஆரம்பக்கல்விச் சிறார்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் பிரதானமானவர். அவரது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தில் பொதிந்துள்ள தேசியக் குறிக்கோள்களையும் அவற்றை வெளிப்படுத்தும் தேர்ச்சிகளையும் சிறுவர்களின் மூலம் தோற்றுவிக்கும் வலிமை கொண்டவை. அத்துடன் சிறுவர் ஒவ்வொருவரும் தம்மகத்தே மறைந்துள்ள ஆற்றல்களையும் திறமைகளையும் தாமாக வெளிக்கொணரும் வகையில் செயற்படும் ஆர்வம் மிக்கவராகவும் ஆசிரியர் விளங்குதல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒரு சகலகலா வல்லுநர் என்ற வகையில் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவது ஆரம்பக்கல்விப் புலத்தில் வேண்டப்படும் விசேட நோக்காகும். பாடத்துறை ஒன்றில் மாத்திரம் தேர்ச்சி பெற்றிருத்தல் போதுமானதெனக் கருதாமல் அனைத்து வாழ்வாதார பாடத்துறைகளிலும் அறிவும் பயிற்சியும் அவசியம் என்பதை உணருதல் வேண்டும். கவின்கலைகளும் கணிதம், மொழி ஆற்றல்களும் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கு அவசியமென்பது உணரப்படுகிறது. ஆடல், பாடல், விளையாட்டு, நடிப்பு என்பவற்றோடு ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் செயற்பாடுகளும் அவசியமாகும். இத்தகைய ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையே ஆரம்பக்கல்வி சிறார்களும்

விரும்புகின்றனர். அவர்களிடத்திலேயே கற்பதற்கும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் விரும்புகின்றனர். எனவே ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒருவர் பெற்றிருக்க வேண்டியப ண்புசார் விருத்தி பின்வரும் வகையில் அமைந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ஆரம்பவகுப்பு மாணவர்களின்அடிப்படைக்கல்வித் தேவைகளை அறிந்தும் உணர்ந்தும் செயற்படுவர்.
- ஒவ்வொரு மாணவர் பற்றிய விபரங்களையும் தெரிந்து கொண்டு அவற்றின் மூலம் பெறப்படும் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கி கற்றலில் மாணவரை ஈடுபடுத்தும் திறமை மிக்கவர்.
- மாணவரை நேசிப்பவர்.
- மாணவரை விருப்புடனும் அன்புடனும் கற்றலில் ஈடுபட வைக்கும் சிறந்த ஆற்றல் பெற்றவர்.
- மாணவரைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கற்றலில் தெளிவுபெறச் செய்பவர்.
- ஆடல், பாடல், நடித்தல் மூலம் மாணவர்களுடன் சேர்ந்தியங்கும் சிறப்புடையவர்.
- கற்பிக்கும் மொழி, கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடுகள் ஆகிய பாடப்பரப்புகளில் அறிவும் ஆற்றலும் பெற்று அவற்றை மாணவரிடத்தில் விருத்தியுறச் செய்யும் திறன் மிக்கவர்.
- ஒவ்வொருநாளும் நவீனமும் புலமையும் கலந்த புதியனவற்றை மாணவரின் முன்னிலையில் கொண்டு வருபவர்.
- தவறு செய்யும் மாணவருக்கு உடல்வருத்தும் வகையான தண்டனைகளை வழங்காது அவர்கள் மனம் திருந்தும் வகையிலான அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்பவர்.
- மாணவர்கள் புரிந்து கொள்ளும் வக்கையில் கருத்துச் செறிவான வார்த்தைகளால் தெளிவாக உரையாடுபவர்.
- மாணவரின் முதிர்வு தொடர்பான அறிவுடன் அவர்களின் மொழி ஆற்றலை மேம்படுத்தப் பொருத்தமான வார்த்தைகளால் கலந்துரையாடுபவர்.
- வாசிக்க உகந்த நல்லனவற்றை உற்றுப்பமைய அழகான எழுத்துக்களால் இலக்கண வழுவின்றி சிறப்பான மொழிநடையில் எழுதுபவர்.
- பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் மாணவர்களுக்கு முன்மாதிரியாகநடந்து கொள்பவர்.

இத்தகைய சிறப்புக்கள் ஒரு ஆரம்பக்கல்வி ஆசிரியரிடம் இருத்தல் அவசியமானது என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே "ஒரு ஆசிரியர் குழந்தையின் சிந்தனை ஆற்றல், தனித்துவங்கள், திறன்கள் என்பவற்றை அடையாளம் கண்டு அவற்றை வெளிப்படுத்த, வளர்க்க

உதவுவதனூடாக இலகுவான கற்றலால் ஊக்குவிக்கப்படுவார்" என்று கல்வியியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். மாணவர்களிடம் காணப்படும் இயல்பும் திறமையும் மாணவனுக்கு மாணவன் வேறுபடுவதால் இவர்களுக்கான கல்வித் தேவைகள், சமூகத்திறன்கள், சிந்தனைகள் வேறுபடலாம். எல்லோரையும் ஒரே நிலையில் வைத்து ஒரே முறையில் கற்பித்தலானது நிலைத்த பயனை அழிக்காது. எனவே மாணவர்களிடம் ஒரே நிலையான அறிவு, திறன், ஆற்றல் இருப்பதில்லை. இதனால் திறன்மிக்க மாணவர்களுக்கும் பின் தங்கிய மாணவர்களுக்கும் முழுமையான வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. இவ்வாறான தனியான வேறுபாடுகளை ஆசிரியர் நுணுக்கமாக அறிந்து அவர்களுக்கேற்ப போதிக்கும் நடைமுறைகளை மாற்றி வழங்குகின்ற போது தரமான கல்வியை பெற்ற மாணவர்களாக சமூகத்திற்கு அழிக்கப்படுவதில் திருப்தி காணலாம்.

"இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்கள்" இந்தக்கருத்து மாணவர்களுக்கு எதிர்காலத்தில் சமுதாயத்தை நாட்டைக்கட்டியெழுப்ப வல்லவர்கள் என்பதாகும்.

மாணவர் தனித்து தமது கருமங்களை ஆற்றுதல், சமூக நடத்தைகளைப் பின்பற்றுவதற்கான உத்திகளை ஆசிரியர் ஏற்படுத்தி பாடம் சார்ந்த, பாடம் சாராத பல தேர்ச்சிகளை மாணவர் பெறவேண்டும். இதனை ஏற்படுத்துவதற்கு ஆசிரியர் செய்முறைக்கற்றல், தூண்டிக்கற்றல், குழுக்கற்றல், சுயகற்றல், அனுபவங்களினூடாகக் கற்றல், அவதானக்கற்றல், விளையாட்டினூடாகக் கற்றல் என்ற அடிப்படையில் அதவுதல் வேண்டும். "ஒரு ஆசிரியப்பணி வெறுமனே கற்பித்தல் மட்டுமல்ல. இயக்குநராக இருந்து பிள்ளைகளுக்கு வழிப்படுத்துவதும் ஊக்கமளிப்பதும், ஊக்கத்தினூடாக கற்றலில் ஒரு மாணவரை விழிப்புக் கொள்ளச் செய்தல் வேண்டும்" என்று மொண்டசோரி அம்மையார்ர் கூறியுள்ளார்.

தரமான சமூகமானது தொழில்நுட்ப விஞ்ஞான மாற்றங்களுக்கேற்ப, அந்தச் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய திறன்களையும், சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப ஏற்படும் பிரச்சனைகள், நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கும் , முகாமை செய்யவும் ஆற்றல் கொண்டதாக இருக்க வேண்டும். அவ்வகையில் ஆசிரியர் மாணவர்களுக்கு முதல் நிலைத்தரவுகளினூடாக சரியான புலக்காட்சியை ஏற்படுத்தல். அன்றாட அனுபவங்களினூடாக கற்பித்து அதனூடாகச் செயற்பட வைத்தல், புதிய அறிவைத் தேடும் வகையில் தூண்டுதல், மாணவர்களின் நடத்தைக்கேற்ப துலங்கல்களுக்கு வழிப்படுத்தல் அவசியம், அவசியமற்ற விடையங்களைப் புரிந்து கொள்ளச் செய்தல். மாணவருடன் திறந்த மனதுடன் உரையாடுதல் போன்ற பயிற்சிச் செயற்பாடுகள் சமுதாய வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன.

சமூகத்தின் பிரஜைகளாக விளங்கும் மாணவர்களிடம் குழுமனப்பாங்கு, தலைமைத்துவப் பண்புகள், சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல், முரண்பாடுகளை முகாமை செய்தல், தொடர்பான ஆளுமைத்திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு பாடசாலையில் இணைக்கலைத்திட்ட கல்விச் செயற்பாடுகள் அவசியம். நாடகம், விவாதமன்றம், சாரணியம், அனர்த்த முகாமத்துவக்குழு, சிரமதானங்கள், கல்விச்சுற்றுலா, மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், இசைக்குழு, முதலுதவிச்சேவை போன்ற பல்வேறு செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி ஆசிரியர் வழிப்படுத்தலாம். இதன்மூலம் சமூக உணர்வுடன் கூடிய பல்வேறு பண்புகளை வளர்த்துக் கொள்ளமுடியும். இவை சமூகத்தில் சாதகமான பிரதிபலிப்பை ஏற்படுத்தும்.

**ஆக்கம்: திருமதி . க. இராசலிங்கம்**
**ஆசிரியர்**
**(பழைய மாணவி)**

## ஆரம்பப் பிள்ளைப்பருவத்தினரிடையே வளர்க்க வேண்டிய சமய பழக்க வழக்கங்களும் ஒழுக்க விழுமியங்களும்.

நமக்கு ஆரம்பத்தில் அடிப்படைக் கல்வியை செவ்வனே கற்றுத்தந்த எமது பாடசாலை இவ்வருடம் நூற்றாண்டை காணுவது மிகவும் பிரமிப்பாக உள்ளது. ஒவ்வொருவரது தொகுப்புக்களையும் நோக்கும் போது எமது பாடசாலையில் இவ்வளவு பிரமிக்கத்தக்க விடயங்கள் உள்ளன என்பதை நினைக்கும் போது ஒருகணம் எம்மை அறியாமலே ஒரு உணர்வு எமக்குள் தோன்றுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எமது பாடசாலை பழைய மாணவர்களும் பாடசாலைச் சமூகமும் ஒருங்கிணைந்து நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக "வரம்" என்ற நூலை வெளியிடுவது மிகவும் வரவேற்கத்தக்கது. இம்மலரானது எத்தனையோ கல்விமான்கள், பெரியோர்கள் போன்ற எல்லோரது ஆக்கங்களையும் சுமந்து எமது பாடசாலையின் பெருமையை உலகறியச் செய்து அனைவராலும் போற்றக்கூடிய ஒரு பாடசாலையாக திகழ்வது பெருமைக்குரிய விடயமாகும். இம்மலரிலே என்னாலான ஒரு சிறு தொகுப்பையும் வழங்கலாம் என முன்வந்துள்ளேன்.

நான் தேர்ந்தெடுத்த கருப் பொருளுக்கு அமைவாக சிறுவயது தொடக்கம் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களை உற்று நோக்கி அவ்வயதினரிடையே நல்லொழுக்கங்களை வளர்த்தல் நல்ல விடயமாகும். அந்த வகையில் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா", "தொட்டில் பழக்கம் சுடுகாடுவரைக்கும்" என்ற பழமொழிக்கமைய பிள்ளைகள் சிறுவயதில் இருந்தே நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தல் முக்கியமானதொன்று. ஒரு தாயின் வயிற்றில் கருவானது பதிக்கப்பட்டு வளர்ந்து வரும் போது தாயானவள் வெளியே இருந்து தான் நல்லவற்றை உண்டு, நல்ல செய்திகள், நல்ல இரசனையான பாடல்கள் போன்ற நன்மை பயக்கும் விடயங்களைச் செய்யும் போது வயிற்றில் வள்ரும் குழந்தையும் அதை செவிமடுத்து தானும் வயிற்றில் ஆரோக்கியமாக வளரும்.

மிக வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் பிறக்கின்ற குழந்தைகள் யாவும் புத்துணர்ச்சியுடனும் நல்ல சுறுசுறுப்பானவர்களாகவும் பிறக்கின்றார்கள். குழந்தை பிறந்தது முதல் மூன்று வருடங்கள் தனது பெற்றோருடன் கூடிய சூழலில் வளர்கின்றது. அக்காலத்தில் குழந்தை பெற்றோரின் வழிகாட்டலில் ஒற்றை, இரட்டை வார்த்தைகளை சூழலில் இருந்து பொறுக்கிக் கொள்ளும். மூன்று வயது முடிவில் முன்பள்ளியில் அடி எடுத்து வைக்கின்றது. அதிலிருந்து ஐந்து வயது முடிவு வரை முன்பள்ளிச் சூழலில் தனக்கு தேவையான கூட்டுச் சொற்களைக் கற்றுக் கொள்கின்றது. இவ்வயதிலே சமயம் சார்ந்த, வெவ்வேறு வருடாந்த விழாக்களினூடாக தனது இயைபாக்கத்தை ஓரளவு மாற்றிக் கொள்கின்றது. இப்பருவத்தில் செய்கின்ற பிழைகள் தம்மை அறியாமலே செய்வதால் இப்பருவம் சிறுபிள்ளைப் பருவம் எனக் கருதி அவர்களைக்

கண்டிக்கவோ தண்டிக்கவோ முடியாது. இப் பிள்ளைப்பருவத்தில் அவர்களது பேச்சு வார்த்தைகள் வித்தியாசமானவை.

தனது ஐந்தாவது வயது முடிந்த பின்னர் அடுத்த பாடசாலையாகிய பாலர்பிரிவு பாடசாலைக்கு மாற்றப்படுகின்றார்கள். அங்குதான் இவர்களுக்கான வெளி உலகை காணும் வாய்ப்பு கிடைக்கின்றது. இந்த வயதில் பல சூழலில் இருந்து வரும் சிறார்கள் எல்லோரும் ஒன்று கூடி தமது பேச்சு வழக்குகளை பகிர்ந்து கொள்கின்றார்கள். இங்கு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இடையேயான தொடர்பாடல் அதிகரிக்கின்றது. ஆசிரியருடனான தொடர்பாடலில் மாணவர்களுக்கு சமயம் சார்ந்த, பிற ஒழுக்கங்களை கற்றுக்கொடுக்கப்படுகின்றது. பாடசாலை நாட்களில் ஆசிரியர்களிடம் இருந்து கற்கின்ற ஒவ்வொரு விடயமும் பிள்ளைகளின் நினைவூட்டலில் பதியப்படும். இந்த வயதிலே கற்றுக் கொள்கின்ற ஒழுக்கங்கள் பிள்ளைகளின் மனதில் பசுமரத்தாணி போல் நிலைத்து நிற்கும். பாடசாலைகளிலே வருடந்தோறும் நடாத்தப்படும் சமயம் சார்ந்த, சமயம் சாராத விழாக்கள் மூலம் மாணவர்களிடையே ஒற்றுமை, பணிவு, அடக்கம், ஆன்மீகம், அன்பு பகிர்ந்தளிப்பு போன்ற ஒழுக்கங்கள் மேம்படுத்தப்படுகின்றது. குருபூசைகள், நவராத்திரி விழா, வெள்ளி ஆராதனை, சமயப்பண்டிகைகள் போன்றவற்றினூடாக சமயப் பண்புகள் வளர்க்கப்படுகின்றது.

இன்று எம்மவர்களிடையே சமயம் சார்ந்த சகல விடயங்களும் மறக்கப்பட்டு வருவது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும். சமயம் கற்றுக் கொள்ள நேரமின்றி வேறு வகுப்புக்களுக்கு (விசேட தனிவகுப்புகள்) செல்கின்றார்கள். சமய விழாக்களில் பங்கு கொள்வது போன்ற ஆன்மீகத் தொடர்பாடலில் கவனம் செலுத்துவது குறைந்து கொண்டே செல்கின்றது எனலாம். இதனால் எமது சமூகத்தினரிடையே சமயப்பற்று அழிந்து போகும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையைப் போக்குவதற்கு ஆரம்பப் பிள்ளைப் பருவத்தினருக்கு பெற்றோர் ஆசிரியர்கள் ஊடாகக் கற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது. ஆரம்பத்தில் இருந்து மாணவர்களுக்கு தினந்தோறும் திருநீறு சந்தனம் அணியும் பழக்கத்தையும் அவற்றை எவ்வாறு எந்த விரல்களால் அணியவேண்டும் என ஒவ்வொரு மாணவருக்கும் தெரியப்படுத்தி சமய பழக்கங்களை மாணவர்களிடையே உருவாக்குதல் வேண்டும். மாணவர்களிடத்தே விதைக்கப்படாத விதைக்கப்பட வேண்டிய சமயபண்பாட்டு விழுமியங்களை அவர்களின் மனதில் நிலைப்படுத்திக் கொள்ளுவதற்காக வாரம் தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளும் ஆலயத்திற்கு செல்லுவதற்கு வழிப்படுத்தி அவர்களை ஆலயத்திற்கு அழைத்துச் செல்ல வழிசமைக்க பெற்றோரும் ஆசிரியர்களுமே ஆவன செய்தல் வேண்டும்.

மேலும் வெவ்வேறு பாடசாலைகள், ஆலயங்களில் நடைபெறும் சமயம்சார்ந்த போட்டிகள், பரீட்சைகள் போன்றவற்றில் பங்கு கொள்வதற்கு

தூண்டுதல் வேண்டும். அயலில் உள்ள ஆலயங்களுக்கு செல்லுவதற்கு வழிகாட்ட வேண்டும். இதற்காகவே இந்து கலாச்சார அமைச்சினூடாக கிராமந்தோறும் அறநெறிப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டு சமயக்கல்வி ஊட்டப்பட்டு வருகின்றது. இப்பாடசாலை மூலம் மாணவர்கள் போதியளவு அறிவுதிறன் மனப்பாங்கு போன்ற திறன்களைப் பெற்று மனனம், பண்ணிசை, கலை, நாடகம் போன்ற ஆன்மீக தொடர்பாடல்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். கடந்த ஆண்டு இந்து கலாச்சார அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் விருது என்ற போட்டியில் எமது பாடசாலையில் கல்விகற்பவர்களும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் அறநெறிப்பாடசாலையில் அறநெறிக் கல்வியை கற்பவர்களுமான இரு மாணவர்கள் பங்கு கொண்டு ஒருவர் பொது அறிவு மனப்பாங்கு எழுத்துப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தையும், மற்றவர் எழுத்தாக்கப் போட்டியில்தேசிய மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளமை இப்பாடசாலைக்கு பெருமையாக உள்ளது. இவ்வாறு அனைத்து சிறார்களும் அறநெறிக்கல்வியை செவ்வனே கற்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் வழிநடத்த வேண்டும்.

இவ்வாறு கல்வி கற்று ஒழுக்க சீலர்களாக வேறு பாடசாலைக்கு மாற்றலாகி செல்கின்ற போது அதாவது தரம் 5 கல்வி கற்றபின் தரம் 6ல் கல்வி பயில்வதற்காக வேறு பாடசாலைக்குச் செல்லும் போது ஆரம்பப் பள்ளியில் பெற்றுக் கொண்ட நல்ல அனுபவங்களினூடாக அப்பாடசாலையிலும் கல்விக்காலம் முடியும் வரை சிறந்த நல் மாணாக்கனாக நற்பண்பு மிக்க ஒரு சமூகத்தவனாக பரீட்சையில் நல்ல பெறுபேறுகளை பெற்று வெளியேறும் போது அம்மாணவனில் உள்ள சமய, சமூகப் பண்பு அவன் முகத்தில் தோற்றமளிப்பதை கண்கூடாகக் காணலாம். இவ்வாறு சிறுவயது முதல் கற்றுக் கொண்ட சமயப்பழக்க வழக்கங்களும் ஒழுக்க விழுமியங்களும் ஒருங்கே சேர்ந்து அவன் மதிப்பிற்குரிய ஒரு மகானாக சமூகத்தில் தோற்றமளிப்பது பெருமைக்குரிய விடயமாகும். இவ்வாறு நோக்கும் போது ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே கற்றுக் கொடுக்கப்படும் நல்லொழுக்கமும் சமயப்பண்புகளும் எதிர்காலத்தில் சமூகம் போற்றக் கூடிய ஒரு நற்பிரஜையாக உருவாகுவதற்கு வழிகோலும் என நம்புகின்றேன். எதிர் காலம் சிறப்பாகவும் நமது கிராமத்திலுள்ளவர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கு சமயப்பண்பாடுகளையும் ஒழுக்க விழுமியங்களையும் கடைப்பிடித்தலே சிறந்ததாகும் என உறுதியளிக்கின்றேன்.

**திருமதி காயத்திரி உமாகரன்**
**பழைய மாணவி.**

## போதைப் பொருள் பாவனை?

மனித குலம் இன்றைய காலத்தில் சந்ததிக்கும் முக்கிய சவாலாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக அமைவது போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பக்க விளைவுகள் பற்றிய தெளிவின்மை ஆகும். அந்த வகையில் போதைப் பொருள் என்றால் என்ன? அவற்றின் பக்க விளைவுகள் என்ன என்பவற்றைப் பற்றி அறிதல் அவசியமாகின்றது. போதைப் பொருட்கள் என்பவை நமது நரம்புத் தொகுதியிலும், மூளையில் சுரக்கும் வேதியியல் பதார்த்தங்களிலும், குருதி சுற்றோட்டத் தொகுதியிலும் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஓர் மாயையான சுக உணர்வை ஏற்படுத்தும் பதார்த்தங்களாகும்.

அந்த வகையில் ஹெராயின், கொகைன், அல்ஹகோல், புகையிலை, LSD போன்றவற்றை போதைப் பொருட்களாக கூறலாம். எனவே அவற்றினைப் பற்றியும் அறிதல் அவசியமாகின்றது. எனவே இங்கு போதைப் பொருட்களை பற்றியும் அவற்றின் பக்க விளைவுகள் பற்றியும் காணலாம்.

**ஹெராயின் :**

போதைப் பொருட்களின் ராணியாக அறியப்படும் ஹெராயின் தான் இந்த உலகத்தில் உள்ள மிகவும் தீங்கான போதைப் பொருளாக கருதப்படுகின்றது. ஹெராயின் பயன்படுத்தியுள்ள போது மூளையில் வெளிப்படுத்தப்படும் 'டோப்பமைனின்' அளவு புணர்ச்சி பரவசநிலையில் வெளிப்படுவதை விட 100 மடங்கு அதிகமாக இருக்கும். ஹெராயின் பழக்கத்தை நிறுத்துவதனால் ஏற்படும் தாக்கத்தை குறைக்க 'மீதம்/பீடமைன்' போன்ற 'மிதமான போதைப் பொருட்களை பயன்படுத்த வேண்டி வரும். இந்த பழக்கத்தை நிறுத்துகையில் அது மரணத்தில் போய் முடிகின்றது என பல சான்றுகள் கூறுகின்றது.

**கொகைன்:**

ஆபத்தான போதைப் பொருட்களில் அடுத்த இடத்தை பெறுகின்றது. அதிகமாக அடிமைப்படுத்தும் போதைப்பொருள்களில் இதுவும் ஒன்று. இது அதிகளவான 'டொப்பமைன்' என்ற மூளை உண்டாக்கும் நல்ல உணர்வை ஏற்படுத்தும் ரசாயனத்தை வெளியேற்றும். இதன் பயன்பாட்டை நிறுத்தினால் அதன் தாக்கங்கள் அதிகமாக இருக்கும். இதனால் மனரீதியான பாதிப்புகளுடன் உடல் ரீதியாகவும் பாதிப்புக்கள் ஏற்படும்.

**அபின்:**

உண்மையில் அபின் என்பது போதையூட்டும் வலிநீக்கிகளே ஆகும். இது 'பாப்பி' என்ற செடி வகையிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. இதன் அதிகரித்த

பாவனையானது உடலில் ஓர் போதைப் பொருளாக இதை செயற்படச் செய்வதனால் இதை சில நாடுகள் தடை செய்துள்ளன. இதன் அதிகரித்த பாவனை காரணமாக விரைவான இதயத்துடிப்பு, தலைச்சுற்று, குருதி கலன்களில் தளர்வு,? நரம்புத்தளர்ச்சி போன்றவற்றை ஏற்படுத்துகின்றது. ஒரு சுகமான உணர்வை ஏற்படுத்துகின்றுது. இதன் பாவனையில் குருதியில் உள்ள 'ஹீமோகுளோபின்' என்ற ஒட்சிசனைக் காவும் வேதிப் பொருளானது புகையில் உள்ள CO (காபனோர் ஒட்சைட்) உடன் மீள சேர்க்கையை ஏற்படுத்துவதால் ஒட்சிசன் காவுதிறன் குருதிக்கு குறைகின்றது. மேலும் 'நிக்கொட்டின்' இனால் சுவாசப்பாதையில் அழற்சி ஏற்படுகின்றுது. சில சமயங்களில் சுவாசப்பை புற்று நோய் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இந்த புகையிலையால் அதைப் பயன்படுத்துபவரை விட அருகில் அதைச் சுவாசிப்பவரையே அதிகம் பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## LSD:

சக்தி வாய்ந்த மாயத் தோற்ற போதைப் பொருளாக விளங்குகின்றது. LSD (லைசெர்ஜிக் ஆசிட் டைதிலமைத்) இதனை தொடர்ச்சியாக பயன்படுத்தி வந்தால் மிகக் கொடிய, மீளமுடியாத சித்த பிரம்மையை உண்டாக்கி விடும். பிரம்மை மற்றும் மருட்சியையும் இது தூண்டி விடும் மிகக் கொடிய போதைப் பொருளாகும். இது போன்ற பல போதைப் பொருட்கள் பல காணப்படுகின்றன. எனவே அவற்றினது பாதகமான விளைவுகளை பற்றி அறிந்து செயற்படல் அவசியம்.

## அல்கஹோல்:

பண்டைய காலத்தில் இருந்து எமது சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக காணப்படும் போதைவஸ்து இதுவாகும். அல்கஹோல் இருக்கும் அளவை பொறுத்து வெவ்வேறு பெயர்களில் காணப்படுகின்றது. இந்த மது உலகில் பல வகை மதுபானங்கள் வெவ்வேறு அல்கஹோல் சதவீதத்துடன் காணப்படுகின்றன. இந்த அல்கஹோல் ஆனது ஈரலில் நீராகவும் காபனீரொட்சைட்டாகவும் மாற்றமடைகின்றது. இச்செயற்பாட்டின் போது ஈரலில் உள்ள 'பேரொட்சிசோம்கள்' என்னும் கல உப துணிக்கை அல்கஹோலை நச்சகற்றுகின்றது. இதன் அதீத பாவனையானது ஈரலைப் பாதிப்புக்குள்ளாக்குவதுடன் 'Liver cirrhosis, Fatty liver' போன்ற ஈரல் நோய்களை ஏற்படுத்துகின்றது. இதன் அதீத பாவனையானது நரம்புத்தளர்ச்சி, குருதி உறையாமை, கண்பார்வை குறைபாடு போன்றவற்றை ஏற்படுத்துகின்றது. மூளையின் நரம்பு மண்டலம் பாதிப்படைவதனால் உடற்சமநிலையும் பாதிப்படைகின்றது.

## புகையிலை:


புகையிலையில் உள்ள 'நிக்கொட்டின்' இதய துடிப்பை அதிகப்படுத்துவதுடன் குருதி கலன்களின் சுவர்களில் தளர்வை ஏற்படுத்துகின்றதன் மூலம் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இவற்றுக்கு அடிமையானவர்கள் முற்றிலும் நரம்புத்தளர்ச்சி மற்றும் மூளை சம்பந்தமான நோய்களிற்கு ஆளாகின்றனர். இவர்களிற்கு அ டிக்கடி தற்கொலை எண்ணம் போன்ற மனரீதியான பாதிப்புகளும் உடல் ரீதியான 'உடல் தளர்ச்சி' போன்றவையும் ஏற்படுகின்றது. இவற்றை பாவித்து பின் அதிலிருந்து மீளுவது மிக கஷ்டமாக காணப்படுவதுடன் இவற்றின் பக்க விளைவுகள் நமது உடலில் நீண்ட கால பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன.

எனவே இவற்றின் பக்க விளைவுகள் பற்றி விளங்குவதன் மூலம் அதற்கு அடிமையாவதிலிருந்து நம்மை நாமே பாதுகாப்போம் .

'யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா'

என்ற நம் முன்னோரின் வாக்கிற்கமைய நாம் வாழும் சூழல் எப்படி இருப்பினும் எமக்கென ஒரு வட்டம் வரைந்து அதனை விட்டு விலகாமல் வாழப்பழக வேண்டும். நமது வாழ்வை சிறப்பாக மாற்றுவது நமது கையிலேயே உள்ளது என்பதை உணர்வோமாக.

**திரு. இ. கீர்த்தனன்**
**பழையமாணவன்.**



## சமூக மேம்பாட்டில் பாடசாலையின் பங்கு

எமது நாட்டில் பாடசாலைகள் சிறுவர்களையும் இளைஞர்களையும் சமூகமயப்படுத்தப்படும் முறைசார்ந்த நிறுவனங்களாக முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலையானது பிள்ளைகளின் அறியாமை இருள் போக்கும் தெய்வீக ஒளி நிலையங்களாகவும் சமூகத்தின் ஒரு பொறுப்பு மிக்க நிறுவனமாகவும் விளங்குகின்றது.

பாடசாலை என்பது தனித்து இயங்கக்கூடிய ஒன்றல்ல. அது சமூகத்திலேயே முற்று முழுதாக தங்கியுள்ளது. சமூகம் என்பது குடும்பங்களின் தொகுதியாகும். அதில் பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பல்வேறுபட்டவர்கள் காணப்படுகின்றனர். இன்றைய பெற்றோர்கள் நேற்றைய மாணவர்களாகவே காணப்படுவர். இச்சமூகத்திலிருந்து வரும் பிள்ளைகளை சமுதாயத்திற்குரிய மிகவும் சிறந்த குடிமக்களாக மாற்றும் பொறுப்பு பாடசாலையின் தாகும். சமூகமானது பாடசாலைக்கு தமது சொத்துக்களான பிள்ளைகளை வழங்குவதன் மூலமே பாடசாலை உயிரோட்டமுள்ள நிறுவனமாக இயங்குகின்றது. சமூகம் பிள்ளைகளை உள்ளீடாக அதாவது மூலப் பொருளாக பாடசாலைக்கு வழங்குகிறார்கள். பாடசாலை அவர்களை சிறந்த முடிவுப் பொருளான மாணவர்களாக மாற்றி சமூகத்திடம் திரும்ப ஒப்படைக்க வேண்டிய பொறுப்புடன் இருக்கின்றது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் மேன்மையும் மாணவர்களது உயர்ந்த பெறுபேறுகளிலும் பண்பாடு ஒழுக்கம் என்பவற்றிலும் பிரதிபலிக்கும் பாடசாலைக் கலைத்திட்டமானது அறிவுசார் முன்னேற்றங்களுக்கு இட்டுச் செல்கின்றது. இணைக்கலைத்திட்டமானது மாணவர்களின் ஆளுமைத்திறனை விருத்தி செய்வதுடன் தலைமைத்துவத்திற்கும் அடித்தளமிடுகின்றது. இவற்றுடன் மாணவர்களுக்கு பாடசாலைகள் வழங்கும் சீரான தாழ்வு முறைக்கு வழிகாட்டும் பழக்கவழக்கங்கள் ஒழுங்கு, ஒழுக்கம், தன்னம்பிக்கை, நேர்மனப்பாங்கு, மேன்மைப் பண்புகள் போன்றவற்றை வளர்ப்பதற்கான நடைமுறைகள் மறைக்கலைத்திட்டத்தின் (Hidden curricula,) மூலம் வழங்கப்படும். இது பாடசாலையின் கலாச்சாரம் ஆகும். பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் இவ்வழிகாட்டல்கள் போலவே பெற்றோர்களது வழிகாட்டலிலும் அமைய வேண்டும். மாறுபடின் பிள்ளைகள் எதுசரி எதுபிழை என்பதை அறிந்து கொள்வதில் முரண்பாடுகளை எதிர்நோக்குவர். ஆகவே பாடசாலைகள் சமூகங்களுக்கு அவ்வாறான மறைக்கலைத்திட்டத்தின் முக்கியத்துவ விழிப்புணர்வை வழங்க வேண்டிய கடப்பாடுடையதாக உள்ளது.

மேலும் பாடசாலையின் நாளாந்த ஒழுங்குகள், விதிகள், சடங்குகள், சட்டங்கள், வெகுமதிகள், தண்டனைகள் போன்றன சிறப்பாக உள்ளபோது சமூகத்தின் நோக்கிலும் போக்கிலும் உன்னதமான மாற்றங்களை ஏற்படுத்தி சமூகவிழுமியங்களை செம்மைப்படுத்திக் கொள்ள முடிகிறது. பாடசாலையானது

பெற்றோருக்கு தமது நிர்வாகம், முகாமைத்துவம், பாடசாலை விடையங்கள் பற்றி காலத்துக்கு காலம் தெரியப்படுத்த வேண்டும். அதன் மூலமே பெற்றோரின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மாணவர்களை சமூகத்திற்கு ஏற்றவர்களாக வளர்தெடுப்பதில் சமூகங்களும் பாடசாலைகளும் முதன்மையானது. குடும்பங்களின் ஆற்றாமை அல்லது பலவீனங்களை அகற்றுவதில் பாடசாலைகள் பெரிதும் உதவுகின்றன. எழுத்தறிவற்ற விவசாயிகளின் பிள்ளைகள் பொறியிலாளர், மருத்துவர், சட்டவல்லுநர், நிறுவனங்களின் பணிப்பாளர்கள் போன்ற உயர்ந்த கண்ணியத் தொழில் செய்யக்கூடியவர்களாக மாற்றுவதற்குரிய அடித்தளமாக பாடசாலைகளே விளங்குகின்றன. ஆகவே பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பான செயற்திட்டங்களில் ஆலோசனைகளையும் உதவிகளையும் சமூகம் பாடசாலைக்கு வழங்க வேண்டும். பெற்றோர் பாடசாலை அதிபருடனும், முகாமைத்துவத்துடனும் தொடர்புகொள்ளுமிடத்து பாடசாலை எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு பயனுறுதிமிக்க தீர்வுகள் சுலபமாகக் கிடைக்கும்.

இவ்வாறு சமூகத்துடன் பாடசாலை ஒன்றிணைந்து கொள்வதற்காக சமூகத்தில் நடைபெறும் இன்ப துன்ப நிகழ்வுகளில் அதிபர், ஆசிரியர்கள் பங்கு கொள்வதும் ஒரு முக்கிய விடையமாகும். அதன் மூலம் சமூகமும் பாடசாலையும் நெருக்கமடையும் வாய்ப்புக்கள் காணப்படும். பாடசாலைகள் இல்லாவிடில் அல்லது கடமைகளை வினைத்திறனுடன் ஆற்றாவிடில் தவறான சமூக எண்ணங்களுடனும், முரண்பட்ட கலாசார நடத்தைகளுடனும் வாழ்வோர் எண்ணிக்கை அதிகரித்து சமூகம் சீரழிந்து விடும். குற்றங்களும் ஒழுக்கமின்மையும் நேர்மையின்மையும், வறுமையும் அதிகரித்து சமூக அமைதியும் சமநிலையும் குலைந்துவிடும். இன்னும் சில சமூகத்தில் கல்விக்கு மதிப்புக் கொடுக்காமல் பாடசாலை செல்லாத பல்வேறுபட்டவர்களினால் சமூக விரோதச் செயல்களும் இடம் பெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எமது பாடசாலையைச் சூழவுள்ள சமூகத்தினரின் கல்வி மேம்பாட்டிற்கு மிகவும் உதவியுள்ளது. அதனை இங்கு உருவாகியுள்ள வைத்தியர்கள், பொறியிலாளர்கள், விரிவுரையாளர்கள், திட்டப்பணிப்பாளர்கள், கணக்காளர்கள் என பல்வேறுபட்ட உயர்தொழில் புரிவோரையும் சீர்கேடற்ற நேர்மையான சமூகத்தையும் உருவாக்கியுள்ளதிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு பாடசாலையும் சமூகத்தின் மேம்பாட்டிற்காக பல்வேறு வகையான சேவைகளை ஆற்றி வருகின்றது.

**திருமதி க. செல்வமாலா** (B.Ed)
ஆரம்பக்கல்வி ஆசிரியர்.

## INTRODUCING ENGLISH IN PRIMARY

The English language is introduced to the child as early as preschool. It continues to be taught as a compulsory subject in the national curriculum at the primary, secondary school, as well as post-secondary and tertiary levels of education. The inclusion of the English language as a subject in the national education curriculum of Sri Lanka is compulsory and guided by the language in education policy. However, it is not compulsory for the students to pass the subject towards completing their education at the primary or secondary levels. Even so, the role and status of the English language is institutionalized as an important Second language in the Education.

English provision in primary schools is highlighted that limited success of the policy is mainly due to inadequate trained and skilled teachers who are not proficient in the language themselves, mismatch between curriculum and pedagogical realities, limited time dedicated to language teaching and learning, insufficient and inappropriate learning resources, as well as increased fear of language endangerment.

The Sri Lankan situation clearly exemplifies the aforementioned findings, where despite being taught the language since Year One or Year Three, at the schools, respectively, Sri Lankan students, in general, have been unable to achieve a reasonable level of competency. This problem has increasingly become critical in the current years with regards to graduate unemployment, where low English proficiency is cited as one of the main reasons for not hiring.

## REASONS WHY CHILDREN SHOULD LEARN LANGUAGES AS EARLY AS POSSIBLE

**Accent:** Children who learn a language when they are very young have a much better chance of not having a "foreign" accent when speaking another language.

**Enjoyment:** Young children enjoy learning. They don't care if an activity will improve their cognitive ability or motor skills. They just want to jump

in and have a great time doing it. This same approach is true for children learning a new language.

**Unexceptional:** Introducing children to languages when they are young helps them accept the fact that bilingualism and multilingualism are normal in our world. Speaking more than one language shouldn't be treated as something out of the ordinary.

**Support network:** Young children have the opportunity for exposure and input from many different influences: parents, teachers, peers, and extended family. When both teacher and parent are on board with language learning, then children can be given language exposure, support and interaction all day long.

**Undaunted:** The wonderful thing about young children is that they will give things a try without necessarily worrying if it is correct or not. This applies to language learning as well. Young children will often jump right in to try out what they have learned without worrying about mistakes.

## CHALLENGES FACED BY TEACHERS WHEN TEACHING ENGLISH IN PRIMARY SCHOOLS.

**Limited opportunity:** They have limited classroom language opportunity for the learners to practice the language. In upper primary, the learners' only opportunity to use English language is limited to the daily 40 minutes English lesson. In lower primary, there is a mismatch between language policy and the actual practice in my context. Ideally, mother tongue ought to be used to reinforce instruction as recommended by the policy.

**Learners' attitude:** The learners' negative attitude toward English poses a great barrier for effective teaching. This negative attitude emanates from the fact that learners have limited competence in the language therefore preventing them from actively participating in classroom activities.

**Class size:** An influx of learners in the primary schools thus increasing the class size. The challenges of handling large classes compounded by the acute shortage of teachers puts a strain on the teachers' ability to provide quality language work to the learners because the teacher–learner ratio is not proportional.

**Economic Level:** Learners who are socioeconomically disadvantaged face significant consequences in learning. This include absenteeism from school because of lack of school necessities, taking care of the sibling as parents look for food and even doing petty jobs to supplement on the family income.

**Relationship:** There is a manifestation of the underlying negative and dominant coercive relations of power. Both teachers and parents perceive all the power to be vested in the school. For instance, in the classroom setting, power is expressed in the sitting arrangement where all learners sit facing the teacher who stands at the front, teacher's facial expressions, voice pitch, and teachers' selective attention to some learners leaving out others impedes effective learning.

## STRATEGIES WHICH CAN BE USED TO OVERCOME THESE CHALLENGES.

**Make it fun:** This is one factor that really matters to kids. And that goes for kids on the playground as well as those in the classroom. Some educators believe that kids learn best through play. And what is true of English-speaking children, in this case, will also be true of your English-learning students.

**Make it active:** If there is one thing kids like more than having fun, it's moving. In fact, young children are not able to learn unless they are also able to move. In addition, involving the whole body in language learning is a useful teaching method. The more language learners move, the better and faster they understand what you are teaching and the more easily they can retain the information.

Total Physical Response is a teaching method that works really well with children. In essence, you associate physical movements with language instruction. Students move as they learn. They follow instructions, copy your movements and get their whole bodies involved when they practice language concepts. This is one of the most effective ways to teach English language to children.


**Don't Put Pressure on Your Students:** One of the most important things to remember when you teach children is not to put pressure on them. Remember that children learn some aspects of foreign languages more easily than adults. So no matter what you do in class, they will already be on the road to fluency in English.

Their natural acquisition process will follow three simple steps. They will recognize words and grammar when you use them. They will be able to respond when you ask them questions about the words and grammar you use. And then they will be able to use those language structures themselves.

**Written by**

**Mrs.T.Manchula**

(Part time English Teacher)



# கரணவாய் சைவக்குருமார் பரம்பரையில் நூற்றாண்டு காணும் யா/வேதாரணியேஸ்வரா...

'பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும், கல்வியூட்டும் அன்னையும் நற்ற வானிலும் நனி சிறந்தனவே'. சைவத்தையும், தமிழையும் இரு கண்களாகப் பேணும் கருணையம்பதியிலே தன்னைநாடி வருவோருக்கு கல்வியை குறைவிலாது வாரிவழங்கி வரும் எமது கல்லூரி அன்னையின் உருவாக்கத்தையும், வளர்ச்சியையும் பதிவு செய்ய வேண்டிய காலத்தின் தேவையை நிறைவு செய்ய எமக்கு கிடைத்த வாய்ப்பினை அக மகிழ்வுடன் ஏற்று கல்லூரி அன்னையின் பாதம் பணிந்து பணியைத் தொடர்கின்றேன்.

தென்னிந்தியா திருவெண்ணெய் நல்லூரில் ஆதி சைவர்களாக விளங்கி தேவார முதலிகளில் ஒருவரான தம்பிரான் தோழராம் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணத்தில் எம்பெருமான் வயோதிப அந்தணராக காட்சி கொடுத்து தடுத்தாட்கொண்டபோது அவரின் அடிமை சாசன மூல ஓலையை பேணிய சமூகத்தில் கல்வி கேள்விகளின் தேர்ந்தவர்களும் ஆளுமை மற்றும் நற்பண்புகள் நிறைந்த பிரமுகர்களை யாழ்ப்பாண இராச்சிய தமிழ் மன்னர் வரிசையில் இறுதியாக ஆட்சி செய்த சங்கிலிய மன்னனின் பரிபாலனத்துக்கு தேவைப்பட்டகருணிகர் பதவிகளில் (எழுதுனர்கள், கணக்காளர்கள் முதலான பதவிகள்) அமர்த்தி பரிபாலனத்தை சிறப்பாக நடாத்தி வந்ததாக யாழ்ப்பாண வரலாறு கூறுகின்றது. இவர்கள் அப்போது யாழ்ப்பாணம் நல்லூர் சூழலில் பண்டார மாளிகை சார்ந்த கிராமத்தில் குடியிருந்து சிறப்பாக பணியாற்றி வந்துள்ளார்கள். சங்கியலிய மன்னரின் ஆட்சி ஆங்கிலேயர் கைவசமான சூழ்நிலையில் இவர்களின் பணிகள் முடக்கமடைந்தமையால் இராசதானி சூழலிலிருந்து ஒதுக்கப்பட்டு வடமராட்சியின் நுழைவாயிலில் அமைந்த இமையாணன் குறிச்சிக்கு தெற்காயுள்ள வீரப்பதிராஜன் குறிச்சிப்பகுதியில் குடியமர்த்தப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இந்த கருணிகர்களின் குடியிருப்புகளுக்கான நுழைவாயிலாக இந்தக் கிராமம் இருந்தமையால் இக்கிராமம் கருணிகர்வாய் எனப் பெயர்பெற்று காலப்போக்கில் கருணைவாய், கருணையம்பதி, கரணவாய் என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது.

இக்கருணைவாய் கிராமத்தின் வீரப்பதிராஜன் குறிச்சியில் குடியமர்ந்த கருணிகர் பதவிகளில் பணியாற்றிய ஆதிசைவ மரபிலே வந்துதித்தவர்கள் தமது கல்வியறிவு, சமய ஒழுக்கங்கள், பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களை பெரிதாக மதித்து மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டும் நோக்குடன் சமய தீட்சைகளையும், குருப்பட்டாபிஷேகத்தையும் சிவாகம விதிப்படி பெற்று சைவக்குரமார்களாக வாழ்ந்து இந்தப் பிரதேச மக்களுக்கு குடும்ப புரோகிதர்களாகி பிறப்பிலிருந்து இறப்பு வரையுமான காலப்பகுதியில் மக்கள் ஆற்ற வேண்டிய பிதிர்கடன்கள் உட்பட, ஆன்மீகக் கடன்கள் மற்றும் வாழ்வியல் கிரியைகளை நெறிப்படுத்தி நிறைவேற்றி வருகின்றமை வரலாற்றுப் பதிவாகியுள்ளது.

இந்த சைவக்குருமார் தாம் குடியிருக்கும் கருணைவாய்க் கிராமத்தில் வேண்டிய நிலவளம், பொருள் வளத்துடன் சிறந்த ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து தமது புனிதத்துவத்தைப் பேணி வருகின்றார்கள். இவர்களின் ஆரம்ப வாழ்வுக் காலத்தில் கல்வியறிவு குன்றிய பாமர மக்களை அதிகமாகக் கொண்ட கிராமங்களாகவே இப்பிரதேசம் விளங்கியது. வாழ்வின் முன்னோடிகளாகத் திகழ்ந்த சைவக் குருமார்க்கும் தென்னிந்தியா, வேதாரணியம், திருமறைக்காடர் திருக்கோவிலுக்கும் நெருங்கிய உறவு பேணப்பட்டது. இதற்கு உறுதுணையாக வல்வெட்டித்துறைக்கும் வேதாரணியத்துக்கும் இடையேயான தடைகளற்ற போக்குவரத்து மற்றும் வரணியூர் திருமிகு தில்லைநாதத் தம்பிரான் அவர்களால் கையளிக்கப்பட்ட வேதாரணியம் திருமறைக்காடு திருத்தல (பரிபாலன) அறங்காவலர் பணியுமென்பது மிகையாகாது. இதனால் எம்மவர்களின் தமிழ் சைவப் பணிகளுடன் தர்மப்பணிகளில் நாட்டம் அதிகமாயிருந்து வருகின்றது. இதற்கு சான்றாக தமது மூதாதையர் வழங்கிய சொத்துக்கள், மேட்டுநிலங்கள், வயல்நிலங்களில் ஒரு பங்கினை தரும நோக்கங்களுக்காக குறிப்பாக சிவனடியார்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னப்பசி தீர்க்கும் மடங்களுக்கு தருமசாதனமாக வழங்கியதுடன், கருணைவாயுறை உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கும், முதலைக்குழி முருகமூர்த்தி கோவிலுக்கும் வரணி குருக்கள் குடியிருப்பில் கற்குழு வாவியருகமர்ந்து அருள்பாலிக்கும் மடத்து கந்தசுவாமி கோவிலுக்கும் வழங்கியுள்ளனர். இதன் ஒரு அங்கமாக தென்னிந்தியா வேதாரணியம் மேற்கு வீதியில் ஆதிவாரமடம் என்றழைக்கப்படும் ஞாயிற்றுக்கிழமை தோறும் அன்னதானப்பணி செய்யும் மடதர்மத்துக்கும் இலங்கையிலே காணிகளை தர்ம சாதனம் செய்து தமது தர்ம பரிபாலனத்தை மேம்படுத்தியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த மடதர்மத்துக்கு இங்கு வழங்கப்பட்ட காணிகளில் வேதாரணியேஸ்வர வித்தியாலய அமைவிட நிலமும் ஒன்றாகும். இந்தப் பகுதிவாழ் சைவக்குருமாரின் பிள்ளைகள் கல்வி கற்கும் நோக்கத்திற்காக 1917ம் ஆண்டளவில் சிவஸ்ரீ சொக்கநாதக்குருக்கள் விஸ்வநாதக் குருக்கள் அவர்களும் சிவஸ்ரீ சம். குமாரசுவாமிக்குருக்களும், சிவஸ்ரீ சட்டநாதக் குருக்கள், வைத்தியநாதக் குருக்களும், கல்வளவு திருஞான சம்பந்தக்குருக்களும் கிராம்பத்தனை சிவஸ்ரீ வேதாரணியக்குருக்கள் கனகசபைக்குருக்களும் அங்கம் வகிக்கும் ஆதிவாரமட தர்ம கர்த்தா சபையின் ஆலோசனையுடன் சிவஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் அவர்களால் தென்னங்கீற்று குடிசையில் திண்ணைப் பாடசாலையாக உருவெடுத்த இப்பாடசாலையில் சைவக்குருமாரின் பிள்ளைகளும், பிராமணக்குருமாரின் பிள்ளைகளும் தீண்தக்க சமூகப்பிள்ளைகளும் அனுமதிக்கப்பட்டு தமிழ், கணிதம், சமஸ்கிருதம், வரலாறு முதலான பாடங்களை உள்ளடக்கிய பாடத்திட்டமொன்றை வகுத்து கல்வியூட்டி வந்ததுடன் தாமே நிர்வகித்து வந்துள்ளனர். அக்காலத்தில் அரச இலவசக் கல்வித் திட்டங்கள் இல்லாத சூழ்நிலையில் தமது பொருட்களை கல்வித் தர்மத்துக்காக செலவிட்டு கல்வியறிவூட்டி வந்துள்ளார்கள் என்பது ஈண்டு குறிப்பிடப்படுகிறது.

இந்தப் பாடசாலையின் ஆசிரிய வரலாற்றில் குருக்களின் உறவு முறையான மயில்வாகனச் சட்டம்பியார், தம்புச்சட்டம்பியார், துரைச்சட்டம்பியார், சொக்கநாதச் சட்டம்பியார், கைலாயச் சட்டம்பியார் முதலானோர் ஆரம்ப கால ஆசிரியர்களாக இருந்து வந்ததுடன் கைலாயசட்டம்பியார் முதலாவது தலைமை ஆசிரியராக (அதிபர்) பாணியாற்றியுள்ளார். இதில் தம்புச் சட்டம்பியார் பிள்ளைகட்கான சமஸ்கிருத மொழியையும், பூர்வம் மற்றும் அபரக் கிரியைகட்கான பத்ததிகளையும் பிள்ளைகட்கு கற்றுக் கொடுத்து சிறந்த கல்வியியலாளர்களையும், குருமார்களையும், போதகர்களையும் உருவாக்கியமை இன்றும் கருணைவாய் சைவக்குருமாரின் கிரியை முறைகளில் தனித்துவத் தன்மையை காண முடிகிறது. விஸ்வநாதக்குருக்கள் அவர்கள் 1929ம் ஆண்டளவில் நோய்வாய்ப்பட்டு இறக்கும் காலத்தில் கல்வளவு திருஞானசம்பந்தக் குருக்களின் (சமஸ்கிருத சித்தாந்த பண்டிதர்) ஆண்வாரிசுகளான செவ்வந்திநாதக்குருக்கள் மற்றும் சித்தாந்த பண்டிதர் கைலாயக்குருக்கள் ஆகியோர் கல்வி கேள்விகளில் சித்தாந்த பண்டிதர்களாக உருவாகியமையால் அவர்கள் பாடசாலையை முகாமை செய்து வந்தார்கள். அவர்களின் காலத்தில் கரவெட்டி கிழக்கு தச்சன்தோப்பு பகுதியில் வசித்து வந்த திரு ஆ கணபதிப்பிள்ளை (ஓச்ன் கணபதிப்பிள்ளை) அவர்கள் பாடசாலையில் ஆசிரியப் பணியை ஏற்று கற்பித்ததுடன் 1940ம் ஆண்டிலிருந்து தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டு பிள்ளைகளுக்கு கல்வியூட்டப்பட்டது.

இந்தப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அரசு பொறுப்பேற்ற 1961ம் ஆண்டு காலத்துக்கு முற்பட்ட காலத்தில் இங்கு கற்ற மாணவர்களின் குடும்ப வறுமையை கருத்திற் கொண்டு மதிய உணவு வழங்கும் நடைமுறை இருந்ததுடன் பிள்ளைகளின் கல்வியூட்டல் ஓலைச்சுவடிகளில் பென்சில் கொண்டு எழுதும் முறையும், நிலத்தில் எழுதும் முறையும், சிலேட்டிலே, அதற்கென தயாரிக்கப்பட்ட எழுத்தாணி கொண்டு எழுதும் முறையும் பின்பற்றப்பட்டது. 3ம் வகுப்பிலிருந்து கொப்பிகள் லெற் பென்சில்களால் எழுதிப் படிக்கும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டது. இவ்வாறு தனியார் முகாமையில் கல்வியூட்டப் படுகையில் மிகவும் வசதி குறைந்த பிள்ளைகட்கு உடுதுணி, உணவு, எழுதுகருவிகள் முதலானவை பாடசாலை முகாமையினரால் வழங்கப்பட்டது. இவ்வாறு ஊட்டப்பட்ட கல்வி 8ம் தரம் வரை சிறப்பாகப் பேணப்பட்டதாக அறிய முடிகிறது. இங்கு ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க இயலாத காரணத்தினால் ஓரளவு வசதியுள்ள மாணவர்கள் 3ம் வகுப்பின் பின் அல்லது 5ம் வகுப்பின் பின் யா/விக்னேஸ்வராக் கல்லூரியில் இணைந்து ஆங்கில மொழிக்கல்வியை பெற்று தேர்ச்சி பெற்று வந்துள்ளனர். ஏனையவர்கள் இங்கு கற்கக்கூடிய அதிகூடிய 8ம் தரக் கல்வி வரை கற்றபின் பாடசாலையிலிருந்து விலகி குடும்ப சூழலுடன் இணைந்து பரம்பரை தொழில்களான குருத்துவம், விவசாயப்பணிகளில் ஈடுபட்டதுடன் சாதாரண கூலியாட்களாக நாட்கூலிக்கு வேலை செய்வது வழக்கமாகும். இங்கு கற்ற கல்விக்கு மேல் கல்விகற்க விரும்பும்

மாணவர்கள் தமது வசதிக்கேற்ப சுன்னாகம் மகா வித்துவான் கணேசக் குருக்களிடமும் அச்சுவேலி குமாரசாமிக் குருக்களிடமும் கல்வி பயின்று தமிழ், சித்தாந்தம், சமஸ்கிருதம், முதலான துறைகளில் பாண்டித்தியம் பெற்று சிறந்த அறிவாளிகளாகத் திகழ்ந்ததுடன் பெயர் விளங்கும் சைவக்குருமார்களாகவும், புராண இதிகாச, சாஸ்திர விற்பன்னர் களாகவும் திகழ்ந்தார்கள்.

பாடசாலைகளை அரசுடமையாக்கி மாணவர்கட்குரிய கல்வியூட்டலை அரசு பொறுப்பேற்றபின் பாடசாலை நிர்வாக முறைமையில் மாற்றம் கண்டதுடன் ஆசிரியர்கள், அதிபர்கள் இலங்கையின் எப்பாகத்திலும், எப்பாடசாலைகளிலும் கடமையாற்ற முடியும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டது. இது மக்கள் மத்தியில் மறுமலர்ச்சியையும் புத்துணர்வையும் ஏற்படுத்தியமையால் தாம் விரும்பும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் பாடசாலைகளில் பணிக்கமர்த்த வசதியாயிருந்தது. இதன்பலனாக பாடசாலையின் தலைமை ஆசிரியர்களும் துணை ஆசிரியர்களும் காலத்துக்கு காலம் மாற்றம்பெற நேரிட்டது. அது மட்டுமன்றி கல்வியூட்டும் பாடத்திட்டங்களிலும் காலத்துக்கு காலம் மாற்றங்களைக் காண முடிகிறது. இந்தச் செயற்பாடு பாடசாலையின் ஸ்தாபக நோக்கங்களுக்கு மாறுபாடாக இருந்தபோதும் அரச பொதுக்கல்விக் கொள்கைகளுக்கமைய மாணவர்கள் அறிவூட்டப்பட்டு புகழ்பூத்த தலைவர்களாக மக்கள் மத்தியில் சேவையாற்றி வருவது மட்டற்ற மகிழ்ச்சியை தருகின்றது. அரசுடமையாக்கப்படாத நிலையும், பல்கலைக்கழகம் முதலான உயர்கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியும் இல்லாதிருப்பின் தனியார் கல்வி நிறுவனமாக பௌதீக வசதி குறைந்த நிலையிலிருந்து தமிழ், சைவம், சித்தாந்தம், வரலாறு முதலான துறைகளுடன் புனித மொழியான சமஸ்கிருதம் மற்றும் அதனூடான பூர்வ, அபர கிரியை சார் கல்வியில் பாண்டித்தியம் பெறும் வாய்ப்பை வழங்கும் பாடசாலையாக திகழ்ந்திருக்கும் என்பது உறுதி.

இந்தப் பாடசாலை அரசுடமையாக்கப்பட்ட காலத்திலிருந்து சராசரியாக 100க்கு உட்பட்ட மாணவர் எண்ணிக்கையையே அனுமதித்து பேணுவது வலியுறுத்தப்பட்டது. காரணம் அயலிலுள்ள பொன்னம்பல வித்தியாலயம், மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை மற்றும் கரவெட்டி விநாயகர் வித்தியாலயம் முதலான பாடசாலைகளின் கல்விச் சேவைக்கு இடையூறு ஏற்படக்கூடாதென்பதில் எம்மவர்கள் உறுதியாயிருந்துள்ளனர். அத்துடன் அரச ஆசிரிய வளம் பகிரப்படும்போது என்றும் ஆசிரிய தேவை பூரணமாக பூர்த்தி செய்யப்படாத நிலையும் கருத்தில் கொள்ளப்பட்டது. அரச நியமனங்களுக்கு மேலதிகமான ஆசிரிய தேவைகளை எமது கிராமத்தில் கல்வியறிவு பெற்று அரச வேலைவாய்ப்பின்றி இருந்த இளைஞர், யுவதிகளில் நற்பண்பும், ஆர்வமும் கொண்டவர்களை தெரிவு செய்து உள்வாங்கி பாடசாலை பெற்றோர் பழைய மாணவர் ஆசிரியர்களின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் கற்பித்தல் சேவை மேற்கொள்ளப்பட்டது. அந்த வரிசையில் குருக்கள் பரம்பரையில் வந்துதித்த

கல்வளவு செவ்வந்திநாதர் ஐயா, கோம்பையப்புலம் செவ்வந்திநாதக்குருக்கள் (ஆசிரியர் ஐயா), மணற்பாதி இராசதுரை (ஓய்வு நிலை நிர்வாக அலுவலர், கல்வித்துறை), காலஞ்சென்ற மனோன்மணி நடராசா (அதிபர்), திரு. சந்திரசேகரஐயா மகன் விஸ்வநாதர்ஐயா (ஓய்வுநிலை அதிபர்) முதலானோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இந்த தொண்டர் ஆசிரியர்களில் மனோன்மணி ரீச்சர், கல்வளவு செவ்வந்திநாதர் ஐயா, விஸ்வநாத ஐயா அவர்களிடம் ஆரம்பக்கல்வியை பெறும் வாய்ப்பு கிடைத்தமை எமக்கு கிடைத்த பெரும்பேறு என்பதுடன் அவர்களின் அர்ப்பணிப்பான அயராத சேவை இந்தப்பாடசாலை தலைநிமிர்ந்து புகழ்பரப்பி நிற்கின்றதென்றால் மிகையாகாது.

அரச கல்விக் கொள்கை மாற்றங்களாலும், காலத்துக்கேற்ப கல்வி வளர்ச்சியின் தேவை கருதியும் 1980ன் ஆரம்ப காலத்திலிருந்து ஆரம்ப பாடசாலைகளில் மாணவர்களை இணைக்கு முன்னர் அறிவூட்டும் கட்டாய நிலை உருவாகியது. இதன் பொருட்டு கிராமங்களில் பாலர் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. ஆயினும் இந்த முன்பள்ளிளை அரசு பொறுப்பேற்று ஆரம்பப் பாடசாலை போல் பராமரிக்க விரும்பவில்லை. காரணம் ஏற்கனவே பொறுப்பேற்ற ஆரம்பப் பாடசாலைகள், இடைநிலைக் கல்லூரிகளில் 3ம் நிலைக்கல்வி நிறுவனங்கள் முதலானவற்றைப் பேணிப் பராமரிக்கவும், வளர்ச்சிப் பாதையில் அபிவிருத்தி செய்யவும் பாரிய நிதி தேவைப்பட்டது என்பதுடன் அரச பொருளாதார நிலையில் அதனை ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இலங்கையில் மூடிய பொருளாதாரக் கொள்கை மாற்றமடைந்து திறந்த பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்பட்டமையும், உலகமயமாதல் கொள்கையின் பால் ஈர்க்கப்பட்டமையும் இலங்கைக் கல்விக் கொள்கையில் பல மாற்றங்களை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. எமது தேசத்தின் மக்கள் பெருக்கத்திற்கேற்ப உள்ள வளங்களின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்களை தோற்றுவிக்க முடியாத நிலை காணப்பட்டமையால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நாட வேண்டிய மக்களுக்கு ஏற்றவாறு கல்வியறிவூட்டுவது அவசியமாயுள்ளது. இதனால் கல்வியறிவூட்டலில் மாணவர்கட்கு பொருத்தமான அடித்தளத்தை இடும் நோக்கில் முன்பள்ளிகள் சனசமூக நிலையங்களை மையமாகக் கொண்டு உருவாவது தவிர்க்க முடியாததாயிற்று. அந்த வரிசையில் நெல்லியடி பட்டினசபையின் அனுசரணையுடன் தோற்றுவித்த பாலர் பாடசாலை ஆசிரியை ஒருவரை நியமிக்க பட்டின சபை நடவடிக்கை எடுக்காத நிலையில் பாடசாலை செயலிழந்தது. தொடர்ந்து மணற்பாதியூர் ஜனசக்தி சனசமூக நிலைய ஆதரவில் உடுப்பிட்டி கிராம சபை எல்லைக்குள் அமைந்த மணற்பாதி பெரியதம்பிரான் கோவிலருகில் உருவான பாலர் இயங்கிவந்த சம காலத்தில் வேதாரணியேஸ்வரா ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்பப்படும் சைவக்குருமாரின் பிள்ளைகளினது கல்வி மேம்பாடு கருதி 1996ம் ஆண்டில் வேதாரணியேஸ்வரா ஆரம்பப் பாடசாலையின் ஸ்தாபகர் வழிவந்த செவ்வந்திநாதக்குருக்கள் விஸ்வநாதக்குருக்களும், சகோதரர்களான

சுவாமிநாதன், சிவப்பிரகாசம் ஆகியோரும் சம்பந்தக்குருக்கள் சட்டநாதக்குருக்களும் இணைந்து வேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலையை தோற்றுவித்து வேதாரணியேஸ்வர வித்தியாலயமான இந்தப்பாடசாலை வளாகத்தின் மேற்குப் பக்கத்தில் நடாத்த முற்பட்டபோது கல்வியமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய ஒரு ஆரம்பப் பாடசாலையிலோ அல்லது இடைநிலைப் பாடசாலையிலோ நிரந்தரமாக இணைந்து அக்கட்டடத் தொகுதியில் இயங்கமுடியாது என கல்வித் தணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை ஏற்று மதித்து அப்பாலர் பாடசாலையை எமது பிறந்து வளர்ந்த வீடான கோம்பையப்புலம் விஸ்வநாதக் குருக்கள் வீட்டிலேயே 5 ஆண்டு காலம் பாடசாலையை நடாத்தி வந்ததுடன், சனசமூகநிலையத்துக்கும் பாலர் பாடசாலைக்கும் சொந்த நிலமொன்றை கொள்வனவு செய்ய தீர்மானித்து மக்களிடம் நிதி சேகரித்து 2 பரப்பு நிலத்தை கொள்வனவு செய்து மதிப்புக்குரிய முன்னைநாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான K.N. டக்ளஸ் தேவானந்த அவர்களினால் வழங்கப்பட்ட நிதி மூலத்துடன் உருவாக்கிய வேதாரணியேஸ்வரா முன்பள்ளியில் பல சமூக மாணவர்களையும் இணைத்து அடிப்படைக் கல்வியறிவூட்டி தயார்ப்படுத்தி இந்தப் பாடசாலைக்கு வழங்கி வருகின்றோம்.

மேலும் இந்தச் சமூகத்தின் அறநெறி ஒழுக்கத்தைக் கருத்திற் கொண்டு வைத்தீஸ்வர சுவாமி அறநெறிப்பாடசாலையையும் இதே விஸ்வநாதக்குருக்களின் வாசஸ்தலத்தில் நிறுவி வேதாரணியேஸ்வர வித்தியாலய மாணவர்களுக்கு அறநெறி ஒழுக்கத்தைக் கற்பித்து ஒழுக்க சீலர்களாக வாழ்வதற்கு பக்க பலமாக உள்ளோம். இதனால் இன்று நூற்றாண்டு விழாக்காணும் கல்லூரி அன்னை பூரிப்படைந்திருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

கரணவாய் சைவக்குருமாரால் உருவாக்கி பேணப்பட்டு வரும் முன்பள்ளி, அறநெறி, ஆரம்பப் பாடசாலை என்னும் மூன்று கல்வி நிறுவனங்களும் எவ்வித குறைகளுமின்றி தமது கல்வி தர்மத்தை மாண்வ சமுதாயத்துக்கு வாரி வழங்க அனைத்து அன்பு உள்ளங்களும் எம்முடன் ஓரணியில் திரண்டு கைகொடுப்பது காலத்தின் தேவையாக உள்ளது என்பதை பணிவன்புடன் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

**சிவஸ்ரீ வி.செ.வி.செவ்வந்திநாதக்குருக்கள்** (MA)
பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் (DipinED)
(தென்னிந்தியா வேதாரணியேஸ்வர சுவாமி கோவில் ஆதீனபரம்பரை மற்றும்
ஸ்ரீ ஆதிவாரமட தர்மகர்த்தா சபை உறுப்பினரும்,
கீழ்க் கருணைவாய் கி.அ.ச.........)

## நாளைய மாற்றத்திற்காக இன்றே செயற்படுவோம்

நமது உடலில் ஏற்படுகின்ற நோய்களை பிரதானமாக இரண்டு வகையினுள் அடக்கலாம்.

அவையானவ :

1. தொற்றும் நோய்கள்
2. தொற்றாத நோய்கள்

தொற்றும் நோய் என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு வைரஸ் கிருமிகள் மூலமும் காற்று, நீர் போன்றவற்றின் மூலமும், காவிகளிடம் இருந்தும் கடத்தப்படும் நோய்களாகும். அவையாவன வாந்திபேதி, வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தொற்றாத நோய்கள் எனும்போது ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு கடத்தப்படாத நோய்கள் என்பதாகும். அவையாவன நீரிழிவு, மாரடைப்பு உயர்குருதியமுக்கம், புற்றுநோய், சுவாசப்பை தொடர்பான நோய்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு புகைத்தல் மதுப்பாவனை, துரித உணவு வகைகள், அதிகளவான இரசாயன வளமாக்கிகளின் பாவனை, செயற்கை உரங்கள் போன்றவை பிரதான காரணங்களாகும்.

அத்துடன் தவறான உணவுப்பழக்க வழக்கம், உடற்பயிற்சிக் குறைவு என்பவை துணைக்காரணங்களாகும். இன்று எமது நாடாகிய இலங்கை எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளுள் முக்கியமானது இத்தொற்றாத நோய்களினாலே இறக்கின்றனர்.

எனவே இத்தொற்றாத நோய்களில் இன்று சிறுவர் முதல் பெரியவர் வரை பேசப்படுகின்ற ஒரு நோயாக நீரிழிவு காணப்படுகின்றது. நீரிழிவு என்பது குருதியில் அதிகளவான குளுக்கோஸ் காணப்படுவதாகும். இந்நோயின்போது இன்சுலினில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறைபாடு காணப்படுவதால் அல்லது இன்சுலின் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படுவதால் மாப்பொருள், கொழுப்பு, புரதச்சமிபாட்டில் அசாதாரண நிலை ஏற்படும்.

இன்சுலின் என்பது சதையிச் சுரப்பியால் சுரக்கப்படுகின்ற ஓர் ஓமோன் ஆகும். இது குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை தொடர்ச்சியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் செயலைச் செய்கின்றது. அத்துடன் இன்சுலின் கலங்களுக்கு குளுக்கோஸ் உட்புகுவதைத் தூண்டுகின்றது. எனவே இன்சுலின் அளவில் குறைபாடு காணப்படுகின்றபோது குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கிறது.

எமது நாட்டில் இன்று சிறுவயதினர் தொடக்கம் முதியோர் வரை இந்த நீரிழிவு நோயினால் அவதிப்படுகின்றனர். இந்நோய்க்குரிய ஆபத்துக் காரணிகளாக அதிக உடல்நிறை, பாதகமான உணவுப்பழக்க வழக்கங்கள் சோம்பலான வாழ்க்கைப் பாங்கு மன அழுத்தம் குடும்ப அங்கத்தவர்களிடையே நீரிழிவு காணப்படல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சரியான முறையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படாத நீரிழிவு நோயினால் பின்வரும் அங்கங்கள் பாதிக்கப்படலாம். அவையாவன : இதயம் மற்றும் குருதிக் கலன்கள்.

கண்கள்
மூளை நரம்புகள்
கால்கள் போன்றவையாகும்.

அடுத்து மாரடைப்பு - குருதியமுக்கம் போன்ற தொற்றாத நோய்களைப் பற்றிப் பார்க்கும்போது இந்நோய்களுக்குப் பிரதான காரணமாக அமைவது மனிதனுடைய உணவுப் பழக்கவழக்கமாகும். தவறான உணவுப்பழக்கவழக்கம், உடற்பயிற்சி போதாமை, ஓய்வின்மை, மனஅழுத்தம் போன்ற காரணிகளால் இந்நோய் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதயத்திற்குவரும் இரத்த ஓட்டமும் அதில் உள்ள ஒட்சிசன் அளவு குறைவதாலும் நெஞ்சுநோ ஏற்படுகிறது. இது நெஞ்சில் அழுத்தமாகவோ நசிப்பது போலவோ, குத்துவது போல் இருப்பதுடன் தோள், நாடி, இடதுகைப்பக்கம் போன்ற இடங்களில் பரவக்கூடும்.

இரத்த ஓட்டம் முற்றாகத் தடைப்படுவதனால் இருதயத்தின் தசைகள் ஓட்சிசன் இல்லாமல் இருக்கின்றன. இதுவே மாரடைப்பு எனப்படுகின்றது. உடனடியாக வைத்தியசேவை செய்யாவிடின் பாரதூரமான பின் விளைவுகள் ஏற்படும். நீண்ட காலமாக இரத்தக்குழாய்கள் கொழுப்புப் படிவினால் சுருக்கப்பட்டு இருந்தால் காலப்போக்கில் இதயத்தின் தசைநார்கள் வீக்கமடைந்து இருதயத் தொய்வு ஏற்படுகின்றது. இது ஏற்படும்போது உடலின் செயற்பாடுகளுக்குத் தேவையான இரத்தத்தை இதயத்தினால் செலுத்த முடியாமல் போகின்றது. இந்நோய் புகைத்தல், கொழுப்புக் கூடுவது, இரத்த அழுத்தம் கூடுதல் நீரிழிவு நோய் (சீனியின் அளவு கூடுவது), உடல் பருமன் கூடுதல் போன்றவற்றினை ஏற்படுத்துகின்றது.

சுவாசம் தொடர்பான தொற்றாத நோய்களை எடுத்து நோக்கும்போது வாதனாளி, சுவாசப்பைக் குழாய்கள், சுவாசச் சிற்றறைகள். சுவாசத் தொகுதியுடன் தொடர்புடைய நரம்புகள் வளியில் ஏற்படும் அழுக்குகளாலும் தூசுகளாலும் பாதிப்படைகின்றது.

மற்றும் புகைத்தல், மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனை போன்ற செயற்பாடுகளாலும் இத்தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக புற்றுநோய், சுவாசநோய்கள் என்பனவாகும்.

எனவே நாம் எமது உடலில் ஏற்படும் தொற்றாத நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

**இ. தமிழோவியன்**
**தரம் - 04**
இலங்கை நீரிழிவு சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் 4ம் இடம் பெற்ற கட்டுரை.

## தமிழ் மொழி

தடுக்கி விழுந்தால் மட்டும் அ..... ஆ.....
சிரிக்கும் போது மட்டும் இ..... ஈ......
சூடு பட்டால் மட்டும் உ..... ஊ.....
அதட்டும் போது மட்டும் எ..... ஏ.....
ஐயத்தின் போது மட்டும் ஐ......
ஆச்சரியத்தின் போது மட்டும் ஓ..... ஓ.....
வக்கணையின் போது மட்டும் ஔ......
விக்கலின் போது மட்டும் ஃ......
என்றும் தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன் மொழி
தமிழ் மொழி
என்று

**செல்வி. அ. கேதுஷா**
**தரம் - 01**

மாணவ முதல்வர்கள், உபஅதிபர், அதிபர்.



மாணவர் மன்றம்

உப அதிபர், அதிபர், பொறுப்பாசிரியர், மாணவர்கள்



# மகாத்மா காந்தி

எத்தகைய வல்லரசாலும் அழிக்கமுடியாத ஒரு ஆயுதத்தை உலகுக்கு அளித்தவர் மகாத்மா காந்தி. நமது ஆயுத பலத்தால் சிறிய தொகையினரான ஆங்கிலேயர் கோடிக்கணக்கான பாரத மக்களை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தனர். மகாத்மா காந்தியின் அகிம்சை என்ற ஆயுதமே அவர்களை நாட்டை விட்டு விரட்டியது.

மோகனதாஸ் கரம்சந்தகாந்தி இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்ற ஊரில் 1869 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ஆம் திகதி பிறந்தார். பின்நாளில் உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒரு மகான் சிறுவயதில் மிகவும் கூச்ச சுபாவம் உடையவராக இருந்தார். காந்தி தனது 13 ஆவது வயதிலேயே வணிகர் ஒருவரின் மகளான கஸ்தூரிபாயை மணந்தார். தாயாரின் தெய்வ நம்பிக்கை இவரைச் சிறந்த ஆன்மீக வாதியாக்கியது. சட்டக் கல்வியை பயில 19 ஆவது வயதில் லண்டன் பயணமானார்.

இங்கிலாந்தில் இரண்டு வருடங்கள் 8 மாதங்கள் இருந்த காந்தி தாய்க்குக் கொடுத்த வாக்குறுதிப்படி மதுவையோ, மீன், மாமிச வகைகளையோ தொடவில்லை. இரண்டு வருடங்களாக முயன்றும் வழக்கறிஞர் தொழிலில் முன்னேற முடியவில்லை. முதல் வழக்கிலேயே வாதாட எழுந்தவர் பேச முடியாமல் அமர்ந்து விட்டார்.

பின்னர் தென்னாபிரிக்காவிலுள்ள இந்திய வியாபாரியின் வழக்குத் தொடர்பாகத் தென்னாபிரிக்கா சென்றார். தென்னாபிரிக்காவிலே காந்தி நிற வெறியின் கொடுமைகளை அனுபவ மூலம் கண்டார். வெள்ளையர் இந்தியர்களை வெறுப்பதையும் இந்தியர்களுக்குப் பல உரிமைகள் மறுக்கப்படுவதையும் கண்டு அவற்றை எதிர்த்துப் போராட உறுதிபூண்டார். இந்திய சமுகத்திடையே நிலவிய சாதி, மத பாகுபாடு அறியாமை ஆகியவற்றை அழிப்பதால் மட்டுமே இந்தியர் சுதந்திரமடையலாம் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

தென்னாபிரிக்க அனுபவங்களோடு இருபத்தியொரு வருடங்களின் பின் இந்தியா திரும்பினார். இந்தியாவில் சாத்வீக முறையில் உப்புச்சத்தியாக்கிரகம், அந்நிய துணிப்பகிஷ்க்கரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு சிறை சென்றார். அந்நிய ஆட்சியின் கொடுமையை எதிர்த்தும் சொந்த மக்களின் வன்முறையைக் கண்டித்தும் பலமுறை உண்ணாவிரதம் இருந்தார். 1947 ஆம் ஆண்டு ஆவணி 15இல் பாரத நாட்டு விடுதலையைக் கண்ட பின்பு 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி கோட்சே என்பவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆகவே இவ் மகத்தான மகாத்மா காந்தியை என்றும் நினைவில் வைத்திருப்போம்.

**ஆக்கம்**
**ஸ்ரீகாந் நிகாஷன்**
**தரம் - 4**

## கால வெளியில் பின் நோக்கிய ஒரு பயணம்

'குருக்கள் பள்ளிக்கூடம்' என்ற இந்த பெயர் எமக்கு நினைவு தெரிந்த நாளிற்கு முன்பிருந்து இன்று வரை நிலைத்திருக்கும் ஒரு பெயர். எமக்கு முகவரி தந்த எமது வாழ்விற்கு ஏணியாய் அமைந்த இப்பாடசாலையில் நான் பயின்ற அந்த கால நினைவுகளை மீட்டிப்பார்க்கின்றேன்.

அன்றய அந்த கிராமச் சூழலில் ஆங்கிலம் கலக்காத கிராம மொழியில் ஆசிரியர்களை வாத்தியார் என்றே அழைத்து பணிந்து நின்றோம். எம்மை வழிநடத்திய அதிபரை பெரிய வாத்தியார் என்றழைக்கப்பட்டார். திரு.சொ. நடராசா அவர்களின் கண்டிப்பு இன்றும் என் மனக்கண் முன்னால் நிற்கிறது. தடித்த அவரின் குரலுக்கே அனைவரும் கட்டுப்பட்டோம். எனினும் ஆங்கிலம் கற்பித்த திரு. சிதம்பரப்பிள்ளை ஆசிரியரை மட்டும் 'சேர்' என்ற வார்த்தையால் அழைக்கப்பட்டார்.

ஒவ்வொரு மாணவனினதும் பின்புலத்தை தெரிந்த ஆசிரியர்கள் அன்று கற்பித்தனர். அதனால் அனைவரும் அரவணைத்து செல்லப்பட்டனர். முத்து ரீச்சரும் மங்களம் ரீச்சரும் கற்பித்த விதம் என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

எமது ஆசிரியர்களில் பொன்னம்பல வாத்தியார் சற்று வித்தியாசமானவர். அந்த காலத்தில் பாடத்தை சரியாக படிக்காத மாணவர்களை பார்த்து நீ என்னத்தில் கெட்டிக்காரன் என்டு சொல் குறைந்தது பொய் சொல்வதிலாவது கெட்டிக்காரன். பொய்யை சொல்லியாவது பிழைத்துக்கொள்வாய்! என உறுக்குவது இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகிறது. அவரது வார்த்தையின் அர்த்தம் அன்று புரியாவிடினும் பிற்காலத்தில் மிக தெளிவாக புரிந்தது.

அன்பு ரீச்சர் பெயரிற்கேற்றாற் போல மிகவும் அன்பானவர். நாம் குளப்படி செய்து அதிபரிடம் அடி வாங்கவிருந்த சந்தர்ப்பங்களில் எம்மை பிணையில் விடுவித்துள்ளார்.

பொருளாதார வளமும் பலமான குடும்ப பின்னணியுமற்ற பல மாணவர்களுக்கு இப்பாடசாலை வாழ்வில் கரையேற கலங்கரை விளக்காக அமைந்தது.

அதன் மேம்பாட்டிற்கு அனைவரும் கரம் கோர்ப்போம்.

**க. சுப்பிரமணியம்**
**(1978 - 1982)**
**பிரதம பொறியியலாளர்**
**நீர்ப்பாசன திணைக்களம்.**

## சிறுகதை
## ஒரு சொல் கவிதை அம்மா, அதே ஒரு சொல் சரித்திரம் அப்பா.

மதன் வீட்டில் ஒரே ஆண்பிள்ளை. அவனுக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. வசதி வாய்ப்புக்கள் உண்டு. ஆனால்.........

- தம்பி ஒருதருமில்லாமல் ஏன் ஃபான் வேலை செய்யுது, அதை நிப்பாட்டு
- யார் ரிவி பாக்கிறது, சும்மா ஏன் ரிவி வேலை செய்யுது
- அறையில் ஆளில்லாமல் ஏன் லைற் எரியுது அதை நிப்பாட்டுதம்பி

இப்பிடி அம்மா அப்பாவின் நச்சரிப்புக்கள் தான் அவனுக்குப் பிடிக்கவில்லை. எப்படா வீட்டை விட்டு போகலாம். ஒரு வேலை மட்டும் கிடைக்கட்டும் வேலை இடத்திலேயே போய் தங்கவேணும். மதன் நினைத்துக் கொள்வான்.

மதனின் எண்ணம் போல அவனுக்கு ஒரு கம்பனியிலிருந்து வேலைக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வந்திருந்தது. அவன் நேர்முகத் தேர்வுக்கு ஆயத்தமாகி ஆவணங்களை ஒழுங்குபடுத்தி வெளிக்கிட்டான். அப்போது கடவுளை வணங்கி விபூதி பூசி கவனமாய் போய் வா தம்பி என அம்மா வழியனுப்ப, அங்க கேட்கிற கேள்விக்கெல்லாம் நிதானமாக பதில் சொல்லு, விடை தெரியாவிட்டாலும் முழிக்காம ஸ்ரடியா நில்லு என்றார் அப்பா. தலையாட்டியபடி புறப்பட்டான் மதன்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடத்துக்குச் சென்ற மதன் வாசல் கேற்றைத் திறந்து உள் நுழைந்தான். அங்கே பூமரங்களுக்கு தண்ணீர் விட்டிருந்த பைப் சரியான இடத்தில் வைக்கப்படாது நிலத்தில் நீர் வீணாகிக்கொண்டிருந்தது. அதை கவனித்த மதன் பைப்பை உரிய இடத்தில் எடுத்து வைத்துவிட்டு நகர்ந்தான். விறாந்தா லைற் ஒரு தேவையுமின்றி எரிந்து கொண்டிருந்தது. "ஆளில்லாமல் ஏன் லைற் எரியுது." அம்மாவின் ஏச்சு ஞாபகமானது. அதை நிப்பாட்டியபின் உள்ளே சென்று வரவேற்புபீடத்தில் நேர்முகத் தேர்வு நடைபெறும் இடத்தைக் கேட்டறிந்த மதன் மேல் தளத்தில் தேர்வு இடம்பெறுவதை அறிந்து அங்கு செல்ல முற்பட்டான்.

மேல் தள வாசலில் தொங்கிய 'WELCOM' பலகை தலைகீழாக தொங்கியது. இதை இங்க வேலை செய்யிறவை ஒருதரும் கவனிக்கவில்லையோ, நினைத்தபடி நேராக்கினான். வாசல் கதவு சற்று திறந்திருந்தபோதும், அதன் தாழ்ப்பாள் வெளியே நீட்டிக்கொண்டு நுழைபவரை இடிப்பது போல் இருந்தது. அதையும் சரிப்படுத்தி உட்சென்றான். அங்கே நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டோர் வரிசையில் அமர்ந்திருந்தனர். இவ்வளவு ஆட்களுக்குள் எனக்கு எங்க வேலை கிடைக்கப்போகுது என நினைத்துக் கொண்டான். தளத்தின்

முன்பகுதியிலேயே யாவரும் அமர்ந்திருந்தபோதும் பின் பகுதியில் ஃபான் வேலை செய்துகொண்டிருந்தது. "ஒருதருமில்லாமல் ஏன் ஃபான் வேலை செய்யுது, அதை நிப்பாட்டு" அப்பாவின் நச்சரிப்பை நினைத்துக் கொண்டான். பானை நிறுத்தி மற்றவர்களுடன் வரிசையில் அமர்ந்தான்.

தனக்குரிய தேர்வு நேரம் வர தயங்கியவாறே உள்நுழைந்தான். அங்கிருந்த தேர்வாளர்கள் அவனை நன்றாக பார்த்தார்கள். அவனிடமிருந்த ஆவணக்கோவையை அவன் சமர்ப்பித்தபோதும் அது திறக்கப்படவில்லை. அவனுக்கு கைலாகு கொடுக்கப்பட்டு எப்போது வேலையை பொறுப்பெடுக்கிறீர்கள் என அவனிடம் வினவப்பட்டது. மதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் யோசனையுடன் நிமிர்ந்தான். என்ன யோசிக்கிறீர்கள். நாம் யாரையும் இங்கு கேள்வி கேட்கவில்லை. செயற்பாட்டின் அடிப்படையிலேயே தேர்வு வைத்து அதை கமரா மூலம் கண்காணித்தோம். இங்கு வந்த யாருமே தேவையில்லாது வழிந்தோடிய நீர், வீணாக எரிந்த லைற், ஆளில்லாத இடத்தில் வேலை செய்த ஃபான், தலைகீழாக தொங்கிய 'Welcome' பலகை யாதொன்றையும் கவனிக்கவில்லை. அல்லது அதை ஏன் நான் செய்வான் என்ற எண்ணமோ தெரியவில்லை. ஆனால் நீங்கள் அதை எல்லாம் சரிப்படுத்தியே உள் நுழைந்தீர்கள். அதனால் நாம் உங்களையே தெரிவு செய்துள்ளோம் எனக் கூறினர்.

பெற்றோரின் நச்சரிப்புகள் என தான் நினைத்துக்கொண்ட நற்பழக்க வழக்கங்கள் தன் வாழ்க்கைக்கு எவ்வாறு உதவுகிறது என நினைத்தான். முதல் நாள் வேலைக்குச் சேரும்போது அப்பாவையும் அழைத்துச் செல்ல வேண்டும் என எண்ணினான். தாய் தந்தையை தன் எண்ணத்தில் உயர் நிலையிலிருத்தி சந்தோஷமாக வீடு திரும்பினான்.

பெற்றோர் எமக்காக எது சொன்னாலும் அது எமது சிறந்த எதிர்காலத்துக்காகவே.

உளி விழுகையில் வலி என நினைக்கும் எந்த பாறையும் சிலையாவதில்லை. வலி பொறுத்த சில பாறைகளே சிலையாகி ஒளி கூட்டுகின்றன.

ஒரு சொல் கவிதை அம்மா,
அதே ஒரு சொல் சரித்திரம் அப்பா.

நன்றி.

**அ. வர்ஷா,**
**தரம் - 03.**

## மலை நாட்டின் மகிமை

நமது நாடு ஒரு பெரிய தீவு. அதனை இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றுவர். இந்து சமுத்திரத்தில் இலங்குவதால் இலங்கை என்றார்களே. அதன் இயற்கையான நில அமைப்பு அற்புதமானது. மத்தியில் உயர்ந்து பக்கமெல்லாம் பதிந்துள்ளது. மத்தியில் உயர மலைகளும் மேட்டுநிலங்களும் பள்ளத்தாக்குகளையும் கொண்டமைந் துள்ளது. உயர் மலையாக பீதுருதாலகால விளங்குகிறது. மத்தியில் உயர் மலைகள் இருப்பதால் மழையேந்தும் பிரதேசமாக விளங்குகிறது என்றும் வற்றாத ஜீவநதிகள் பாய்கின்றன. இந்த மலைநாடு அனைவரையும் கொள்ளை கொள்ளும் எங்கும் பசுமை போர்த்துப் படுத்திருக்கும்.

பிரித்தானியரின் பிடியில் நமது நாடு கட்டுண்டதால் தேயிலை தோட்டங்கள் உருவாகின மலைக்காடுகள் அழிக்கப்பட்டன. தேயிலைத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. தேயிலையின் நறுமணம் கமகமத்து மூக்கில் நுழையும். பனிக்குளிர் தடவி காற்று முகத்தில் அறையும் மேகத்திரை நம்மைத் தழுவி முத்தமிட்டுச் செல்லும் நீர்பிரி நிலத்திலிருந்த கலகல என ஓடிவரும் சிற்றருவிகள் ஒன்று சேரும் பெரும் பாறையில் இருந்து நீர்விழ்ச்சியாகக் கொட்டும் அவற்றை பார்க்க பிரமிப்பாகும். பனிமுகிலைக்கிழித்துக் கொண்டு சூரியக்கதிர்கள் எட்டிப்பார்க்கும் தேயிலைச் செடிகள் சிலிர்த்துக்கொண்டும் நிற்கும். முதுகில் கூடைகள் தொங்க பெண்கள் அணிவகுத்துச் செல்வார்கள் இரண்டு இலைகளும் ஒரு தளிரும் அவர்களது கையில் தஞ்சமாகும். அவர்களது கைகள் இயந்திரகதியில் இயங்கும். கிள்ளிய கொழுந்துகளைப் பின்புறமாக வீசுவார்கள் அவை சரியாக கூடையினுள் விழும். அவர்களை மேற்பார்வை செய்யக் கங்காணி நிற்பார். கூடைகள் நிறைந்ததும் கொழுந்து சேகரிக்கும் இடத்துக்கு எடுத்து செல்வார்கள். மலை தொடர்களின் பசுமை வீசும் காற்றின் கிளுகிளுப்பு உடலையும் உள்ளத்தையும் ஈர்த்தெடுக்கும். எங்கும் வண்ணம் சூடிய கோலமாய் பூக்கள் மலர்ந்து ஆடும் மலைச்சாரலில் மிளகுக் கொடிகள் படர்ந்திருக்கும்.

இரவு வேளையில் இராமாயணத்தில் அனுமான் காட்டிய லங்காபுரியாக மிதக்கும் தலைநகரங்களாக காட்சிதரும் இரவு இராணிச்செடிகளின் நறுமணம் பரவிப்பரவசமூட்டும்.

நன்றி.

கோ. கம்சிகன்
தரம் - 04

## பிஞ்சுகளின் உள்ளக் கிடக்கையில் இருந்து...

எங்கள் அன்பான பெற்றோரே
புலமைப் பரிசில் பரீட்சை என்று
ஏன் எங்கள் மென்மையான இதயத்தை
வதைக்கிறீர்கள்?
ஏன் எங்கள் குழந்தை தன்மையின் சந்தோசங்களை
சிதைக்கிறீர்கள்?
ஏன் எங்களின் சுதந்திரத்தின் உரிமைகளை
மறுக்கிறீர்கள்?
ஏன் எங்கள் குருத்து மூளைகளில் கடும் சுமையை
சுமத்துகிறீர்கள்?
ஏன் உங்கள் சிந்தனைகளையும் எம்மீது
திணிக்கிறீர்கள்?
ஏன் எங்கள் தோள்களில் மிகுந்த பாரங்களை
ஏற்றுகிறீர்கள்?
ஏன் உங்கள் போட்டி மன அவசங்களை
எங்கள் மென்மையான மனங்களில்
விதைக்கிறீர்கள்?
ஏன் எங்களைச் சிறைப் பறவைகளாய்
வளர்க்கிறீர்கள்?

**உ. அக்சனா**
**தரம் - 03**

# A – Z QUIZ

| | | |
|---|---|---|
| 1. | The joint that connects a foot with a leg. | Ankle |
| 2. | A large piece of rock. | Boulder |
| 3. | A queen of Egypt about 2000 years ago. | Cleopatra |
| 4. | A Shape with ten sides. | Decagon |
| 5. | The third planet from the sun. | Earth |
| 6. | An amphibious animal you may find in a pond. | Frog |
| 7. | A strong burst of wind. | Gust |
| 8. | A three dimensional image. | Hologram |
| 9. | Something that cannot be seen is...... | Invisible |
| 10. | A person who rides in horse races. | Jockey |
| 11. | An Australian animal that hops. | Kangaroo |
| 12. | Capital city of England. | London |
| 13. | A type of oven that cooks food very quickly. | Microwave |
| 14. | A river that runs through Egypt. | Nile |
| 15. | An eight – sided shape. | Octagon |
| 16. | A document you need to travel abroad. | Passport |
| 17. | A pen made from a bird's feather. | Quill |
| 18. | Bones which protect your heart and lungs. | Ribs |
| 19. | A sculpture in the shape of a person or animal. | Statue |
| 20. | An invention by john logie Baird. | Television |
| 21. | To join together. | Unite |
| 22. | A mountain from which lava erupts. | Volcano |
| 23. | First president of the United States of America. | Washington |
| 24. | A percussion instrument made of flat bars. | Xylophone |
| 25. | A wild ox native to Tibet. | Yak |
| 26. | Nothing. | Zero |

V. Shylananth sarma
Grade : 02

## THE GOLDEN APPLES

Once upon a time there were two persons. The king and his servant whose name is Hercules. The King sent for Hercules and said, "Fetch me three golden apples!"

'Where shall I find them? Asked Hercules. 'You must go to the place where they grow', replied the king.

'But where is that? Asked Hercules I don't know where it is'.

'That is one of the difficulties', said the king. You must find it!

'Very well, said Hercules obediently He put on his lion. Skin and walked off. He walked day after day, week after week, month after month. He walked through green fields and deserts, through forests and over mountains. He asked everyone the same question. 'Do you know the place where the golden apples grow?' But no one knew.

Hercules went on walking. When he was hungry, he hunted animals. He killed them and ate them. When he was tried, he wrapped his lion skin around him, and went to sleep; He lived out doors and never went inside a house.

One morning he saw a mountain in front of him. It had the shape a man when Hercules came closer; he saw that it was a man! He was carrying the sky on his head and shoulders!

'Who are you?' said the giant in a very loud voice. 'I am Hercules. Who are you? I am Atlas. I hold up the sky! What do you want? I want three golden apples. Will you help? 'Yes', said the Atlas, 'I know the place where they grow. I will get them for you. Will you hold up the sky while I am gone? You are the strongest of all men. You can do it.

Now, Hercules was very proud of his strength. He climbed a nearby mountain and took the sky on his shoulders. 'That is better, said the Atlas thank fully. 'Now I will get the apples. 'He set off. His legs were so long that he could walkthrough seas and oceans with his head and shoulders above the water.

After a while he returned carrying three beautiful golden apples. 'Thank you', said Hercules. 'Now take the sky. I shall take the apples to your king. He will give me a reward. That is better than holding up the sky. Good bye!
But Hercules was clever. When Atlas began to walk away, Hercules shouted. 'Wait! My shoulders are hurting. Please take the sky for one minute while I put my lion on my shoulders.

Atlas was not very clever. He believed Hercules. He put down the weight of the sky. Hercules immediately bent down, Picked up the apples and ran off. 'Good bye!' he shouted. You hold the sky and I will keep the apples.

When he showed the apples to the king, the king was very frightened. He saw that Hercules was a very strong and clever man. He gave the apples back to Hercules.

The End

Done by:
J. Roshajini
Grade : 05

## NATURE

Nature is god's precious gift to us tree, animals, birds, water and air are all part of nature. We are all dependent on nature. We can't live without nature makes our life healthy and happy so we must not go against nature. We must learn to live close to nature. But some people do not realize the value of Nature they destroy it in various ways. They cut down trees and kill innocent animals and birds. They pollute the air. They dump garbage into water ways. This results in water pollution. When we cut down trees, the result is soil erosion.

by.G. Neeraja.
Grade: 5

## நூற்றாண்டு வாழ்த்துப்பா

இராகம் : ஹம்சத்வனி    தாளம்: ஆதி

நூற்றாண்டுகள் நிறைவு செய்திட்ட
வேதாரணியேஸ்வர வித்தியாலய தாயே
உனைதினம் வாழ்த்தும் மாணவர் சமூகம் – நீ
என்றும் வாழிய வாழியவே – மேலும்
புகழ் ஓங்கவே பல்லாண்டு காலம் வாழியவே

சங்கத்தமிழ் முழங்க வேதங்கள் ஒலிக்கின்ற
சான்றோர் பலர் புகழும் இறை சமூகம் சூழ்ந்திட
பொங்கும் வளமான மண்ணும் பொன்விளையும் வயலும்
பாங்காய் வளம் கொழிக்கும் கருணையூர் எனும் பதியில்

பேர் தன்னில் வேதாரணியேஸ்வரா எனக் கொண்டாள்
பலரும் உயர்கின்ற அத்திவாரப் படிகக்ற்கள் என நின்றாய்
வேர் விட்டுப் பலப்பல விழுதுகளும் உற்றாள்
விண்ணுயரத் தன் புகழை வண்ணமெனத் தைத்தாள்

சீர்பெற்று மாணவர் சிந்தையில் பலம் பெற்று
சிறப்புடன் வாழ்ந்திடவும் சிறுமைகள் அகன்றிடவும்
மாணவர் நல்லொழுக்கத்துடன் கல்வி தன்னை வளர்த்திடுவாய்
மனமகிழ்வோடு கற்றல் செயற்பாட்டை செய்திடுவாயே
வல்ல தேவ வார்த்தைகள் தான் வழிகாட்டி
வாழ்த்துரைக்கும் எம் இனிய சான்றோரின் நிறை ஆசி வாழ்த்தும்
எமது பாடசாலையை கலங்கரை விளக்காய் அமைத்த
நல்லதிபர்களையும் நல்லாசிரியர்களையும்
வாழ்த்துவதில் பேருவகை காண்கின்றோம்.

கல்வியில் ஒளி பெற்றோர் பல்லாயிரக் கணக்கானோர்
காலத்தின் விடியலுக்கு உதயத்தின் இலக்கணமாய்
செல்லும் இடங்களில் சிறப்புற்றார் – அன்னைதரும்
வென்ற சாதனைகள் சொல்லி வழிபுகழ் பெற்றார்
சிற்பமாய் நின்றாய் சிறந்த வளம் தந்தாய் – தாம்
செந்தமிழ் துணை கெண்டு போற்றுவோம் – வாரீர்
வெற்றி பல கண்டு வித்தை பல தந்து வீறு நடை போடுவாய்
வாழ்வாய் நீடூழி தாயே வாழிய பல்லாண்டு வாழிய வாழியவே.

சு. தேனுகன்
பழையமாணவன்.

*With Best Compliments from....*

உங்கள் வைபவங்களை

மகிழ்ச்சிகரமான தருணமாக்க..


# தாமரைபரணி

உங்கள் வைபவங்கள். ஒன்றுகூடல். பொது நிகழ்வுகளுக்கு

நவீன வசதிகளுடன் சகல சேவைகளும் வழங்கப்படும்..

# ஓர்ச்சாட்

கேட்டறிங் சேர்வீஸ் அனுசரணையுடன்



உங்கள் பதிவுகளுக்கு

## உதயன் ஸ்டூடியோ

**பிரதான வீதி, நெல்லியடி, நாவலர் மடம்.**

தேவைக்கேற்ப தூய சைவ / அசைவ உணவுகள

ஒழுங்கு செய்து தரப்படும்.

அசைவ உணவு பாவனைக்கு தனி மண்டபம் உண்டு.

வீடியோ, போட்டோ, அல்பம் தரமான முறையில் செய்து தரப்படும்.


அழையுங்கள் : 0777 355 297

*With Best Compliments from....*

# V.A.M ENGINEERING

# வீ.ஏ.எம். எஞ்ஜினியரிங்

## இரும்பு & அலுமினியம், கிளாஸ்






**கேற், கிறில், சுருக்கு கேற் அனைத்து வகையான இரும்பு வேலைகளும், அலுமினிய வேலைகளும் செய்து கொடுக்கப்படும், மற்றும் வாகன வெல்டிங் வேலைகள்**

யாழ் வீதி,
நாவலர் மடம்,
நெல்லியடி.

T.P : 0752543157,
0777118960,
0212264330.
Fax : 0212264330


With Best Compliments from....
Sellamuthus
Best
Collection


With Best Compliments from....
Subash
BAKERY
"Your Family Bakery"
சுபாஷ் வெதுப்பகம்
42 வருடகால நம்பகமான சிறப்புமிக்க சேவை
Cakes
WEDDING, RECEPTION, BIRTHDAYS, EVENTS & MORE
Breads & Buns
WHITE & WHEAT BREAD HAMBURGER,HOT DOG & MORE
Short Eats
VEG, EGG, FISH, MEAT ROLL PASTRY ITEMS & MORE
உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பம்
தரமானதும் தூய்மையானதும்
சுவையானதும் புதியதும்
OPEN DAILY FROM 04:30 TO 21:30
தினசரி அதிகாலை 04:30 முன்னிரவு 09:30 வரை
Main Street, Nelliady, Jaffna
Sampanthar Kadai, Karaveddy Center, Karaveddy.
Jaffna Road, Karanavai Center, Kuncharkadai.
பிரதான வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம்.
சம்பந்தர் கடை, கரவெட்டி மத்தி, கரவெட்டி.
யாழ்ப்பாண வீதி, கரணவாய் மத்தி, குஞ்சர்கடை.
துரித அழைப்பு: Hotline: (+94) 021 226 2447
இணையத்தளம்: Website: www.subashbakery.com

*With Best Compliments from....*

CBD

சகல விதமான
கற்றல் கற்பித்தல் உபகரணங்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள...

# சிதம்பரப்பிள்ளை

## பொத்தகச்சோலை

# CHITHAMPARAPILLAI
# BOOK DEPOT

பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
தொலைபேசி இல.
0212263223


*With Best Compliments from....*




*With Best Compliments from....*

# ஆதீஸ் வெதுப்பகம்

# Aathees Bakery



ආදීස් බේකරි

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

021 226 2303

*With Best Compliments from....*



# கலைவாணி

## கண்ணாடிக் களஞ்சியம்

# & KALAIVANI TEX



சகலவிதமான அன்பளிப்புப் பொருட்கள்
மற்றும் புதியரக வகை ஆடைத் துணிகளையும்
நவீனகரத்துடன் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான வீதி, நெல்லியடி.**

**T.P: 021 226 3161, 0777111001, 0779577725**

# நன்றி பாராட்டப்பட வேண்டியவர்கள்

''எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு'' என்ற தமிழ் மறைதந்த வள்ளுவப் பெருமான் வாக்கிற்கிணங்க செய்நன்றி மறந்தவர்க்கு வாழ்வில் உய்வில்லை என்ற எமது தமிழ் பண்பாட்டு மரபுக்கிணங்க நன்றி கூறுவேண்டியவர்களை நன்றி கூறி மதிக்கப்பட வேண்டியது கடனாகும்.

அந்தவகையில் யா/கரணவாய் வேதாரணியேஸ்வரவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவுவிழாவிலே மகுடமாக வெளிவரும் ''வரம்''என்ற நூல் வெளியீடு செய்வதற்கு பலவழிகளிலும் முன்னின்று உழைத்தவர்களை கவனத்தில் கொள்வது அவசியமாகும். அவற்றில் முதலாவதாக, பாடசாலையின் நூற்றாண்டுவிழாவில் பாடசாலையின் நீண்டநாள் வரலாற்றினை வருங் காலசந்ததிக்கு ஆவணப்படுத்தி வைக்கவேண்டும் என்றும் இப் பாடசாலை கருணையம்பதி மக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைத்தற்கரியபேறு என்ற வகையிலே இது இறைவனால் கொடுகக்கப்பட்ட ''வரம்''. வேதாரணியேஸ்வர பெருமானால் கொடுக்கப்பட்டதால் ''வரம்'' என்ற பெயரினை இட உதவிய அதிபர் அவர்கட்கும், இந் நூலாக்கத்திற்காக பெரிதும் உதவிய ஆசிரியர்களான திருமதி.க.இராசலிங்கம், திருமதி.உ.விநாயகமூர்த்தி, திருமதி.செல்வ மாலா கந்தசாமி அவர்கட்கும் இந் நூலுக்கான ஆக்கங்களை தந்துதவிய பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், டாக்டர்களுக்கும், அயற் பாடசாலையைச் சேர்ந்ததுறைசார் ஆசிரியர் களுக்கும், எமதுபாடசாலை ஆசிரியர்களுக்கும், பழையமாணவர்களுக்கும், எமது தற்போதய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

மேலும், இந் நூலாக்கத்தின் போது கணனி அச்சுப் பதித்துவடிவமைப்புச் செய்து தமது பொன்னான நேரத்தை செலவிட்டு உதவிய திருமதி.காயத்திரி உமாகரன், திருமதி.அனுஷா ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும், இந் நூலினைஅச்சுப் பதித்துபுத்தகமாகஆக்கித் தந்த''ஸ்ரீ மாருதி'' அச்சக உரிமையாளர், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகள். இந் நூலின் அட்டைப் படத்தினை வடிவமைத்த நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சக ஊழியர் செந்தாளன் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும், இந் நூலாக்கத்திற்கு அவசியமான அச்சுப் பதிப்புக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டிய ''குமாரையா'' அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந் நூலினை வெளியிட அதற்கான நிதியீட்டத்தை வழங்கிய எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இந் நூலாக்கத்திற்கான ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி முதலியவற்றை வழங்கிய அன்பர்களுக்கும் எமது நன்றிகள்.

இந் நூற்றாண்டுவிழாசிறப்புப் பெறும் வண்ணம் நிதியுதவிகளை வழங்கிய உள்நாட்டு பழைய மாணவர்களுக்கும்,வெளிநாட்டில் இருந்து உதவிய புலம் பெயர்ந்த பழைய மாணவர்களுக்கும் எமதுமனமார்ந்தநன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும், இந் நூற்றாண்டு விழா நிகழ்வின் போது ஒலியமைப்புக்கு உதவுகின்ற திரு.ஜெயசீலன் அவர்களுக்கும் ஏனைய வேலைகளை பகிர்ந்து அந்தந்த வேலைகளுக்குப் பொறுப்பான குழுக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த விழாவிலே கலந்து பெருமை சேர்க்கின்ற கௌரவ வடக்கு மாகாண கல்வியமைச்சர் அவர்களுக்கும், மாகாணகல்வி அமைச்சுச் செயலாளர், மாவட்டச் செயலாளர், ஏனைய மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர், பிரதேசசெயலாளர், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய விருந்தினர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

இந் நூற்றாண்டு விழாநிகழ்வில் பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

மலர்க்குழு.





பிள்ளையார் அச்சகம், நல்லூர்